நன்னூல்

உரை வளம்

14

பொதுவியல்-2

இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

நன்னூல் உரைவளம் (தொகுதி-14)

பொதுவியல் 2

பதிப்பாசிரியர்

முனைவர் இரா. கண்ணன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

இரண்டாம் முதன்மைச் சாலை,

தரமணி, சென்னை–600 113

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Potuviyal 2 (Vol. 14)**
Author	:	Dr. R. Kannan Associate Professor Dept. of Tamil Language Presidency College, Chennai - 5
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	702
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2010
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	11 Point
No. of Pages	:	264
No. of Copies	:	1200
Price	:	Rs. 115/- (Rupees One hundred and fifteen only)
Printed by	:	Sri Venkateswara Offset New No. 47, Rajanga Mathya Street Vadapalani, Chennai - 600 026. Phone : 23621409
Subject	:	Tamil Grammar

முனைவர் கரு.அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை – 113

அணிந்துரை

வாழ்வை இலகுவாக்க மனிதன் படைத்துக் கொண்ட கருவிகள் பற்பல. அவற்றுள் மொழியும் ஒன்று. ஆயினும் பிற கருவிகள் யாவற்றுள்ளும் தலையாயதும் தனிச் சிறப்புடையதும் மொழியே. மொழி இன்றேல் வேறு எக்கருவியும் தோன்றி யிராது. மொழி, மனத்தின் உயிர்; பிறபிற கலைகளுக்கும் கருவிகளுக்கும் தாய். மாந்தரின வாழ்விற்கு இத்துணை இன்றியமையாக் கருவியாய்த் திகழும் மொழி, உலகம் யாண்டும் பரவிக் கிடக்கும் மக்களினக் குழுக்களிடையே பலவாகக் காணக் கிடக்கிறது. அம் மொழிக்கூட்டத்திடையே பன்மீன் நாப்பண் விளங்கு பால்மதி போல் இலங்குவது தமிழ்.வரலாற்றுக்காலந் தொடங்கி இன்றளவும் தன்னேரிலாத் தகைசால் சீர்மை யுடன் திகழும் இத் தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணப் பரப்பு அளந்திட்டுக் கூற ஒண்ணா விரிவினை உடையது. காலமும் கடும்புனலும் கொண்டது போக எஞ்சியன சிலவே யாயினும், மறைந்து போனவற்றிற்கு மாற்றாகக் காலந் தோறும் தோன்றிய பனுவல்களோ பற்பல. அழகு தமிழில் அமைந்த அந்நூல்களின் பொதிபொருளைப் பழகு தமிழில் விளக்க எழுந்த உரைகளும் மிகப் பல.

ஒல்காப் புகழுடைய தொல்காப்பியத்திற்குப் பின் ஏறத்தாழ பன்னிரண்டு நூற்றாண்டுகள் கழித்துத் தோன்றி இன்றளவும் தனிச் சிறப்புடன் வாழ்வது நன்னூல். பெயருக்கு ஒப்பவே தமிழின் இலக்கணத்தை நலம்படவும் நயம்படவும் இயம்பும் இந்நூலிற்கு உரைவிளக்கம் கண்டோர் பலர். அவ்வுரைகளுள் பல, தம் பெயரை மட்டுமே நிறுத்தி தாம் மாய்ந்தன. வேறுபலவோ, அச்சேறியபோதும் இன்று காணுதற்கும் அரியனவாய் உள்ளன. இவ்வாறு காலச் செலவால் அருகி உள்ள உரைகளை அரிதின் முயன்று திரட்டி இருபத்திரண்டு தொகுதிகளாக உருவாக்கப் பெற்றுள்ள இவ்வுரை வளத்தினைஎம் நிறுவனத்தின் வழி வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

மயிலை நாதர், சங்கர நமச்சிவாயர்,சிவஞான முனிவர், கூழங்கைத் தம்பிரான், விசாகப் பெருமாளையர், ஆ.முத்துத் தம்பிப்பிள்ளை, இராமானுச கவிராயர், கா.கோபாலா சாரியார், தி.கோ.ரங்காசாரியார், ஆறுமுக நாவலர், வ.குமார சாமிப் புலவர், வை.மு.சடகோபராமானுசாசாரியார், சே.கிருட்டிணமாசாரியார், பவானந்தம் பிள்ளை, கொ.இராமலிங்கத் தம்பிரான், கா.நமச்சிவாய முதலியார், மோசசு பொன்னையா ஆகியோரின் உரைகளும், என்றி பவார் செய்த பாயிரப் பகுதிக்கான ஆங்கில மொழி பெயர்ப்பும், இலாசரசு செய்த எழுத்ததிகாரம் மற்றும் சொல் லதிகாரத்திற்கான ஆங்கில மொழிபெயர்ப்பும் இவ்வுரை வளத்தில் திரட்டப் பெற்றுள்ளன. நன்னூலைத் தழுவி இயற்றப் பெற்று ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் மீள்பதிப்புக் காணாத திருப்பாற்கடல்நாதன் கவிராயரின் தமிழிலக்கணம், சி.அருணாசலம் பிள்ளையின் TAMIL GRAMMAR, இ.சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல், G.U.போப்பின் காண்டிகையுரை, ஆ.முத்துத் தம்பிப்பிள்ளையின் நன்னூல் இலகுபோதம் ஆகியன இவ்வுரைவளத் திரட்டில் தனித்தனி நூல்களாக வெளியிடப் பெற்றுள்ளன. இவ்வுரைவளம் தமிழன்னைக்கு அணி சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

நன்னூல் உரைவளத்தின் பதிப்பாசிரியரான முனைவர் **இரா.கண்ணன்**, சென்னை மாநிலக்கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். இவ்வுரைவளத்தின் பதிப்புப் பணியோடு எழுத்துக் கோர்த்தல், மெய்ப்புத் திருத்தல், வடிவமைத்தல் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் தனியொருவராக இருந்து சிறப்புடன் செய்துள்ள இப்பதிப்பாசிரியரை மனதார வாழ்த்துவதுடன் நன்றி நவிலுங் கடப்பாடுமுடையேன்.

நிறுவனப் பணிகளில் எம்முடன் இணைந்து பணியாற்றும் துணை இயக்குநர், பேராசிரியப் பெருமக்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் ஆகிய அனைவர்க்கும் எம் நன்றி உரித்தாகுக.

கரு.அழ.குணசேகரன்

சென்னை - 113.

12.10.2010.

முன்னுரை

தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐம்பெரும் பிரிவுகளை உடையது என்பர். இது பொது வழக்கே யாயினும் பிற்காலத்தில் பாட்டியல் அனைய புதுப்புது இலக்கணப் பிரிவுகள் தமிழில் தோன்றி நன்கு செழித்து வளர்ந்துள்ளன. அவ்வாறே எழுத்து, சொல் முதலான ஒவ்வொரு பிரிவினிலும் தோன்றிய இலக்கண நூல்களும் பல உள. தொல்காப்பியம், எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று அதிகாரங்களை உடையதாதலான் அது மூன்றிலக்கணம் கூறும் நூல் என்பது போதரும். ஆயினும் பொருளதிகாரத்துள் அமைந்து கிடக்கும் உவமவியலும், செய்யுளியலும் முறையே அணியிலக்கணத்தையும், யாப்பிலக்கணத்தையும் வேண்டுமளவிற்கு விளக்கிக் கூறுதலான், அந்நூல் ஐந்திலக்கண நூலுமாம். தொல்காப்பியத்திற்குப் பின் பல்வேறு இலக்கண நூல்கள் எழுந்தன.பழங்காலத்தில் பெருவழக்காய் வழங்கிய அவ்விலக் கண நூல்கள் இன்று வீழ்ந்து போயின. இன்று வழங்கப் பெறும் இலக்கண நூல்களுள் வீரசோழியம், தொல்காப்பியத்திற்குப் பின் எழுந்த முதல் ஐந்திலக்கண நூலாகும். ஆயினும் அந்நூல் வடமொழி சார்பினைப் பெரும்பான்மை தழுவிச் செல்வதால் அது அவ்வளவாகப் போற்றப் படுவதில்லை. வீரசோழியத்திற்குப் பின் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண் டளவில் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. நன்னூல் ஐந்திலக்கணம் கூறிய நூல் என்றும், இன்று எழுத்து மற்றும் சொல்லிலக் கணம் உரைக்கும் பகுதி மட்டுமே கிடைக்கப் பெறுகிறது என்றும் எஞ்சிய பகுதிகள் காலச் செலவால் அழிந்திருக்கக் கூடும் என்றும் கருதுவாரும் உண்டு. இன்று வழக்கில் உள்ள நன்னூலின் மொத்த நூற்பாத் தொகை நானூற்று அறுபத்திரண்டு. பாயிரம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என மூன்று பகுதிகளாய் அமைந்துள்ள இந்நூலின்கண் பாயிரம் 55 நூற்பாக்களையும், எழுத்ததிகாரம் 202 நூற்பாக்களையும் சொல்லதிகாரம் 205 நூற்பாக்களையும் பெற்றுள்ளன. பாயிரம், பவணந்தியால் இயற்றப்பட்டதன்று என்பர்.

நன்னூலிற்கு இன்றுகாறும் எழுந்துள்ள உரைகள் பல. ஆயினும் மயிலைநாதரின் உரையே முதலில் எழுந்த உரையாகும். மயிலைநாதர் நன்னூல் ஆசிரியர் பவணந்தியின் சம காலத்தவர். மயிலைநாதரின் உரை நன்னூலிற்கு இன்று வரை எழுந்துள்ள உரைகள் யாவற்றிலும் தலைமை யானது, தனிச் சிறப்புடையது. இவ்வுரைக்குப் பின் பல உரைகள் எழுந்தன. அவற்றுள் சில அச்சேறாமலேயே இறந்தன.வேறுசில அச்சேறிய பின்னும் இன்று அருகியுள்ளன.இவ்வாறு காலச்செலவான் அருகி வரும் உரைகளைக் காத்தற் பொருட்டும், தமிழாய்விற்குத் தக்க கருவி நூலாய் அமையும் திறம் நோக்கியும் இவ்வுரைவளம் உருவாக்கப் பெற்றுள்ளது.இதில் நன்னூலின் சிறந்த உரைகள் அனைத்தும் திரட்டப் பெற்றுள்ளன.

நூற்பா அதன்கீழ் சீர் பிரிக்கப் பெற்ற நிலையில் நூற்பா, ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, இலாசரசு செய்த மூல நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு, தொல்காப்பியம் முதல் சுவாமிநாதம் வரையிலான இலக்கண நூல்களில் இருந்து தரப்பெற்றுள்ள ஒப்புமைப் பகுதி, நன்னூல் உரைகள் ஆகியன இவ்வுரைவளத்தில் நிரல்படுத்தப்பட்டுள்ளன. மூலநூலின் பாட வேறுபாடும், மயிலை நாதர் உரையின் பாடவேறுபாடும் காட்டப் பெற்றுள்ளன.

நன்னூலிற்கு விருத்த யாப்பில் எழுந்த ஆண்டிப்புலவர் உரை அழிந்து போனது. அச்சேறிய உரைகளுள் பல இன்று அருகி பெயரளவில் மட்டுமே அறியப் பெறுபவையாக உள்ளன. அச்சேறிய அரிய உரைகளை யேனும் காக்கும் வகையில் இவ்வுரைவளம் இருபத்திரண்டு தொகுதிகளாக வெளியிடப் பெறுகின்றது. தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என நம்புகிறேன்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் முனைவர் ***கரு.அழ.குணசேகரன்*** அவர்களும், துணை இயக்குநர் **திரு.க.ந.வீரபாகு சுப்பிரமணியன்** அவர்களும் நன்னூல் உரைவள நூல்கள் அனைத்தையும் விரைந்து வெளிக் கொணர்ந்தனர். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வுரைவளத் திரட்டுப் பணியின்போது பல்லாற்றான் உதவிய சென்னை இராணிமேரி கல்லூரிப் பேராசிரியை முனைவர் **ந.கலைவாணி** அவர்களுக்கும், உற்றுழி உதவிய அனைவர்க்கும் உளமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்வதோடு, தோன்றாத் துணையாய் இருந்து எம்மை இயக்கி வரும் தில்லைக் கூத்தனின் பொன்னார் திருவடிகளைப் போற்றிப் பணிந்து அமைகிறேன்.

10.10.2010

இரா.கண்ணன்.

சென்னை–55

சொல்லதிகாரம்

பொதுவியல் – 2

சுருக்க விளக்கம்

அவி	–	*அவிநயம்*
இ-ள்	–	*இதன் பொருள்*
இல, விள	–	*இலக்கண விளக்கம்*
உ-ம்	–	*உதாரணம்*
உணர்-ற்று	–	*உணர்த்துதல் நுதலிற்று*
எ-டு	–	*எடுத்துக்காட்டு*
எ-று	–	*என்றவாறு*
எ-னின்	–	*என் நுதலிற்றோ எனின்*
சுவாமி	–	*சுவாமிநாதம்*
சூ-ம்	–	*சூத்திரம்*
தொல், எழு	–	*தொல்காப்பியம் எழுத்ததிகாரம்*
தொல், சொல்	–	*தொல்காப்பியம் சொல்லதிகாரம்*
தொல், பொருள்	–	*தொல்காப்பியம் பொருளதிகாரம்*
தொன்	–	*தொன்னூல் விளக்கம்*
நச்	–	*நச்சினார்க்கினியர்*
ந.பா	–	*நவநீதப் பாட்டியல்*
நேமி	–	*நேமிநாதம்*
பா-டு	–	*பாட வேறுபாடு*
பொ-ரை	–	*பொழிப்புரை*
மா.அலங்	–	*மாறனலங்காரம்*
மு.வீ	–	*முத்துவீரியம்*
வீர	–	*வீரசோழியம்*
வெண், பாட்	–	*வெண்பாப் பாட்டியல்*

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ ,ஒ, ஓ, ஔ,
ஃ – இவ்வெழுத்துக்கள் முறையே

a , ā , i , ī ,u ,ū ,e, ē ,ai ,o,
ō, au, kh

எனவும்,
க், ங் , ச், ஞ் , ட் ,ண், த், ந் , ப், ம், ய்,
ர் , ல் , வ், ழ், ள், ற் , ன் - வ்வெழுத்துக்கள்
முறையே

k, ṅ , s, ñ , t , ṇ, ṭ , n , p ,
m , y , r , l , v ,ḷ ,ḻ, ṛ , ṉ, kh

எனவும் ஆங்கில எழுத்துப்பெயர்ப்பில் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

நன்னூல் உரைவளம் – 14

பொதுவியல் – 2

374. திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினாம் வழுவே.

திணையே பால் இடம் பொழுது வினா இறை
மரபு ஆம் ஏழு மயங்கின் ஆம் வழுவே.

ṭiṇai ē pāl iṭam poḷuṭu viṉā iṟai
marapu ām ēḷ um mayaṅkiṉ ām vaḷu ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

GRAMMATICAL & UNGRAMMATICAL EXPRESSIONS

Grammatical errors

Grammatical errors are violations of any of the following seven (particulars): Class, Gender, Person, Tense, Question, Answer, and Usage.

ஒப்புமைப் பகுதி

பாலே திணையே வினாவே பகர்மரபே
காலமே செப்பே கருதிடமே–போலும்
பிறழ்வுஞ் சினைமுதல் ஒவ்வாப் பிறசொல்
உறழ்வுஞ் சிதைந்த உரை
(நேமி.:30)

திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழும் வழாஅ லோம்பல்
(இ.வி.:295)

வாய்த்த திணைபால் இடமேகாலம் வினாச்செப்பு
மரபும் வழாஅது ஓம்புக.......
(சுவாமி.: 58:1)

வழுவாம் உரிமை மயங்கிக் கெடினவை
இடம்பால் திணை பொழுதிறை வினாமரபு ஏழே

(தொ.வி.:127)

மயிலை நாதர்

எ—ன், வழுநிலையும் வழாநிலையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: திணை முதலான ஏழும் தத்தம் இயல்பன்றி மயங்கி வரின் அவை வழுக்களாம், எ—று.

மயங்கின் வழுவாமெனவே, மயங்காது வருதல் வழா நிலையாமென்க. இவ்வாற்றானும் [1]சொற்பகுத்து ஆராய்ந்தா [2] ராம். அஃதாவது, ஒன்று பிறிதின்மேற் சேறலும் பிறிதினைக் கொண்டு முடிதலுமாமென்க.

அவற்றுள், திணைவழு நான்காம்; தனித்திணைவழுவும், பாற்றிணை வழுவும், இடத்திணைவழுவும், பாலிடத்திணை வழுவுமென.

அவற்றுள், **தனித்திணைவழுவாவது** :— பாலும் இடனுமின்றித் திணை தனியே மயங்குவது. அது: வந்தான் அது, வந்தாள் அது, வந்தார் அவை எனவும்; வந்தது அவன், வந்தது அவள், வந்தன அவர் எனவும்; இருதிணை வினை மேலும் இரு திணைப் பெயர்வந்து மயங்கிய ஆறும்; அவன் வந்தது, அவள் வந்தது, அவர்வந்தன எனவும்; அதுவந்தான், அது வந்தாள், அவை வந்தார் எனவும்; இருதிணைப்பெயர் மேலும் இருதிணைவினை வந்து மயங்கிய ஆறும் ஆகத் தனித்திணை வழுப் பன்னிரண்டாம்.

இனி, **பாற்றிணை வழுவாது**:— இடமயக்கமின்றிப் பாலும் திணையும் மயங்குவது. அது: வந்தான் அவை, வந்தாள் அவை, வந்தார் அது எனவும்; வந்ததுஅவர், வந்தன அவன், வந்தன அவள் எனவும்; இருதிணைவினைப்பான் மேல் இருதிணைப் பெயர்ப்பால் மயக்கம் ஆறும்; அவன்வந்தன, அவள் வந்தன, அவர்வந்தது எனவும்; அதுவந்தார், அவைவந்தான், அவை வந்தாள் எனவும்; இருதிணைப் பெயர்ப்பால்மேல் இருதிணை வினைப்பால் மயக்கம் ஆறும் ஆகப் பாற்றிணைவழுப் பன்னிரண்டாம்.

இடத்திணைவழுவாது:— பான்மயக்கமின்றி இடமும்

பாட வேறுபாடு:—

1.சொற்பகுத்தார் அஃதாவது

2.ராப

திணையும் மயங்குவது. அது: வந்தான் சேவலேன், வந்தாள் பேடையேன், வந்தார் மான்கமேம் எனவும் வந்தது பாணனேன், வந்தது விறலியேன், வந்தனவயவரேம் எனவும்; படர்க்கை இருதிணை வினைமேல் தன்மை யிருதிணைப்பெயர் மயக்கம் ஆறும்; வந்தான் கடுவனை, வந்தாள் பேடையை, வந்தார் [1]மான்களிர் எனவும் வந்தது தலைவனை, வந்தது தலைவியை, வந்தனமாந்தரீர் எனவும்; படர்க்கை யிருதிணை வினை மேல் முன்னிலை யிருதிணைப் பெயர்மயக்கம் ஆறும்; சேவலேன் வந்தான், பேடையேன் வந்தாள், மான்கமேம் வந்தார் எனவும்; பாணனேன் வந்தது, விறலியேன் வந்தது [2]மல்லரேம் வந்தன எனவும் தன்மை யிருதிணைப்பெயர்மேற் படர்க்கையிருதிணை வினைமயக்கம் ஆறும்; கடுவனை வந்தான், பேடையைவந்தாள், மறிகளிர் வந்தார் எனவும் தலைவனைவந்தது, தலைவியை வந்தது, மாந்தரீர்வந்தன எனவும்; முன்னிலை இருதிணைப்பெயர் மேற் படர்க்கை இருதிணைவினை மயக்கம் ஆறும் ஆகப் படர்க்கை வினை யோடு தன்மை முன்னிலைப்பெயரும் அவற்றின்மேற் படர்க்கை வினையும் மயங்கின இடத்திணைவழு இருபத்து நான்காம்.

தன்மை முன்னிலை வினைகள் இருதிணைக்கும் பொது வாகலான், அவற்றால் திணைமயக்கவழு வாராதெனக் கொள்க.

பாலிடத்திணைவழுவாவது:- அம் மும்மையும் மயங்கி வருவது; அது; வந்தான் பேடையேம், வந்தாள் சேவலேம், வந்தார் கடுவனேன் எனவும்; வந்தது [3]மாந்தரேம், வந்தது மாதரேம், வந்தன பாணனேன் எனவும்; படர்க்கை இருதிணை யொருமைப் பன்மை வினைமேல் தன்மை யிருதிணை யொருமைப் பன்மைப் பெயர் மயங்கிய மயக்கமாறும்; வந்தான்பேடையீர், வந்தாள் சேவலீர், வந்தார் மஞ்ஞையை எனவும்; வந்தது [4]ஊரீர், வந்ததுகிழத்தியீர், வந்தனபாணனை எனவும்; படர்க்கையிருதிணை யொருமைப்பன்மை வினை மேல் இருதிணை முன்னிலை யொருமைப் பன்மைப் பெயர் மயங்கிய மயக்கமாறும்; பேடையேம் வந்தான், சேவலேம் வந்தாள், கடுவனேன் வந்தார் எனவும்; ஊரேம் வந்தது,

பாட வேறுபாடு:-

1.(1)மான்மாக்களிர் (2) ஈன்மகளிர்

2. மடையரேம் வந்தன

3. ஊரரேம்

4. நீர், வந்தது குளத்தியீர்

கிழத்தியேம் வந்தது, மல்லனேன் வந்தன எனவும்; இருதிணைத் தன்மை யொருமைப் பன்மைப் பெயர்மேல் இருதிணைப் படர்க்கை யொருமைப் பன்மைவினை மயங்கிய மயக்கமாறும்; பேடையீர் வந்தான், சேவலீர்வந்தாள், கடுவனை வந்தார் எனவும்; ஊரீர்வந்தது, கிழத்தியீர் வந்தது, மல்லனை வந்தாள் எனவும்; இருதிணை முன்னிலை யொருமைப் பன்மைப் பெயர்மேற் படர்க்கை யிருதிணை யொருமைப் பன்மை வினை மயங்கிய மயக்கமாறும் ஆகப் பாலிடத்திணை வழு இருபத்துநான்கு.

ஆகத் தனித் திணைவழுப் பன்னிரண்டும், பாற்றிணை வழுப் பன்னிரண்டும், இடத்திணைவழு இருபத்துநான்கும், பாலிடத் திணை வழு இருபத்து நான்கும் ஆகத் திணைவழு எழுபத் திரண்டாம்.

அதுமல்லன், மல்லன் அது; அதுவிறலி, விறலியது; அவையாடவர், ஆடவரவை; அவை அரிவையர், அரிவையர் அவை என இவ்வாறு பெயரும் பெயரும் மயங்கிய திணை வழுவுங் கொள்க.

இனிப் பால்வழுவாது :– திணையிட மயக்கமின்றிப் பாலே மயங்குவது ; அது: உண்டான் அவள், உண்டாள் அவன், உண்டார் அவன் எனவும் அவன் உண்டாள், அவள் உண்டான், அவர் உண்டான் எனவும்; வினைமேற் பெயரும் பெயர்மேல் வினையும் வந்து, ஆண்பால் பெண்பால் ஒருமைப்பால் பன்மைப்பால் மயங்கின உயர்திணைப் பால்வழு ஆறும்; உண்டது அவை, உண்டன அது எனவும்; அவைஉண்டது, அது உண்டன எனவும்; வினைமேற் பெயரும் பெயர்மேல் வினையும் வந்து, ஒருமை பன்மை மயங்கிய அஃறிணைப் பால்வழு நான்கும் ஆகப் பால்வழுப் பத்து.

அவன் முனிகள், அவள் அரிவையர், அவர்நம்பி, அவர் நங்கை, அவன் [1]அரசிகள், அவள் சாத்தரெனப் பெயரும் பெயரும் மயங்கின பால்வழுவும் கொள்க.இனி இடவழு, தனியிடவழுவும் பாலிடவழுவுமென இரண்டாம்:–

அவற்றுள், தனியிடவழுவாது திணையும் பாலுமின்றி இடமே மயங்குவது; அது: வந்தான் யான், [2]வந்தார் யாம் எனவும்

பாட வேறுபாடு:–

1. சாத்தர்
2. வந்தாள்யான், வந்தார்.

வந்தான் நீ, வந்தார் நீயிர் எனவும் வந்தாய் யான், வந்தீர் யாம் எனவும் வந்தாய் அவன், வந்தீர் அவர் எனவும் வந்தேன் நீ, வந்தேம் நீயிர் எனவும் வந்தேன் அவன், வந்தேம் அவர் எனவும், மூவிடவினைமேலும் மூவிடப்பெயர் மயங்கிய மயக்கம் பன்னிரண்டும்; யான் வந்தான், யாம் வந்தார் எனவும் நீ வந்தான், நீயிர் வந்தார் எனவும், யான் வந்தாய், யாம் வந்தீர் எனவும் அவன் வந்தாய், அவர் வந்தீர் எனவும் நீ வந்தேன், நீயிர் வந்தேம் எனவும் அவன் வந்தேன், அவர் வந்தேம் எனவும் மூவிடப்பெயர் மேலும் மூவிடவினை மயங்கிய மயக்கம் பன்னிரண்டும் ஆகத் தனியிடவழு இருபத்துநான்கு.

இனிப் பாலிடவழுவாவது:- திணையின்றிப் பாலும் இடமும் மயங்கி வருவது; அது: வந்தான் யாம், வந்தார் யான் எனவும்; வந்தான் நீயிர், வந்தார் நீ எனவும்; வந்தாய் யாம், வந்தீர் யான் எனவும்; வந்தாய் அவர், வந்தீர் அவன் எனவும்; வந்தேன் நீயிர், வந்தேம் நீ எனவும் வந்தேனவர், வந்தேமவன் எனவும் மூவிடவினைமேலும் மூவிடப்பெயரும் பாலுமான மயக்கம் பன்னிரண்டும் ; யான் வந்தார், யாம் வந்தான் எனவும்; நீ வந்தார், நீயிர் வந்தான் எனவும்; யாம் வந்தாய், யான் வந்தீர் எனவும்; அவர் வந்தாய் அவன் வந்தீர் எனவும்; நீயிர் வந்தேன், நீவந்தேம் எனவும்; அவர் வந்தேன், அவன் வந்தேம் எனவும் , மூவிடப்பெயர்மேலும் மூவிடவினையும் பாலுமான மயக்கம் பன்னிரண்டும் ஆகப் பாலிடவழு இருபத்துநான்கு; ஆக இடவழு நாற்பத்தெட்டு.

அவன்யான், சாத்தன்யானென்றற் றொடக்கத்துப் பெயரொடு பெயர் மயங்கின இடவழுவும் கண்டு கொள்க.

இனிக் காலவழுவாவது:- பண்டு, அன்று, நெருநல் எனவும், இன்று, இப்பொழுது எனவும்; நாளை, இனி, மேல், எதிர் எனவும் வரும் இத் தொடக்கத்து இறப்பு நிகழ்பு எதிர்பென்னும் முக்காலப் பெயரோடும் முக்கால வினையும் மயங்குவது. அது: வந்தான்நாளை, வாராநின்றான் நெருநல், வாராநின்றான் நாளை, வரும் நெருநல் எனவும்; நாளை வந்தான், நெருநல் வாரா நின்றான், நாளை வாரா நின்றான், நெருநல் வரும் எனவும்; வினைமேற் பெயரும் பெயர்மேல்வினையும் வந்துமயங்கின காலவழு எட்டெனக் கொள்க. அஃதேல், இன்றென்னு நிகழ்காலப் பெயருடன், இன்றுவந்தான், இன்று வருமென வழங்குதலும் வழுவாம் பிறவெனின், இன்றென்பது இற்றை நாளை யன்றே! அதனகத்து நிகழ்சமயநோக்க ஏனைக் காலங்களுமுள வாகலின், வழுவன்றென்க. பிறவுமன்ன.

இனி வினாவழுவாவது:- கறக்கின்ற எருமை பாலோ?

சினையோ? எனவும், ஒருவிரல்காட்டி, இது சிறிதோ? பெரிதோ? எனவும் வரும் இத் தொடக்கத்தனவெனக் கொள்க.

இனிச் செப்புவழுவாவது: கடம்பூர்க்கு வழி யாதெனின், இடம்பூணி என்னாவின் கன்றெனவும், கருவூர்க்கு வழி யாதென்றால், பருநூல் பன்னிரு தொடியெனவும் வரும் இத் தொடக்கத்தன வெனக் கொள்க.

இனி மரபுவழுவாவது:– வரலாற்றுமுறைமை மயங்கச் சொல்லுவது; அது: யானை மேய்ப்பானை ஆயனென்றும், பசு மேய்ப்பானைப் பாகனென்றும், எருமையிலத்தி, குதிரைச் சாணா மென்றும் வரும் இத் தொடக்கத்தனவெனக் கொள்க.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், திணையொடு வினாவிடையும், பாலொடு வினா விடையும் வழுவாது காத்தல், உணர்–ற்று.

இ –ள்.:– திணை ஐயத்தினை அவற்றின் பொதுச்சொல்லானும், பால் ஐயத்தினை அவற்றின் பொதுச்சொல்லானும், துணிந்த பொருள்மேல் அல்லாத தன்மையினை வைத்தும் கூறுவார் புலவர், எ– று.

வ–று.:–

குற்றியோ மகனோ எனத் திணை ஐயம் தோன்றிய வழிக் குற்றியோ மகனோ அங்ஙனம் தோன்றாநின்றது, தோன்றா நின்றான் எனச் சிறப்புச்சொல்லால் கூறின், திணைவழுவும் வினா வழுவுமாம். அவை ஒழித்துக் குற்றியோ மகனோ அங்ஙனம் தோன்றாநின்ற உரு எனப் பொதுச்சொல்லால் கூறுக. உரு என்பது பொதுச்சொல்லாய் வழாநிலையாயது என்னையெனின், குற்றிக்கும் மகனுக்கும் உரு பொதுப்பட நின்றமையின் என்க. ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணைப் பால்ஐயம் தோன்றியவழி ஆண்மகனோ பெண்மகளோ அங்ஙனம் தோன்றா நின்றான், தோன்றா நின்றாள் எனச் சிறப்புச்சொல்லால் கூறின், பால்வழுவும் வினாவழுவுமாம். அவை ஒழித்து ஆண்மகனோ பெண்மகளோ அங்ஙனம் தோன்றாநின்றார் எனப் பொதுச்சொல்லால் கூறுக. தோன்றாநின்றார் என்பது பொதுச் சொல்லாய் வழாநிலை யாயது என்னையெனின், ஆண் பெண் இரண்டல்லது பலர்பால் என வேறொன்றின்றி அவ்விரு பாற்கும் பொதுமையின், நிற்றலின் என்க. ஒன்றோ பலவோ என அஃறிணைப் பால் ஐயம் தோன்றியவழி ஒன்றோ பலவோ இச்செய் புக்கது, புக்கன எனச் சிறப்புச்சொல்லால் கூறின்; பால்வழுவும் வினாவழுவுமாம். அவை ஒழித்து ஒன்றோ

பலவோ இச்செய்புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லால் கூறுக.

இனி, மெய்தெரிந்த பொருள் குற்றி எனின், மகன் அன்று எனவும், மகன் எனின் குற்றி அல்லன் எனவும், ஆண்மகன் எனின் பெண்மகள் அல்லன் எனவும், பெண்மகள் எனின் ஆண்மகன் அல்லள் எனவும் கூறுக. மகனற்று குற்றி எனக் கூறின் குற்றியோ மகனோ என வினாவினார்க்கு மகனன்று எனின் அமையும்; குற்றியின்மேல் வைத்துக்கூறல் வேண்டா கூறலாம். மகனன்று என்பதனை மகனினன்று என ஐந்தாம் வேற்றுமைப் புணர்ச்சி என்பாரும் உளர். அதுபோல் வரும் நீயல்லன் என்பதும் அங்ஙனம் விரித்தல் கூடாமையின் அல்வழிப்புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதினான்கின் புறத்ததாயடங்கும் என்க. ஏனை மூன்று காட்டும் அன்ன.

மெய்தெரியாப் பொருள்மேல் அல்லாத தன்மையினை வைத்து மகனல்லன் குற்றி எனின், குற்றி என்னும் பயனிலைக்கு எழுவாய் தந்து மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறுல் வேண்டும்; அங்ஙனம் கூறவே சொற்பல்குதல் என்னும் விடைவழுவுமாம். அவ்வழு வாராது மெய்தெரிபொருள்மேல் அன்மையும் விளம்புப என்றார்.

கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், வழாநிலையும் வழுநிலையும் கூறுகின்றது.

இ-ள்.: திணையே பாலிடம் – இரு திணையும் ஐம் பாலும் மூன்று இடமும், **பொழுது வினாவிடை** – முக்காலமும் ... ..., மரபும் – மரபு காரணமாக வரும் பெயர்களும், **ஆமேழும்** – ஆகிய இவ்வேழும், மயங்கினும் வழுவே – தத்தம் இயல்பின்றி வரின் அவை வழுக்களாம், எ–று.

மயங்கின வழுநிலை எனவே மயங்காத வழாநிலையாம் என்க.

உ–ம்.:–

அவன் வந்தது தனித்திணை வழு. அவன் வந்தாள்பால்வழு. அவன் வந்தேன் இடவழு. பண்டு, அன்று, நெருநல் இறந்தகாலப் பேர்; இன்று இப்பொழுது நிகழ்காலப் பேர்; நாளை, இனிமேல் எதிர்காலப் பெயர். முக்காலப் பேரோடு முக்கால வினை மயங்குவது கால வழுவாம். அவை வந்தான் நாளை, வாராநின்றான் நாளை, வருவான் நெருநல், நாளை வந்தான், நெருநல் வாராநின்றான், நாளை வாராநின்றான், நெருநல் வருவன் என வினைமேற் பெயரும் பெயர்மேல் வினையுமாய் மயங்கியது காலவழு.

இன்று வந்தான், இன்று வருவான் என வழங்குவனவும் வழுவாமோ எனின், இன்றென்பது இற்றைநாளை யன்றே! அத்தினத்தினில் நிகழ்ந்தமையை நோக்க ஏனைக் காலங்களும் உளவாகலின் வழுவன்றி என்க.

வினா வழுவாவது: கறக்கின்ற எருமை பாலோ? சினையோ? ஒரு விரல் காட்டி இது சிறிதோ? பெரிதோ? இத் தொடக்கத்தன என்க.

செப்பு வழுவாவது: பட்டுக்கோட்டைக்கு வழியெங்கே என்றால் கொட்டைப்பாக்கு முந்நூறு; குருக்கள் வீட்டுக்கு வழி கேட்கத் துலுக்கவீடு என்பது.

மரபு வழுவாவது வரலாற்று முறைமை மயங்கிச் சொல்லுவது. அது ஆனை மேய்ப்பானை இடையன் என்றும் பசு மேய்ப்பானைப் பாகன் என்றும் எருமையிலத்தி, குதிரைச் சாணகம் என்றும் வரும்.

விசாகப் பெருமாளையர்

இது, வழுக்களை அறிந்தல்லது அவற்றைக் களைதல் கூடாமையின் அவையிவை யென உணர்த்துகின்றது.

இ–ள்.:– **திணை**–இருதிணையும், **பால்**–ஐம்பாலும், **இடம்**–மூவிடமும், **பொழுது**–முக்காலமும், **வினா**–வினாவும், **இறை**–விடையும், **மரபு**–பலவகை மரபுகளும், **ஆம்**–ஆகிய, **ஏழும்**–ஏழும், **மயங்கின்**–தன்றன்வழி மயங்கின், **வழுவாம்**–வழுவாம், எ–று.

வ–று.:–

அவன்வந்தது–திணைவழு, அவன்வந்தாள் – பால்வழு, யான்வந்தான்– இடவழு, நாளை வந்தான் – காலவழு, கறக்கிற வெருமை பாலோ சினையோ–வினாவழு, 'கடம்பூர்க்கு வழியாதோவென்றால் இடம் பூணியென்னாவின் கன்றன்று' என்பது விடைவழு, யானை மேய்ப்பானை, இடையன் என்பது மரபுவழு.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வழு இவை யென்பதும் இத்தனை யென்பதுங் கூறுஞ் சூத்திரம் யாது?

திணையே பாலிடம் பொழுது வினாவிறை
மரபா மேழு மயங்கினாம் வழுவே.

(திணையே பால் இடம் பொழுது வினா இறை
மரபு ஆம் ஏழும் மயங்கின் ஆம் வழுவே.)

இ—ள்.:— இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும் தத்தம் நெறி மயங்கின் வழுவாம், எ—று.

(வரலாறு)

(1) அவன் வந்தது............................திணைவழு.

(2) அவன் வந்தாள்....................பால்வழு.

(3) யான் வந்தான்................................இடவழு.

(4) நாளை வந்தான்.................................காலவழு.

(5) கறக்கின்றவெருமை பாலோ சினையோ?..........வினாவழு.

(6) கடம்பூர்க்கு வழி யாது? எனின், இடத்துள்ளது என் கன்றன்று என்பது — விடைவழு.

(7) யானை மேய்ப்பானை இடையன், ஆடு மேய்ப்பானைப் பாகன் என்பன — மரபுவழு.

இவ்வாறே எழுவகை வழுக்களையு முணர்ந்து, வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வராமல் நீக்குக.

மரபாவது தொன்றுதொட்டு வழங்கு முறைமை.

முகவை இராமானுச கவிராயர்

இது, வழுவறிந்தல்லது அவற்றை விலக்கலாகாமையால் அவை இவை யென்கின்றது.

இ—ள்.: திணையே பாலிடம் பொழுது வினாவிறை மரபாமேழும் — திணைமுதலாக மரபு ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும், **மயங்கின்** — அவற்றின் நெறி பிறழுமாயின், **ஆம் வழு** — வழுவாம், எ—று.

(மரபு—பழமை,) திணை முதலாகிய ஆறும் மரபாயினும், அவை யொழிந்தனவற்றையே மரபென்று சொல்லவந்தவர் அதனை யிறுதியிலே சொன்னார்.

வ—று.:—

'அவன்வந்தது' — எனின், **திணைவழு,** 'அவன்வந்தார்'— எனின்— **பால்வழு,** 'யான் வந்தாள்' எனின் **இடவழு,** 'நேற்று வருவான்' எனின் **காலவழு,** 'கறக்கின்ற எருமை பாலோ சினையோ' எனின் **வினாவழு,** கடம்பூர்க்குவழியாது எனின், இடம்பூணி என்ஆவின்கன்று என்பது **விடைவழு,** யானைச்சாணி என்றும், எருமையிலத்தி என்றும், யானை மேய்ப்பானை இடையனென்றும், ஆடுமேய்ப்பானைப் பாகனென்றும் சொல்வது **மரபுவழு,** (வழு—குற்றம்,) விடை

எதிர்மொழி,) இவ்வாறே எழுவகை வழுக்களையும் உணர்ந்து வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வாராமல் நீக்குக. ஆம் வழு, என முற்றுப்பயனிலையாக முடிப்பினும் அமையும்.

கா. கோபாலாசாரியர்

தி.கோ. ரங்காசாரியர்

உரை :– திணையே – திணையும், பால் – ஐம்பாலும், இடம் – மூவிடமும், பொழுது – முக்காலமும், வினா – வினாவும், இறை – விடையும், மரபு – (பலவகை) மரபுகளும், ஆம் – ஆகிய, ஏழும் –, மயங்கின் – தத்தம் முறை தவறிவந்தால், வழுஆம் – வழுவாம்.

குறிப்பு :– ஆதலின், இவ்வேழு வழுக்களையு மறிந்து, வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் அவை வாராமல் நீக்குக. (மரபு – பழைமையாக வழங்கும் முறைமை). திணை முதலிய ஆறும் மரபாயினும், அவை ஒழிந்தனவற்றையே மரபென்று சொல்லவந்தவர் அதனை இறுதியிற்கூறினார். வழுவாவது – இலக்கணப் பிழையுடையது. வழா நிலையாவது – இலக்கணப் பிழையில்லாதது. வழுவமைதியாவது – இலக்கணப்பிழை யுடையதாயினும் அறிவுடைய முன்னோரால் அங்கீகரித்து அமைக்கப்பட்டது. இம்மூன்றனுள் வழாநிலையும் வழுவமைதியுமே அங்கீகரிக்கத் தக்கன.

உ–ம். 1. அவன் வந்தது – திணை வழு
2. அவன் வந்தாள் – பால்வழு
3. யான் வந்தான் – இடவழு
4. நாளை வந்தான் – காலவழு
5. கறக்கிற எருமை பாலோ சினையோ? – வினாவழு
6. பட்டுக்கோட்டைக்கு வழியாது? என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப்பணம்என்பது. – விடைவழு
7. யானை மேய்ப்பவனை இடையன் என்பது – மரபுவழு

ஆறுமுக நாவலர்

இ–ள்.: திணை பால் இடம் பொழுது வினா இறை மரபு ஆம் ஏழும் – இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பலவகை மரபுகளும் ஆகிய ஏழும், மயங்கின வழுஆம் – தத்தநெறி மயங்கின் வழுவாம், எ–று.

திணை முதலியவனைத்தும் மரபாயினும், இங்ஙனம் விதவாதொழிந்தனவற்றை மரபெனக் கொள்க வென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்குமுறைமை.

வ—று.:—

(1) அவன்வந்தது – திணை வழு.

(2) அவன் வந்தாள் – பால் வழு.

(3) யான் வந்தான் – இட வழு.

(4) நாளை வந்தான் – கால வழு.

(5) கறக்கின்ற வெருமை பாலோ சினையோ? – வினா வழு.

(6) கடம்பூர்க்கு வழியாது? எனின், இடம்பூணி வென்னாவின் கன்றன்று என்பது –விடைவழு.

(7) யானை மேய்ப்பானை இடையன், ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பது – மரபு வழு.

இவ்வாறே எழுவகை வழுக்களையு முணர்ந்து, வழுக்கி னுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வாராமல் நீக்குக.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். திணை பால் இடம் பொழுது வினா இறை மரபு ஆம் ஏழும் – இருதிணையும் ஐம்பாலும் மூவிடமும் முக்காலமும் வினாவும் விடையும் பல வகை மரபுகளும் ஆகிய ஏழும், – மயங்கின் வழு ஆம் – தத்தநெறி மயங்கின் வழுவாம். எ – று.

திணை முதலியவனைத்தும் மரபாமாயினும், இங்ஙனம் விதவா தொழிந்தனவற்றை மரபெனக் கொள்கவென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்கு முறைமை.

(வரலாறு)

(1)	அவன்வந்தது	திணைவழு
(2)	அவன்வந்தான்	பால்வழு
(3)	யான்வந்தான்	இடவழு
(4)	நாளைவந்தான்...........................	காலவழு
(5)	கறக்கிறவெருமை பாலோ சினையோ?	வினாவழு
(6)	கடம்பூர்க்குவழியாது? எனின், இடம்பூணி யென்னாவின் கன்றனறு என்பது	விடைவழு
(7)	யானை மேய்ப்பானை இடையன் ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பன	மரபுவழு

நூல் முரிந்தது, சட்டை உடைந்தது, தண்ணீர் தின்றான் என்பன வினைச்சொல்லில் வந்த மரபுவழு.

இவ்வாறே எழுவகை வழுக்களையுமுணர்ந்து, வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வராமல் நீக்குக.

வை. மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

உரை :– திணையே – திணையும், பால் – ஐம்பாலும், இடம் – மூவிடமும், பொழுது – முக்காலமும், வினா – வினாவும், இறை – விடையும், மரபு – (பலவகை) மரபுகளும், ஆம் – ஆகிய, ஏழும் –, மயங்கின் – தத்தம் முறை தவறிவந்தால், வழுஆம் – வழுவாம்.

குறிப்பு :– ஆதலின், இவ்வேழு வழுக்களையு மறிந்து, வழக்கிடத்தும் செய்யுளிடத்தும் அவை வாராமல் நீக்குக. (மரபு – பழைமையாக வழங்கும் முறைமை). திணை முதலிய ஆறும் மரபாயினும், அவை ஒழிந்தனவற்றையே மரபென்று சொல்லவந்தவர் அதனை இறுதியிற்கூறினார். வழுவாவது – இலக்கணப் பிழையுடையது. வழா நிலையாவது – இலக்கணப் பிழையில்லாதது. வழுவமைதியாவது – இலக்கணப்பிழை யுடையதாயினும் அறிவுடைய முன்னோரால் அங்கீகரித்து அமைக்கப்பட்டது. இம்மூன்றனுள் வழாநிலையும் வழுவமைதி யுமே அங்கீகரிக்கத் தக்கன.

உ–ம்.
1. அவன் வந்தது – திணை வழு
2. அவன் வந்தாள் – பால்வழு
3. யான் வந்தான் – இடவழு
4. நாளை வந்தான் – காலவழு
5. கறக்கிற எருமை பாலோ சினையோ? – வினாவழு
6. பட்டுக்கோட்டைக்கு வழியாது? என்றால் கொட்டைப்பாக்கு எட்டுப்பணம்என்பது. – விடைவழு
7. யானை மேய்ப்பவனை இடையன் என்பது – மரபுவழு

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: தான் – இருதிணையும், பால் – ஐம்பாலும், இடம் – மூவிடமும், பொழுது – முக்காலமும், வினா – வினாவும், இறை –விடையும், மரபு – பலவகை மரபுகளும், ஆம் ஏழும் – ஆகிய ஏழும், மயங்கின் – தத்தம்நெறி மயங்கின், வழுஆம் – வழுவாம். எ–று.

திணை முதலியவனைத்தும் மரபாயினும், இங்ஙனம் விதவாதொழிந்தனவற்றை மரபெனக் கொள்கவென்பார், அதனை இறுதியிலே சொன்னார். மரபாவது தொன்றுதொட்டு வழங்கும் முறைமை.

இறை – விடை.

உ—ம். :—

(1) அவன் வந்தது.. திணை வழு.

(2) அவன் வந்தான் .... பால் வழு.

(3) யான் வந்தான்.. இட வழு.

(4) நாளை வந்தான் .... கால வழு.

(5) கறக்கின்ற பெருமை பாலோ சினையோ?.. வினா வழு.

(6) கடம்பூர்க்கு வழி யாது? எனின்

இடம்பூணி யென்னாவின் கன்றன்று என்பது விடை வழு.

(இடம்பூணி – இடப்பக்கத்திற் பூட்டப்பட்ட எருது.)

(7) யானை மேய்ப்பானை இடையன்

ஆடுமேய்ப்பானைப் பாகன் என்பன மரபு வழு .இவ்வாறே எழுவகை வழுக்களையுமுணர்ந்து, வழக்கி னுள்ளுஞ் செய்யுளுள்ளும் அவை வாராமல் நீக்குக. வழுவாவது இலக்கணக்குற்றமுள்ளது. வழாநிலையாவது இலக்கணக் குற்றம் இல்லாதது. வழுவமைதியாவது இலக்கணக் குற்றம் உள்ளதாகக் காணப்பட்டாலும் இருக்கலாம் என முன்னோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கிவருவது. இம் மூன்றனுள் வழு நீக்கப்படும்; மற்றையிரண்டும் கொள்ளப்படும்.

கா. நமச்சிவாய முதலியார்

திணை – இருதிணையும், **பால்** – ஐம்பாலும், **இடம்** – மூவிடமும், **பொழுது** – முக்காலமும், **வினா** – வினாவும், **இறை** – விடையும், **மரபு** – (பலவகை) மரபுகளும், **ஆம்** – ஆகிய, **ஏழும்** – ஏழும், **மயங்கின்** – அவ்வவற்றின் நெறி பிறழுமாயின், **வழு ஆம்** – வழுவாகும்.

உதாரணம்

அவன் வந்தது – திணை வழு
அவன் வந்தாள் – பால் வழு
யான் வந்தான் – இட வழு
நாளை வந்தான் – கால வழு
கறக்கிற எருமை பாலோ சினையோ –வினா வழு.
கருவூர்க்கு வழியாது? எனின்
'பருநூல் பன்னிருதொடி என்பது' விடை வழு
யானை மேய்ப்பானை இடையன்,
ஆடு மேய்ப்பானைப் பாகன் என்பன மரபு வழு.

மோசகு பொன்னையா

இருதிணையும், ஐம்பாலும், மூவிடமும், முக்காலமும், வினாவும், விடையும், பல்வகை மரபுகளும் ஆகிய ஏழும் தத்தம் நெறிதவறிப் பொருந்தின் வழுவாம் எ–று.

மரபு என்றது, திணை முதலிய ஆறல்லாப் பிற தொன்று தொட்ட வழக்கினை என்க. நெறிதவறிப் பொருந்தின் வழுவாம் என உரைக்கப்பட்டதால், நெறி தவறாது பொருந்தின் வழாநிலை எனவும், நெறி தவறிப் பொருந்தினும் ஆன்றோரால் அமைத்துக் கொள்ளப்பட்டு வழக்கின்கண் மரூஉப் போல நடப்பின், வழுவமைதி எனவும் படும் என்பதறிக.

எ–டு.:–

அவன் வந்தது	–	திணை வழு
அவன் வந்தாள்	–	பால் வழு
யான் வந்தான்	–	இட வழு
நாளை வந்தேன்	–	கால வழு
கறக்கின்ற எருமை பாலோ சினையோ	–	வினா வழு
(கடம்பூருக்கு வழி யாது? எனின்,)		
கொட்டைப்பாக்கு எட்டுப் பணம்	–	விடை வழு
ஆடு மேய்ப்பானைப் பாகன் எனல்	–	மரபு வழு

(24)

**375. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.**

**ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருள் மேல் பன்மையும் விளம்புப.**

aiyam ṭiṉai pāl a a poṭuviṉ um
mey ṭeri porul̲ mēl aṉmai um vil̲ampupa

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

How to avoid doubtful gender in question and answers

When questioning, the learned employ (words of the) common class and Gender, whenever they are in doubt (as to the precise ones

to be employed), and when replying, besides stating what they are sure of, they make even negative replies.

ஒப்புமைப் பகுதி

பால்மயக் குற்ற ஐயக் கிளவி
தானறி பொருள்வயின் பன்மை கூறல்

(தொல்.சொல்.:23)

உருபென மொழியினும் அஃறிணைப் பிரிப்பினும்
இருவீற்றும் உரித்தே சுட்டுங் காலை

(தொல்.சொல்.:24)

தன்மை சுட்டலும் உரித்தென மொழிய
அன்மைக் கிளவிஃ வேறிடத் தான

(தொல்.சொல்.:25)

ஐயம் திணைபாலிற் றோன்றுமேல் அவ்விரண்டும்
எய்தும் பொதுமொழியால் ஈண்டுரைக்க–மெய்தெரிந்தால்
அன்மை துணிபொருண்மேல் வைக்க ஒரு
பேர்ப்பொதுச்சொல்
பன்மைசிறப் பாலுரைத்தல் பண்பு

(நே.மி.:32)

திணைமயக் குற்ற வையப் பொருளையும்
பான்மயக் குற்ற வையப் பொருளையும்
உருவே பன்மை யஃறிணைப் பிரிப்பி
னறைதலுந் துணிந்துழி யன்மையல் லாமை
மறுப்பதன் மருங்கினு மற்றத னிடத்துந்
திறப்படச் சுட்டலுஞ் செவ்விய வென்ப

(இ.வி.:296)

ஐயம் திணைபால் அணையும் பொதுவே

(தொ.வி.:128)

திணைதுணிந் ததன்பா றுணியப் படாத
ஐயக்கிளவி யவ்வப் பொருள்வயிற்
பன்மை கூற லென்மனார் புலவர்

(மு.வி.:702)

ஐயமா மிருதிணை யகத்து முருபைச்
செப்பினு மென்மனார் தெளிந்திசி னோரே

(மு.வீ.:703)

ஐயுற் றுத்துணி தரும்வழி அண்மைத்
தன்மையைச் சுட்டலு முரிய வாகும்

(மு.வீ.: 704)

வாய்த்த திணைபால்களிலே ஐயவே முற்றாற் பொதுச்சொல்
அறைந்திடுக துணிவில் அன்மை மொழிக....

(சுவாமி.: 58:2)

மயிலை நாதர்

எ–ன், திணைபால் ஐயுற்றவழியும் துணிந்தவழியும் இவ்வாறே சொல்லுகவெனத் திணைபால் வழுக்காத்தல் நுதலிற்று.

இ–ள்.:– திணைமேல் ஐயந்தோன்றியவழி அவ்விரு திணைக்கும் பொதுவினானும், பால்மேல் ஐயந்தோன்றியவழி அவ்வப் பால்களுக்குப் பொதுவினானும், இன்னதென்று உண்மை தெரிந்த பொருளின்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவர் ஆசிரியர், எ–று.

வ–று.:–

தெற்றென வுணர்தலாகாத இடமானும் காலமானும் பற்றி நான்குமுழ அளவின் ஒருருவுகண்டு, குற்றிகொல்லோ? மகன்கொல்லோ? என்று, ஐயுற்றவழிக் குற்றிகொல்லோ மகன்கொல்லோ தோன்றுவதென் றகலுமாகாது, தோன்றுவா னென்றலுமாகாது; அவ்விருதிணைக்கும் ஏற்ப இஃதோ தோன்றுகின்ற உருவென்க; அஃதேல், உருவென்பது பொதுச் சொல்லாயினன்றே அவ்வாறமைவதெனின், மகனுருவு கொல்லோ வென்னும் குறிப்பினனாய்ச் சொல்லுதலின் அமையுமென்க.

உயர்திணையுள், பெண்மகள் கொல்லோ? ஆண்மகன் கொல்லோ? எனப் பாலையம் தோன்றியவழி, இஃதோ தோன்றுவானெனலும் ஆகாது, தோன்று வாளெனலும் ஆகாது; அவ்விருபாற்கும் பொதுவாகத் தோன்றுவாரென்க.

இனி, அஃறிணைக்கண் செய்யகத்துப் பல அடிச்சுவடு கண்டால் ஒன்றே பல அடிச்சுவடுபடவுந்திரியும்; பலவும் பலவடிச் சுவடுபடவுந் திரியுமாகலின், ஒன்றுகொல்லொ? பலகொல்லோ? என்று ஐயுற்றவழி, ஒன்றுகொல்லோ பல கொல்லொ இச் செய்புக்க தெனலுமாகாது, புக்கனவெனலு மாகாது; அவ்விருபாற்கும் ஏற்ப ஒன்று கொல்லோ பலகொல்லோ இச்செய்புக்க பெற்றமென்க.

இனித் துணிவு தோன்றியவழி, குற்றிகொல்லோ? மகன் கொல்லோ? என நின்ற திணையைத்துக்கண் மகனாதல் துணிந்தாற் குற்றியல்லன் மகனென்க; குற்றியாதல் துணிந்தால் மகனன்று குற்றியென்க.

இனிப் பாலையத்துப் பெண்மகளாதல் துணிந்தானேல், ஆண்மகனல்லள் பெண்மகளென்க; ; ஆண்மகனாதல் துணிந்தானேற் பெண்மகளல்லன், ஆண்மகனென்க.

இனி, அஃறிணைக்கண் ஒன்றாதல் துணிந்தானேல், பலவன்று ஒன்றென்க ; பலவாதல் துணிந்தானேல், ஒன்றல்ல பலவென்க. அஃதேற் குற்றியல்லன் மகனென்றவழி, அல்லனென்னும் உயர்திணை வினைக்குறிப்பு முற்று மகனென்னும் பெயர்கொண்டு முடியக் குற்றியென்னும் பெயர்க்கு ஒரு பயனிலை யின்மையின் அது நின்றுவற்று மெனின், நீக்கப்பொருண்மைக்கண் வரும் ஐந்தனுருபு குற்றியினல்லனென விரிய நின்று வற்றாதா மென்க. அல்லன வற்றிற்கும் இவ்வாறே கொள்க.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், திணைவழுவமைப்பு **உணர்—ற்று.**

இ—ள்.:— உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதி ஆறும் உயர்திணையோடு சார்த்தி முடிப்பின் உயர்திணை முடிபினவாம் எ—று.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதி ஆறும் உயர் திணைக்குக் கிழமைப்பொருள்களாய் நிற்றல்.

சார்தலாவது உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயினையும் உடன்முடித்தல்.

'உயர்திணை தொடர்ந்த பொருள்முதலாறு' என்றமையின் பொருள் என்பது உயர்திணைப்பொருள் அன்று என்பதாம்.

வ—று.:—

நம்பி: பொன்பெரியன், நாடுபெரியன், வாணாள் பெரியன், மூக்குக் கூரியன், குடிமை நல்லன், நடைகடியன் என வரும்.

'சொற்றொறும் இற்றிதன்பெற்றி' (461) என்பதனானே கிணறு நீருறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சார்த்தின் அஃறிணை முடிபினவாதலும் கொள்க. 'சார்த்தின்' எனவே, சார்த்தாவிடின் வழாநிலையாய்ப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம்முடிபு கொள்ளும் என்க.

பொன் என்னும் அஃறிணையெழுவாய் நம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினைக்குறிப்பைக் கொண்டு முடிதலின் வழுவாய், தொடர்புண்மை கருதிச் சார்த்தி முடித்தலின் அமைதியாயிற்று என்க.

பொன்னினது பெருமையை உடையன் என ஆறாமுருபு விரித்து வழாநிலை யென்றால் என்னையெனின்:— வேற்றுமைப் புணர்ச்சிக்கு உரிய எழுத்துச் சந்தியின்மையின் அது பொருந்தாது என்க. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், திணை பால் ஐயுற்ற வழியும் துணிந்த வழியும் இவ்வாறு சொல்லுகவெனத் திணை பால் அமைப்புக் கூறுகின்றது.

இ–ள்.:– **ஐயந் திணை** – திணைமேல் ஐயந் தோன்றிய வழியும், **பால்** – பால்மேல் ஐயந் தோன்றிய வழியும், **அவ்வப் பொதுவினும்** – அவ்விரு திணைப் பொதுவினாலும் அவ்வப் பால்களுக்குப் பொதுவினாலும், **மெய்தெரி பொருண்மேல்** – இன்னதென உண்மை தெரிந்த பொருளின்மேல், **அன்மையும் விளம்புவ** – ஒரு திணைக்குரியவாகியும் ஒரு பாற்குரியவாகியும் சிறப்புப்படக் கூறுவர் புலவர், எ–று.

உ–ம்.:–

எளிதில் அறியலாகா இடமாயினும் காலமாயினும் பற்றி நான்கு முழ அளவில் ஓர் உருவு கண்டு, 'குற்றி கொல்லோ மகன் கொல்லோ' என்று ஐயுற்ற வழி, அவ்விரு திணைக்கும் ஏற்ப முனந் தோன்றுகின்ற உரு என்னோ என்க. உரு என்பது பொதுச் சொல்லாயின் மகனென்றும் குற்றியென்றும் வெளியானகாலை மகனன்று குற்றி என்க; குற்றி அல்லன் மகன் என்க.

விசாகப் பெருமாளையர்

இது, திணையுடனேயும் பாலுடனேயும் வினாவிடைகள் வழுவாமற் காத்தலுணர்த்துகின்றது.

இ–ள்.: **திணை (யையம்)** – திணை யையத்தையும், **பா (லையம்)** – பாலையத்தையும், **அவ்வப்பொதுவினும்** – அதனதன் பொதுச் சொல்லாலும், **மெய்தெரி பொருண்மேல்**–துணிந்த பொருண்மேல், **அன்மையும்**–அல்லாத தன்மையை வைத்தும், **விளம்புய** – சொல்லுவர் புலவர், எ–று.

வ–று.:–

'குற்றியோ மகனோ வவ்விடத்தே தோன்றுகிறவுரு' எனத் திணையையத்திலே உரு என்கிற பொதுச்சொல்லினாலேயும், 'ஆண்மகனோ பெண்மகளோ வங்கே தோன்றுகிறவர்' எனவுயர் திணைப்பாலையத்திலே தோன்றுகிறவர், என்கிற பொதுச்சொல்லாலும், 'ஒன்றோ பலவோ விச்செய்புக்க பெற்றம்' என வஃறிணைப் பாலையத்திலே பெற்றம் என்கிற பொதுச்சொல்லாலுஞ் சொல்லுக 'அவ்விடத்தே தோன்று கிறவன்' அல்லது 'தோன்றுகிறது' என்றால் திணைவழுவும் வினாவழுவுமாம், இனித் துணிந்தபொருள், குற்றியெனின் மகனன்று எனவும், மகனெனிற் குற்றியல்லன் எனவும்,

ஆண்மகனெனிற் பெண்மகளல்லன் எனவும் பெண்மக ளெனின் ஆண்மகனல்லள் எனவும், ஒன்றெனிற் பலவன்று எனவும், பலவெனினொன்றல்ல எனவும், கூறுக மகனல்லன் அவ்வுருக் குற்றி எனக் கூறிற் சொற்பல்குத லென்னும் விடைவழுவாம்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

திணையின்கண்ணும் பாலின்கண்ணும் ஐயநிகழுமிடத்து இவ்வாறு கூறுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஐயந் திணைபா லவ்வப் பொதுவினும்
மெய்தெரி பொருண்மே லன்மையும் விளம்புப.

(ஐயம் திணை பால் அவ்வப் பொதுவினும் மெய் தெரி பொருண்மேல் அன்மையும் விளம்புப.)

இ—ள்.:— திணைஐயத்தையும் பால்ஐயத்தையும் அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும் துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையை வைத்தும் சொல்லுவர் புலவர், **எ—று.**

பொதுவென்றது எவற்றை?

பொதுவென்றது உருமுதலிய பொதுச்சொல்லையும் அவ்வத்திணைப் பன்மையையுமென வுணர்க.

ஐயப்பொருளாவது யாது?

ஐயப்பொருளாவது சிறப்பியல்பாற்றோன்றாது பொதுவியல் பாற்றோன்றிய பொருள்.

திணைபால்களின் கண் ஐயம் வருமிடத்து எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

"ஐயந் திணை பால் அவ்வப் பொதுவின் விளம்புப."

திணைபாலில் ஐயுற்றபோது துணிந்தபொருள் ஒன்றாயின் எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

"மெய் தெரி பொருண்மேல் அன்மை விளம்புப."

(வரலாறு)

வினா. (1) ஒருபொணாருளைக் கண்டவிடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயந்தோன்றியபோது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு எனப் பொதுச் சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல்லாயிற்று. (குற்றி—மரக்கட்டை). இங்கே உருவின் பரியாயமெல்லாங் கொள்க.

இங்ஙனங் கூறாது, தோன்றாநின்றது, தோன்றாநின்றான் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் றிணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந் தோன்றியபோது, ஆண்மகனோ பெண்மகளோ அங்கேதோன்றுகிறவர் எனப் பன்மைச் சொல்லால் வினாவுக. இங்ஙனங் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் பால் வழுவும் வினாவழுவுமாம்.

(3) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந் தோன்றியபோது, ஒன்றோ பலவோ இச்செய்புக்கன எனப் பன்மையாலும், ஒன்றோ பலவோ இவ்வயல்புக்கவுரு, ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம் எனப் பொதுச்சொல்லாலும் வினாவுக, உரு பெற்றமென்பன பால்பகாவஃறிணைப்பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலாற் பொதுச் சொல்லாயின. (செய்–வயல். பெற்றமென்பது பசுவுங் காளையும்.) இங்ஙனங் கூறாவிடத்துப் பால்வழுவும் வினாவழுவுமாம்.

ஒருமையாற் கூறின் வழுப்படுதல் நோக்கிப் "பொதுவினும் விளம்புப" வென வழாநிலைபோலக் கூறினாரேனும் ஒருமையைப் பன்மையாற் கூறுதலும் வழுவாதலின் ஐயப் பொருண் மேற் சொல் நிகழுமா றுணர்த்துமுகத்தாற் பால் வழுவமைத்தவாறாம்.

விடை. (1) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் குற்றியெனின், மகனன்று எனவும், மகனெனிற் குற்றியல்லன் எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஆண்மகனெனின், பெண்மகளல்லன் எனவும், பெண்மகளெனின், ஆண்மகனல்லள் எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(3) ஒன்றோ பலவோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஒன்றெனின், பலவன்று எனவும், பலவெனின், ஒன்றல்ல எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

குற்றியல்லன் என்புழிக் குற்றியென்பது அல்லனென்னுஞ்சொல் லோடு எவ்வாறியையும்?

குற்றியென்பது அல்லன் என்பதன் அன்மையோடு இயைந்து தானும் எழுவாயாகவே நிற்கும். யான் நீ யல்லேன் என்புழி நீ என்பதும் இவ்வாறு முடிதல் காண்க. இவ்வகை எழுவாய் இயைபெழுவாயெனப்படும்.

மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறிற் சொற் பல்குதலென்னும் விடை வழுவாம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, திணை பால்களோடு வினா விடை வரின் வழுவாது காத்தலுணர்த்திற்று.

இ-ள்.: ஐயந் திணை பால் – (திணைபாலனவாகிய ஐயத்தை) திணையையத்தையும் பாலையத்தையும், **அவ்வப்பொதுவினும்** – அந்தந்தப் பொதுச் சொற்களாலும், **மெய்தெரி பொருண் மேல்**–துணிந்த பொருளின்மேல், **அன்மையும் விளம்புப** – அல்லாத தன்மையை வைத்துங் கூறுவர் புலவர், எ–று.

வ–று.:–

'குற்றியோ மகனோ' எனத் திணை ஐயந் தோன்றியவழிக் – 'குற்றியோமகனோ ஆங்குத் தோன்றா நின்றவுரு' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப்பொதுப்பட நிற்றலாற் பொதுச்சொல்லென்க (குற்றி–கட்டை).

'ஆண்மகனோ பெண்மகளோ ஆங்குத் தோன்றா நின்றாரெனப்' பொதுச்சொல்லால் வினாவுக. ஆண் பெண் இரண்டல்லது பலர்பாலென வேறொன்று இன்றி யந்த இரண்டுபாற்கும் பொதுப்படநிற்றலால், தோன்றாநின்றா ரென்பது பொதுச்சொல்லென்க. 'ஒன்றோ பலவோ என அஃறிணைப்பாலையந் தோன்றியவழி, ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்' எனப் பொதுச் சொல்லால் வினாவுக. பெற்றம் என்பது பால்பகா. அஃறிணையாய் அத்திணையிருபாற்கும் பொது ஆதலால் பொதுச் சொல்லென்க. (செய் – வயல், பெற்றம் என்பது பசுவும் காளையும்). இனி இவ்வாறு வினாவினார்க்குத் துணிந்த பொருள் குற்றியாயின், மகனன்று எனவும், துணிந்தபொருள் மகனாயின், குற்றியல்லன் எனவும், ஆண்மகனெனின், பெண்மகளல்லன் எனவும், பெண்மகளெனின் ஆண்மகனல்லள் எனவும், விடை கொடுக்க.

மகனன்று குற்றியெனக் கூறின், குற்றியோ மகனோ என வினாவினார்க்கு மகன் அன்றெனின் அமையும். குற்றியென மேல்வைத்துக் கூறுதல் வேண்டா கூறலென்க. மகனன்று என்பதை ஐந்தாம்வேற்றுமைப் புணர்ச்சியென்று மகனினன்

றென விரிப்பாருமுண்டு. அதுபோலவே வரும், நீயல்லேன் என்பதை அவ்வாறு விரித்தல் கூடாமையால், இது அல்வழிப்புணர்ச்சி பதினான்கின் அடங்காது வெளிப்பட்டு அதன்புறத்தாயடங்கு மென்க. ஒழிந்த மூன்று உதாரணங்களும் அவ்வாறேயா மென்க. இனித் துணியாத பொருளின் மேல் அல்லாத தன்மையை வைத்து, மகனல்லன்குற்றி எனின், மகனல்லன் அவ்வுருக் குற்றியெனக் கூறல்வேண்டும், அவ்வாறு கூறுதல் சொற்பல்குதலென்னும் விடைவழுவாம். அவ்வழுவாராமலே, 'மெய்தெரிபொருண் மேலன்மையும் விளம்புப' என்றார் – எனக் காண்க. இனி ஆசிரியர் அகத்தியனார்,

"கண்டுபான் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோ ரென்று சொன்னிகழ்க
காணா வையமும் பல்லோர் படர்க்கை"

எனக் கூறலும், தொல்காப்பியனாரும்,

"பான்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்
உருவென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங் காலை"

"தன்மை சுட்டலு முரித்தென மொழிப
வன்மைக் கிளவிவேறிடத்தான"

எனக் கூறுதலுங் காண்க. விளம்புப என்னும் பல்லோர் படர்க்கை வினைமுற்றுப் பயனிலை புலவரென்பது, குறைந்து நின்றது; கூட்டி முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– திணைபால் ஐயம் – திணைப் பொருளிலும் பாற்பொருளிலும் சந்தேக தோன்றியவிடத்து அதனை, அவ் அவ்பொதுவினும் – அத்திணைகளுக்கும் பால்களுக்கு பொதுவாகிய சொல்லாலும், மெய்தெரி பொருள் மேல் – உண்மையாகத் துணிந்த பொருளின்மேல், அன்மையும் – அல்லாத தன்மையை வைத்தும், விளம்புப – சொல்லுவர் (அறிவுடையோர்).

உதாரணம் :

வினா : 1 திணையில் ஐயம் தோன்றிய பொழுது, 'குற்றியோ? மகனோ? அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. (இவ்வாறு கூறாமல் 'தோன்றா நின்றது', 'தோன்றாநின்றான்' எனச் சிறப்புச் சொல்லாற்கூறின் திணைவழுவும் வினாவழுவுமாம். குற்றி – கட்டை).

2.(a) உயர்திணையிற் பாலையந் தோன்றியபொழுது, 'ஆண்மகனோ? பெண்மகளோ? அங்கே தோன்றுகின்றவர்' எனப் பொதுச் சொல்லால் வினாவுக. ('தோன்றுகிறவன்', 'தோன்றுகிறவள்' எனச் சிறப்புச் சொல்லாற்கூறின் பால் வழுவும் வினாவழுவுமாம்.)

(b) அஃறிணையிற் பாலையந்தோன்றிய பொழுது, 'ஒன்றோ? பலவோ? இவ் வயல்புகுந்த மாடு' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. ('புக்கது', 'புக்கன' எனச் சிறப்புச் சொல்லாற் கூறின் பால்வழுவும் வினாவழுவுமாம்.)

விடை : 1 குற்றியோ? மகனோ? என்று ஐயப்பட்டு வினாவியபோது, துணிந்தபொருள் குற்றியாயின், 'மகனன்று' என்றும், மகனாயின் 'குற்றியல்லன்' என்றுந் துணிந்த பொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

2.(a) ஆண் மகனோ? பெண் மகளோ? என்று ஐயப்பட்டு வினாவியபொழுது, துணிந்த பொருள் ஆண்மகனாயின், 'பெண்மகளல்லன்' என்றும், பெண்மகளாயின், 'ஆண்மக னல்லள்' என்றுந் துணிந்த பொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(b) 'ஒன்றோ? பலவோ?' என்று ஐயப்பட்டு வினாவியபொழுது துணிந்த பொருள் ஒன்றாயின், 'பலவன்று' என்றும், பலவாயின் 'ஒன்றல்ல' என்றுந் துணிந்த பொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. ('மகனல்லன், அவ்வுருக்குற்றி' என்றிவ்வாறு கூறினால் 'சொல்பெருகுதல்' என்னும் விடைவழுவாம்.)

குறிப்பு :-

இனி, 'அன்மையும்' என்ற உம்மையால், வேறொரு வகை துணிந்த பொருளின்மேல் அன்மையை வைத்துச் சொல்லு தலன்றி, திணைப் பொதுச்சொல்லுக்கும் பாற்பொதுச் சொல்லுக்கும் பயனிலையாகக் குற்றியாயின் 'குற்றி', ஆண்மகனாயின் 'ஆண்மகன்' எனத் துணிந்த பொருளின் பெயரைக் கூறுதலுமாம்.

ஆறுமுக நாவலர்

இ-ள்.:- திணை பால் ஐயம் அவ்வப் பொதுவினும் - திணையையத்தையும் பாலையத்தையும் அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும், மெய்தெரி பொருண்மேல் அன்மையும் -துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையை வைத்தும், விளம்புப- சொல்லுவர் புலவர், எ-று.

வ–று.:–

வினா. (1) ஒருபொருளைக் கண்டவிடத்துக் 'குற்றியோ மகனோ' என்று திணையில் ஐயந்தோன்றிய போது, **'குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு'** எனப் பொதுச்சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல்லாயிற்று, (குற்றி – மரக்கட்டை) இங்கே உருவின் பரியாயமெல்லாங் கொள்க. இங்ஙனம் கூறாது, தோன்றாநின்றது, தோன்றாநின்றான் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் றிணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந் தோன்றியபோது, **'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகின்றவர்'** எனப் பொதுச்சொல்லால் வினாவுக. ஆண்பெண்ணிரண்டல்லது பலர்பாலென வேறொன்றின்றி அவ்விருபாற்கும் பொதுப்பட நிற்றலால், தோன்றுகின்றவரென்பது பொதுச் சொல்லாயிற்று. இங்ஙனம் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்.

(3) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந் தோன்றியபோது, **'ஒன்றோ பலவோ இச்செய்புக்க பெற்றம்'** எனப் பொதுச்சொல்லால் வினாவுக. பெற்றமென்பது பால்பகா வஃறிணைப்பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலாற் பொதுச்சொல்லாயிற்று. (செய் – வயல். பெற்றமென்பது பசுவுங் காளையும்.) இங்ஙனங் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை. (1) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் குற்றியெனின், மகனன்று, எனவும். மகனெனிற் குற்றியல்லன் எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஆண்மகனெனின், பெண்மகளல்லன். எனவும், பெண்மகளெனின், ஆண்மகனல்லள் எனவும், துணிந்தபொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(3) ஒன்றோ பலவோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஒன்றெனின், பலவன்று எனவும், பலவெனின், ஒன்றல்ல எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

மகனன்று என்பதை மகனினன்று என ஐந்தாம் வேற்றுமைப்புணர்ச்சி யென்பாருமுளர். அதுபோல் வரும் நீயல்லன் என்பதும் அங்ஙனம் விரித்தல் கூடாமையால், அல்வழிப்புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதினான்கின் புறத்ததாய் அடங்குமென்க. ஒழிந்த ஐந்து உதாரணங்களும் அவ்வாறேயாமென்க.

'மகனல்லன் அவ்வுருக் குற்றி' எனக் கூறிற், சொற்பல்குத லென்னும் விடை வழுவாம்.

வ. குமாரசாமிப் புலவர்

இ-ள். திணை பால் ஐயம் அவ்வப் பொதுவினும் – திணையை யத்தையும் பாலையத்தையும் அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும், – **மெய்தெரி பொருண்மேல் அன்மையும்** – துணிந்த பொருண்மேல் அல்லாத தன்மையை வைத்தும், **விளம்புப** – சொல்லுவர் புலவர். எ – று.

(வரலாறு)

வினா(1) ஒரு பொருளைக் கண்டவிடத்துக் குற்றியோ மகனோ என்று திணையில் ஐயந்தோன்றியபோது, குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற வுரு எனப் பொதுச் சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப்பொதுப்பட நிற்றலால், உருப்பொதுச் சொல்லாயிற்று. (குற்றி – மரக்கட்டை). இங்கே உருவின் பரியாயமெல்லாங் கொள்க. இங்ஙனங் கூறாது; தோன்றாநின்றது, தோன்றாநின்றான் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் றிணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந் தோன்றியபோது, ஆண்மகனோ, பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர் எனப் பொதுச்சொல்லால் வினாவுக. ஆண் பெண்ணிரண்டல்லது பலர்பாலென வேறொன்றின்றி அவ்விருபாற்கும் பொதுப்பட நிற்றலால், தோன்றுகின்றவ ரென்பது பொதுச் சொல்லாயிற்று. இங்ஙனங் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் பால்வழுவும், வினாவழுவுமாம்.

(3) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந் தோன்றிய போது, ஒன்றோ பலவோ இச்செய் புக்க பெற்றம் எனப் பொதுச் சொல்லால் வினாவுக. பெற்றமென்பது பால்பகாவஃ றிணைப்பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலால் பொதுச்சொல் லாயிற்று. (செய் – வயல், பெற்றமென்பது பசு அல்லது காளை). இங்ஙனங் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை (1) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் குற்றியெனின், மகனன்று எனவும் மகனெனிற் குற்றியல்லன். எனவும் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. (இக்கருத்திற்குக் குற்றியன்று என்னல் சிறப்பாகாது).

(2) ஆண்மகனோ, பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஆண்மகனெனின், பெண்மகளல்லன் எனவும், பெண்மகளெனின், ஆண்மகனல்லள் எனவும் துணிந்த பொருண் மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. (இக் கருத்துகளில் பெண்மகளல்லள் எனவும். ஆண்மகனல்லன் எனவுங் கூறல் சிறப்பாகாது).

(3) ஒன்றோ பலவோ என்றையுற்றபோது, துணிந்தபொருள் ஒன்றெனின், பலவன்று என்றும், பலவெனின், ஒன்றல்ல எனவும் துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக. (இக் கருத்துக்களில் பலவல்ல. எனவும் ஒன்றன்று எனவுங்கூறல் சிறப்பாகாது).

மகனன்று என்பதை மகனினன்று என ஐந்தாம் வேற்றுமைப் புணர்ச்சியென்பாருமுளர். அதுபோல்வரும் நீயல்லன் என்பதை அங்ஙனம் விரித்தல் கூடாமையால், அல்வழிப்புணர்ச்சியுள் எடுத்து விதந்த பதினான்கின் புறத்ததாய் அடங்குமென்க. ஒழிந்த ஐந்துதாரணங்களும் அவ்வாறேயாமென்க.

மகனல்லன் அவ்வுருக்குற்றி எனக் கூறின் வேண்டாகூற்றாய்ச் சொற்பல்குதலென்னும் விடைவழுவாம். இனி ஆசிரியரகத்தியனார் (சூ) "கண்டுபொன்மயங்குமையக்கிளவி, நின்றோர்வருவோரென்று சொன்னிகழ்க, காணாவையமும் பல்லோர்படர்க்கை" எனக் கூறலும், தொல்காப்பியனாரும், "பான்மயக்குற்ற வையக்கிளவி, தானறிபொருள் வயிற்பன்மை கூறல், உருவென்மொழியினு மஃறிணைப்பிரிப்பினு, மிருவீற்றுமுரித்தே சுட்டுங்காலை, தன்மைசுட்டலு முரித்தெனமொழிப, வன்மைக்கிளவிவேறிடத்தான" எனக் கூறுதலுங் காண்க.

வை. மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **திணை பால் ஐயம்** – திணைப்பொருளிலும் பாற்பொருளிலும் ஐயம் (சந்தேகம்) தோன்றியவிடத்து அதனை, **அவ்வப்பொதுவினும்**– அத்திணைகளுக்கும் பால்களுக்கும் பொதுவாகிய சொல்லாலும் , **மெய் தெரிபொருள்மேல்** – உண்மையாகத் துணிந்த பொருளின்மேல், **அன்மையும்** – அல்லாத தன்மையை வைத்தும், **விளம்புப** – சொல்வர், (அறிவுடையோர்,)

உ-ம்.:-

வினா.

(1) திணையில் ஐயம் தோன்றுகிறபோது, 'குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகிற உரு' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் பொதுப்பட நிற்றலால், உரு – பொதுச்சொல்லாயிற்று. (குற்றி – கட்டை) இவ்வாறு கூறாமல் தோன்றுகின்றது, தோன்றுகின்றான் எனச் சிறப்புச்சொல்லாக் கூறின், திணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) 1. உயர்திணையிற் பால் ஐயம் தோன்றியபோது, 'ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்' எனப் பொதுச் சொல்லால் வினாவுக. ஆண் பெண் இரண்டல்லது பலர்பாலென வேறொன்று இல்லாமல் அவ்விருபாலுக்கும் பொதுப்பட நிற்றலால், தோன்றுகின்றவர் என்பது பொதுச் சொல்லாயிற்று. தோன்றுகிறவன் தோன்றுகிறவள் எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், பால்வழுவும் வினாவழுவுமாம்.

2. அஃறிணையிற் பால் ஐயம் தோன்றியபோது, 'ஒன்றோ பலவோ இவ்வயல் புகுந்த **மாடு**' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. மாடு என்பது, பால்பகா அஃறிணைப்பெயராய், அத்திணை யிருபாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று. புக்கது புக்கன எனச் சிறப்புச்சொல்லாற் கூறின், பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை.

(1) குற்றியோ மகனோ என்று ஐயப்பட்டு வினாவியபோது, துணிந்த பொருள் குற்றியாயின் 'மகனற்று' என்றும், மகனாயின் 'குற்றியல்லன்' என்றும் துணிந்த பொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) 1. ஆண்மகனோ பெண்மகளோ என்று ஐயப்பட்டு வினாவியபோது துணிந்தபொருள் ஆண்மகனாயின், **'பெண்மகளல்லன்'** என்றும், பெண்மகளாயின் **'ஆண்மகனல்லள்'** என்றும் துணிந்தபொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

2. ஒன்றோ பலவோ என்று ஐயப்பட்டு வினாவியபோது, துணிந்த பொருள் ஒன்றாயின் 'பலவன்று' என்றும், பலவாயின் **'ஒன்றல்ல'** என்றும் துணிந்தபொருளின்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

'மகனல்லன், அவ்வுருக் குற்றி' என இவ்வாறு கூறினால், சொல்பெருகுத லென்னும் விடைவழுவாம்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: திணை பால் ஐயம் – திணையையத்தையும் பாலையத்தையும், அவ்வப் பொதுவினும் – அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும், மெய் தெரி பொருண்மேல் – துணிந்த பொருண்மேல், அன்மையும்–அல்லாத தன்மையை வைத்தும், விளம்புப – சொல்லுவர் புலவர். எ–று.

உ–ம்.:–

வினா.

(1) குற்றியோ மகனோ என்று திணையில் ஐயந் தோன்றிய போது, 'குற்றியோமகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. குற்றிக்கும் மகனுக்கும் உருப் பொதுப்பட நிற்றலால், உருப் பொதுச்சொல்லாயிற்று. (குற்றி – மரக்கட்டை.) இங்ஙனம் கூறாது, தோன்றாநின்றது, தோன்றாநின்றான் எனச் சிறப்புச்சொலலாற் கூறின் திணைவழுவும் வினாவழுவுமாம்.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என உயர்திணையிற் பாலையந் தோன்றிய போது, "ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகிறவர்" எனப் பொதுச்சொல்லால் வினாவுக. ஆண்பெண்ணிரண்டலல்லது பலர் பாலென வேறொன்றின்றி அவ்விருபாற்கும் பொதுப்பட நிற்றலால் தோன்றுகிறவ ரென்பது பொதுச்சொல்லாயிற்று. இங்ஙனங் கூறாது, தோன்றுகிறவன், தோன்றுகிறவள் எனச் சிறப்புச் சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்.

(3) ஒன்றோ பலவோ என அஃறிணையிற் பாலையந் தோன்றியபோது, 'ஒன்றே பலவோ இச்செய் புக்க பெற்றம்' எனப் பொதுச்சொல்லால் வினாவுக. பெற்ற மென்பது பால்பகாவஃறிணைப் பெயராய் அத்திணையிருபாற்கும் பொதுப்பட நிற்றலாற் பொதுச்சொல்லாயிற்று. (செய்–வயல். பெற்றமென்பது பசுவுங் காளையும்.) இங்ஙனங் கூறாது, புக்கது, புக்கன எனச் சிறப்புச்சொல்லாற் கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்.

விடை.

(1) குற்றியோ மகனோ என்றையுற்றபோது, துணிந்தபொருள் குற்றியெனின், 'மகனன்று' எனவும், மகனெனிற்' குற்றியல்லன்' எனவும், துணிந்த பொருண்மேல் மற்றொன் றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(2) ஆண்மகனோ பெண்மகளோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஆண்மகனெனின், 'பெண்மகளல்லன்' எனவும், பெண்மகளெனின், 'ஆண்மகனல்லள்' எனவும்

துணிந்த பொருண்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

(3) ஒன்றோபலவோ என்றையுற்றபோது, துணிந்த பொருள் ஒன்றெனின், 'பலவன்று' எனவும், பலவெனின், 'ஒன்றல்ல' எனவும் துணிந்த பொருண்மேல் மற்றொன் றல்லாத தன்மையை வைத்துக் கூறுக.

'மகனல்லன் அவ்வுருக் குற்றி' எனக் கூறிற் சொற்பெருகுதலென்னும் விடைவழுவாம்.

கா. நமச்சிவாய முதலியார்

திணை ஐயம் – திணை ஐயத்தையும், **பால் (ஐயம்)** – பாலையத்தையும், **அவ்வப் பொதுவினும்** – அவ்வவற்றின் பொதுச்சொல்லாலும், **மெய்தெரி பொருள்மேல்** – துணிந்த பொருள்மேல், **அன்மையும்** – அல்லாத தன்மையை வைத்தும், **விளம்புப** – சொல்லுவர் புலவர்.

உதாரணம்

வினா 1. குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு – திணை ஐயத்தில் உரு எனப் பொதுச்சொல்லாற் கூறப்பட்டது. இவ்வாறன்றி, **தோன்றுகின்றது, தோன்றுகின்றவன்** எனச் சிறப்புச் சொற்களாற் கூறின், திணை வழுவும் வினா வழுவும் ஆம். (குற்றி = மரக்கட்டை).

விடை **மேல் வினாவில்** – துணிந்த பொருள் **குற்றி** எனின், **மகன் அன்று** (= அக்குற்றி மகனன்று) எனவும், மகன் எனில், **குற்றி அல்லன்** (=அம்மகன் குற்றியல்லன்); எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

வினா 2. ஆண் மகனோ பெண் மகளோ அங்கே **தோன்றுகின்றவர்** – உயர்திணைப் பாலையத்தில் தோன்றுகின்றவர் எனப் பொதுச் சொல்லாற் கூறப்பட்டது. இவ்வாறன்றி, **தோன்றுகின்றவன், தோன்றுகின்றவள்** எனச் சிறப்புச் சொற்களாற் கூறின் பால்வழுவும் வினாவழுவும் ஆம்.

விடை **மேல் வினாவில்** – துணிந்த பொருள் ஆண்மகன் எனில், **பெண் மகள் அல்லன்** (=அம்மகன் பெண்மகள் அல்லன்) எனவும், பெண் மகளெனின், **ஆண் மகன் அல்லள்** (=அப்பெண் ஆண்மகன் அல்லள்) எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

வினா 3. ஒன்றோ பலவோ இச்செய்புக்க **பெற்றம்** – அஃறிணைப் பாலையத்தில் பெற்றம் எனப் பொதுச் சொல்லாற் கூறப்பட்டது. பெற்றம், பால் பகா அஃறிணைப் பெயராதலால் அத்திணை இருபாலுக்கும் பொதுச்சொல்லாயிற்று. இவ்வாறன்றிப் **புக்கது,**

புக்கன எனச் சிறப்புச் சொற்களாற் கூறின், பால் வழுவும், வினா வழுவும் ஆம்.

(செய் – கழனி. பெற்றம் – பசு, காளை.)

விடை **மேல் வினாவில் –** துணிந்த பொருள் ஒன்றாயின், பல அன்று (=அது பலவன்று) எனவும், பல எனின், **ஒன்றல்ல** (=அவை ஒன்றல்ல) எனவும் துணிந்த பொருள்மேல் மற்றொன்றல்லாத தன்மையை வைத்துக் கூறவேண்டும்.

மகன் அல்லன்; அவ்வுருக் குற்றி – என்பது போலக் கூறின் சொற்பல்குதல் என்னும் விடை வழுவாம்.

மோசசு பொன்னையா

பொருட்களின் திணை, பால்களின் ஐயம் தோன்றின், அவற்றிற்குரிய பொதுச்சொல்லாற் கூறியும்; ஒருசார் உண்மை துணியப்படின், உண்மையாகத் துணியப்பட்ட பொருளின் மேல் அல்லாத தன்மையைப் பொருத்தக் கூறியும் வினா, விடைகளை மேலோர் அமைப்பர் எ–று.

ஏற்புழிக் கோடலால், பொதுச் சொல்லால் வினாவையும், மெய்த்தெரி பொருண்மேல் அன்மை கூறலால் விடையையும் அமைத்துக் கொள்க.

எ–டு.:–

1. குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு?

–திணைஐயம்–பொதுச்சொல் 'உரு'

2. ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகின்றவர்?

–உயர்திணைப் பால்ஐயம்–பொதுச்சொல் 'தோன்றுகிறவர்'

3. ஒன்றோ பலவோ வயலிற் புக்க பெற்றம்?

–அஃறிணைப் பால்ஐயம்–பொதுச்சொல் 'பெற்றம்'

விடை

1மகனன்று குற்றி

குற்றியல்லன் மகன் திணை ஐயத்தின் கண் உண்மையாகத் துணியப்பட்ட பொருளின்மேல் அல்லாத தன்மை வைத்து விடை கூறப்பட்டது
2பெண்மகளல்லன் ஆண்மகன்

ஆண்மகனல்லள் பெண்மகள் உயர்திணைப்பால் ஐயத்தின் கண் அவ்வாறு கூறப்பட்டது

3 பலவன்று ஒன்று

ஒன்றல்ல பல அஃறிணைப்பால் ஐயத்தின் கண் அவ்வாறு கூறப்பட்டது

'இஃது அல்வழிப் புணர்ச்சி பதினான்கின் அடங்காது வெளிப்பட்டு அதன் புறத்தாயடங்கு மென்க' என்பார் முகவை இராமாநுசக்கவிராயர்.

தொல்காப்பியர்,

பால்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்,
உருபென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங்காலை,
தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான,

என மூன்று நூற்பாக்களிற் கூறியதை, இவ்வாசிரியர் இந்நூற்பாவில் அமைத்தார். பிற்கால ஆசிரியர் ஒருவர்,

கண்டுபொன் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோ ரென்றுசொன் னிகழ்க
காணா வையமும் பல்லோர் படர்க்கை,1எனக் கூறியுள்ளார்.

(25)

**376. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.**

உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்
அதன் ஒடு சார்த்தின் அத் திணை முடிபின.

uyarṭiṇai ṭotarnṭa poruḻ muṭal āūu um
aṭaṉ otu sārṭṭiṉ a ṭiṇai mutipiṉa

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Interchange of personals

When the six names of 'objects',&c., take the same predicates as the personals to which they are affixed, the predicates must agree with the personals.

ஒப்புமைப் பகுதி

உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின

(இ.வி.:297)

மயிலை நாதர்

எ–ன், உயர்திணை வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: உயர்திணையைச் சார்ந்துவரும் பொருளாதியாறும், அவ்வுயர்திணையோடு சார்த்தி முடிப்பின், உயர்திணை முடிபினவாம், எ–று.

எனவே, தம்வினையோடு சார்த்தின், தம் அஃறிணையானே முடியுமென்பதூஉமாயிற்று.

வ–று.:–

நம்பி பொன் பெரியன்; மகஅழகியன், குழவி அழகியன், விருந்தழகியன், அடிமையழகியன் எனவும், [1] நாடுபெரியன், ஊர்பெரியன், இல்லம்பெரியன் எனவும்; வாழ்நாள் பெரியன் எனவும்; கண்பெரியன், தோள் பெரியன், மூக்குக் கூரியன், மார்பகலியன் எனவும்; குடிமைநல்லன், ஆண்மைநல்லன், இளமைநல்லன், மூப்புநல்லன், அலியல்லன், கூனல்லன், குருடல்லன் எனவும் செலவுநல்லன், வரவுநல்லன், உணவுநல்லன் எனவும் வருமிவை உயர்திணையான் முடிந்தன.

இனித் தம்வினையான் முடியுமாறு : நம்பிக்குப் பொன்பெரிது ; மகவழகியது குழவியழகிது, விருந்தழகிது, அடிமையழகிது எனவும் நாடுபெரிது, ஊர்பெரிது, இல்லம்பெரிது எ– ம், வாழ்நாள்பெரிது எனவும் கண்பெரிது, தோள்பெரிது, மூக்குக்கூரிது, மார்பகலிது எ– ம், குடிமையழகிது, ஆண்மை யழகிது, இளமையழகிது, மூப்பழகிது, அலிபோயிற்று, கூன் போயிற்று, குருடுபோயிற்று எனவும் செலவழகிது, வரவழகிது, உணவழகிது எனவும் வரும். பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–ன், திணை வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

பாட வேறுபாடு.:–

1 நாடுஅழகியன், ஊர் அழகியன்,
இல்லம் அழகியன் எனவும் வாழ்நாளழகியன்.

இ—ள்.:— உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதியாறும், உயர்திணையோடு சார்த்தி முடிப்பின், உயர்திணை முடிபினவாம், எ—று.

தொடர்தலாவது அஃறிணைப்பொருளாதி ஆறும்உயர்திணைக்குக் கிழமைப்பொருள்களாய் நிற்றல்.

சார்தலாவது உயர்திணை தொடர்ந்த பொருள் முதலாறு என்றமையின்பொருள் என்பதுஉயர்திணைப்பொருள் அன்று என்பதாம்.

வ—று.:—

நம்பி; பொன் பெரியன்;நாடுபெரியன்,வாழ்நாள் பெரியன் முக்குக் கூரியன்,குடிமைநல்லன், நடைகடியன் எனவும் வரும்.

'சொற்றொறும் இற்றிதன்பெற்றி' என்பதனானே கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சார்த்தின் அஃறிணை முடினவாதலும் கொள்க. சார்த்தின் எனவே,சார்தாவிடின் வழாநிலையாய்ப் பொன்பெரிது,மூக்குக் கூரிது,எனத் தம்முடிபு கொள்ளும் என்க.பொன் என்னும் அஃறிணை எழுவாய் நம்பி என்னும் உயர்திணை எழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினைக்குறிப்பைக் கொண்டு முடிதலின் வழுவாய், தொடர்புண்மை கருதிச் சார்த்தி முடித்தலின் அமைதியாயிற்று என்க. பொன்னினது பெருமையை உடையன் என ஆறாமுருபு விரித்து வழாநிலை யென்றால் என்னையெனின்:— வேற்றுமைப் புணர்ச்சிக்கு உரிய எழுத்துச் சந்தியின்மையின் அது பொருந்தாது என்க. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், உயர்திணைப் பெயரைச் சேர்ந்த பொருளாதி ஆறுவகைப் பெயரின் முடிவு கூறுகின்றது.

இ—ள்.:— உயர்திணை தொடர்ந்த — உயர்திணைப் பெயரைச் சார்ந்து வரும், பொருண்முதலாறும் — பொருளாதி அறு வகைப் பெயரும், அதனொடு சார்த்தின் — அவ்வுயர்திணைப் பெயரொடு முடிப்பினும், அத்திணை — முடிபின— அத்திணை முடிபினவாம், எ—று.

உ—ம்.:—

நம்பி பொன்னுடையான், நம்பி நாடுடையன், நம்பி வாழ்நாளுடையன், நம்பி கண்பெரியன், நம்பி ஆண்மை நல்லான், நம்பி செலவுநல்லான் என இவை உயர்திணையாய் முடிந்தன. நம்பி பொன்பெரிது, நம்பி நாடுபெரிது , நம்பி வாழ்நாள் பெரிது, நம்பி குடிமையழகிது, நம்பிவாழ்நாளழகிது, இவை தத்தம் வினையான் முடிந்தன.

விசாகப் பெருமாளையர்

இது, திணைவழுவமைதி உணர்த்துகின்றது.

இ–ள்.: உயர்திணை – உயர்திணையை, தொடர்ந்த – பற்றிய, பொருண்முதலாறும் – பொருளாதியாறும், அதனொடு – அவ்வுயர்திணையோடு, சார்த்தின் – சேர்த்து முடிக்கின், அத்திணை முடிபின – அவ்வுயர்திணை முடிபினவாம், எ–று.

வ–று.:–

நம்பி பொன்பெரியன், நாடு பெரியன், வாழ்நாள் பெரியன், மூக்குக் கூரியன், குடிமை நல்லன், நடை கடியன் என வரும். 'சொற்றொறுமிற்றிதன் பெற்றி'யென்கிற சூத்திர விதியால், மாடுகோடு கூரிது என வஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபாதலுங் கொள்க. சார்த்தினெனவே சார்த்தாவிடின் வழாநிலையாக நம்பிக்குப் பொன்பெரிது என வரும். பொன்னென்னும் அஃறிணை யெழுவாய் பெரியனென்னும் உயர்திணை யெழுவாயின் பயனிலை கொண்டு முடிதலால் வழுவாய்த் தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

அஃறிணைச்சொற்கள் உயர்திணை முடிபுகொள்ளல் வழுவேயாயினும் இவ்வாறுவரின் தழுவுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறும்
அதனொடு சார்த்தி னத்திணை முடிபின.
(உயர் திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும்
அதனொடு சார்த்தின் அத்திணை முடிபின.)

இ–ள்.:– உயர்திணை யெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதியாறும் அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின் அவ்வுயர்திணை முடிபினவாம், எ–று.

தொடர்தலாவது அஃறிணைப்பொருளாதியாறும், உயர்திணைக்குக் கிழிமைப்பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன் முடித்தல்.

வ–று.:–

நம்பி பொன் பெரியன் – இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயு முடிந்ததறிக.

நம்பி நாடு பெரியன் ,,

நம்பி வாழ்நாள் பெரியன்

நம்பி மூக்குக் கூரியன் ,,

நம்பி குடிமை கல்லன் ,,

நம்பி நடை கடியன் ,,

"சொற்றோறு மிற்றிதன்பெற்றி" என்பதனாலே, கிணறு நீருறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

சார்த்தின் என்றமையாற் கொள்ளக்கிடப்பது யாது?

சார்த்தாவிடின் வழாநிலையாக அவ்வஃறிணைச்சொற்கள் தமக்குரிய முடிபே கொள்ளுமென்பது?

உ-ம்.:-

நம்பிக்குப் பொன் பெரிது, நம்பிக்கு மூக்கு நல்லது எனவரும்.

பொன்னென்னும் அஃறிணை யெழுவாய், நம்பி யென்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெரியனென்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

முகவை இராமானுச கவிராயர்

இது, திணை வழுவமைதி யுணர்த்திற்று.

இ-ள்.:- உயர்திணை தொடர்ந்த பொருண் முதலாறும்- உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதியாறும், அதனொடு **சார்த்தின்** - அவ்வுயர்திணையொடு சேர்த்து முடிப்பின், **அத்திணை** முடிபின - அவ்வுயர்திணை முடிவையுடையனவாம், எ-று.

தொடர்தலாவது, அஃறிணைப் பொருளாதி யாறும் உயர்திணைக்குக் கிழமைப் பொருளாய் நிற்றல், (கிழமை-உரிமை,). சார்த்தலாவது - உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயையுங் கூட்டி முடித்தல். **'உயர்திணை'** என்றதினாலே, 'பொருண்முதலா'றென்றதிற் பொருளாவது, அஃறிணைப் பொருளெனக் கொள்க.

வ-று.:-

நம்பி பொன் பெரியன், நம்பி நாடு பெரியன், நம்பி வாழ்நாள் பெரியன், நம்பி கண் பெரியன், நம்பி குடிமை நல்லன், நம்பி நடை கடியன் என வரும்.

இனிச் 'சொற்றொறுமிற்றி தன்பெற்றி'யென்னுஞ் சூத்திரத் தால்; கிணறு நீருறிற்று, மாடுகோடுகூரிது.

"ஊருணி நீர்நிறைந் தற்றே"

"நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்"

என அஃறிணையொடு அஃறிணையைச் சேர்த்தின் அம்முடிபாக முடிதலுங் கொள்க. அளதனுள், பொன் என்னும் அஃறிணை யெழுவாய் நம்பி என்னுமுயர்திணை எழுவாயின் பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணை வினைக்குறிப்புச் சொல்லைக் கொண்டு முடிதலால் வழுவாகி, இவ்வாறு தொடர்ந்து நிற்றல் சான்றோர் செய்யுளுள்ளும் உளவாதலால், அதுநோக்கி சார்த்தி முடித்தலின் அமைதியாகி, வழுவமைதி யாயிற்றென்க, பிறவுமன்ன. இனி, நம்பிபொன்பெரியன் என்பதை நம்பிபொன்னினது பெருமையையுடையன் என விரித்து வழாநிலை யென்றால் என்னையெனின், பொற்பெரியனென்னும் வேற்றுமைப் புணர்ச்சிக் குரிய எழுத்துச் சந்தியில்லாததினாலே பொருந்தா தென்க. (வழுவாதநிலை–வழாநிலை,) வழாநிலை – இலக்கணம், வழு–இலக்கணக் குற்றம், வழுவமைதி– இலக்கணக் குற்றமாயினுமிருக்கலாமென ஒத்துக் கொண்டது, இம்மூவகையே எல்லா இலக்கண நூல்களிலு மிலக்கிய நூல்களிலுஞ் சொல்லப்படுவது. பொருண்முதலாறும் – அத்திணை முடிபின என முடித்துக்கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– உயர்திணை–உயர்திணயெழுவாயை, தொடர்ந்த – தொடர்ந்துவந்து தானும் எழுவாயாக நிற்கிற, பொருள்முதல் ஆறும் – (அஃறிணையாகிய) பொருள் இடம் முதலிய ஆறும், அதனொடு சார்த்தின் அவ்வுயர் திணையோடு சேர்த்து முடிக்கப்பட்டால், அத்திணை முடிபின – அவ்வுயர்திணை முடிபைப் பெறுவனவாம்.

குறிப்பு :– தொடர்தலாவது – அஃறிணைப் பொருளாதி ஆறும் உயர்திணைக்குச் சம்பந்தப்பட்டனவாய் நிற்றல். சார்தலாவது – உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயையும் உடன்முடித்தல்.

உதாரணம்

நம்பி பொன் பெரியன்	– பொருள்.	நம்பி கை பெரியன்	–சினை.
நம்பி நாடு பெரியன்	– இடம்.	நம்பி புலமை பெரியன்	–குணம்.
நம்பிவாழ்நாள்பெரியன்	– காலம்	நம்பிநடை பெரியன்	–தொழில்.

(உயர்திணை எழுவாயின் பயனிலையோடு அஃறிணை எழுவாயும் முடிந்தது.)

'பொன்' என்னும் அஃறிணையெழுவாய், 'நம்பி' என்னும் உயர்திணை

யெழுவாயினது பயனிலையாகிய 'பெரியன்' என்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித் தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று. இனி, "சொற்றொறுமிற்றி தன் பெற்றி" என்பதனால், 'கிணறு நீர் ஊறிற்று', மாடு கோடு கூரிது' என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

'சார்த்தின்' எனவே சார்த்தாவிடின் வழாநிலையாக, 'நம்பிக்குப் பொன் பெரிது' எனத் தம்முடிபு கொள்ளுமென்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:– உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும் –உயர்திணை யெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதி யாறும், **அதனொடு சர்த்தின்** – அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின், **அத்திணை முடிபின** – அவ்வுயர்திணை முடிபினவாம், எ—று.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதியாறும் உயர்திணைக்குக் கிழமைப்பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயையும் உடன் முடித்தல்.

வ – று.:–

நம்பி பொன் பெரியன், நம்பி நாடு பெரியன், நம்பி வாழ்நாள் பெரியன், நம்பி மூக்குக் கூரியன், நம்பி குடிமை நல்லன், நம்பி நடை கடியன், இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயு முடிந்ததறிக.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே, கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

'சார்த்தின்' எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம்முடிபு கொள்ளுமென்க.

பொன்னென்னும் அஃறிணையெழுவாய், நம்பியென்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெரிய னென்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். உயர்திணை தொடர்ந்த பொருள் முதல் ஆறும் – உயர்திணை யெழுவாயைத் தொடர்ந்த அஃறிணைப் பொருளாதியாறும், – **அதனொடு சார்த்தின்** – அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின், – **அத்திணை முடிபின** – அவ்வுயர்த்திணை முடிபினவாம். எ—று.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதியாறும் உயர்திணைக்குக் கிழமைப் பொருள்களாய் நிற்றல். சார்த்தலாவது உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன்முடித்தல்.

வ–று.:–

நம்பிபொன்பெரியன்	
நம்பிநாடுபெரியன்	இங்கே உயர்திணையெழுவாயின்
நம்பிவாழ்நாள்பெரியன்	பயனிலையோடு அஃறிணை
நம்பிமூக்குக்கூரியன்	யெழுவாயு முடிந்த
நம்பிகுடிமைநல்லன்	தறிக.
நம்பிநடைகடியன்	

'சொற்றொறுமிற்றிதன்பெற்றி' என்பதனாலே, கிணறு நீரூறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

சார்த்தின் எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம்முடிபு கொள்ளுமென்க.

பொன்னென்னும் அஃறிணையெழுவாய், நம்பியென்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெரிய னென்னும் உயர்திணை வினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

வை. மு. சடகோராமாநுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– உயர்திணை – உயர்திணையெழுவாயை, தொடர்ந்த – தொடர்ந்து வந்து தானும் எழுவாயாக நிற்கின்ற, பொருள் முதல் ஆறும் – (அஃறிணையாகிய) பொருள் இடம் முதலிய ஆறும், அதனொடு சார்த்தின் – அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கப்பட்டால், அத் திணை முடிபின – அவ்வுயர்திணை முடிபைப் பெறுவனவாம்; எ–று.

தொடர்தலாவது – அஃறிணையாகிய பொருள் முதலிய ஆறும் உயர்திணைக்குச் சம்பந்தப்பட்டதாக நிற்றல். சார்த்தலாவது – அஃறிணையாகிய பொருள் முதலியவற்றின் தன்மையை அவற்றையுடைய உயர்திணையின் மேல் ஏற்றிக் கூறுதல்.

உ–ம்.:–

நம்பி பொன் பெரியன் – பொருள், நம்பி நாடு பெரியன் – இடம், நம்பி வாழ்நாள் பெரியன் – காலம், நம்பி மூக்குக் கூரியன் – சினை, நம்பி குடிமை நல்லன் – குணம், நம்பி நடை கடியன்

– தொழில் – இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணை யெழுவாயும் முடிந்தமை அறிக.

பொன் என்னும் அஃறிணையெழுவாய், நம்பி என்னும் உயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெரியன் என்னும் உயர்திணைவினையைக் கொண்டு முடிதலால் வழுவாகி, தொடர்புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று. அஃறிணையாகிய பொன்னினது தன்மையான பெருமை, அதனையுடைய உயர்திணையாகிய நம்பியின் மேல் ஏற்றப்பட்டது.

இனி, கிணறு நீர் ஊறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபினவாதலும் கொள்க.

'சார்த்தின்' எனவே, சார்த்தாவிட்டால் வழாநிலையாக நம்பிக்குப் பொன் பெரிது, நம்பிக்கு வாழ்நாள் பெரிது எனத் தம் முடிபு கொள்ளும்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: உயர் திணை தொடர்ந்த – உயர்திடிண யெழுவாயைத் தொடர்ந்த, பொருள் முதல் ஆறும் – அஃறிணைப்பொருளாதியாறும், அதனொடு சார்த்தின் – அவ்வுயர்திணையோடு சேர்த்து முடிக்கின், அத்திணை முடிபின – அவ்வுயர்திணை முடிபினவாம். எ–று.

தொடர்தலாவது அஃறிணைப் பொருளாதியாறும் உயர்திணைக்கு உரிமைப்பொருள்களாய் நிற்றல் சார்த்தலாவது உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயையும் உடன்முடித்தல்.

(உ–ம்.)

நம்பி பொருள் பெரியன் – பொருள்.

நம்பி நாடு பெரியன் – இடம்.

நம்பி வாழ்நாள் பெரியன் – காலம்.

நம்பி மூக்குக் கூரியன் – சினை.

நம்பி குடிமை நல்லன் – குணம்.

நம்பி நடை கடியன் – தொழில்.

இங்கே உயர்திணை யெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயும் முடிந்ததறிக.

"சொற்றொறுமிற்றிதன்பெற்றி" (சூ – 461) என்பதனலே, கிணறு நீர் ஊறிற்று, மாடு கோடு கூரிது என அஃறிணையோடு சேர்ப்பின், அஃறிணை முடிபினவாதலுங் கொள்க.

'சார்த்தின்' எனவே, சார்த்தாவிடின், வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம் முடிபுகொள்ளுமென்க.

பொன்னென்னும் அஃறிணையெழுவாய், நம்பியென்னும் உயர் திணையெழுவாயினது பயனிலையாகிய பெரியனென்னும் உயர் திணைவினையைக் கொண்டு முடிதலால் வழுவாகித், தொடர் புண்டாயிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியாயிற்று.

கா. நமச்சிவாய முதலியார்

உயர்திணை – உயர்திணையை, **தொடர்ந்த** – பற்றிய, **பொருள்முதல் ஆறும்** – பொருளாதியாறும், **அதனொடு** – அவ்வுயர்திணையொடு, **சார்த்தின்** – சேர்த்து முடிக்கின், **அத்திணை முடிபின** – அவ்வுயர்திணை முடிபினவாம்.

உதாரணம்

நம்பி பொன் பெரியன்	–	பொருள்	
நம்பி நாடு பெரியன்	–	இடம்	
நம்பி வாழ்நாள் பெரியன்	–	தொழில்	இங்கு உயர்திணை எழு
நம்பி மூக்குக் கூரியன்	–	காலம்	வாயின் பயனிலையோடு
நம்பி குடிமை நல்லன்	–	சினை	அஃறிணை எழுவாயும்
நம்பி நடை கடியன்	–	குணம்	முடிந்தது.

பொன் என்னும் அஃறிணை எழுவாய், பெரியன் என்னும் உணர்திணை யெழுவாயின் பயனிலை கொண்டு முடிதலால் வழுவும், தொடர்பு உண்டா யிருத்தல் பற்றிச் சார்த்தி முடித்தலால் வழுவமைதியும் ஆயிற்று.

461–வது சூத்திரம் 'சொற்றொறும் இற்றிதன் பெற்றி' என்னும் சூத்திரவிதியால், மாடு கோடு கூரிது, கிணறு நீரூறிற்று என அஃறிணையோடு சேர்ப்பின் அஃறிணை முடிபேயாம்.

'சார்த்தின்' எனவே, சார்த்தாவிடின் வழாநிலையாக, நம்பிக்குப் பொன் பெரிது, மூக்குக் கூரிது எனத் தம் முடிபு ஏற்று வரும்.

மோசசு பொன்னையா

பொருட்களின் திணை, பால்களின் ஐயம் தோன்றின், அவற்றிற்குரிய பொதுச்சொல்லாற் கூறியும்; ஒருசார் உண்மை துணியப்படின், உண்மையாகத் துணியப்பட்ட பொருளின் மேல் அல்லாத தன்மையைப் பொருத்தக் கூறியும் வினா, விடைகளை மேலோர் அமைப்பர் எ–று.

ஏற்புழிக் கோடலால், பொதுச் சொல்லால் வினாவையும், மெய்த்தெரி பொருண்மேல் அன்மை கூறலால் விடையையும் அமைத்துக் கொள்க.

எ–டு.:–

1. குற்றியோ மகனோ அவ்விடத்துத் தோன்றுகின்ற உரு?

–திணைஐயம்–பொதுச்சொல் 'உரு'

2. ஆண்மகனோ பெண்மகளோ அங்கே தோன்றுகின்றவர்?

–உயர்திணைப் பால்ஐயம்–பொதுச்சொல் 'தோன்றுகிறவர்'

3. ஒன்றோ பலவோ வயலிற் புக்க பெற்றம்?

–அஃறிணைப் பால்ஐயம்–பொதுச்சொல் 'பெற்றம்'

விடை

1.மகனன்று குற்றி

குற்றியல்லன் மகன் திணை ஐயத்தின் கண் உண்மையாகத் துணியப்பட்ட பொருளின்மேல் அல்லாத தன்மை வைத்து விடை கூறப்பட்டது

2.பெண்மகளல்லன் ஆண்மகன்

ஆண்மகனல்லள் பெண்மகள்உயர்திணைப்பால் ஐயத்தின் கண் அவ்வாறு கூறப்பட்டது

3.பலவன்று ஒன்று

ஒன்றல்ல பலஅஃறிணைப்பால் ஐயத்தின் கண் அவ்வாறு கூறப்பட்டது

'இஃது அல்வழிப் புணர்ச்சி பதினான்கின் அடங்காது வெளிப்பட்டு அதன் புறத்தாயடங்கு மென்க' என்பார் முகவை இராமாநுசக்கவிராயர்.

தொல்காப்பியர்,

பால்மயக் குற்ற வையக் கிளவி
தானறி பொருள்வயிற் பன்மை கூறல்,
உருபென மொழியினு மஃறிணைப் பிரிப்பினு
மிருவீற்று முரித்தே சுட்டுங்காலை,
தன்மை சுட்டலு முரித்தென மொழிப
அன்மைக் கிளவி வேறிடத் தான,

என மூன்று நூற்பாக்களிற் கூறியதை, இவ்வாசிரியர் இந்நூற்பாவில் அமைத்தார். பிற்கால ஆசிரியர் ஒருவர்,

கண்டுபோன் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோ ரென்றுசொன் னிகழ்க
காணா வையமும் பல்லோர் படர்க்கை,

எனக் கூறியுள்ளார்.

377. திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும் மிகவினு[1] மிழிபினு மொருமுடி பினவே.

திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்
மிகவினும் இழிபினும் ஒரு முடிபினவே.

ṭiṇai pāl poruḻ pala viravina siṟappin um
mikavin um iḻipin um oru mutipina ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Interchange of Personals and Impersonals

When the Nominatives (of a single predicate) are different classes and Genders, or if they are Names of objects requiring different verbs, the predicate must be personal or impersonal according as importance, Abundance, or inferiority is the predominant idea among those subjects.

ஒப்புமைப் பகுதி

பலவயி னானும் எண்ணுத்திணை விரவுப்பெயர்
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே

(தொல்.சொல்.:51)

எண்ணும் இருதிணையும் எய்தும் அஃறிணையா
எண்ணிவியங் கொள்க இருதிணையும்–எண்ணினாற்ள
றன்மையாம் அஃறிணையும் சொன்னமொழி தன்னினத்தை
உன்னி முடித்தலும் உண்டு

(நேமி.:34)

திணைவிர வெண்ணுப் பெயர் சிறப்பினு மிகவினு
மிழிபினு மொருமுடி பெய்து மென்ப.

(மு.வீ.:726)

மயிலை நாதர்

எ–ன், திணை[2] பால் மரபு வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

பாட வேறுபாடு:–

1.மிழிப்பினும்

2.பால்வழுவமைப்பு

இ–ள்.:– திணையும் பாலும் பலபொருளும் தம்முள் விரவி நின்றவழிச் சிறப்பினானும் மிகுதியினானும் இழிப்பினானும் ஒன்றனைக் கொண்டுமுடியும், எ–று.

வ–று.:

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் – றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்"

(நாலடி. 151),

"பழியஞ்சான் வாழும் பசுவு மழிவினாற்
கொண்ட வருந்தவம் விட்டானுங் கொண்டிருந்
தில்லஞ்சி வாழு மெருது மிவர்மூவர். நெல்லுண்ட
நெஞ்சிற்கோர் நோய்"

(திரி.80)

எனவும் வருமிவை சிறப்பினான் உயர்திணை முடிபு பெற்றன.

"வேந்தன் பெரும்பதி மண்ணான் மாந்தர்,
ஈங்கிம் மூவ ரிதற்குரி யோரே"

"தன்பான் மனையா ளயலான் றலைக்கண்டு பின்னும்
இன்பாலடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலா
நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பார்,
என்பாரை யோம்பே னினின்யானவனாகவென்றான்"

(சீவக. 443),

"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று" (சிலப். 21:53)

என வருமிவை (பன்மை) மிகவினால் உயர்திணை முடிபு பெற்றன.

"நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையி
னற்பனுவ னால்வேதத், தருஞ்சீர்த்திப்
பெருங்கணுறை, நெய்ம்மலி யாவுதி பொங்கப்
பன்மாண், வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி,
யூப நட்ட வியன்களம் பலகொல்,
யாபல கொல்லோ பெரும"

(புறநா.15)

"தொல்லை நால்வகைத் தோழருந் தூமணி நெடுந்தேர்,
மல்லற் றம்பியுமாமனு மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் றாதையுஞ் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத்[1] தொக்கன வளங்கெழு கோயிலு ளொருங்கே"

(சீவக . 2360.)

இவை சிறப்பினான் [2]அஃறிணை முடிபு பெற்றன.

"கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்–வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும் படைவேந்தன்
பற்று விடல்"

(திரி. 34),

"எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் [3]தீத்தெய்வம்
உச்சந் தலையோ டிவையென்ப யாவரும்
திட்பத்தாற் றீண்டாப் பொருள்"

(ஆசார.6.)

இவை [4]பன்மை மிகவினான் அஃறிணை முடிபு பெற்றன.

"வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும்
குறுகா ரறிவுடை யார்"

" மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா"

எனுமிவை இழிப்பினான் அஃறிணை முடிபுபெற்றன.

ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ இச்செய்புக்கார்? ஒருத்தி கொல்லோ பலர்கொல்லோ ஈண்டுப் புக்குற்றார்? எனுமிவை ஒருமை பன்மை விரவிவந்து பன்மை மிகவினாற் பன்மை முடிபுபெற்றன.

"கண்டுபான் மயங்கு மையக் கிளவி
[5]நின்றோர் வருவோரென்று சொன்னிகழக் காணா

பாட வேறுபாடு:–

1. தொக்கது
2. வியன்களம்,தொக்கதெனஒருமை அஃறிணை
3. தீய்த்தேவர்
4. மூன்று, இவையென்ப என்ற பன்மை மிகுதியான்
5. நின்றோன் வருவோர்

வையமும் பல்லோர் படர்க்கை”

என்றார், அகத்தியனார். இச்சூத்திரத்தினால், ஒருவர் கொல்லோ பலர்கொல்லோ என்ற இலக்கணவழுவுக்கு அமைதி கண்டுகொள்க.

“பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப்பெயர்,
அஃறிணை முடிபின செய்யு ளுள்ளே”

(கிளவி . 51)

என்றார், தொல்காப்பியனார்.

இவற்றால் இவைமுடியுமாறு ஆராய்ந்துகொள்க.

இனிப் பலபொருள்விரவின:

“ஊன் றுவை, கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது,
பிறிதுதொழி லறியா வாகலின்” (புறநா. 14)

இது சிறப்பினான் ஒன்றற்கேற்ற வினைகொண்டது.

அரசன் எடுத்துவிட்டான், நாடகி ஆடவந்தான், இவை பல விரவிச் சிறப்பினான் ஒருபாலால் முடிந்தன.

எயினநாடு, மறநாடு, பார்ப்பனச்சேரி, அரசர்பெருந்தெரு, வாணிகநகரமெனுமிவை, உயர்திணைக்கட் பல விரவிப் பன்மையான் ஒரு பெயரேற்றன.

ஆதீண்டுகுற்றி, வயிரகடகம், மாந்தோட்டம், கமுகந்தோட்டம் எனவும்; ஓடுவங்காடு, காரைக்காடு எனவும் வருமிவை அஃறிணைக்கட் டலைமையும் பன்மையும்பற்றி ஒருபெயரேற்றன. பிறவுமன்ன.

“பாணன் பறையன் கடம்பன் றுடியன்,
எனுநான் கல்லது குடியுமில்லை” (புறநா. 335)

என்பது உயர்திணை அஃறிணையான் முடிந்தது; இவ்வழு யாண்டு அமைக்கப் படுமோவெனின், அது வழுவாயினன்றே அமைக்க வேண்டுவது; குடியென்பதனை எல்லாவற்றோடுங் கூட்டியுரைக்கப்படுதலின், வழாநிலையாமென்க.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், திணை பால் மரபு வழுவமைப்பு உணர்—ற்று.

இ—ள்.: திணையும் பாலும் வேறுவினைப் பொருள்களும் விரவி நின்றவழி அவைபலவும் ஒரு முடிபினவாம், சிறப்பினானும் மிகுதியினானும் இழிபினானும், எ—று.

வ–று :

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும் திங்களும் சான்றோரும் ஒப்பர்மன் – திங்கள் மறுவாற்றும் சான்றோர் அஃதாற்றார் தெருமந்து தேய்வர் ஒருமா சுறின்"

எனவும்,

"பழியஞ்சான் வாழும் பசுவும் அழிவினால்
கொண்ட அருந்தவம் விட்டானும் – கொண்டிருந்
தில்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்லுண்ட நெஞ்சிற்கோர் நோய்"

எனவும் இவை திணை விரவிச் சிறப்பினான் உயர்திணை முடிபு ஏற்றன. இழிந்தோரை எண்ணியபின் அதனுள் சிறப்பு என்னையெனின்:– பசு, விட்டான், எருது என்னும் மூன்றனுள் விட்டான் என்பது உயர்திணை ஆண் சிறப்பு ; பசு எருது என்பன உயர்திணைப் பொருளவேனும் அஃறிணையாக உருவகப்படுத்தினமையின் இங்ஙனம் அமைக்கப்பட்டன.

"தன்பான் மனையாள் அயலான்தலைக் கண்டு பின்னும்
இன்பால் அடிசிற் கிவர்கின்றகைப் பேடி போலாம்
நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர் பார்ப்பார்
என்பாரை ஓம்பேன் எனின்யான் அவனாக என்றான்"

எனவும்,

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தார் இளையார் பசுப்பெண்டிர் என்றிவர்கட் காற்ற
வழிவிலங்கி னாரே பிறப்பிடைப்
போற்றி எனப்படு வார்"

எனவும் இவை திணை விரவி மிகுதியினான் உயர்திணை முடிபு ஏற்றன.

" நசைதர வந்தோர் நசைபிறக் கொழிய
வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் புரையில் நற்பனுவல்
நாஅல்வேதத் தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல்
யாபல கொல்லோ பெரும"

என இவை சிறப்பினான் அஃறிணை முடிபு ஏற்றன.

"எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வம் உச்சம்

தலையோ டிவை என்ப யாவரும் திட்பத்தால்
தீண்டாப் பொருள்”

என இவை மிகுதியினான் அஃறிணை முடிபு ஏற்றன.

“வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயெருமை என்றிவை ஆறும்
குறுகார் அறிவுடை யார்”

எனவும்

“மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா”

எனவும் இவை இழிபினான் அஃறிணை முடிபு ஏற்றன. 'பன்மை பொருமுடிபின' என்னாது, 'ஒருமுடிபின' என வாளா கூறினமையின்,

“தானும் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்”

எனத் திணைவிரவிச் சிறப்பினான் ஆண்பால்முடிபு ஏற்றலும்,

“தொல்லை நால்வகைத் தோழரும் துணைமணி நெடுந்தேர்
மல்லல் தம்பியும் மாமனும் மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் தாதையும் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத் தொக்கது வளங்கெழு கோயிலுள் ஒருங்கே”

எனத் திணை விரவிச் சிறப்பினான் ஒருமைமுடிபு ஏற்றலும் கொள்க.

“நானும்என் சிந்தையும் நாயகனுக் கெவ்விடத்தோம்
தானும்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்”

என ஆண்பாலும் பெண்பாலும் விரவிச் சிறப்பினான் ஒருமுடிபு ஏற்றன.

'சொற்றொறும் இற்றிதன்பெற்றி' (461) என்பதனானே விரவாது எண்ணித், 'தோழனும் தானும் வந்தான்', 'தோழியும் தானும் வந்தாள்' என முடிதலும் கொள்க. கறியும் சோறும் உண்டான், மாலையும் முடியும் கவித்தான், குஞ்சமும் குடையும் கவித்தான், சாந்தமும் முலையும் தழுவினான் என வேறுவினைப் பல்பொருள் விரவிச் சிறப்பினான் ஒருமுடிபு ஏற்றன. பிறவும் அன்ன.

இங்ஙனம் இறுதிக்கண் கூறிய மரபுவழுவமைதி **'வேறு வினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொல்லும்' (389)** என்னும் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலாம் பிறவெனின்:- சிறப்பு முதலிய கருதாது ஒத்தநிலைமையின் எண்ணியவழி முடியுமரபு அங்ஙனம் கூறுதலின் அது மாறுகொளக்கூறல் அன்றென்க.

"பாணன் பறையன் கடம்பன் துடியனென் றந்நான்
கல்லது குடியும் இல்லை"

என உயர்திணை எண்ணி, அஃறிணை முடிபினவாய வழு யாண்டு அமைக்கப்படும் எனின், குடி என்பதனைப் பாணன் முதல் நான்கோடும் கூட்டி உரைக்கப்படுதலின் வழாநிலையாம் என்க.

இனி, பால் விரவி ஒருமுடிபு ஏற்பனவற்றிற்கு ஒருவன் கொல்லோ பலர்கொல்லோ இச்செய் புக்கார் என உதாரணம் காட்டின், 'ஐயம் திணைபா லவ்வப் பொதுவினும்' (376) என்பதனுள் வந்தன அன்றி ஈண்டைக்கு ஆகாமையானும் இங்ஙனம் காட்டிய இலக்கியங்கட்கு இலக்கணம் இன்மையானும் அது காட்டன்று என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், திணை பால் மரபு வழுவமைப்புக் கூறுகின்றது.

இ–ள்.: திணைபால் – திணையும் பாலும், பொருள்பல விரவின – பலபொருளும் தம்முள்நின்ற வழி, சிறப்பினும் மிகவினு மிழிப்பினும் – சிறப்பினானும் மிகுதியினாலும் இழிப்பினாலும், ஒருமுடிபினவே – ஒன்றனைக் கொண்டு முடியும், எ–று.

உ–ம். :

"திங்களுஞ் சான்றோரு மொப்பர்" (நாலடி . 151),

"பழியஞ்சி வாழு மரசும் அருந்தவம் விட்டானும்
இல்லஞ்சி வாழுமெருதும் மிவர்மூவர் ... நோய்"

(திரி. 80)

இவை சிறப்பினால் உயர்திணை முடிபு ஏற்றன.

"பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர், மூத்தோர்
குழவி யெனுமிவரைக் கைவிட்டு"
(சிலம்பு. வஞ்சின. 53 – 54)

என இவை பன்மை மிகுதலான் உயர்திணை முடிபாய் முடிந்தன.

"தொல்லை நால்வகை தோழரும் ... ... தேர்
மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச்
செல்வன் றாதையுஞ் செழுநக ரொடுவள நாடும்
வல்லைத் தொக்கன வளங்கெழு கோயிலு ளொருங்கே"

(சீவக. 2360)

இவை இழிபு சிறப்பினான் அஃறிணை முடிபு ஏற்றன.

விசாகப் பெருமாளையர்

இது, திணைபால்களின் மரபுவழுவமைதி உணர்த்துகின்றது.

இ-ள்.: திணை – திணைகளும், **பால்** – பால்களும், **விரவின** – கலந்து நின்றனவாகிய, **பொருள்பல** – வேறு வினைப் பல பொருள்களும், **சிறப்பினும்** – சிறப்பினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **இழிபினும்** – இழிவினாலும், **ஒருமுடிபின** – ஒரு முடிபினவாகும், எ- று.

வ-று.:-

'திங்களுஞ் சான்றோருமொப்பர்', திணை விரவிச் சிறப்பினாலுயர்திணை முடிபேற்றன. 'பார்ப்பார் தவரேசுமந்தார் பிணிப்பட்டார்', 'மூத்தார் குழவியெனு மிவர்கட்கு': திணை விரவி மிகுதியாலுயர் திணை முடிபேற்றன. 'எச்சிலார் தீண்டார்' ' பசுப்பார்ப்பார்' 'தீத்தெய்வமுச்சந்தலையோ டிவையென்ப' திணை விரவி மிகுதியினா லஃறிணை முடிபேற்றன. 'மூர்க்கரு முதலையுங் கொண்டது விடா', திணை விரவி யிழிவினா லஃறிணை முடிபேற்றன. 'மனைவியுந் தானும் வந்தான்' பால் விரவி சிறப்பினா லாண்பான் முடிபேற்றன. சொற்றொறு மிற்றிதனென்கிற சூத்திர விதியினாலே, 'தோழனுந் தானும் வந்தான்', என முடிதலுங் கொள்க. 'மாலையு முடியுங் கவித்தான்', வேறுவினைப் பலபொருள் விரவிச் சிறப்பினா லொருமுடிபேற்றன, மற்றவைகளு மிப்படியே வரும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

திணைகளும் பால்களும் பொருள்களும் கலந்து வரும்போது தத்தம் முடிபுகொள்ளாது ஒருமுடிபு கொள்ளலுமுண்டென ஏதுக்கூறுஞ் சூத்திரம் யாது?

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்

மிகவினு மிழிபினு மொருமுடி பினவே.

(திணை பால் பொருள் பல விரவின சிறப்பினும்

மிகவினும் இழிபினும் ஒருமுடிபினவே.)

இ-ள்.: திணை பால் பொருள் பல **விரவின** – திணைகளும் பால்களும் வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும் தத்தமிற் கலந்து ஒருதொடராக வருவனவாயின் அவை, சிறப்பினும் மிகவினும் இழிபினும் ஒரு முடிபின – சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிவினவாகும், எ-று.

அவை ஒருமுடிபினவாதற்கு ஏதுக்கள் யாவை?

சிறப்பு மிகவு இழிபு.

(வரலாறு)

திணை:– (1) "அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந் – திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் – றிங்கண் – மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து – தேய்வ ரொருமா சுறின்" என்புழி, இருதிணையுங் கலந்து, சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள் போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

(2) "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்–மூத்தா ரிளையார் பகுப்பெண்டி ரென்றிவர்கட்–காற்ற வழி விலங்கினாரே பிறப்பிடைப் – போற்றி யெனப்படுவார்" என்புழி, இரு திணையுங் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. பசுவென அஃறிணைப்பொருள் ஒன்றேயாகப், பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் எழாதல் இங்கே மிகுதி.

(3) "மூர்க்கனு முதலையுங் கொண்டதுவிடா" என்புழி, இருதிணையுங் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணை முடிபைப் பெற்றன.

பால்: "நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்–தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்–வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்–றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்புழி, ஆண்பாலும் பெண்பாலுங் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்' என ஆண்பான்முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாதெண்ணித், தோழனுந் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என முடிதலுங் கொள்க.

மரபு: கறியுஞ் சோறுமுண்டான்; மாலையு முடியும் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து; சிறப்பினால் 'உண்டான்' 'கவித்தான்' என ஒருபொருட்குரிய வினை முடிபைப் பெற்றன. உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினுந் தலைமை யுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதலென்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமை யுடைமையும் இங்கே சிறப்பு.

இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொல்லும்–வேறவற் றெண்ணு மோர் பொதுவினை வேண்டும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின், சிறப்பு முதலிய குறியாது

ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியு மரபு அங்கே கூறுதலால், அதற்கு இது மாறுகொளக் கூறலன்றென்க.

முகவை இராமானுச கவிராயர்

இது, திணைபால் மரபு வழுவமைதி யுணர்த்திற்று.

இ—ள்.: திணைபால் பொருள் பல — திணையும் பாலும் வேறுவினைப் பலபொருள்களும், **விரவின**—கலந்து நின்றனவாயின் அவை, **ஒருமுடிபின** — ஒருமுடிபாக முடிவனவாம், **சிறப்பினு மிகவினு மிழிவினும்** — சிறப்பும் மிகுதியும் இழிவுமாகிய இம்மூன்று காரணங்களாலும், எ—று. (சிறப்பு — உயர்வு)

வ—று.:—

'திங்களுஞ்சான்றோருமொப்பர்' — இது திணை விரவிச் சான்றோர் என்ற உயர்வு பற்றி யஃறிணை யுயர்திணை முடிபேற்றது.

"பழியஞ்சான் வாழும் பசுவு மழிவினாற்
கொண்ட வருந்தவம் விட்டானுங் கொண்டிருந்
தில்லஞ்சி வாழு மெருது மிவர்மூவர்
நெல்லுண்ட நெஞ்சிற்கோர் நோய்"

என்றதும் அது, இழிந்தோரை யெண்ணியபின் இதனுட் சிறப்பென்னை யெனின், பசு, விட்டான், எருது என்ற மூன்றினுள் விட்டான் என்றது உயர்திணையான் சிறப்பு; பசு, எருது, என்பனவும், உயர்திணைப் பொருளாயினும் அஃறிணையாக உருவகப்படுத்தினதினாலே யிவ்வாறமைக்கப்பட்டன.

நன்பால் பசுவே துறந்தார் பெண்டிர் பாலர்பார்ப்பா—ரென்பாரை, இது திணை விரவி இரண்டு அஃறிணையும் நான்கு உயர்தின்ணையுமாய் நின்றதினாலே யம்மிகுதி பற்றி யஃறிணையும் உயர்திணை முடிபேற்றது, பார்ப்பார்தவரே சுமந்தார் பிணிப்பட்டார்—மூத்தோர் குழவி யெனுமிவர்கட்கு என்றதும் அது, இதனுட்குழவி ஒன்றும் அஃறிணை. வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் — வேள்வி முற்றியூப நட்டவியன் களம்பலகொல் — யாபலகொல்லோபெரும — எனவிவை சிறப்பினால் அஃறிணை முடிபேற்றன. பலர் பல எனப் பிரித்து இரண்டையுங் கூட்டி, யாபல என வினாவினதினாலே யுயர்திணை யஃறிணை முடிபேற்றது. வசைபடவாழ்ந்தோரில் — வேள்விமுற்றியூபநட்டவியன்களஞ் சிறத்தலால், சிறப்பாயிற்று. யூபம் — வேள்வித்தறி.

"தொல்லைநால்வகைத் தோழருந்

துணைமணிநெடுந்தேர்– மல்லற்றம்பியுமாமனும்
துவிரிகமழ்தார்ச்–செல்வன் றாதையுஞ்
செழுநகரரொடுவளநாடும்–வல்லைதொக்கன
வளங்கெழுகோயிலுளொருங்கே"

என்றதுமது. நகரும் நாடுஞ் சிறத்தலால் முன்னின்ற உயர்திணை நான்குமஃறிணை முடிபேற்றன. எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வ – முச்சந்தலையோடிவை யென்பயாவருந்–திட்பத்தாற் றீண்டாப்பொருள் என விவை மிகுதியினால் அஃறிணை முடிபேற்றன. இதனுள் உயர்திணை மூன்றும் அஃறிணை நான்குமாதலால் அஃறிணை மிகுதியாயிற்று.

"கோலஞ் சிவாழுங் குடியுங் குடிதழீஇ
யாலம்வீழ் போலு மமைச்சனும்–வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம்
மூன்றும் – படைவேந்தன்பற்றுவிடல்"

எனவும்,

"செய்பவன் கருவி நிலஞ் செயல் காலஞ்
செய்பொருளாறும்"

எனவும், வருமிவற்றுள், அமைச்சன், செய்பவன் என உயர்திணை யொன்றும், ஒழிந்தன அஃறிணையுமாதலால் இவையு மிகுதியாலஃறிணை முடிபேற்றன வெனக் காண்க,

"வடுகர ருவாளர் வாள்கரு நாடர் – சுடுகாடு பேயெருமை
யென்றிவை யாறுங் – குறுகா ரறிவுடையார்"

இவையிழிவினாலுயர்திணை யஃறிணை முடிபேற்றன.

இம் மூவகை நாட்டிலுள்ளோர் மூர்க்கராதலாலிழிபாயிற்று,

"மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா"

இதுவுமது. இனிப் பொருள் பல விரவின வருமாறு:– கறியுஞ் சோறுமுண்டான், மாலையு முடியுங் கவித்தான், குஞ்சமுங் குடையுங் கவித்தான், சாந்தமு முலையுந் தழுவினான், என வேறுவினைக்குரிய பலபொருள்கள் விரவிச், சோறு முடி குடை முலை எனச் சிறந்தனவற்றிற்குரிய வினைகளால் சிறப்பில்லாத வேறுவினைக்குரிய கறி, மாலை, குஞ்சம், சாந்தம், என்பனவுமொரு முடிபாக முடிந்தன. இவை மிகுதியும் இழிவும் பற்றியொரு முடிபேற்றல் வந்துழிக் காண்க. (வந்உழி – வந்தஉழி, உழி – இடம்,) இங்கே யிறுதியிற் சொன்ன மரபுவழுவமைதி,

வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச் சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்

என்னுஞ் சூத்திரத்தொடுமாறு கொளக் கூறலன்றோ வெனின், சிறப்பு முதலிய குறியாது ஒத்தநிலையாக எண்ணியபோது முடியுமரபு அங்கே கூறுதலால் இது மாறுகொளக்கூறலன் றென்க. பன்மை யொருமுடியின வென்னாது, 'ஒருமுடியின' என வாளா கூறினதினாலே (வாளா – வீண்,)

"**தானுந் தேரும் பாகனும் வந்தென்னலனுண்டான்**"

எனத் திணை விரவிச் சிறப்பினாலே, தேர் என்னுமஃறிணை உயர்திணையாண்பால் முடிபேற்றலும்,

"**தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனல்**"

என உயர்திணை ஆண்பாலும் பெண்பாலும் விரவிச் சிறப்பினாற் பெண்பாலாண்பால் முடிபேற்றலும் கொள்க. இனிச் 'சொற்றொறு மிற்றிதன் பெற்றி'யென்னுஞ் சூத்திரப் புறனடை விதியினாலே, விரவாமலெண்ணித் தோழனுந் தானும் வந்தான், தோழியுந் தானும் வந்தாள் என ஒருமை முடிபேற்றலுங் கொள்க.

"**பாணன் பறையன் கடம்பன் துடியனென்**
றந்நான் கல்லது குடியு மில்லை"

என வுயர்திணை யெண்ணி யஃறிணையாக முடித்த வழு, எங்கே அமைக்கப்படுவதெனின், குடியென்பதைப் பாணன்முதலிய நான்கினுங் கூட்டி யுரைக்கப்படுதலால் வழாநிலையா மென்க. இனிப் பால்விரவி யொருமுடிபேற்றன வற்றிற்கு, 'ஒருவன் கொல்லோ பலர்கொல்லோ இச்செய் புக்கார்' என வுதாரணங்காட்டின் அமையாதோவெனின், 'ஐயந்திணைப்பாலவ் வவ்வப் பொதுவினு' மென்பதனால் வந்தனவாதலாலும், அவற்றை யப்பொதுச் சொல்லாற் சொல்லுதலே யிலக்கண மாதலாலும் இங்கே காட்டிய ஏதுக்களால் வந்த வழுவமைதி யன்றென்க. இழிவினா லஃறிணை முடிபேற்றதற்குக் காட்டிய வுதாரணத்துள், வடுகரை யறிவுடையோர் குறுகாரென்ற தென்னை யிந்நாட்டில் வாழுந் தனவசியருந் தெலுங்கருமன்றோ வடுகரெனப் பட்டவரெனின் வடுகர், தெலுங்கரென்பவர் வடுக நாட்டினுந் தெலுங்குநாட்டினுமுள்ளவர் ஆகுபெயரால் அந்நாட்டுப் பாடைகளும் வடுகு தெலுங்கு என வழங்கப்பட்டன. ஆதலால், உணராதார் யானை காணாக் குருடர் கைத்தலங் கண்ணாக் கண்ட கண்டளவு கூறியதுபோல, வடுகரென்பதற்குத் தெலுங்கரெனவுந் தனவசியரெனவும் பொருள் கூறுவர்;

கொடுந் தமிழ்நாடு பன்னிரண்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நாட்டினுள் வடுக நாடு வேறு, தெலுங்கு நாடுவேறு; வடுகு வேறு, தெலுங்கு வேறு; வடுகருந் தெலுங்கரும் வேறுவே றென்க. அதற்குச் சான்றென்னை யெனின், கொடுந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த பன்னிரண்டு நாடாவன சிங்களம், பழந்தீபம், கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநடம், கூடம், வடுகு, தெலுங்கு, கலிங்கம் என்பனவும்; இவற்றுள் சிக்க, குளிரு என்பன வடுகர்பாடை மொழி எனவும், செப்பு என்பது தெலுங்கர்பாடை மொழி எனவும், உதாரணமெடுத்துக் காட்டலுமாமென்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– **திணை** – திணைகளும், **பால்** – பால்களும், **பொருள்** – (வெவ்வேறு வினைக்கு உரிய பல பொருள்களும், **விரவின** – கலந்து ஒருதொடராக வருவனவாயின் அவை, **சிறப்பினும்** – சிறப்பினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **இழிபினும்** – இழிவினாலும், **ஒரு முடிபின** – ஒரு முடிபைப் பெறுவனவாம்.

உதாரணம்

திணை : 1. "திங்களுஞ் சான்றோரு மொப்பர்"	இதில், இருதிணையுங் கலந்து சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபைப்பெற்றன. (சான்றோர் திங்கள்போல மறுத்தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு)
2. "பார்ப்பார் தவரே சுமந் தார் பிணிப்பட்டார் முத்தாரிளையார் பசுப் பெண்டிரென் றிவர்கட்கு"	இதில் இருதிணையுங் கலந்து மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணமுடிபைப் பெற்றன. (பசுவென அஃறிணைப் பொருள் ஒன்றேயாக, 'பார்ப்பார்' முதலிய உயர்திணைப் பொருள் ஏழாதல் மிகுதி.)
3. "மூர்க்கனும் முதலையுங் கொண்டது விடா"	இதில் இருதிணையுங் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணை முடிபைப் பெற்றன. (தான் விடத்தகுவதை மூர்க்கன் விடாமை இங்கு இழிவு.)
பால் : "தானும் தன் தையலும் தாழ்சடையோ னாண்டி	இதில், ஆண்பாலும் பெண்பாலுங் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்'

லனேல்''	என்னும் ஆண்பால் முடிபைப் பெற்றன. (பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.)

(இனி, கலவாமல் எண்ணி முடிக்கும்போது, 'தோழனுந்தானும் வந்தான்', தோழியுந் தானும் வந்தாள்' என ஒருமைமுடி பேற்றலுங் கொள்க.)

மரபு :	'கறியுஞ் சோறு முண் டான்	இதில், வெவ்வேறு வினைகளுக் குரிய பலபொருள்கள்கலந்து சிறப்பினால் 'உண்டான்' என ஒரு பொருளுக் குரிய வினைமுடிபைப் பெற்றன. (உண்ணல்' என்னும் வினைக்குரிய சோறு – தின்னலென்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைமை இங்கே சிறப்பு)

குறிப்பு :– இங்கே இறுதியிற்சொல்லிய மரபுவழுவமைதி, ''வேறு வினைப்பல்பொருள்'' என மேல்லருஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோ? எனின், சிறப்பு முதலியன குறியாமல் ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியும் மரபு இங்கே கூறுதலால், இது மாறுகொளக் கூறலன்றென்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: திணை – திணைகளும், பால் – பால்களும், பல பொருள் – வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும், விரவின – தந்தமிற் கலந்து ஒருதொடராக வருவனவாயின் அவை, **சிறப்பினும் மிகவினும் இழிபினும் ஒருமுடிபின** – சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிபினவாகும், எ–று.

வ–று.: திணை :

(1) ''அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந் திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் – றிங்கண் மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து தேய்வ ரொருமா சுறின்''

என்புழி, இருதிணையுங் கலந்து, சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள்போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

(2) ''பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட் காற்ற வழி விலங்கி

னாரே பிறப்பிடைப் போற்றி யெனப்படுவார்"

என்புழி, இருதிணையுங் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. பசுவென அஃறிணைப்பொருள் ஒன்றேயாகப் பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் ஏழாதல் இங்கே மிகுதி.

(3) "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா"

என்புழி, இருதிணையுங் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணை முடிபைப் பெற்றன.

பால்.:

"நானு மென்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ"

என்புழி, ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்' என ஆண்பால் முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு. "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாதெண்ணித், 'தோழனுந் தானும் வந்தான்', 'தோழியுந்தானும் வந்தாள்' என முடிதலுங் கொள்க.

மரபு.: 'கறியுஞ் சோறுமுண்டான்'; 'மாலையுமுடியுங் கவித்தான்' என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து சிறப்பினால் 'உண்டான்' 'கவித்தான்' என ஒரு பொருட்குரிய வினைமுடிபைப் பெற்றன. உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினுந் தலைமையுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதலென்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமையுடைமையும் இங்கே சிறப்பு.

இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி

"வேறு வினைப்பல் பொருடழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்"

என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின், சிறப்பு முதலிய குறியாது ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியு அங்கே கூறுதலால், அதற்கு இது மாறுகொளக் கூறலன்றென்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். திணை — திணைகளும், — **பால்** — பால்களும், — **பலபொருள்** — வெவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும், — **விரவின** — தத்தமிற்கலந்து ஒரு தொடராக வருவனவாயின் அவை, — **சிறப்பினும் மிகவினும் இழிபினும் ஒரு முடிபின** — சிறப்பினாலும் மிகுதியினாலும் இழிவினாலும் ஒரு முடிவினவாகும். எ—று.

(வரலாறு)

திணை : (க) "அங்கண் விசும்பி னகனிலப் பாரிக்குந் — திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் — றிங்கண் — மறுவாற்றுஞ் சான்றோரஃதாற்றார் தெருமருந்து — தேய்வ ரொரு மாசுறின்" என்புழி, இருதிணையுங் கலந்து, சிறப்பினால் 'ஒப்பர்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. சான்றோர் திங்கள் போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

(உ) "பார்ப்பார். தவரே சுமந்தார் பிணிப்பட்டார் — மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட் — காற்ற வழி விலங்கினாரே பிறப்பிடைப் — போற்றி யெனப்படுவார்" என்புழி இருதிணையுங் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உணர்திணை முடிபைப் பெற்றன. பசுவென அஃறிணைப் பொருள் ஒன்றேயாகப், பார்ப்பார் முதலிய உயர்திணைப் பொருள் ஏழாதல் இங்கு மிகுதி.

(ங) "மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என்புழி, இருதிணையுங் கலந்து, இழிவினால் 'விடா' என அஃறிணை முடிபைப் பெற்றன.

பால் : "நானு மென்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந் — தானுந்தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல் — வானுந் திசைகளு மாகடலு மாயபிரான் — றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ" என்புழி, ஆண்பாலும், பெண்பாலுங் கலந்து சிறப்பினால் 'ஆண்டிலன்' என ஆண்பான் முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

"சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே கலவாதெண்ணித், தோழனுந் தானும் வந்தான், தோழியும் தானும் வந்தாள் என முடிதலுங் கொள்க.

மரபு :கறியுஞ் சோறுமுண்டான்; மாலையுமுடியுங் கவித்தான் என்புழி, வேறுவினைப் பல்பொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்' 'கவித்தான்' என ஒரு பொருட்குரிய வினைமுடிபைப் பெற்றன. உண்டலென்னும் வினைக்குரிய சோறு தின்றலென்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைமையும், கவித்தலென்னும் வினைக்குரிய முடி சூடுதலென்னும் வினைக்குரிய மாலையினுந் தலைமையுடைமையும் இங்கே சிறப்பு.

இங்கே இறுதியில் சொல்லிய மரபு வழுவமைதி "வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச் சொல்லும் – வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்" என்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோவெனின், சிறப்பு முதலிய குறியாது ஒத்த நிலைமையில் எண்ணியபோது முடியு மரபு அங்கே கூறுதலால், அதற்கு சிறப்பு முதலிய குறித்துவரும் இது மாறுகொளக் கூறலன்றென்க.

வை. மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ– ள்.:– திணை – திணைகளும், பால் – பால்களும், பல பொருள் – (வெவ்வேறு வினைகளுக்கு உரிய) பலபொருள்களும், விரவின – கலந்து ஒருதொடரால் வருவனவாயின் அவை, சிறப்பினும் – சிறப்பினாலும், மிகவினும் – மிகுதியினாலும், இழிபினும் – இழிவினாலும், ஒரு முடிபின – ஒருமுடிபைப் பெறுவனவாம், எ–று.

உ–ம்.:–

திணை.: (1) 'பொன்னனும் குதிரையும் வந்தார்கள்' என்பதில், இருதிணையும் கலந்து, சிறப்பினால் 'வந்தார்கள்' என்னும் உயர்திணை முடிபைப் பெற்றன. உயர்திணையா யிருத்தல், இங்கே சிறப்பு.

(2) "பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
 மூத்தா ரிளையார் பசுப்பெண்டி ரென்றிவர்கட்கு"

என்பதில் இருதிணையும் கலந்து, மிகுதியால் 'இவர்கள்' என்னும் உயர்திணைமுடிபைப் பெற்றன. பசு என அஃறிணைப்பொருள் ஒன்றேயாக, பார்ப்பார் முதலிய உயர்திணைப்பொருள் ஏழாதல், இங்கே மிகுதி.

(3 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பதில் இருதிணையும் கலந்து இழிவினால் 'விடா' என அஃறிணை முடிபைப் பெற்றன. விடத்தக்கதை விடாமை, இங்கே இழிபு.

பால்.: "தானும் தன்தையலும் தாழ்சடையோ னாண்டிலனேல்" என்பதில், ஆண்பாலும் பெண்பாலும் கலந்து, சிறப்பினால் 'ஆண்டிலன்', என்னும் ஆண்பால் முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை, இங்கே சிறப்பு.

இனி, கலவாமல் எண்ணிமுடிக்கும்போது, 'தோழனும் தானும் வந்தான்', 'தோழியும் தானும் வந்தாள்' என ஒருமை முடிபையேற்றலும் கொள்க.

மரபு.: 'கறியும் சோறும் உண்டான்', 'மாலையும் முடியும் கவித்தான்' என்பவற்றில் வெவ்வேறு வினைகளுக்கு உரிய பலபொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்', கவித்தான்' என ஒருபொருளுக்கு உரிய வினைமுடிபைப் பெற்றன. உண்ணலென்னும் வினைக்கு உரியசோறு, தின்னலென்னும் வினைக்கு உரிய கறியினும் தலைமையுடைமையும் கவித்தலென்னும் வினைக்கு உரிய முடி, சூடுதலென்னும் வினைக்கு உரிய மாலையினும் தலைமையுடைமையும், இங்கே சிறப்பு.

(இங்கே இறுதியிற் சொல்லிய மரபுவழுவமைதி, "வேறுவினைப் பல்பொருள்" என மேல்வருஞ் சூத்திரத்தோடு மாறுகொளக் கூறலன்றோ வெனின்; சிறப்பு முதலியன குறியாமல் எண்ணியபோது முடியும் மரபு அங்கே கூறுதலால், மாறுகொளக் கூறலன் றென்க.)

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– திணை – திணைகளும், பால் – பால்களும், பல பொருள் தெவவ்வேறு வினைக்குரிய பல பொருள்களும், விரவின – தத்தமிற் கலந்து ஒரு தொடராக வருவனவாயின் அவை, சிறப்பினும் – சிறப்பினாலும், மிகவினும் – மிகுதியினாலும், இழிபினும் – இழிவினாலும், ஒருமுடிபின் – ஒருமுடிபினவாகும். எ–று.

உ–ம்.

நின்றோன் வருவோர்

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) திணை – திணைகளும், பால் – பால்களும், விரவின – கலந்து நின்றனவரிகிய, பொருள்பல – வேறு வினைப் பல பொருள்களும், சிறப்பினும் – சிறப்பினாலும், மிகவினும் – மிகுதியினாலும், இழிபினும் – இழிபினாலும், ஒரு முடிபின – ஒரு முடிபினவாகும். (எ–று)

(பொ–ரை.)

திணையும் பாலும் வேறு வினைப்பல பொருள்களும் விரவிநின்றவழி, அவை பலவும் சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிபினாலும் இரு முடிபினவாம்.

(உ–ம்)

திணை. (1) திங்களுஞ் சான்றோரு மொப்பர்.

இங்கு இருதிணையும் கலந்து சிறப்பினால் ஒப்பர் என

உயர்திணை முடிபேற்றன. சான்றோர் திங்கள்போல மறுத்தாங்க மாட்டாமை இங்கே சிறப்பு.

(சிறப்பு=உயர்வு.)

'தொல்லை நால்வகைத் தோழருந் துணை மணி நெடுந்தேர் மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச் செல்வன் றாதையுஞ் செழுநக ரொடுவள நாடும் வல்லை தொக்கன வளங்கெழு கோயிலு றொருங்கே.'

(2) 'பார்ப்பார் அவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தா ரிளையார் பசும்பெண்டி ரென்றிவர்கட்கு.'

இங்கு இருதிணையுங் கலந்து மிகுதியால் இவர்களென உயர்திணை முடிபேற்றன. 'பசு' ஒன்றே அஃறிணையாக, பார்ப்பார், தவர், சுமந்தார் முதலிய ஏழும் உயர்திணை யாதலின் மிகுதியென அறிக.

'எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வம் உச்சந் தலையோடிவை யென்ப'

இங்கு இருதிணையுங் கலந்து மிகுதியால் இவையென அஃறிணை முடிபேற்றன. எச்சிலார், தீண்டார், பார்ப்பார் மூன்றும் உயர்திணை; பசு, தீ, தெய்வம், உச்சந்தலை நான்கும் அஃறிணை, ஆதலின் மிகுதியெனவறிக.

(3) மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா.

இங்கு இருதிணையுங் கலந்து இழிவினால் விடா என அஃறிணை முடி பேற்றன.

'வடுக ருருவாளர் வான்கரு நாடர் சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங் குறுகா ரறிவுடை யார்.'

இங்கு முன் சொன்ன மூன்று உயர்திணைப் பெயரும், இழிவினால் பின் வந்த மூன்று அஃறிணைப் பெயரோடும் கலந்து இவையென அஃறிணை முடி பேற்றன. இது இழி வென அறிக.

பால். 'தானுந் தன்றையலுந் தாழ்சடையோ னாண்டில னேல்.' மனைவியுந் தானும் வந்தான்.

இங்குச் சிறப்புனால் ஆண்பால் பெண்பாற் பெயர்கள் கலந்து ஆண்பால் முடி பேற்றன.

"சொற்றொது மிற்றிதன் பெற்றி" என்கிற விதியினாலே தோழனும் தானும் வந்தான்; தோழியுந் தானும் வந்தாள் என ஒருமை முடிபேற்றலும் கொள்க.

மரபு. கறியுஞ் சோறு முண்டான்.

மாலையு முடியும் கவித்தான்.

குஞ்சமும் குடையும் கவித்தான்.

என வேறுவினைப் பல பொருள்கள் கலந்து சிறப்பினால் உண்டான், கவித்தான் என ஒரு பொருளுக்குரிய வினைமுடிபைக் கொண்டன.

கா. நமச்சிவாய முதலியார்

திணை பால் விரவின – திணைகளும் பால்களும் கலந்து நின்றனவாகிய, **பொருள் பல** – வேறுவினைப் பல பொருள்கள், **சிறப்பினும்** – சிறப்பினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **இழிபினும்** – இழிவினாலும், **ஒரு முடிபின** – ஒரு முடிபினவாகும்.

உதாரணம்

திணை விரவல் :

1. 'திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்'

இங்கு இருதிணையுங் கலந்து, சிறப்பினால், ஒப்பர் என. அஃறிணை, உயர்திணை முடிபு ஏற்றது.

'தொல்லை நால்வகைத் தோழருந் துணைமணி நெடுந்தேர்
மல்லற் றம்பியும் மாமனும் மதுவிரி சுமழ்தார்ச்
செல்வன் தாதையுஞ் செழுந – ரொடுவள நாடும்
வல்லை தொக்கன வளங்கெழு கோயிலுள் ஒருங்கே'.

இங்கு நகரும் நாடும் சிறத்தலால் முன்னின்ற தோழர், தம்பி, மாமன், தாதை என்னும் உயர்திணைப் பெயர் நான்கும், தொக்கன என, அஃறிணை முடிபேற்றன.

2. 'பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தோர் குழவி எனும் இவர்கட்கு'

இங்கு, இருதிணையுங் கலந்து, மிகுதியால் இவர்கள் என, அஃறிணை, உயர்திணை முடிபேற்றது. 'குழவி' ஒன்றே அஃறிணை; பார்ப்பார், தவர், சுமந்தார் முதலிய ஐந்தும் உயர்திணை; ஆதலின் மிகுதி என அறிக.

'எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வம்
உச்சந் தலையோ டிவை யென்ப'.

இங்கு, இருதிணையுங் கலந்து மிகுதியால் இவை என உயர்திணை, அஃறிணை முடிபேற்றது. எச்சிலார், தீண்டார், பார்ப்பார் மூன்றும் உயர்திணை; பசு, தீ, தெய்வம், உச்சந்தலை என்னும் நான்கும் அஃறிணை; ஆதலின் மிகுதி என அறிக;

3. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா'

இங்கு, இருதிணையுங் கலந்து இழிவினால் உயர்திணை, விடா என அஃறிணை முடிபு ஏற்றது.

'வடுகர் அருவாளர் வான்கரு நாடர் சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறும் குறுகார் அறிவுடை யார்'.

இங்கு, முதலில் உள்ள, மூன்று உயர்திணைப் பெயரும் இழிவினால், பின் வந்த மூன்று அஃறிணைப் பெயரோடு கலந்து, இவை என அஃறிணை முடிபேற்றன.

பால் விரவல் :

'மனைவியும் தானும் வந்தான்'

இங்குச் சிறப்பினால் ஆண்பால் பெண்பாற் பெயர்கள் கலந்து, பெண்பால், ஆண்பால் முடிபேற்றது.

'சொற்றொறும் இற்றிதன்பெற்றி'

என்னும் விதியினால், தோழனும் தானும் வந்தான், தோழியும் தானும் வந்தாள் என விரவாமல் ஒருமை முடிபேற்றலும் கொள்க.

பொருள் பல விரவி வரல் :

'கறியுஞ் சோறும் உண்டான்'.'மாலையும் முடியுங் கவித்தான்'

என வேறுவினைப் பல பொருள்கள் கலந்து, சிறப்பினால் 'உண்டான்', 'கவித்தான்' என ஒரு பொருளுக்குரிய வினை முடிபைக் கொண்டன. உண்டல் என்னும் வினைக்குரிய சோறானது, தின்றல் என்னும் வினைக்குரிய கறியினும் தலைமையுடைத்தா யிருத்தலும், கவித்தல் என்னும் வினைக்குரிய முடியானது, சூடுதல் என்னும் வினைக்குரிய மாலையினும் தலைமையுடைத்தா யிருத்தலும் இங்கே சிறப்பு என்க.

மோசசு பொன்னையா

திணைகளும், பால்களும் வேறுவேறு வினைக்குரிய பல பொருள்களும் தத்தம்மிற் கலந்து ஒரு தொடராய் வருவனவாயின், அவை சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிவினாலும் ஒரு முடிபைப் பெறுவனவாம் எ–று.

ஒரு முடிபினவே என வாளா கூறினமையின் அம் மூன்றனாலும் பால்வழுவி முடிவனவற்றையும் கொள்க.

எ–டு.

திணை

1. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்

திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்மன்,

–இரு திணையும் விரவிச் சிறப்பினால் ஒப்பர் என்னும் உயர்திணை முடிபைப் பெற்றது.

2. பார்ப்பா ரறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்

மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டு,

எச்சிலார் தீண்டார் பசுப்பார்ப்பார் தீத்தெய்வ

முச்சந் தலையோ டிவையென்ப யாவருந்

திட்பத்தாற் றீண்டா பொருள்,

–இவை இருதிணையும் விரவி மிகுதியினால் முறையே 'இவர்' என்னும் உயர்திணை முடிபையும், 'பொருள்' என்னும் அஃறிணை முடிபையும் பெற்றன.

3. வடுக ரருவாளர் வான்கரு நாடர்

சுடுகாடு பேயெருமை யென்றிவை யாறுங்

குறுகா ரறிவுடை யார்,

மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா.

–இவை இருதிணையும் விரவி இழிபினால் முறையே 'இவை', 'விடா' என அஃறிணை முடிபேற்றன.

பால்

1. தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்,

–ஆண்பாலும், ஒன்றன்பாலும் விரவிச் சிறப்பால் ஆண்பால் முடிபைப் பெற்றது.

2. தொல்லை நால்வகைத் தோழருந் தூமணி நெடுந்தேர்

மல்லற் றம்பியு மாமனு மதுவிரி கமழ்தார்ச்

செல்வன் றாதையுஞ் செழுநக ரொடுவள நாடும்

வல்லை தொக்கது வளங்கெழு கோயிலு ளொருங்கே.

–பால்கள் பலவும் விரவிச் சிறப்பால் ஒன்றன்பால் முடிபைப் பெற்றது.மிகுதியாலும், இழிபாலும் பால்வழுவி முடிவனவற்றை வந்தவழிக் கண்டுகொள்க. சிறப்பு முதலிய குறியாது ஒத்த நிலையாக எண்ணியபோது முடியும் மரபை 'வேறுவினைப் பல்பொருள்' என்ற நூற்பாவாற் பின்னர்க் கூறுவார் என்பதறிக.

பாணன் பறையன் கடம்பன் துடியனென்

றந்நான் கல்லது குடியு மில்லை.

என்பதன்கண் குடி என்பது பாணன் முதலியவற்றோடு கூட்டியுரைக்கப்படுமாதலின், அவ்வாறு வருவன வழாநிலையாம் எனக் கொள்க.

**378. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்பே**

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே

uvappin̲ um uyarvin̲ um siūappin̲ um seūalin̲ um
iḷippin̲ um pāl ṭiṇai iḷukkin̲ um iyalpu ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Interchange of Gender and Class

Even violations of Gender and class are admissible in cases of joy, respect, speciality, anger or contempt.

ஒப்புமைப் பகுதி

குடிமை ஆண்மை இளமை மூப்பே
அடிமை வன்மை விருந்தே குழுவே
பெண்மை அரசே மகவே குழவி
தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி
காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொலென்று
ஆவறு மூன்றும் உளப்படத் தொகைஇ
அன்ன பிறவும் அவற்றொடு சிவணி
முன்னத்தி னுணருங் கிளவி யெல்லாம்

உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும்
அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்

(தொல்.சொல்.: 56)

உயர்வும் இழிவும் உவப்பும் சிறப்பும்
அயர்வில் திணைபால் மயங்கம்– செயிரில்
வழக்கும் தகுதியுமாய் வந்தொழுகும் சொற்கள்
இழுக்கல்ல முன்னை இயல்பு

(நேமி.:35)

உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினுஞ் சொன்னோக் கினுந்திணை பாலவை
வழுக்கினும் வழுவென வரையா ரென்ப.

(இ.வி.: 299)

திணைவிர வுப்பெயர் செய்யுண் மருங்கே
அஃறிணை முடிபின வாகு மென்ப

(மு.வீ.:726)

இழிவு சொன்நோக்கு உயர்பு உவகை சினம்
சிறப்பாறினிலும்
வேய்தத்திணை பார்வழுவும் வழுவிலாந் திணைபால்
விரவில் எண் பேர்சிறப்பு இழிபு மிகவில் ஒருமுடிவே

(சுவாமி.: 58:3–4)

மயிலை நாதர்

திணை பால் வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவ்வைந்திடத்தும் பாலும் திணையும் மயங்கி வழங்கினும் அது முறையாம், எ–று.

வ–று.:

"தேமல ரங்கட் டிருவே புகுதக
மாமலர்க் கோதை மணாளன் புகுதக
காமன் புகுதக காளை புகுதக
நாம வெழில்விஞ்சை நம்பி புகுதக"

(சீவக. 2121)

இஃது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாய் மயங்கி வழங்கினவாறு.

ஒருத்தியை, என்பாவை வந்தது, போயிற்று எனவும்; ஒருவனை, என் ஆனை வந்தது, போயிற்று எனவும் ஓராவினை, என் அன்னை வந்தாள், போயினாள் எனவும் ஒரெருத்தினை, என்தந்தை வந்தான், போயினான் எனவும் வழங்குதல் உவப்பினால் இருதிணையும் மயங்கியவாறு.

ஒருவனையும் ஒருத்தியையும் ஒன்றனையும் அவர் வந்தார், போயினார் என்றல் உயர்த்துச் சொல்லுதல்.

"செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரைதான்
தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்"

(சீவக 1036),

"மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு
கையார் பிரிவித்தல் காண்"

(திணை. மா:5)

இவை உயர்த்துச் சொல்லுதற்கண் அஃறினை உயர்திணையாயின.

" இரவின் வருவானைப் புல்லலுறு மென்மனனே தோழா" எனவும், "மகிழ்வார்க்கு மல்லார்க்குந் தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள்" (யா.கா.செய் 11 உரை: விளங்குமணி) எனவும் வருமிவை சிறப்பின் கட்பெண்பால் ஆண்பாலாகவும், ஆண்பால் பெண்பாலாகவும் வழங்கின. "மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறநா. 186) " உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென், றப்பானாற் கூற்றே மருந்து" (குறள் 950). "தம்பொருளென்பதம் மக்க ளவர்பொருள், தந்தம் வினையான் வரும்" (குறள் 63,) இவை சிறப்பினால் அஃறிணையாயின.

"எனைத்துணைய ராயினு மென்னாம் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" (குறள் 144) " அவர்நமக், கன்னையு மத்தனு மல்லரோ தோழி, புலவிய தெவனோ வன்பிலங் கடையே (குறுந் 93.) இவை செறலின்கட் பால் மயங்கின.

"ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்,போஒ மளவுமோர் நோய்" (குறள் 848), " இரவெதிர் கொள்ளா விருகாற் பசுவே, அரிய விரத மடங்குத லில்லார்" இவை இழிப்பின்கண் அஃறிணையாயின, பிறவு மன்ன.

இவை முடியமாறு தொல்காப்பியத்துள் அறிந்த கொள்க.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், திணை பால் வழுவமைப்பு உணர்–ற்று.

இ–ள்.: உவப்பு முதலிய ஐந்தினும் பாலும் திணையும் வழுவிரினும் இயல்பாம், எ–று.

பாலை முற்கூறினார் அவ்வழுவமைதி பயின்று வருதலின். 'இழுக்கினும்' என்னும் உம்மை, உவப்பு முதலியவற்றில் இழுக்கியே வரும் என்னும் நியதியவல்ல என்னும் பொருள் தந்து நின்றது.

வ–று.:–

தன் புதல்வனை, 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பின் ஆண்பால் பெண்பாலாயிற்று. 'ஒருவனை அவர் வந்தார்' என்பது உயர்வின் ஒருமைப்பால் பலர்பாலாயிற்று.

1 "தாதாய் மூவேழுலகுக்கும் தாயே" என்பது, சிறப்பின் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2 "எனைத்துணைய ராயினும் என்னாம்
தினைத்துணையும் தோரான் பிறனில் புகல்"

என்பது, செறலின் பலர்பால் ஒருமைப் பாலாயிற்று. பெண்வழிச்

செல்வானை நோக்கி, 'இவன் பெண்' என்பது, இழிவின் ஆண்பால் பெண்பாலாயிற்று. ஓர் ஆவினை என் அம்மை வந்தாள் என்பது உவப்பின் அஃறிணை உயர்திணையாயிற்று.

3 "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோர்

இன்னுரைதான் தந்தாரேல் தந்தாரென் னின்னுயிர்"

என்பது, உயர்வின் அஃறிணை உயர்திணையாயிற்று. உயர்திணை அஃறிணையாயிற்று.

"தம்பொருள் என்ப தம்மக்கள்"

" ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போ ஒ மளவும் ஓர் நோய்"

என்பது செறலின் உயர்திணை அஃறிணையாயிற்று. நாம் அரனுடைமை என்பது இழிப்பின் உயர்திணை அஃறிணையாயிற்று. பிறவும் அன்ன.

"சொற்றொறும் இற்றிதன் பெற்றி" (461) என்பதனானே புதல்வனை, 'அய்யன் வந்தான்' என்றும், புதல்வியை 'அம்மை வந்தாள்' என்றும் வரும் மரபுவழுவமைதிகளும் கொள்க. இவ்வழுவமைதி உருவக உவமைகளின் வழுவி அமைவன ஒழியக் கொள்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவுமது.

இ–ள்.: உவப்பினு முயர்பினும் – உவப்பினாலும் உயர்பினாலும், **சிறப்பினுஞ் செறலினும்** – சிறப்பினாலும் முனிவினாலும், **இழிப்பினும்**– இழப்பினாலும், **பாறினை**–இவ்வைந்திடத்தும் பாலும் திணையும், **இழக்கினு மியல்பே** – மயங்கி வழங்கினும் அது முறைமையாம், எ–று.

உ–ம்.:–

ஒருவனை, என் யானை வந்தது எனவும்: ஒருத்தியை என் பாவை வந்தது எனவும்; ஒரு பசுவை, என் அன்னை வந்தாள் எனவும் ; ஒரெருத்தினை, என் தந்தை வந்தான் எனவும் வழங்குதல் உவப்பின்கன் வந்தன... .... இவை உவப்பில் ஆண்பால் பெண்பாலாய் வழங்கின. ஒருவன் ஒருத்தியை வந்தார் போயினார் என்பது உவப்பின் கண் வந்தனவாம். கிளியார், மயிலார் குயிலார் பிறந்தார் என உயர்ச்சி சொல்லுதற்கண் அஃறிணை உயர்திணை ஆயின.

"நாவலர்க்குத் தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரா"

"இரவின் வருவானைப் புல்குவன் றோழா?"

இவை சிறப்பின்கண் பெண்பாலை ஆண்பாலாகவும் ஆண்பாலைப் பெண்பாலாகவும் வழங்கின.

"........... புலவிய தெவனோ வன்பிலங் கடையே" (குறு.93) எனச் செறற்கண் பால் மயங்கின.

"இரவெதிர் கொள்ளா விருகாற் பசுவே... ...."

என இழிபினால் அஃறிணை ஆயிற்று. பிறவுமன்ன.

விசாகப் பெருமாளையர்

இது, திணைபால்களின் வழுவமைதி யுணர்த்துகின்றது.

இ–ள்.:– பால்–பாலும், **திணை**–திணையும், **உவப்பினும்** – மகிழ்ச்சியினாலும், **உயர்வினும்** – மேன்மையினாலும், **சிறப்பினும்** – சிறப்பினாலும், **செறலினும்** – கோபத்தினாலும், **இழிப்பினும்** – பழிப்பினாலும், **இழுக்கினும்** – வழுவிவரினும், இயல்பு – இயல்மாம், எ–று.

வ–று.:–

தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினாலாண்பால் பெண்பாலாயிற்று. ஒருவனை அவர்வந்தார் என்பது உயர்வினாலொருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. தாதாயுலகுக்கோர் தாயே என்பது சிறப்பினாலாண்பால் பெண்பாலாயிற்று எனைத் துணையாராயினு மென்னாந் தினைத் துணையுந் தேரான்பிறனில்புகல், என்பது செறலினாற் பன்மைப்பா லொருமைப் பாலாயிற்று. பெண்வழிச்செல்வானை நோக்கி இவன் பெண் என்பது இழிப்பினா லாண்பால் பெண்பாலாயிற்று. ஓராவினை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினா லஃறிணை யுயர்திணையாயிற்று. செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க் கோரின்னுரை, தந்தாரேற்றந்தா ரென்னின்னுயிர் என்பது உயர்வினாலஃறிணை யுயர்திணையாயிற்று. தம் பொருளென்ப தம்மக்கள் என்பது சிறப்பினாலுயர்திணை யஃறிணையாயிற்று 'ஏவவுஞ்செய்க லான்றான்றேரா னவ்வுயிர்போஒள மளவுமோர் நோய்' என்பது செறலினா லுயர்திணை யஃறிணையாயிற்று. 'நாமரனுடைமை' என்பது இழிப்பினாலுயர்திணை யஃறிணையாயிற்று, பிறவுமன்ன.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

இன்ன வின்னவிடத்துப் பால் திணைகள் வழுவிவரினும் தள்ளாது அமைத்துக்கொள்ளுக வெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும்
இழிப்பினும் பாறிணை யிழுக்கினு மியல்வே.

(உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்
இழிப்பினும் பால் திணை இழுக்கினும் இயல்பே.)

இ—ள்.:— மகிழ்ச்சியின்கண்ணும் மேன்மையின்கண்ணும் சிறப்பின்கண்ணும் கோபத்தின்கண்ணும் பழிப்பின்கண்ணும் பாலுத்திணையும் வழுவிவரினும் இயல்பாம், எ—று.

இழுக்கினும் இயல்பே என்பதனாற் கொள்ளக்கிடப்பது யாது?

வழுவென்று கடியாது கொள்ளுக வென்பது.

(வரலாறு)

பால்:—

(1) தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது உவப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை அவர்வந்தார் என்பது உயர்வின்கண் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே" என்பது சிறப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(4) "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்—தேரான் பிறனில் புகல்" என்பது செறலின்கட் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி 'இவன் பெண்' என்பது இழிப்பின்கண் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை: (1) ஓர்பசுவை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பின் கண் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை—தந்தாரேற்றந்தாரென் னின்னுயிர்" என்பது உயர்வின்கண் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) "தம்பொரு ளென்பதம் மக்கள்" என்பது சிறப்பின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வயிர்—போஒமளவு மோர் நோய்" என்பது செறலின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) நாமரனுடைமை என்பது இழிப்பின்கண் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே, புதல்வனை அப்பன்வந்தான் என்றும், புதல்வியை அம்மைவந்தாள் என்றும், வழங்கு மரபுவழுவமைதிகளுங் கொள்க.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது,

இ–ள்.:– உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினும் இழிப்பினும் – மகிழ்வும் உயர்வும் தலைமையும் வெகுளியும் இழிவுமாகிய ஐந்தினாலும், **பாறிணையிழுக்கினும்** – பாலுந்திணையும் வழுவி வருமாயினும், **இயல்பு** – அது அமைதிப் பண்பாம், எ–று.

வ–று.:–

தன்புதல்வனை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பின் ஆண்பால் பெண்பாலாயிற்று; ஒருவனை, 'அவர் வந்தார்' என்பது உயர்வின் ஒருமைப்பால் பலர் பாலாயிற்று, 'தாதாய் மூவேழுலகுக்குந்தாயே' என்பது சிறப்பின் ஆண்பால் பெண்பாலாயிற்று,

"எனைத்துணை யராயினு மென்னாந்
தினைத்துணையுந் – தேரான் பிறனில் புகல்"

இக்குறளினுள் எனைத்துணையரென்னும் பலர்பால் தேரான் என வெகுளியால் ஒருமைப்பாலாயிற்று. பெண்வழிச் செல்வானை நோக்கி, 'இவன்பெண்' என்பது இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று. ஓர் பசுவை, 'என்னம்மை வந்தாள்' என்பது, 'உவப்பின் அஃறிணை யுயர்திணை' யாயிற்று. 'கிளியார் தந்தார்' என்பது உயர்வின் அஃறிணை உயர்திணையாயிற்று. 'தம்பொரு ளென்பதம் மக்கள்' என்பது, சிறப்பின் உயர்திணை அஃறிணையாயிற்று.

ஏவவுஞ் செய்கலான் றான் றேரான வ்வுயிர் – போஒ மளவுமோர் நோய் இக்குறளில் செய்கலான் தேரான்நோய்

என்பது வெகுளியின் உயர்திணை அஃறிணையாயிற்று. 'நாமெல்லாங் கடவுளுடைமை' என்பது; இழிவின் உயர்திணை அஃறிணையாயிற்று. பிறவுமன்ன. இனிச், 'சொற்றொறுமிற்றி தன் பெற்றி' யென்னுஞ் சூத்திரத்தால், புதல்வனை, 'அப்பன் வந்தான்' எனவும் புதல்வியை 'அம்மை வந்தாள்' எனவும் வரும் மரபு வழுவமைதியுங் கொள்க.

இவ்வழுவமைதி உருவகவுவமைகளில் வழுவி வரும் வழுவமைதியின் வேறெனக் காண்க. அது, 'உருவக வுவமையிற் றிணைசினை முதல்க'ளென்னுஞ் சூத்திரத்தாற் பிற்கூறப்படும். இச் சூத்திரத்துள் 'இழுக்கினு'மென்ற இழிவு சிறப்பும்மை இவ்விடங்களில் இழுக்காதுவருதல் இலக்கணமென்பதும், 'பாறிணை'யெனப் பாலை முற்கூறியது அது மிகுதியும் பயின்று வருமென்பதுந் தோன்ற நின்றமை

யுய்ந்துணைர்ந்து கொள்க. இது உயத்துணர்வைப் பென்னும் உத்தி. இனிக் குடிமை யாண்மை முதலியன உயர்திணைப் பொருளவாயினும், குடிமைநன்று, ஆண்மைநன்று என முடிதலால் இவை, போல்வன வெல்லாஞ் சொன்னோக்கம் பற்றி வந்த வழுவமைதி யெனக் கொள்க. இக்குடிமை முதலியன பண்பாதலாற் பண்பாகு பெயரன்றோ வெனின், ஆகுபெயராயின் குடிமை குடிமகனை யுணர்த்திக் குடிமை நல்லன் எனவே நிற்கவேண்டும், பின்பு குடிமை நன்றென அஃறிணை முடிபேற்றலின் அவை பண்பிகளாவனவே யன்றிப் பண்பாகாமையால் ஆகுபெயரெனல் பொருந்தாதென்க. குடிமைநல்லன் ஆண்மை நல்லன் என முடிவன வழாநிலையேயாம், குடிமை யென்பது குடிப் பிறப்புக்கேற்ற ஒழுக்கம்; அது, 'ஒழுக்க முடைமை குடிமை' எனவும்,

"மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்

கடிமை புகுத்தி விடும்"

ஏற்மடிமை குடியை கடிமை புகுத்திலின் எனவும் வருதை ஒழுக்கமுடைய என்குடிமகன் எனவும் மடிமை குடிம் மாயின். அது அவனையவன் கலைஞர்க்கு அடியனாக றுழைத்துவீர் வற்றாற் காண்க. இனிக்காலம் - உலகம் -உயிர் -உடம்பு-முதலியன உயர்திணைப் பொருளை யுணர்த்து மேனும் அஃறிணைச் சொல்லாகநின்று அஃறிணைமுடிபேற்றேநிற்குமென்க. ஆயின் வேற்றுமை யாகதோவெனின்-மேற்கூறிய குடிமையாண்மை முதலியன இன்வாறன்றியிருதிணைமுடிபு மொருங்கேற்றுநிற்பதென்க- இவ்வேறுபாடெல்லாம் - ஆசிரியர் தொல்காப்பியனார்கூறி பலவயினானுமெண்ணாத் திணைவிரவுப்பெயர் - என்னுஞ்சூத் திரத்தாலும், குடிமையாண்மை யென்லுஞ்சூத்திரத் தாலும், காலமுலகமுயிரேயும்பே என்னுஞ்ளுத்திரத்தாலுங்காண்க. இணையுரையித் கோடலென்னு முத்தியா'லுளைக்கப்ட்டன - இச்சூத்திரத்துள் அதுஎன்பது தோன்றா எழுவாயாய்நின்றது - ஆதலால்வருலித்து - அது இயல்பு என முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்

தி.கோ. ரங்காசாரியர்

உரை :- உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும் - மேன்மையி னாலும், சிறப்பினும் - சிறப்பினாலும், செறலினும் - கோபத்தினாலும், இழிப் பினும் - பழிப்பினாலும், பால்திணை - பாலும் திணையும், இழிக்கினும் -வழுவி வந்தாலும், இயல்பே - அமைதியேயாம்.

பால் :

1.தன்புதல்வனை 'என் அம்மைவந்தாள்' என்பதில் உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2.ஒருவனை 'அவர்வந்தார்' என்பதில் – உயர்வினால் ஒருமைப் பால் பன்மைப் பாலாயிற்று.

3."தாதாய் மூவே மூலகுக்குந் தாயே" என்பதில் – சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4."ஏனைத் துணையராயினு மென்னாந்தினைத் துணையும் – தேரான் பிறனில்புகல்' என்பதில் – செறலினால் பன்மைப்பால் ஒருமைப் பாலாயிற்று. (செறல் – கோபம்)

5.பெண்வழிச் செல்வானை, 'இவன் பெண்' என்பதில் – இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை:

1.ஒரு பசுவை 'என் அம்மைவந்தாள்' என்பதில் – உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2."பசுங்கிளியார் சென்றார்க்கு" என்பதில் – உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

3."தம்பொருளென்பதம்மக்கள்" என்பதில் – சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

4."ஏவவுஞ் செய்கலான் தான்தேரானவ்வுயிர் – போ ஒமளவுமோர் நோய்" என்பதில் – செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

5.'நாம் கடவுளுடைமை' என்பதில் – இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனி, மகனை 'அப்பன் வந்தான்' எனவும், மகளை 'அம்மை வந்தாள்' எனவும் வழங்கும் மரபு வழுவமைதியுங்கொள்க.

இச்சூத்திரமும் முற்சூத்திரமுமாகிய இரண்டும் திணைபால்களின் வழுவமைதிகூறலால் தம்முளொக்கு மாயினும், அது திணைபால்கள் விரவி வருமிடத்து அவற்றை முடிக்குஞ்சொல் ஒருதிணை யொருபாலாக இருக்கு மென்பது கூறிற்றெனவும், இது திணைபால்கள் பலவிரவாது ஒரு திணை மற்றொரு திணையாகவும், ஒருபால் மற்றொருபாலாகவும் மாறுமென்பது கூறிற்று எனவும் வேறுபாடறிக.

இவ்வழுவமைதி, உருவக உவமைகளில்வரும் வழுவமைதியன்றென்க. அஃது "உருவகவுவமையில்" என்னுஞ் சூத்திரத்திற் பிறகூறப்படும். இங்கு 'இழிக்கினும்'

என்ற இழிவு சிறப்பும்மையால் இழுக்காமல் வருவதே இலக்கணமாமென்பதும், 'பால்திணை' எனப் பாலைமுன் வைத்தமையால் அது மிகுதியும்பயின்றுவருமென்பதும் உயர்த்துணரவைப்பு எனும் உத்தியாற்கொள்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.: உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும்—மேன்மையினாலும், சிறப்பினும்—சிறப்பினாலும், செறலினும்—கோபத்தினாலும், இழிப்பினும் – பழிப்பினாலும், பால் திணை இழுக்கினும் இயல்பு – பாலுந் திணையும் வழுவி வரினும் இயல்பாம். எ—று.

வ—று.:—

பால்.:

(1) தன்புதல்வனை, 'என்னம்மை வந்தாள்' என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை, 'அவர் வந்தார்' என்பது, உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே" என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(4)

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்"

என்பது செறலினாற் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி, 'இவன்பெண்' என்பது, இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை:

(1) ஒரு பசுவை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை
தந்தா ரேற்றந் தாரென் னின்னுயிர்"

என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) "தம்பொரு ளென்பதம் மக்கள்" என்பது, சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்"

என்பது, செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) 'நாமரனுடைமை' என்பது, இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" என்பதனாலே, புதல்வனை, 'அப்பன் வந்தான்' என்றும், புதல்வியை, 'அம்மை வந்தாள்' என்றும் வழங்கு மரபு வழுவமைதிகளுங் கொள்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். உவப்பினும் – மகிழ்ச்சியினாலும் – உயர்வினும் – மேன்மையினாலும், – சிறப்பினும் – சிறப்பினாலும், – செறலினும் – கோபத்தினாலும், – இழிப்பினும் – பழிப்பினாலும், – பால்திணை இழுக்கினும் இயல்பு – பாலுந் திணையும் வழுவி வரினும் இயல்பாம் எ–று.

(வரலாறு)

பால் :–

(1) தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை அவர் வந்தார் என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) "தாதாய் மூவேழுலகுக்குந் தாயே" என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(4) "எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் – தேரான் பிறனில் புகல்" என்பது செறலினாற் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி இவன்பெண் என்பது இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை :

(1) ஓர் பசுவை என்னம்மை வந்தாள் என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை – தந்தாரேற்றந் தாரென் னின்னுயிர்" என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) "தம்பொருளென்ப தம்மக்கள்" என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவுஞ் செய்கலான் றான்றேரா னவ்வுயிர் – போஒமளவு மோர் நோய்" என்பது செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) நாமரனுடைமை என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் 'சொற்றொறு மிற்றிதன் பெற்றி'' என்பதனாலே, புதல்வனை அப்பன் வந்தான் என்றும், புதல்வியை அம்மை வந்தாள் என்றும், வழங்குமரபு வழுவமைதிகளுங் கொள்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: உவப்பினும் – மகிழ்ச்சியினாலும், உயர்வினும் – மேன்மைப்படுத்திச் சொல்லுதலினாலும், சிறப்பினும் – சிறப்பினாலும், செறலினும் – கோபத்தினாலும், இழிப்பினும் – பழிப்பினாலும், பால் திணை – பாலும் திணையும், இழுக்கினும் – வழுவி வந்தாலும், இயல்பே – அமைதியேயாம்; எ—று.

பால்:

(1) தன் புதல்வனை 'என் அம்மை வந்தாள்' என்பது, உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை 'அவர் வந்தார்' என்பது, உயர்த்திச் சொல்லுததால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) "மகிழ்வார்க்கும் அல்லார்க்கும் தாயாகித் தலையளிக்கும் தண்டுறை யூரன்" என்பது, சிறப்பினால் ஆண்பால் பெண் பாலாயிற்று.

(4) "எனைத்துணை யராயினு மென்னாம் தினைத்துணையும், தேரான் பிறனில் புகல்" என்பது, கோபத்தினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்பவனை, 'இவன் பெண்' என்பது, இழிவினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை:

(1) ஒரு பசுவை 'என் அம்மைவந்தாள்' என்பது, உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) 'பசுங்கிளியார் சென்றார்க்கு' என்பது, உயர்த்திச் சொல்லுதலால் அஃறிணை உயர்திணையாயிற்று. (கிளியார் – கிளி.)

(3) "தம்பொரு ளென்ப தம்மக்கள்" என்பது, சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவும் செய்கலான் தான்தேரா னவ்வுயிர், போஒமளவு மோர் நோய்" என்பது, கோபத்தினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(5) 'நாம் கடவுளுடைமை' என்பது, இழிவினால் உயர்திணை அஃறிணையாயிற்று. இங்கே, இழிவு – தமது பணிவு.

இனி, மகனை 'அப்பன் வந்தான்' என்றும், மகளை 'அம்மை வந்தாள்' என்றும் வழங்கும் மரபு வழுவமைதிகளும் கொள்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: உவப்பினும் – மகிழ்ச்சியினுலும், உயர்வினும் – மேன்மையினுலும், சிறப்பினும் – சிறப்பினாலும், செறலினும் – கோபத்தினாலும், இழிப்பினும் – பழிப்பினாலும், பால் திணை இழுக்கினும் – பாலுந் திணையும் வழுவிவரினும், இயல்பு – இயல்பாம். எ–று.

உ–ம்.

பால்:–

(1)தன் புதல்வனை 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2)ஒருவனை 'அவர் வந்தார்'' என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பா லாயிற்று.

(3)"தாதாய் மூவே ழுலககுக்குந் தாயே" என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பா லாயிற்று.

(4)"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் – தேரான் பிறனில் புகல்" என்பது செறலினாற் பன்மைப்பால் ஒருமைப்பா லாயிற்று. (செறல் – கோபம்)

(5)பெண்வழிச் செல்வானை நோக்கி 'இவன் பெண்' என்பது இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை:–

(1)ஒரு பசுவை 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(2) "செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை – தந்தாரேற்றந்தாரென்னின்னுயிர்" என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) "தபொரு ளென்பதம் மக்கள்" என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) "ஏவவுஞ் செய்கலான் றன்றேரா னவ்வுயிர் – போஒ மளவுமோர் நோய்" என்பது செறலினால் உயர்திணை அஃதிணையாயிற்று.

(5) "நாமரனுடைமை" என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் "சொற்றொறு மிற்றிதன் பெற்றி" (சூ-461) என்பதனாலே, புதல்வனை அப்பன் வந்தான் என்றும், புதல்வியை அம்மை வந்தாள் என்றும் வழங்கும் மரபுவழுவமைதிகளுங் கொள்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ-ள்.) பால் திணை - பாலும் திணையும், உவப்பினும் - மகிழ்ச்சியினாலும், உயர்வினும் - மேன்மையினாலும், சிறப்பினும் - சிறப்பினாலும், செறலினும் - கோகத்தினாலும், இழிப்பினும் - பழிப்பினாலும், இழுங்கினும் - வழுவிவரினும் - வழுவிவரினும், இயல்பு - இயல்பாம். (எ-று)

(பொ-ரை.) உவப்பு முதலிய ஐந்தினும் பாலும் திணையும் வழுவிவரினும் இயல்பாம்.

(உ-ம்)

பால்.:-

(1) தன் புதல்வனை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

(2) ஒருவனை, 'அவர் வந்தார்' என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று.

(3) 'தாதா யுலகுக்கோர் தாயே' என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலயிற்று.

(4) 'எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந் தேரான் பிறனில் புகல்' என்பது செறலினால் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

(5) பெண்வழிச் செல்வானை நோக்கி, 'இவன் பெண்' என்பது இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை.:-

(1) ஓர் ஆவினை, 'என்னம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று. (ஆ - பசு)

(2) 'செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை, தந்தாரேற் றந்தாரென் னின்னுயிர்' என்பது உயர் வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

(3) 'தம்பொரு ளென்பதம் மக்கள்' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

(4) 'ஏவவுஞ் செய்கலான் றான்றோரா னவ்வுயிர், போஒமளவுமோர் நோய்' என்பது செறலினால் உயர்கிணை அஃறிணையாயிற்று.

(5) 'நாம் அரனுடைமை' என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் 'சொற்றொறு மிற்றிதன் பெற்றி' என்னும் விதியால் புதல்வினை, 'என் அப்பன் வந்தான்' எனவும், புதல்வியை 'என் அம்மை வந்தாள்' எனவும் வழங்குலம் மரபுவழுவமைதியும் கொள்க.

கா. நமச்சிவாய முதலியார்

பால் திணை – பாலும் திணையும், **உவப்பினும்** – மகிழ்ச்சியினாலும், உயர்வினும் – மேன்மையினாலும், **சிறப்பினும்** – சிறப்பினாலும், **செறலினும்** – கோபத்தினாலும், **இழிப்பினும்** – பழிப்பினாலும், **இழுக்கினும்** – வழுவிவரினும், **இயல்பு** – இயல்பாம்.

உதாரணம்

பால்.:–

1. தன் புதல்வனை, 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

2.ஒருவனை, 'அவர் வந்தார்' என்பது உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று என்பது உயர்வினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

3.'தாதா யுலகுக்கோர் தாயே' என்பது சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

4.'எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
– தேரான் பிறனில் புகல்'

என்பது செறலினாற் பன்மைப்பால் ஒருமைப்பாலாயிற்று.

5.பெண்வழிச் செல்வானை நோக்கி, 'இவன் பெண்' என்பது இழிப்பினால் ஆண்பால் பெண்பாலாயிற்று.

திணை.:–

1. ஓர் ஆவினை, 'என் அம்மை வந்தாள்' என்பது உவப்பினால் அஃறிணை உயர்திணையாயிற்று.

2. 'செந்தார்ப் பகுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை –
தந்தாரேல் தந்தாரென் இன்னுயிர்'

3. 'தம்பொருள் என்பதம் மக்கள்' என்பது சிறப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

4. 'ஏவவுஞ் செய்கலான் தான் தேரான் அவ்வுயிர் – போஒம் அளவுமோர் நோய்'

என்பது செறலினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

5. 'நாம் அரனுடைமை' என்பது இழிப்பினால் உயர்திணை அஃறிணையாயிற்று.

இனிச் 'சொற்றொறும் இற்றிதன் பெற்றி' என்னும் விதியால், புதல்வனை என் அப்பன் வந்தான் எனவும், புதல்வியை என் அம்மை வந்தாள் எனவும் வழங்கும் வழுவமைதியும் கொள்க.

மோசசு பொன்னையா

மகிழ்ச்சியினாலும், மேன்மையினாலும், சிறப்பினாலும், கோபத்தினாலும், பழிப்பினாலும் பாலுந் திணையும் வழுவி வரினும் அமையும் எ–று.

பால்

1. (புதல்வனை) என் அம்மை வந்தாள் உவப்பினால்
2. (ஒருவனை) அவர் வந்தார் உயர்வினால்
3. (கடவுளை) மூவேழுலகுக்குந் தாயே சிறப்பினால்
4. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்தேரான் பிறனில் புகல் செறலினால்
5. (பெண் பெட்டொழுகுவானை) இவன் பெண் இழப்பினால்

திணை

1. (பசுவை) என்னம்மை வந்தாள் உவப்பினால்
2. செந்தார்ப் பசுங்கிளியார் சென்றார்க்கோ ரின்னுரை தந்தரேற் றத்தாரென் னின்னுயிர் உயர்வினால்
3. தம்பொரு ளென்பதம் மக்கள் சிறப்பினால்
4. ஏவவுஞ் செய்கலான் றான்றோ னவ்வுயிர் போஒ மளவுமோர் நோய்5 செறலினால்
5. நாம் இறைவன் உடைமை.

இழிப்பினால்இழுக்கினும் என்ற இழிவு சிறப்பும்மையால், இழுக்காது வருதலே சிறப்பென்க.

379. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும் ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.

ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓர் இடம் பிற இடம் தழுவலும் உளவே.

orumaiyin panmai um panmaiyin orumai um
ōr itam piūa itam taḷuval um uḷa ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Interchange of number and person

Even interchanges of Numbers and persons may occur (in certain cases).

ஒப்புமைப் பகுதி

கண்ணுந் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறுங் கடப்பா டிலவே
தம்வினைக்கு இயலும் எழுத்தலங் கடையே

(தொல்.சொல்.:61)

ஒருமை பன்மையும் பன்மை யொருமையு
மோரிடம் பிறவிடந் தழுவலு முளவே

(இ.வி.:300)

கண்ணும் முலையும் கையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை யுரைக்குங் கடப்பா டிலவே

(மு.வீ.: 735)

ஒருமை பன்மை யாய்பன்மை ஒருமையாய் உழற்வாம்
ஓரிடமே பலவிடமும் தழுவல்வழு விலவாம்

(சுவாமி.:59:1)

மயிலை நாதர்

எ–ன், பாலிட வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– ஒருமைச்சொல் பன்மை தழுவலும், பன்மைச்சொல் ஒருமை தழுவலும் ஓரிடத்துக்கு உரியசொல் பிறவிடங்கள் தழுவலும் உளவாம், எ–று.

இப்பான் மயக்கம் முன்னுரைத்த உவப்பு முதலாயின அல்லாதவழி வருவதெனக் கொள்க.

வ—று.:—

நீரிருந்தன, பாலிருந்தன எனவும் நாடெல்லாம் வாழ்ந்தது, ஊரெல்லாம் உவந்தது, சோறுமாண்டது, படைவந்தது, சாத்துவந்தது, கண்சி வந்தது, முலை வீங்கிற்று,

"இருநோக் கிவளுண்க ணுள்ளது"

(குறள். 1091),

"உள்ளிய தெல்லா முடனெய்தும்"

(குறள். 309)

எனவும் இவை அஃறிணை யொருமையுடன் பன்மையும், பன்மையுடன் ஒருமையு மயங்கின.

"அகுதை தந்தை,
யண்ணல் யானை யடுபோர்ச் சோழர்"

(அகநா.: 96)

"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப............பொலிமினென்னும் புறநிலை வாழ்த்தே"

(தொல். செய்.: 110),

"கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ,
......................பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற வென்றாக் குறுதலின் ....பதமிகப்
பெறுகுவிர்..........ஒருவி ரொருவி ரோம்பினிர்
கழிமின்"

(மலைபடு.: 50, 65–6,157,218),

யான் எம்மூர்புகுவல்

எனவும்,

"புலைய னெறிந்த பூசற் றண்ணுமை,
ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப"

எனவும், உயர்திணை யொருமையிற் பன்மையும், பன்மையின் ஒருமையும் மயங்கின.

இனி இடமயக்கம்: — சாத்தன்றாய் இவை செய்வலோ,

"கல்வி யென்னும் வல்லாண் சிறாஅன்
ஒல்வே னல்ல னதுவா யாகுதல்"

(புறநா.: 346),

"ஆவெந்தை வகுமித்தா வழாநின்ற விவனையு
மாவென்ற நோக்கியையு மாதரம் புதல்வனையும்

வீய்வின்று துணையாய்நின் விறலிழை யொடுநோக்காய்
வேய்நின்ற வியன்காட்டுள் விட்டெறிந் திறத்தியோ"
"நில்லாது பெயர்ந்த பல்லோ ருள்ளும்
என்னே குறித்த நோக்கமொடு"

(அகநா.:110)

என வருமிவை தன்மை படர்க்கை தழீஇயின.

"திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்க லாகு
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா
எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தென்றான்"

(சீவக.1760)

என்பது முன்னிலை படர்க்கை தழீஇயிற்று.

நீயோ அவனோ யாரிது செய்தார்? யானோ அவனோ யாரிது செய்தார்? அவனோ நீயோ யானோ யாரிது செய்தாரென்ன விரவியும் ஒரிடம் தழீஇயின; பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், முற்கூறிய உவப்பு முதலிய காரணத்தானன்றி அமைந்த பால்வழுவமைப்பும் அவ்வாறு அமைந்த இடவழுவமைப்பும் உணர்–ற்று.

இ–ள்.:– ஒருமைப் பாலின்கண் பன்மைச் சொல்லைத் தழுவிக் கூறுதலும், ஓரிடத்தின்கண் பிற இடச்சொல்லைத் தழுவிக் கூறுதலும் உளவாம், எ–று.

வ–று.:–

வெயிலெல்லாம் மறைத்தது மேகம், இக்குளத்து நீரெல்லாம் கொண்டுய்த்தான் இவன் எனவும்; இரண்டு கண்ணும் சிவந்தது, "இருநோக்கு இவளுண்கண் உள்ளது" எனவும் அஃறிணைக்கண் ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும் வந்தன.

1. "அகுதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்"

எனவும்,

2. "புலையன் எறிந்த பூசல் தண்ணுமை
ஏவல் இளையர் தாய்வயிறு கரிப்ப"

எனவும் உயர்திணை ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும் வந்தன.

சாத்தன் தாய் இவை செய்வலோ,

3. "கல்விய னென்னும் வல்லாண் சிறாஅன்
ஒல்வே னல்லன் அதுவா யாகுதல்"

என்பது தன்மையின்கண் படர்க்கை வந்தது.

4."திண்பொருள் எய்த லாகும் தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையும் நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா உடன்பிறப் பாக்க லாகா
எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக் கரிய தென்றான்"

என்பது முன்னிலைக்கண் படர்க்கை வந்தது. நீயோ அவனோ யாரிது செய்தார்? யானோ அவனோ யாரிது செய்தார்? நீயோ யானோ யாரிது செய்தார்? நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்? என விரவி ஓரிடத்தின்கண் பிற இடம் வருதலும் கொள்க. பிறவும் அன்ன.

ஒருபாற்பொருளை மற்றொருபாற் சொல்லானும், ஓரிடப் பொருளை மற்றோரிடச் சொல்லானும் கூறுதலின் வழுவாய்; அவை சான்றோர்க்கு ஒப்ப முடிந்தமையின் அமைதியாயின.

5. "ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்"

'யான் எம்மூர் புகுவன்' என்பன ஒருமையிற் பன்மை வந்த வழுவமைதி எனின்:- ஒருவிர் ஒருவிர் ஓம்பினை கழிவை எனின் வழாநிலையாகவேண்டும்; அங்ஙனம் ஆகாமையின் 'ஒருவர் என்பது உயர் இருபாற்றாய்' (289) என்னும் சூத்திரத்துள் 'ஒருமொழி ஒழிதன்'னினங்கொளற் குரித்தே' (358) என்பதனான் அமைந்த வழாநிலையாம். யான் எம்மூர் புகுவன் என்புழித் தன்கிளையினைத் தன்னொடுபடுத்து எம்மூர் என்றான் ஆதலின் வழாநிலையாம். இத்தொடக்கத்து வழாநிலைகளை இவ்வழுவமைதியாக உதாரணம் கூறுவார் கூற்றையெல்லாம் உய்த்துணர்ந்து களைக.

கூழங்கைத் தம்பிரான்

சூ-ம், பாலிட வழுவமைப்புக் கூறுகின்றது.

இ-ள்.: ஒருமையிற் பன்மையும் – ஒருமைச்சொல் பன்மைச்சொல்லைத் தழுவலும், பன்மையினொருமையும் – பன்மைச்சொல் ஒருமைச் சொல்லைத் தழுவலும், ஓரிடம் பிறவிடந் தழுவலும் – ஓரிடத்துக்குரிய சொல் பிறவிடத்துக்குரிய சொல்லைத் தழுவலும், உளவே – உளவாம், எ-று.

உ-ம்.:-

நீர் இருந்தன, பால் இருந்தன எனவும் நாடெல்லாம் வாழ்ந்தது, ஊரெல்லாம் உவந்தது, சோறு மாண்டது, படை வந்தது, சாத்து வந்தது, "இருநோக் கிவளுண்க ணுள்ளது" (குறள்.1091), "உள்ளிய தெல்லா முடனெய்தும்" (குறள்.309), எனவும் அஃறிணையொருமையுடன் பன்மையும் பன்மையுடன் ஒருமையும் மயங்கின. "தந்தை, அண்ணல் யானை யடுபோர்ச் சோழர்" (அகம்,96), "ஒருவி ரொருவி ரோம்பினிர் கழிமின்" (மலைபடு.218), யான் எம்மூர் புகுவன் எனவும் 'அவருள் அவனல்லன் மருளா ....' எனவும் உயர்திணை ஒருமையிற் பன்மையும் பன்மையின் ஒருமையும் மயங்கின.

நான் சாத்தன், நாங்கள் வெள்ளாளர், வருவேன் அல்லன் எனத் தன்மை படர்க்கை தழீஇயின்; முன்னிலை படர்க்கை தழீஇயயிற்று.

நீயோ அவனோ யாரிது செய்தார்? யானோ நீனோ யாரிது செய்தார்? யானோ நீயோ அவனோ யாரிது செய்தார் என ஓரிடம் பலவிடம் தழுவின. பிறவுமன்ன.

விசாகப் பெருமாளையர்

இது, முன்சொல்லப்பட்ட உவப்பு முதலிய காரணத்தினா லல்லாமல் அமைந்த பால் வழுவமைதியும் அவ்வாறு அமைந்த இடவழுவமைதியும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– **ஒருமையின்** – ஒருமைப்பாலில், **பன்மையும்** – பன்மைப்பாற் சொல்லையும், **பன்மையின்** – பன்மைப்பாலில், **ஒருமையும்** – ஒருமைப்பாற் சொல்லையும், **ஓரிடம்** – ஓரிடத்தில், **பிறவிடம்** – பிறவிடச் சொல்லையும், **தழுவலும்** – தழுவிக்கூறுதல்களும், **உள** – உளவாலம், எ–று.

வ–று.:–

'வெயிலெல்லாமறைத்தது மேகம்' எனவும், 'இரண்டு கண்ணுஞ் சிவந்தது' எனவும், அஃறிணையிலே யொருமையிற் பன்மையு பன்மையிலொருமையும் வந்தன. 'அஃதை தந்தை யண்ணல் யானை யடுபோர்ச் செழியர்' எனவும் 'புலையனெறிந்த பூசற்றண்ணுமை யேவலிளையர் தாய்வயிறுகரிப்ப' எனவும், உயர்திணையிலே ஒருமையிற் பன்மையும், பன்மையி லொருமையும் வந்தன. 'சாத்தன்றாயிவை செய்வலோ' எனத் தன்மையிலே படர்க்கை வந்தது, 'எம்பியை யீங்குப்பெற்றே னென்னெனக்கரிய தென்றான்' என முன்னிலையிலே படர்க்கை வந்தது. 'நீயோ! வவனோ யாரிதுசெய்தார்', 'யானோவவனோ யாரிதுசெய்தார்' என விரவி யோரிடத்திலே பிறவிடம் வருதலுங் கொள்க.

ஒருபாற்பொருளை மற்றொருபாற் சொல்லாலுங் ஓரிடப்பொருளை மற்றோரிடச் சொல்லாலுங் கூறுதலால் வழுவாய் அவை சான்றோர்க்கு ஒப்ப முடிதலால் அமைதியாயிற்று.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒருமை பன்மைகளும் இடங்களும் மயங்கி வருதலு முண்டெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையும்
ஓரிடம் பிறவிடந் தழுவலு முளவே.
(ஒருமையின் பன்மையும் பன்மையின் ஒருமையும்
ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே)

இ–ள்.: ஒருமைப்பாவிற் பன்மைப்பாற் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைப்பாற் சொல்லையும் ஓரிடத்திற் பிறவிடச் சொல்லையும் தழுவிக் கூறுதல்களும் உளவாம். எ–று.

(வரலாறு)

பால்.

(1) "அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச்செழியர்" என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழியன் என நிற்றற்குரியவிடத்தே செரியரென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத்தந்தையென விரியும். (அஃதைபென்பது திக் கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொரமை அஃறிணையொருமைகளில் விரவி நிற்பதோர் பொதுச்சொல்.) தந்தையென்னு மொருமையிற் செழியரெனப் பன்மைவந்ததுவழு; தனித்தனி யொவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்ற பன்மையில், ஒவ்வொருவருந் தனித்தனி அஃதைக்குத்தந்தைபோல் வாராதலால். வழுவமைதியாயிற்று. நீர் பரந்தன, பால்சுரந்தன என வருவனவும் ஒருமையிற் பன்மை.

(2) இரண்டுகண்ணுஞ் சிவந்தது என்புழி, அஃறிணையிலே இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னும் ஒருமைச் சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது. "ஏவலிளையர் தாய்வயிறு கரிப்ப" என்புழி, உயர்திணையிலே எவவிளையரென்னும் பன்மைப்பாலிற் றாயென்னும் ஓரமைச்சொற்சேர்த்துச சொல்லப்பட்டது. (எவலிளையர் – போர்புரிவீரர்.) எவலிளையர் தாய் எவலிளையருக்குத் தாயென விரியும். சேனைமுழுமையு முள்ள இளையருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால்,

இங்கே தாயென ஒருமைருதல் வழு; இச்சேனையிலே திரண்டுநின்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால், வழுவமைதியாயிற்று. நாடெல்லாம்வந்தது, படைவந்தது என வருவனவும் பன்மையினொருமை.

ஒருமை நிற்றற்குரியவிடத்தே பன்மைவருதல் பகுதி கருதியவிடத்தும், பன்மை நிற்றற்குரியவிடத்தே ஒருமைவருதல் தொகுதி கருதியனிடத்துமாம்.

இனிமேனியெல்லாம் மாசு பூத்தது என்புழி, எல்லாம் என்பது. எஞ்சாப்பொருட்கண் வந்தமையின் ஒருமையிற் பன்மையன்று. அது வழாநிலை.

நாடெல்லாம் என்பதற்கும் மேனியெல்லாம் என்பதற்கும் தம்முள் வேற்றுமை யாது?ு

நாடெல்லாம் என்பது நாடுகள் எல்லாம் எனப் பொருள்படும். மேனியெல்லாமென்பது மேனிமுழுவதுமெனப் பொருள்படும்.

இடம்:

(1) சாத்தன்றாயிவை செய்வலோ என்புழி, யானெனச் சொல்லல்வேண்டுந் தன்மையிலே சாத்தன்றாயெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன் றாயாகிய யான் என்பது பொருள்.

(2) "திண்பொரு ளெய்தலாகுந் தெவ்வரைச் செருக்கலாகு- நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகு-மொண் பொருளாவதையா வுடன்பிறப் பாக்கலாகா-வெம்பியை யீங்குப்பெற்றே னென்னெனக் கரியதென்றான்" என்புழி, தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்லல்வேண்டும் முன்னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச்சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோவவனோ யாரிதுசெய்தார்; யானோவவனோ யாரிதுசெய்தார்; நீயோயானோ யாரிதுசெய்தார்; நீயோவவனோ யானோ யாரிதுசெய்தார் என விரவி ஒரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்க.

முகவை இராமானுச கவிராயர்

இது, பால் வழுவமைதியோடு இடவழுவமைதியு முணர்த்திற்று.

இ-ள்.: ஒருமைப்பாலிலே பன்மைச்சொல்லைச் சேர்த்துக் கூறுதலும், பன்மைப்பாலிலே யொருமைச்சொல்லைச் சேர்த்துக் கூறுதலும், ஓரிடத்திலே பிற இடச்சொல்லைச் சேர்த்துக் கூறுதலும் உண்டு, எ-று.

வ—று.:—

'வெயிலெல்லா மறைத்தது மேகம்', 'இக்குளத்து நீரெல்லா மிறைத்தானிவன்' என வெயில், நீர் என்னுமஃறிணை யொருமையிலே, எல்லாம் என்னும் பன்மை வந்தது. 'இரண்டு கண்ணுஞ் சிவந்தது',

இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய் நோக்கொன் றந்நோய் மருந்து
உள்ளியதெல்லாமுடனெய்தும்

என அதன்கட் பன்மையிலொருமை வந்தது. 'அஃதை, தந்தை யடுபோர்ச் செழியர்' எனவும், 'ஏவ லிளையர் தாய்வயிறு கரிப்ப' எனவும், தந்தை என்னும் உயர்திணை யொருமையிற் செழியர் என்னும் பன்மையும் இளையரென்னும் அதன் பன்மையில் தாய் என்னும் ஒருமையும் வந்தன. அஃதை என்பது அஃதி, அகுதி எனவுந் திரிந்து, திக்கற்றவன், திக்கற்றவள், திக்கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமையிலும் விரவி நிற்பதோர் பொதுச்சொல். இவற்றுளமைதி யென்னெனின் தந்தை என்னும் ஒருமையிற் செழியரெனப் பன்மை வந்தது வழுவும் தனித்தனி யொவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்றபன்மையில் ஒவ்வொருவருந் தனித்தனி யஃதைக்குத் தந்தை போல் வாராதலால் அமைதியும், இனி இளையரென்பது சேனை முழுமையுமுள்ள இளைஞர், இவர் பலராதலால் இதில் தாய் எனவொருமை வருதல் வழுவும் இச் சேனையில் திரண்டு நின்ற இளைஞரில் ஒவ்வொருவர்க்கும் தாயெனத் தனித்தனி சென்றியைதலால் அமைதியுமாயிற்றென்க. இனி இவ்வாறே வழுவமைதி வந்த இடந்தோறும் விரித்தெழுதவேண்டின் விரிந்துபோமாதலாற் றொகுத்தெழுதிய விடங்களிலு மிவ்வாறு விரித்துணர்ந்து கொள்க. நம்பிமார்வந்தார், நங்கைமார் வந்தார் எனவும், எங்கையீர்கேண்மின், பாவையீர்கேண்மின் எனவும் ஒருமைப் பெயரைப் பன்மையீறுகளடுத்து நின்று பன்மை யுணர்த்தலுங் கொள்க. 'சாத்தன் றாயவை செய்வனோ', 'கல்விய னென்னும் வல்லான் சிறாஅ னொல்வே னல்லன்' எனத் தன்மையிற் படர்க்கை வந்தது. தன்னைச் சாத்தன்றாய் எனப் படர்க்கையாகக் கூறிச் செய்வனோ எனவும், கல்வியனென்னும் வல்லான் எனப் படர்க்கையாகக் கூறிச் 'சிறியாரோடிணங்கேன்' எனவுந் தன்மையால் முடித்தவாறு காண்க. 'எம் பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தென்றான்' எனத் தன்றம்பியை முன்னிலையாக வைத்து அவனை நோக்கியே கூறுதலால், முன்னிலையிற் படர்க்கை வந்தது. நீயே அவனோ யாரிது

செய்தார், யானோ அவனோ யாரிது செய்தார், நீயோ யானோ யாரிதுசெய்தார், நீயோ அவனோ யானோ யாரிது செய்தார் என விரவி யோரிடத்திற் பிற இடம் வருதலுங் கொள்க.

'ஒருவீ ரோருவீ ரொப்பினிர் கழிமின்', 'யானெம்மூர் புகுவன்', 'நீ நும்மூர் புகுவை' என்பனவு மொருமையிற் பன்மை வந்த வழுவமைதி யெனின், 'ஒருவரென்பது உயரிரு பாற்றாய்ப் பன்மை வினைகொளு'மென்ற ஒருவரென் னுஞ்சொல் முன்னிலையிடத்து ஒருவீரொருவீரொன அடுக்கி நின்று பன்மை வினைகொளுங்கால் அதற்கியைய ஒப்பினிரென முற்றெச்ச மிடை நிற்றலால், ஒருமொழி யொழி தன்னினங்கொளற் குரித்தே என்பதினாலமைந்த வழாநிலையேயாம். ஒழித்தன, யான் புகுவன், நீபுகுவை என ஒருமை முடிபேற்று நின்றுழி, எம்மூர், நும்மூர் என்பன இடைப்பிறவரலாய்த் தன்கிளையைத் தன்னொடுபடுத்துக் கூறலாலவையும் வழாநிலையா மென்க. இவை போல்வனவன்றி முன்னர்க் காட்டிய உதாரணங்கள் போல மயங்கி வருவன உளவேல் அவற்றையும் இச் சூத்திரத்தாலமைத்துக் கொள்க. ஆசிரியர் தொல்காப்பியனார்.

"ஒருமை சுட்டிய பெயர்நிலைக் கிளவி
பன்மைக் காகு மிடனுமா ருண்டே"

எனக் கூறுதலுங் காண்க. தழுவலுமுளை என முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– ஒருமையின் பன்மையும் – ஒருமைப்பாலிற் பன்மைப் பாலையும், பன்மையின் ஒருமையும் – பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், ஓர் இடம் பிற இடம் – ஓரிடத்திற் பிற விடத்துச் சொல்லையும், தழுவலும் – சேர்த்துக்கூறலும், உள–உள்ளனவாம். (இங்கு 'பால்' என்றது ஒருமை பன்மைகளை.)

உதாரணம்

பால்:

1. 'வெயிலெல்லாம் மறைத்தது மேகம்' என்பதில் – 'வெயில்' என்னும் ஒருமைப்பாலில் 'எல்லாம்' என்னும பன்மைப்பாற்சொல் தழுவிக் கூறப்பட்டது.
2. 'இரண்டுகண்ணும்சிவந்தது' என்பதில் – 'இரண்டு' என்னும் பன்மைப்பாலில் 'சிவந்தது' என்னும் ஒருமைப்பாற்சொல்தழுவிக் கூறப்பட்டது.

இடம் :-

1. 'இராமன்தாய் இவைசெய்வேனோ' என்பதில் – யான் எனச் சொல்லவேண்டுந் தன்மையில் 'தாய்' எனப்படர்க்கைச் சொல் தழுவிக் கூறப்பட்டது. (இராமன் தாயாகிய யான் என்பது பொருள்.)
2. "எம்பியை யீங்குப்பெற்றேன்" என்பதில் – தன் தம்பியை முன்னிலையாக்கி அவனையே நோக்கிக் கூறலாம் 'நின்னை' எனச்சொல்லவேண்டும் முன்னிலையில் 'எம்பியை' எனப் படர்க்கைச் சொல் தழுவிக்கூறப்பட்டது.

குறிப்பு :-

நீயோ? அவனோ? யார் இது செய்தார்', 'யானோ? அவனோ? யார் இது செய்தார்', 'நீயோ? யானோ? யார் இது செய்தார்', 'நீயோ? அவனோ? யானோ? யார் இதுசெய்தார்' எனக்கலந்து ஓரிடத்திற் பிறவிடம் வருதலுங்கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– ஒருமையின் பன்மையும் – ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும், **பன்மையின் ஒருமையும்** – பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், **ஓரிடம் பிறவிடம்** – ஓரிடத்தில் பிறவிடச் சொல்லையும், **தழுவலும் உள** – தழுவிக் கூறுதல்களும் உளவாம், எ–று.

வ–று.:–

பால்:–

(1) 'வெயிலெல்லா மறைத்தது மேகம்' என்புழி, அஃறிணையிலே வெயிலென்னும் ஒருமைப்பாலில் எல்லாமென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. **"அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச் செழியர்"** என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழியரென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத் தந்தை என விரியும். (அஃதை யென்பது திக்கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணை யாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமைகளில் விரவி நிற்பதோர் பொதுச்சொல்.) தந்தை யென்னும் மொருமையிற் செழியரெனப் பன்மை வந்தது வழு; தனித்தனி யொவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்ற பன்மையில், ஒவ்வொருவருந் தனித்தனி அஃதைக்குத் தந்தைபோல்வராதலால், வழுவமைதியாயிற்று.

(2) 'இரண்டு கண்ணுஞ் சிவந்தது' என்புழி, அஃறிணையிலே இரண்டென்னும் பன்மைப்பாலில் சிவந்ததென்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது.

"புலைய னெறிந்த பூசற் றண்ணுமை – யேவ
விளையர் தாய் வயிறு கரிப்ப"

என்புழி, உயர்திணையிலே ஏவலிளைய ரென்னும் பன்மைப்பாலிற் றாயென்னும் ஒருமைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. (ஏவலிளையர் – போர்புரி வீரர்.) ஏவலிளையர் தாய் ஏவலிளையருக்குத் தாயென விரியும். சேனை முழுமையுமுள்ள இளையருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால், இங்கே தாயென ஒருமை வருதல் வழு; இச்சேனையிலே திரண்டு நின்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால் வழுவமைதியாயிற்று.

இடம்:–

(1) 'சாத்தன்றாயிவை செய்வலோ' என்புழி, யானெனச் சொல்லல் வேண்டுந் தன்மையிலே சாத்தன்றாயெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன்றாயாகிய யான் என்பது பொருள்.

(2) "திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்கலாகு
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவைவு நண்ணலாகு
மொண்பொரு ளாவ தையா வுடன்பிறப்பாக்க லாகா
வெம்பியை யீங்குப் பெற்றே னென் னெனக் கரிய
தென்றான்"

என்புழித், தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்லல் வேண்டும் முன்னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது.

'நீயோ வவனோ யாரிது செய்தார்'; 'யானோ வவனோ யாரிது செய்தார்'; 'நீயோ யானோ யாரிது செய்தார்'; 'நீயோ வவனோ யானோ யாரிது செய்தார்' என விரவி ஓரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். ஒருமையின் பன்மையும் – ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும், – **பன்மையின் ஒருமையும்** – பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், – **ஓரிடம் பிறவிடம்** – ஓரிடத்திற் பிறவிடச்சொல்லையும், – **தழுவலும் உள** – தழுவிக் கூறுதல்களும் உளவாம். எ–று.

(வரலாறு)

பால் :–

(1) வெயிலெல்லா மறைத்தது மேகம் என்புழி, அஃறிணையிலே வெயிலென்னும் ஒருமைப்பாலில் எல்லாமென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. "அஃதைதந்தை யுண்ணல்யானை யடுபோர்ச் செழியர்" என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழியரென்னும் பன்மைச்சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத் தந்தையென விரியும். (அஃதையென்பது திக்கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணையாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமைகளில் விரவி நிற்பதோர் பொதுச்சொல்) தந்தையென்னு மொருமையிற் செழியரெனப் பன்மை வந்தது வழு, தனித்தனி ஒவ்வொருவராகக் கூடிச் செழியரென நின்ற பன்மையில், ஒவ்வொருவருந் தனித்தனி அஃதைக்குத் தந்தை போல்வராதலால், வழுவமைதியாயிற்று.

(2) இரண்டு கண்ணுஞ் சிவந்தது என்புழி, அஃறிணையிலே இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னும் ஒருமைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. "புலையனெறிந்த பூசற்றண்ணுமை – யேவலிளையர் தாய்வயிறு கரிப்ப" என்புழி, உயர்திணையிலே ஏவலிளையரென்னும் பன்மைப்பாலில் தாயென்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. (ஏவலிளையர் – போர்புரிவீரர்). ஏவலிளையர் தாய் ஏவலிளையருக்குத் தாயென விரியும். சேனை முழுமையுமுள்ள இளையருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால் இங்கே தாயென ஒருமை வருதல் வழு; இச்சேனையிலே திரண்டு நின்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால், வழுவமைதியாயிற்று.

இடம்;–

(1) சாத்தன்றாயிவை செய்வலோ என்புழி, யானெனச் சொல்லல் வேண்டுந் தன்மையிலே சாத்தன்றாய் எனப் படர்க்கைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. (சாத்தனுக்குத் தாயாயிக்கிற யான் என்பது பொருள்.)

(2) "திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்கலாகு, நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகு, மொண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா, வெம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்." என்புழித் தன்றம்பியை முன்னிலைப்படுத்து அவனையே

நோக்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்லல் வேண்டும் முன்னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச் சொற்சேர்த்துச் சொல்லப்பட்டது.

நீயோ வவனோ யாரிது செய்தார், யானோ வவனோ யாரிது செய்தார்; நீயோ வவனோ யானோ யாரிது செய்தார் என விரவி ஒரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– ஒருமையின் பன்மையும் – ஒருமைப்பாலில் பன்மைப்பாற் சொல்லையும், பன்மையின் ஒருமையும் – பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், ஓர் இடம் பிற இடம் – ஓரிடத்தில் பிற இடச் சொல்லையும், தழுவலும் – தழுவிக் கூறுதல்களும், உள–உள்ளனவாம். எ–று.

உ–ம்.:–

பால்:–

(1) 'வெயிலெல்லாம் மறைத்தது மேகம்' என்பதில், வெயில் என்னும் ஒருமைப்பாலில் எல்லாம் என்னும் பன்மைப்பாற் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. (வெயில் முழுவதையும் என்று கருத்து.) இது, ஒருமைப்பன்மை மயக்கம்.

(2) 'இரண்டு கண்ணும் சிவந்தது' என்பதில், இரண்டு என்னும் பன்மைப்பாலில் சிவந்தது என்னும் ஒருமைப்பாற் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. (தனித்தனி சிவந்தது என்ற கருத்து.) இது, பன்மையொருமை மயக்கம்.

இடம்: –

(1) 'சாத்தன் தாய் இவை செய்வேனோ' என்பதில், யான் எனச் சொல்லவேண்டும் தன்மையில் தாய் எனப் படர்க்கைச் சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது; 'சாத்தன் தாயாகிய யான்' என்பது பொருள். இது; தன்மைப் படர்க்கை.

(2) "எம்பியை யீங்குப்பெற்றேன்" என்பதில், தன்தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னை எனச் சொல்லவேண்டும் முன்னிலையில் எம்பியை எனப் படர்க்கைச்சொல் சேர்த்துச் சொல்லப்பட்டது. இது, முன்னிலைப் படர்க்கை.

'நீயோ அவனோ யார் இது செய்தார்', 'யானோ அவனோ யார் இது செய்தார்', 'நீயோ யானோ யார் இது செய்தார்', 'நீயோ அவனோ யானோ யார் இது செய்தார்', எனக் கலந்து ஓரிடத்தில் பிற இடம் வருதலும் கொள்க.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:– ஒருமையின் பன்மையும் – ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லையும், பன்மையின் ஒருமையும் – பன்மைப்பாலில் ஒருமைப்பாற் சொல்லையும், ஓரிடம் பிறவிடம் – ஓரிடத்தில் பிறவிடச் சொல்லையும், தழுவலும் உள – தழுவிக் கூறுதல்களும் உளவாம். எ–று.

பால்:

(1) 'வெயிலெல்லா மறைத்தது மேகம்' என்புழி, அஃறிணையிலே வெயிலென்னும் ஒருமைப்பாலில் எல்லாமென்னும் பன்மைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. "அஃதை தந்தை யண்ணல்யானை யடுபோர்ச் செழியர்" என்புழி, உயர்திணையிலே தந்தையென்னும் ஒருமைப்பாலிற் செழிய ரென்னும் பன்மைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. அஃதை தந்தை அஃதைக்குத் தந்தையென விரியும். (அஃதையென்பது திக்கற்றவன் திக்கற்றவள் திக்கற்றது என உயர்திணையாணொருமை பெண்ணொருமை அஃறிணை யொருமைகளில் விரவி நிற்பதொரு பொதுச்செயல்.)

(2) 'இரண்டுகண்ணுஞ் சிவந்தது' என்புழி, அஃறிணையிலே இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்ததென்னும் ஒருமைச்சொற் சேர்த்துச சொல்லப்பட்டது.

"புலையனெறிந்த பூசற் றண்ணுமை – யேவ லிவளயர் தாய்வயிறு கரிப்ப" என்புழி, உயர்திணையிலே ஏவலிளைய ரெனனும் பன்மைப்பாலில் தாயென்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. (ஏவலிளையர் – போர்புரி வீரர்.) ஏவலிளையர் தாய், ஏவலிளையருக்குத் தாயென விரியும். சேனைமுழுமையுமுள்ள இளையருக்குத் தாய் ஒருத்தியாதல் கூடாமையால், இங்கே தாயென ஒருமை வருதல் வழு; இச் சேனையிலே திரண்டு நின்ற இளையருள் ஒவ்வொருவருக்குந் தாயெனத் தனித்தனி சென்றியைதலால், வழுவமைதியாயிற்று.

இடம்:–

(1) "சாத்தன் தாய் இவை செய்வேனோ" என்புழி, யானெனச் சொல்லவேண்டும் தன்மையிலே சாத்தன்தாயெனப் படர்க்கைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது. சாத்தன்றாயாகிய யான் என்பது பொருள்.

(2) "திண்பொரு ளெய்த லாகுந் தெவ்வரைச் செகுக்க லாகு
நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையுநண்ண லாகு
மொண்பொரு ளாவ தையா வுடன்பிறப் பாக்க லாகா

வெம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரிய தெனறான்"

என்புழித், தன்தம்பியை முன்னிலைப்படுத்து அவனையே நோக்கிக் கூறுதலால், நின்னையெனச் சொல்ல வேண்டும் முன்னிலையில் எம்பியையெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டதுழு

நீயே வவனோ யாரிது செய்தார்; யானோ வவனோ யாரிது செய்தார்; நீயோ யானோ யாரிது செய்தார்; நீயோ வவனோ யானே யாரிது செய்தார் என விரவி ஓரிடத்திற் பிறவிடம் வருதலுங் கொள்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) ஒருமையின் – ஒருமைப்பாலில், **பன்மையும்** – பன்மைப்பாற் சொல்லையும், **பன்மையின்** – பன்மைப்பாலில், **ஒருமையும்** – ஒருமைப்பாற் சொல்லையும், **ஓரிடம்** – ஓரிடத்தில், **பிற இடம்**– பிறவிடச் சொல்லயும், **தழுவலும்** – தழுவிக் கூறுதலும், **உள** – உளவாம். (எ–று)

(பொ–ரை.) ஒருமைப்பாலின்கண் பன்மைச் சொல்லைத் தழுவிக் கூறுதலும், பன்மைப்பாலின்கண் ஒருமைச் சொல்லைத் தழுவிக் கூறுதலும், ஓரிடத்தின்கண் பிறவிடச் சொல்லைத் தழுவிக் கூறுதலும் உளவாம்.

(உ–ம்)

பால்.

(1) வெயிலெல்லா மறைத்தது மேகம்.

'உள்ளியதெல்லா முடனெய்தும்.'

அஃறிணை ஒருனையிற் பன்மை.

இங்கு, வெயில், உள்ளியது என்னும் ஒருமைச் சொற்களோடு எல்லாம் என்னும் பன்மைச் சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

(2) இரண்டு கண்ணுஞ் சிவந்தது.

'இருநோக்கிவளுண்க ணுள்ளது.'

அஃறிணைப் பன்மையிலொருமை.

இங்கு, இரண்டு கண், இருநோக்கு என்னும் பன்மைச் சொற்களோடு முறையே சிவந்தது, உள்ளது என ஒருமைச் சொற்கள் சேர்த்துக் கூறப்பட்டன.

(3) 'அஃதை தந்தை யண்ணல்யானை அடுபோர்ச் செழியர்.'

உயர்திணை ஒருமையிற் பன்மை.

இங்குத் தந்தை என்னும் ஒருமைச் சொல்லோடு செழியர்

என்னும் பன்மைச் சொல் சேர்க்கப்பட்டது. செழியர் ஒவ்வொரு வரும் தனித்தனி அஃதைக்குத் தந்தை போல்வாராதலின் வழுவமைதியாயிற்று.

(அஃதை – திக்கற்றவன், திக்கற்றவள், திக்கற்றது என உயர்திணை யாணொருமை, பெண்ணொருமை, அஃறிணை யொருமையிலும் விரவி நிற்பதோர் பொதுச்சொல்.)

(4) ஏவலிளையர் தாய்வயிறு கறிப்ப.

உயர்திணைப் பன்மையிலொருமை.

இங்கு, ஏவலிளையர் என்னும் பன்மைச் சொல்லோடு தாய் என்னும் ஒருமைச் சொல் சேர்த்துக் கூறப்பட்டது. சேனையிலுள்ள இளையர் ஒவ்வொருவருக்கும் தாய் எனத்தனித்தனி சென்றியைதலால் வழுவமைதி யாயிற்று.

இடம்.

(5) சாத்தன் தாயிவை செய்வலோ.

தன்மையிற் படர்க்கை.

இங்கு, யான் எனக் கூறவேண்டிய இடத்துச் சாத்தன் தாய் எனப் படர்க்கைச் சொல்லாற் கூறப்பட்டது.

(சாத்தன் தாயாகிய யான் என்பது பொருள்.)

(6) 'எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக்கரிய தென்றான்.'

முன்னிலையிற் படர்க்கை

இங்கு, தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால் நின்னை எனக் கூறவேண்டு மிடத்து எம்பியை எனப் படர்க்கைச்சொற் சேர்த்துக் கூறப்பட்டது.

(7) நீயோ அவனோ யாரிது செய்தார்.

யானோ அவனோ யாரிதுசெய்தார்.

நீயோ யானோ யாரிது செய்தார்.

நீயோ அவனோ யானோ யாரிது செய்தார்.

இடம் விரவி ஓரிடத்திற் பிறவிடம் வந்தது.

ஒருபாற் பொருளை மற்றொருபாற் சொல்லாலும், ஓரிடப்பொருளை மற்றோரிடச் சொல்லாலும் கூறுதலால் வழுவாய், அவை சான்றோர்க்கு ஒப்ப முடிதலால் அமைதியாயிற்று.

கா. நமச்சிவாய முதலியார்

ஒருமையின் – ஒருமைப் பாலில், **பன்மையும்** – பன்மைப்பாற் சொல்லையும், **பன்மையின்** – பன்மைப் பாலில், **ஒருமையும்** – ஒருமைப்பாற் சொல்லையும், **ஓரிடம்** – ஓரிடத்தில், **பிற இடம்** – பிறவிடச் சொல்லையும், **தழுவலும்** – தழுவிக் கூறுதலும், **உள** – உளவாம்.

உதாரணம்

1. வெயிலெல்லாம் மறைத்தது மேகம்; அஃறிணை ஒருமையில்
'உள்ளியதெல்லாம் உடனெய்தும்' பன்மை

இங்கு வெயில், உள்ளியது என்னும் ஒருமைச் சொற்களோடு எல்லாம் என்னும் பன்மைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது.

2. இரண்டுகண்ணுஞ் சிவந்தது அஃறிணைப் பன்மை
'இருநோக் கிவளுண்கண் உள்ளது' யில் ஒருமை.

இங்கு இருகண், இருநோக்கு என்னும் பன்மைச் சொற்களோடு முறையே சிவந்தது, உள்ளது என ஒருமைச் சொற்கள் சேர்த்துக் கூறப்பட்டன.

3. 'அஃதை தந்தை உயர்திணை ஒருமை
அண்ணல்யானை யடுபோர்ச்சோழர்' யிற் பன்மை

இங்குத் தந்தை என்னும் ஒருமைச்சொல்லோடு சோழர் என்னும் பன்மைச்சொல் சேர்க்கப்பட்டது. சோழர் ஒவ்வொருவரும் தனித்தனி அஃதைக்குத் தந்தைபோல் வாராதலின் வழுவமைதி யாயிற்று.

4. ஏவல் இளையர் தாய்வயிறு கரிப்ப – உயர்திணைப் பன்மையில் ஒருமை.

இங்கு, ஏவலிளையர் என்னும் பன்மைச்சொல்லோடு தாய் என்னும் ஒருமைச்சொல் சேர்த்துக் கூறப்பட்டது. சேனையிலுள்ள இளையர் ஒவ்வொருவருக்கும் தாய் எனத் தனித்தனி சென்றியைதலால் வழுவமைதியாயிற்று.

5. சாத்தன்தாய் இவை செய்வேனோ – தன்மையிற் படர்க்கை.

இங்கு, நான் எனக் கூறவேண்டிய விடத்துச் சாத்தன் தாய் எனப் படர்க்கைச் சொல்லாற் கூறப்பட்டது. சாத்தன் தாயாகிய நான் என்பது பொருள்.

6. நீ என் தம்பி – முன்னிலையிற் படர்க்கை.

இங்குத் தன் தம்பியை முன்னிலைப்படுத்தி அவனையே நோக்கிக் கூறுதலால், நீ என் தம்பியை எனக் கூறவேண்டுமிடத்துத் தம்பி எனப் படர்க்கைச்சொற் கூறப்பட்டது.

7. நீயோ அவனோ யாரிதுசெய்தார்
யானோ அவனோ யாரிதுசெய்தார் இடம் விரவி ஓரிடத்திற்

நீயோ யானோ யாரிதுசெய்தார் பிறவிடம் வந்தது.
நீயோ அவனோ யானோ யாரிதுசெய்தார்.

ஒருபாற் பொருளை மற்றொருபாற் சொல்லாலும், ஓர் இடப்பொருளை மற்றொரிடச் சொல்லாலுங் கூறுதலால் வழுவாம்; அவை, சான்றோர்க்கு ஒப்பமுடிதலால் அமைதியாயிற்று.

மோசகு பொன்னையா

ஒருமைப்பாலிற் பன்மைப்பாற் சொல்லும், பன்மைபாலில் ஒருமைப்பாற் சொல்லும், ஓரிடத்திற் பிறவிடச் சொல்லும் அமையக் கூறும் முறைமையும் உளவாம் எ–று.

எ–டு

பால்

1. உள்ளியதெல்லாம் உடனெய்தும்
–அஃறிணையில் ஒருமையில் பன்மை மயங்கிற்று
இருநோக் கிவளுண்க ணுள்ளது
–அஃறிணையில் பன்மையில் ஒருமை மயங்கிற்று
2. .... அஃதை தந்தை
அண்ணல் யானை அடுபோர்ச் செழியர்
–உயர்திணையில் ஒருமையில் பன்மை மயங்கிற்று
புலைய னெறிந்த பூசற் றண்ணுமை
யேவ லிளையர் தாய்வயிறு கரிக்கும்
–உயர்திணையில் பன்மையில் ஒருமை மயங்கிற்று

இடம்

1. சாத்தன் தாய் இவை செய்வேனோ?
–தன்மை இடத்தில் படர்க்கைச் சொல் மயங்கிற்று
2. எம்பியை யீங்கப் பெற்றேன்
–முன்னிலை இடத்தில் படர்க்கைச்சொல் மயங்கிற்று

3. நீயோ அவனோ யாரிது செய்தார்? இடம் விரவிப் பிறவிடச் சொற்கள் வந்தன.

380. தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை
எழுவாய் இளரண்டும் எஞ்சிய ஏற்கும்.

ṭaral varal kotai selal sārum patarkkai
eḷuvāy iraṇtu um eñsiya ēūkum

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

How to avoid errors as to person

(All the four verbs) 'taral', 'Varal', kodai and celal may be used in the 3rd person; but the first two may be used only with the 1st and 2nd persons.

ஒப்புமைப் பகுதி

செலவினும் வரவினும் தரவினும் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூவி டத்தும் உரிய என்ப

(தொல்.சொல்.: 28)

அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த

(தொல்.சொல்.:29)

ஏனை யிரண்டும் ஏனை யிடத்த

(தொல்.சொல்.:30)

தரல்வரல் கொடைசொல லெனவிவை நான்கு
மொருமூ விடத்திற்கு முரியவன் னவற்றுட்
டரல்வர றன்மைமுன் னிலையையு மேனைய
வேனை யிடத்தையு மெய்து மென்ப

(இ.வி.: 301)

வரல்தரல் மூவிடம் மருவுதற்கு உரிய
செலல்கொடை சேரும் படர்க்கை ஒன்றே

(தொ.வி.:122)

தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவாய் இரண்டும் எஞ்சிய வேற்கும்

(மு.வீ.:707)

மயிலை நாதர்

எ—ன், இடம் வழுவற்கவென வழுக் காத்தலுணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: இந்நான்கு சொல்லும் படர்க்கைக்கு ஆம்; தரல் வரலென்னு மிரண்டும் தன்மைக்கும் முன்னிலைக்கும் ஆம், எ—று.

வ—று.:—

அவர்க்கு ஆடைதந்தார் (தருதல்), அவர்க்கு ஆடைவந்தது (வருதல்), அவர்க்கு ஆடைகொடுத்தார் (கொடுத்தல்), அவர்க்கு ஆடை சென்றது (செலல்), "புனறரு பசுங்காய் தின்றதன் றப்பற்கு" (குறுந்.: 292) "குப்பை நெல்லின் முத்தூறு தந்த" (புறநா.24), "தூண்டில் வேட்டுவன் வாங்கவா ராது" (அகநா.36), "ஊடிய மடந்தை போல வுறுசிலை வாங்க வாராது" (சீவக.2185) எனவும், எனக்குஆடை தந்தார், எனக்குஆடை வந்தது எனவும், நினக்கு ஆடைதந்தார், நினக்கு ஆடைவந்தது எனவும் முறையே காண்க.

எனக்கு ஆடைகொடுத்தார், எனக்கு ஆடைசென்றது; நினக்கு ஆடை கொடுத்தார், நினக்கு ஆடைசென்றதெனவும் வருமாலோ வெனின், அவை [1]பராமுகமாகக் கருதியவிடத்து வருமென்க.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், இடம் வழுவற்க எனக் காத்தல் உணர்—ற்று.

இ—ள்.:— இந்நால்வகைச் சொற்களையும் படர்க்கை சாரும்; இவற்றுள் முதற்கண் நின்ற தரல் வரல் என்னும் இருவகைச் சொற்களையும் தன்மை முன்னிலைகள் ஏற்கும், எ—று.

தரல், வரல், கொடை, செலல் என்பன அப்பகுதிகளை உணர்த்தி நின்றன.

வ—று.:—

அவனுக்குத் தந்தான், அவன்பால் வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவன்பால் சென்றான் எனவும்; எனக்குத்

பாட வேறுபாடு:—

1.'பராமுகனாகக்கருதி' வருமென்க.

தந்தான், என்பால் வந்தான் எனவும்; நினக்குத் தந்தான், நின்பால் வந்தான் எனவும் வரும். இப்பகுதியில் பிறந்த ஏனை வினை விகற்பங்களோடும் தொழிற்பெயரோடும் இவ்வாறே ஒட்டுக.

இவை படர்க்கை, இவை தன்மை முன்னிலை என்னாது, 'சாரும்' 'ஏற்கும்' என்றமையான், இடவிகுதிகள் போல் இவை இடப் பகுதிகளாகாது அவ்விடங்கட்கு இயைந்த மரபினவாம் என்பதூஉம், தரல் வரல் என்னும் இரண்டனையும் தன்மை முன்னிலைக்கும் கூட்டினமையின் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலல் என்னுமிரண்டும் என்பதூஉம், ஏனைத் தரலும் வரலும் அத்துணைச்சிறப்பின அல்ல என்பதூஉம், இந்நெறி மயங்கி, 'எனக்குக் கொடுத்தான்', 'என்பால் சென்றான்', 'நினக்குக் கொடுத்தான்', 'நின்பால் சென்றான்' என வரின், முன்னர்க் கூறிய இடவழுவமைதியின்பாற்படும் என்பதூஉம் பெற்றாம். படர்க்கைக்குப் பின்னைய இரண்டும் சிறந்தும் முன்னைய இரண்டும் அத்துணைச் சிறப்பின்றியும் வருதல் காட்டிய உதாரணங்களுள் காண்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இடம் வழுவற்கவென வழுக்காத்தல் கூறுகின்றது.

இ–ள்.:– **தரல்வரல் கொடைசெலல்** – தரல் வரல் கொடை செலல் என்னும் இந்நான்கு சொல்லும், **சாரும் படர்க்கை** – படர்க்கை இடத்துக்கு உரித்தாம்; **எழுவாயிரண்டும்** – அந்நான்கு சொல்லின் எழுவாயில் நின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொல்லும், **எஞ்சிய வேற்கும்** – ஒழிந்த தன்மைப் பெயரும் முன்னிலைப் பெயரும் ஏற்கும், எ–று.

உ–ம்.:–

அவர்க்கு ஆடை சென்றது. செலல் எனப் படர்க்கைப் பெயர் ஏற்று வந்தது.

எனக்கு ஆடை தந்தார் – தரல்; எனக்கு ஆடை வந்தது – வரல்: நினக்கு ஆடை தந்தார், நினக்கு ஆடை வந்தது எனத் தன்மை முன்னிலை ஏற்றன.

எனக்கு ஆடை கொடுத்தார், எனக்கு ஆடை சென்றது, நினக்கு ஆடை கொடுத்தார், நினக்கு ஆடை செலுத்தினார் எனவும் வருமாலோவெனின் அவை பராமுகமாகக் கருதி வரும் என்க. அபிமுகமாகக் கருதி வாரா என்க.

விசாகப் பெருமாளையர்

இது, இடம் வழுவாமற் காத்தலுணர்த்துகின்றது.

இ—ள்.:— தரல் வரல் கொடை செலல்— தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை — படர்க்கையானது, சாரும் — அடையும், எழுவா யிரண்டும் — இவற்றுள் முதலிற் சொல்லப்பட்ட தரல் வரல் என்கிற விரண்டு சொற்களையும், எஞ்சிய — ஒழிந்த தன்மை முன்னிலைகள், ஏற்கும் — ஏற்று வரும், எ—று.

வ—று.:—

அவனுக்குத் தந்தான். அவனிடத்து வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவனிடத்துச் சென்றான் எனவும், எனக்குத் தந்தான். என்னிடத்து வந்தான் எனவும், உனக்குத் தந்தான், உன்னிடத்து வந்தான் எனவும் வரும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

படர்க்கைக்குரிய சில சொற்களுட் சில ஏனையிடத்தும் வருமெனக்கூறுஞ் சூத்திரம் யாது?

தரல்வரல் கொடைசெலல் சாரும் படர்க்கை
எழுவா யிரண்டு மெஞ்சிய வேற்கும்.

(தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்.)

இ—ள்.:— தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும் படர்க்கையடையும்; இவற்றுள் முதலிவேநின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொற்களையும் ஒழிந்த தன்மை முன்னிலைகள் எற்கும். எ—று.

தரல் வரல் கொடை செலலென்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்தி நின்றனவாதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்படங்களனைத்துங் கொள்க.

வ—று.:—

அவனுக்குத்தந்தான்; அவனிடத்துவந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவனிடத்துச்சென்றான். எனவும், எனக்குத்தந்தான்; என்னிடத்துவந்தான். எனவும், உனக்குத்தந்தான்; உன்னிடத்துவந்தான். எனவும் வரும்.

தரல் வரலென்னு மிரண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலலென்னுமிரண்டுமென்பதும், ஒழிந்த தரலும் வரலும் அத்துணைச் சிறப்பினவல்லவென்பதும் பெற்றாம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, இட வழாநிலையும் வழுவமைதியு முணர்த்திற்று.

இ–ள்.:– தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை – இந்த நான்கு சொற்களையும் படர்க்கை சாரும், எழுவாயிரண்டும் – இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னுமிருவகை சொற்களையும், எஞ்சியவேற்கும் – ஒழிந்த தன்மை முன்னிலைகளேற்கும், எ–று.

ஈங்கு – இங்கு முதலியன தன்மை முன்னிலைகட்கும், ஆங்கு – அங்கு முதலியனவும்; போதல் – புகுதல் முதலியனவும் படர்க்கைக்கும் உரியவெனவுங் கொள்க. தரல் வரல் முதலிய அந்த நான்கு சொற்களும் அந்தந்தப் பகுதிகளை யுணர்த்தி நின்றன. ஆதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்பங்களனைத்துங் கொள்க.

வ–று.:–

அவனுக்குத் தந்தான், அவன்பால் வந்தான், அவனுக்குக் கொடுத்தான், அவன்பாற் சென்றான் எனவும்; எனக்குத் தந்தான், என்பால் வந்தான் எனவும்; நினக்குத் தந்தான், நின்பால் வந்தான் எனவும்; ஈங்கு வந்தான் தந்தான்; ஆங்குச்சென்றான், போயினான் புக்கான் எனவும் வரும், சாரும் ஏற்கும் எனப் பராமுகமாகச் சொன்னதினாலே, தரல் வரலிரண்டும், தன்மை முன்னிலைக்கும், கொடை செலல் இரண்டும் படர்க்கைக்கும் வழாநிலையெனவும், தரல்வரலிரண்டும் படர்க்கைக்கும் கொடைசெலவிரண்டுந் தன்மை முன்னிலைக்கும் – வழுவமைதி யெனவுங் கொள்க.

வழுவமைதிக்கு உதாரணம்:– 'பெருவிறல் அமரர்க்கு வென்றிதந்த', 'புனல்தரு பசுங்காய் தின்ற கன்று' எனத் தரலும், 'தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது', 'வருவிருந்து பார்த்திருப்பான்' என வரலுந் தன்மை முன்னிலைகளுக்குரிய வன்றிப் படர்க்கையிடத்து வந்தன. 'வையத்தும் வானத்துஞ் செல்லா தணங்காகி யைத்து நின்ற தரா' என்பதில் ஈங்கென்பதுபட நின்ற வையத்து ஆங்கென்பதற்குரிய செலல் வந்தது. இன்னுந் தரல் வரல் படர்க்கையிடத்து வந்த வழுவமைதிக்கு மேற்காட்டிய உதாரணத்துள்ளுங் காண்க. எனக்குக் கொடுத்தான், என்பாற்சென்றான் நினக்குக் கொடுத்தான், நின்பாற்சென்றான் எனப் படர்க்கைக்குரிய கொடை செலல். தன்மை முன்னிலைகளில் வந்தன. பிறவுங் காண்க. இனி ஆசிரியர் தொல்காப்பியனார்,

"செலவினும் வரலினுந் தரலினுங் கொடையினு
நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந்
தன்மை முன்னிலை படர்க்கை யென்னு
மம்மூ விடத்து முரிய வென்ப"

எனவும்,

"அவற்றுட்
டருசொல் வருசொல் லாயிரு கிளவியுந்
தன்மை முன்னிலை யாயி ரிடத்த"

எனவும்,

"ஏனையிரண்டும் படர்க்கையிடத்த"

எனவும் கூறுதல் காண்க. படர்க்கைசாரும்; எஞ்சிய ஏற்கும் – என விருமுடிபாக முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– தரல் வரல் கொடை செலல் – தரல் முதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை –, சாரும் – அடையும்; எழுவாய் இரண்டும் – (இவற்றுள்) முதலில் நின்ற 'தரல்வரல்' என்னு மிரண்டு சொற்களையும், எஞ்சிய – ஒழிந்த தன்மை முன்னிலைகள், ஏற்கும்–.

குறிப்பு :– தரல் முதலியன – அந்தந்தப் பகுதிகளை உணர்த்தி நின்றனவாதலால், அப்பகுதிகளாற்பிறக்கும் வினைகளையெல்லாங் கொள்க.

உதாரணம்

அவனுக்குத்தந்தான் அவனிடத்துவந்தான்	அவனுக்குக்கொடுத்தான் அவனிடத்துச்சென்றான்	நான்கையும் படர்க்கைசார்ந்தன.
எனக்குத்தந்தான் என்னிடம்வந்தான்	உனக்குத்தந்தான் உன்னிடம்வந்தான்	முதலிரண்டையும் மற்றவையேற்றன.

'தரல், வரல்' என்னுமிரண்டையும் தன்மை முன்னிலைகட்குங் கூட்டியதால், ஏனைக்'கொடை', 'செலல்' என்னுமிரண்டும் படர்க்கைக்கே சிறந்தன வென்பதும், தரலும் வரலும் படர்க்கைக்கு அத்துணைச் சிறப்பின வல்லவென்பதும், கொடையும்செலலும் தன்மை முன்னிலைகளில் வாரா வென்பதும் பெறப்பட்டன. இதனை, "அவற்றுள் – தருசொல் வருசொல் லாயிருகிளவியும் – தன்மை முன்னிலையாயிரிடத்த' எனவும், "ஏனை யிரண்டு மேனையிடத்த" எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியதனாலுமுணர்க.

இவை சிறுபான்மை இம்முறைதவறி, 'எனக்குக் கொடுத்தான்', 'நின்பாற்சென்றான்' என மாறிவருதலுமுண்டு; அவை முன்கூறிய இடவழு வமைதியின் பாற்படும்.

வினைச்சொல், பால்காட்டும் விகுதியால் மூன்றிடங்கட்கும் உரிய தாம் என்பதை வினையியலுட்கூறி, 'தரல்' முதலிய நான்கின் பகுதிகளே இடங்குறித்து நிற்றலால் அங்கு அடங்காமைபற்றி இங்குக் கூறினார் என்க. 'ஈங்கு' முதலியன

தன்மையிலும், 'ஆங்கு' முதலியன படர்க்கையிலும் வருதலையும் இங்கே கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– தரல் வரல் கொடை. செலல் படர்க்கைசாரும் – தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும் படர்க்கை யடையும், **எழுவாய் இரண்டும் எஞ்சிய ஏற்கும்** – இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொற்களையும் ஒழிந்த தன்மை முன்னிலைகள் ஏற்கும், எ–று.

தரல் வரல் கொடை செலல் என்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்தி நின்றனவாதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினை விகற்பங்களனைத்துங் கொள்க.

வ–று.:–

'அவனுக்குத் தந்தான்'; 'அவனிடத்து வந்தான்'; 'அவனுக்குக் கொடுத்தான்'; 'அவனிடத்துச் சென்றான்' எனவும்; 'எனக்குத் தந்தான்'; 'என்னிடத்து வந்தான்' எனவும்; 'உனக்குத் தந்தான்', 'உன்னிடத்து வந்தான்' எனவும் வரும்.

தரல் வரலென்னு மிரண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலலென்னு மிரண்டுமென்பதும், ஒழிந்த தரலும் வரலும் அத்துணைச் சிறப்பின வல்லவென்பதும் பெற்றாம்.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– தரல் வரல் கொடை செலல் படர்க்கை சாரும் – தரல் முதலிய இந்நான்கு சொற்களும் படர்க்கையிடத்தை யடையும், – **எழுவாய் இரண்டும்** – இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னு மிரண்டு சொற்களும், – **எஞ்சிய ஏற்கும்** – ஒழிந்த தன்மை முன்னிலைகளை ஏற்கும். எ–று.

படர்க்கை, எஞ்சிய என்னுமிரண்டையும் எழுவாயாகவும், ஏனையவற்றைச் செயப்படுபொருளாகவும் வைத்துரை கொள்ளுதலு முண்டு.

தரல் வரல் கொடை செலல் என்பன அவ்வப் பகுதிகளை யுணர்த்தி நின்றனவாதலின் அப்பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்பங்களெல்லாங் கொள்க.

வ–று.:–

அவனுக்குத் தந்தான்; அவனிடத்து வந்தான்; அவனுக்குக் கொடுத்தான்; அவனிடத்துச் சென்றான் எனவும் எனக்குத் தந்தான்; என்னிடத்து வந்தான் எனவும். உனக்குத் தந்தான்;

உன்னிடத்து வந்தான் எனவும் வரும்.

தரல் வரல் என்னு மிரண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலல் என்னுமிரண்டு மென்பதும், ஒழிந்த தரலும் வரலும் படர்க்கைக்கு அத்துணைச் சிறப்பின வல்லவென்பதும் பெற்றாம்.

(சூ). 'செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினு, நிலைபெறத் தோன்று மந்நாற் சொல்லுந், தன்மை முன்னிலை படர்க்கை யென்னு, மம்மூவிடத்து முரிய வென்ப,' எனவும் "அவற்றுள், தருசொல் வருசொல் லாயிரு கிளவியுந், தன்மை முன்னிலை யாயீரிடத்த" எனவும் 'ஏனையிரண்டும் படர்க்கையிடத்த', எனவும் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– தரல் வரல் கொடை செலல் – இந்நான்கு சொற்களும், படர்க்கை – படர்க்கையை, சாரும் – அடையும்; எழுவாய் இரண்டும் – (இவற்றுள்) முதலில் நின்ற (தரல் வரல் என்னும்) இரண்டு சொற்களும், எஞ்சிய ஏற்கும் – ஒழிந்த தன்மை முன்னிலைகளையும் ஏற்கும்; எ–று. இங்கே, 'எழுவாய்' என்னும் சொல், முதலென்னும் பொருளது.

தரல் முதலியன அந்தந்தப் பகுதிகளை உணர்த்தி நின்றன வாதலால், அப்பகுதிகளாற் பிறக்கும் வினைகளையெல்லாம் கொள்க.

உ–ம்.:–

அவனுக்குத் தந்தான் அவனிடத்து வந்தான் – அவனுக்குக் கொடுத்தான் அவனிடத்துச் சென்றான் – நான்கும் படர்க்கையைச் சார்ந்தன.

எனக்குத் தந்தான், உனக்குத் தந்தான், என்னிடத்து வந்தான், உன்னிடத்து வந்தான் – முதலிரண்டும் மற்றவைகளை ஏற்றன.

தரல் வரல் என்னும் இரண்டையும் தன்மை முன்னிலைகளுக்கும் கூட்டியதனால், படர்க்கைக்கே சிறந்தன. கொடை செலல் என்னும் இரண்டும் என்பதும், மற்றைத் தரலும் வரலும் படர்க்கைக்கு அவ்வளவாகச் சிறந்தனவல்ல என்பதும், கொடை செலல்கள் தன்மை முன்னிலைகளுக்கு வாரா என்பதும் பெறப்படும் இது, பெரும்பான்மை பற்றிய மரபு வழக்கு.

இவை, சிறுபான்மை இம்முறை தவறி எனக்குக் கொடுத்தான், நின்பால் சென்றான் என மாறி வருதலும் உண்டு; அவை முன்கூறிய இடவழுவமைதியின்பாற்படும்.

வினைச்சொல் பால்குறிக்கும் விகுதியால் மூன்றிடங்களுக்கும் உரியதாதலை வினையியலிற்கூறி, தரல் முதலிய நான்கும் பகுதிதானே இடங்குறித்து நிற்றலால், இங்குக் கூறினார், அவற்றுள் அடங்காமையின்.

'ஈங்கு' முதலியன தன்மையிலும், 'ஆங்கு' முதலியன படர்க்கையிலும் வருதலையும் இங்கே அமைத்துக்கொள்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: தரல் வரல் கொடை செலல் – தரல் என்பது முதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை சாரும் – படர்க்கை யடையும். எழுவாய் இரண்டும் – இவற்றுள் முதலிலே நின்ற தரல் வரல் என்னும் இரண்டு சொற்களையும், எஞ்சிய ஏற்கும் – ஒழிந்த தன்மைமுன்னிலைகள் ஏற்கும். எ–று.

தரல் வரல் கொடை செலலென்பன அவ்வப்பகுதிகளை யுணர்த்தி நின்றனவாதலால், அப் பகுதிகளாற் பிறக்கும் வினைவிகற்பங்களனைத்துங் கொள்க.

(உ–ம்.)

அவனுக்குத் தந்தான்; அவனிடத்து வந்தான்; அவனுக்குக் கொடுத்தான், அவனிடத்துச் சென்றான். எனக்குத் தந்தான்; என்னிடத்து வந்தான். உனக்குத்தந்தான்; உன்னிடத்து வந்தான்.

தரல் வரலென்னுமிர்ண்டையுந் தன்மை முன்னிலைக்குங் கூட்டினமையாற் படர்க்கைக்கே சிறந்தன கொடை செலலென்னு மிரண்டுமென்பதும், ஒழிந்த வரலும் அத்துணைச் சிறப்பின வல்ல வென்பதும் பெற்றாம்.

கா. நமச்சிவாய முதலியார்

தரல் வரல் கொடை செலல் – தரல் வரல் கொடை செலல் ஆகிய நான்கு சொற்களையும், படர்க்கை – படர்க்கையானது, சாரும் – அடையும்; எழுவாய் இரண்டும் – இவற்றுள் முதலிற் சொல்லப்பட்ட தரல் வரல் என்னும் இரண்டு சொற்களையும், எஞ்சிய – ஒழிந்த தன்மை முன்னிலைகள், ஏற்கும் – ஏற்றுவரும்.

உதாரணம்

அவனுக்குத் தந்தான்
அவனிடத்து வந்தான் – படர்க்கை

அவனுக்குக் கொடுத்தான்
அவனிடத்துச் சென்றான்

எனக்குத் தந்தான்
என்னிடத்து வந்தான் – தன்மை.

உனக்குத் தந்தான்
உன்னிடத்து வந்தான் – முன்னிலை.

தால், வரல், கொடை, செலல் என்பன அவ்வப் பகுதிகளை உணர்த்தி நின்றன ஆதலால், அவ்வப் பகுதிகளினின்றும் பிறக்கம் வினைவிகற்பங்க ளனைத்தும் கொள்க.

எனவே – தரல், வரல் இரண்டும் தன்மை முன்னிலைக்கும்; கொடை, செலல் இரண்டும் படர்க்கைக்கும் வரின் வழாநிலை; தரல், வரல் இரண்டும் படர்க்கைக்கும், கொடை, செலல் இரண்டும் தன்மை முன்னிலைகளுக்கும் வரின் வழுவமைதி எனக் கொள்க.

வழுவமைதிக்கு உதாரணம் :

'பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த'
'வருவிருந்து பார்த்திருப்பான்'

எனத் தரலும், வரலும் தன்மை முன்னிலைகளுக்கு உரியவன்றிப் படர்க்கையிடத்தும் வந்தன.

இன்னும் , தரல், வரல் படர்க்கை யிடத்து வந்த வழுவமைதிக்கு, மேற் காட்டிய உதாரணங்களுள்ளும் காண்க.

எனக்குக் கொடுத்தான், என்பாற் சென்றான்; நினக்குக் கொடுத்தான், நின்பாற் சென்றான்.

எனப் படர்க்கைக்குரிய கொடை, செலல், தன்மை முன்னிலைகளில் வந்தன.

மோசகு பொன்னையா

தா, வா, கொடு, செல், என்னும் நான்கு சொற்களும் படர்க்கை இடத்தன; அவற்றுள் முதற்கண் நின்ற தா, வா என்னும் இரண்டு சொற்களும் தன்மை முன்னிலையாய இடங்களுக்கும் உரியனவாம் எ–று.

எ–டு

1.அவனுக்குத் தந்தான்

அவனிடத்து வந்தான்

அவனுக்குக் கொடுத்தான்

அவனிடத்துச் சென்றான் நான்கும் படர்க்கை இடத்துக்கு உரியவாயின

2.எனக்குத் தந்தான்

உனக்குத் தந்தான்

என்னிடத்து வந்தான்

உன்னிடத்து வந்தான் எழுவாய் இரண்டும் தன்மை முன்னிலைகளுக்கும் உரியவாயின

தொல்காப்பியர்,

செலவினும் வரவினுந் தரவினுங் கொடையினும்
நிலைபெறத் தோன்றும் அந்நாற் சொல்லும்
தன்மை முன்னிலை படர்க்கை என்னும்
அம்மூ விடத்தும் உரிய என்ப,

எனவும்,

அவற்றுள்
தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
தன்மை முன்னிலை ஆயீ ரிடத்த,

எனவும்,

ஏனை யிரண்டும் ஏனை யிடத்த,

எனவும் கூறியுள்ளவற்றைச் சிறிது மாற்றி இவ்வாசிரியர் இந்நூற்பாவை அமைத்தார்.

(30)

381. இறப் [1]பெதிர்வு நிகழ்வெனக் கால மூன்றே.

இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் மூன்றே.

iūappu eṭirvu nikaḷvu eṉa kālam mūṉūu ē

பாட வேறுபாடு:–

1. (1) எதிர்நிகழ்வென,

(2) எதிர்புநிகழ்வென'

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Tenses

The Tenses are three, viz., the past, present and future.

ஒப்புமைப் பகுதி

காலந் தாமே மூன்றென மொழிப

(தொல்.சொல்.:199)

இறப்பி னிகழ்வின் எதிர்வின் என்றா
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளும்
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே

(தொல்.சொல்.:200)

இறப்பு நிகழ்வெதிர்வாங் காலங்கள்......

(நேமி.:63:1)

வினைக்கிட நீரது கால மதுதா
னிறப்புநிகழ் பெதிர்பென் றொருமூ வகைத்தே

(இ.வி.:302)

காலந் தாமே மூன்றென மொழிப

(மு.வீ.:595)

இறப்பு நிகழ்வு மெதிர்வு மென்று
சொலப்படு மூன்று காலமும்.......

(மு.வீ.:596)

தரும் இறப்பு நிகழ்வெதிர்வி லெதிர்வுமுக் காலமும்....

(சுவாமி.:59:2)

மயிலை நாதர்

எ—ன், காலவழுவமைப்பான் எடுத்துக் கொண்டார், இது காலக் கூறுபாடு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: போனதுவும் வருவதுவும் நிகழ்வதுவுமென்று காலம் மூன்று வகைப்படும், எ—று.

இறப்பு நிகழ்வு எதிர்வென முறையிற் கூறாராயது, காலமென ஒரு பொருளில்லை யென்பாரும், நிகழ்காலமொன்றுமே என்பாரும், இறந்ததூஉம் எதிர்வதூஉமென இரண்டென் பாரும், இறப்பு நிகழ்வு எதிர்வென மூன்றென்பாருமான இப்பகுதியார், ஆசிரியர். அவருள், காலம் இல்லை யென்பார், ஒருபொருள் நிகழுமிடத்துப் பொருண்மைப் பேறல்லது

காலமென்று வேற்றுணர்வும் பிறவும் படுவதில்லையென்ப. இனி, காலம் ஒன்றென்பார், யாறொழுகும், மலைநிற்குமென உள்பொருள் ஒரு காலத்தானே சொல்லப்படும், பிறிதில்லை யென்ப. இறப்பும் எதிர்வுமென இரண்டென்பார், கோலோடுங் காற் சென்றதூஉம் செல்வதூஉமன்றே? அதனால், நிகழ் வில்லையென்ப. மூன்றென்பார், நெருநல், இன்று, நாளை எனவும் வந்தான்; வாராநின்றான், வருவான் எனவும் இவ்வாறு சொற்கள் மூன்று காலமும் காட்டுதலின் மூன்றென்ப. இவ் விகற்பமெல்லாம் அறிவித்தற்கு இவ்வாறு சூத்திரஞ் செய்தாரெனக் கொள்க.

ஏகாரத்தான் மூன்றென்பதே ஈண்டுப் பொருளெனக் கொள்க.

"உலக வழக்கமு மொருமுக் காலமு
நிலைபெற வுணர்தரு முது [1]மறை நெறியான்"

என்றார், அகத்தியனார்.

சங்கர சமச்சிவாயர்

எ–னின், முன்னர் வழு உணர்த்தும் சூத்திரத்துள் முதற்கண் நின்ற திணை பால் இடங்களின் பெயரும் முறையும் தொகையும் பெயரியலுள் போந்தமையின் அவற்றை ஒழித்து, இறுதிக்கண் நின்ற காலம் முதல் நான்கினையும் உணர்த்தினல்லது அவற்றின் வழுவும் வழாநிலையும் வழுவமைதியும் தோன்றாமையின் அவற்றுள் காலத்தின் பெயரும் முறையும் தொகையும், உணர்–ற்று.

பிறிதோர் இலக்கணம் கூறியமுகத்தான் முன்னர் விளங்கிக் கிடந்த கால விகற்பங்களை ஈண்டுத் தொகுத்து உணர்த்தினமையின் இது முடிந்தது முடித்தல் என்னும் உத்திக்கு இனம்.

இ–ள்.:- முன்னர்க் கூறிய காலம் இறந்த காலமும் எதிர்காலமும் நிகழ்காலமும் என மூன்றாம், எ–று.

யாதொரு பொருளும் தோன்றுமளவின் தோன்றி வளருமளவின் வளர்ந்து முதிருமளவின் முதிர்ந்து அழியுமளவின் அழியுமன்றி உயிர்கள் வேண்டியவாறு ஆகாமையின் அவற்றை அவ்வளவின் அவ்வாறு இயற்றுவது காலம் எனவும், அதனாலியலும் பொருள்களின் தொழில் இறந்ததும் எதிர்வதும்

பாட வேறுபாடு:–

1. முறை

நிகழ்வதும் ஆதலின் அவ்வாறு இயற்றும் காலமும் மூன்று கூற்றதாம் எனவும் உய்த்துணர்தலின், இங்ஙனம் உணராது, காலம் இன்று எனவும், நிகழ்காலம் ஒன்றுமே எனவும், இறந்தகாலம் எதிர்காலம் இரண்டுமே எனவும் கூறுவார் கூற்றை விலக்கிக் காலம் மூன்றே என்றார். இதன் திறம் இன்னும் விரித்துரைப்பின் பெருகும்.

நிகழ்காலம்போல வெள்ளிடைப்பொருளன்றி இறந்தகாலம் எதிர்காலம் இரண்டும் மறைபொருளாய் நிற்றலின் இறப்பு நிகழ்வு என்னாது இறப்பு எதிர்வு என்றார்.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், காலவழு அமைப்பான் எடுத்துக்கொண்டார்; இது காலக் கூறுபாடு கூறுகின்றது.

இ–ள்.: இறப்பெதிர்வு நிகழ்பெனக் – போனதுவும் வருவதுவும் நிகழ்வதும் எனக், **கால மூன்றே** – காலம் மூன்று வகைப்படும், எ–று.

அரும்பதவுரை:–

இறப்பு, நிகழ்பு, எதிர்பு என முறையில் கூறாமையான் காலமென ஒரு பொருள் இல்லை என்பாரும், நிகழ்காலம் ஒன்றுமே என்பாரும் இறப்பும் எதிர்வும் என இரண்டு என்பாரும் உளர் என்பது அறிவித்தற்கு என்க. காலமென ஒரு பொருள் இல்லை என்பார் ஒரு பொருள் நிகழுமிடத்துப் பொருண்மைப் பேறல்லது காலமென வேற்றுணர்வு பெறப்படுவதில்லை என்பர். காலம் ஒன்றே என்பார் ஆறு ஒழுகும், மலை நிற்கும், தீச் சுடும், தண்ணீர் குளிரும், காற்று அசையும் என ஒரு காலத்தானே. இப்பொருள் சொல்லப்படும்; பிறிதில்லை என்பர். இறப்பும் எதிர்வுமென இரண்டு என்பார் விரைகெடும், முளை வரும்; முளை கெடும், கொழுந்து வரும்; கொழுந்து கெடும், தளிர் வரும்; தளிர் கெடும், இலை வரும்; இலை கெடும், பழுப்பு வரும்; பழுப்பு கெடும், சருகு வரும்; இவ்விரண்டுமன்றி அதனால் நிகழ்காலம் இல்லை என்பார். காலம் மூன்றாவது நெருநல், இன்று, நாளை, முன், இப்போது, இனி வந்தான், வருகின்றான், வருவான் என வரும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முக்காலமு மிவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

இறப்பெதிர்வு நிகர்வெனக் கால முன்றே.

(இறப்பு எதிர்வு நிகழ்வு எனக் காலம் முன்றே.)

இ–ள்.: முன்சொல்லப்பட்ட காலம் இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலமுமென மூன்றாம். எ–று.

காலமாவது யாது?

தொழில்நிகழ்ச்சிக்கு இடமாதற்றன்மையையுடையது காலமாம்.

இறந்தகாலமாவது யாது?

தொழிலினது கழிவுணர்த்துவது.

எதிர்காலமாவது யாது?

தொழில் பிறவாமையுணர்த்துவது.

நிகர்காலமாவது யாது?

தொழில் முற்றுப்பெறாதநிலை யுணர்த்துவது.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– காலம் – (முன்சொல்லப்பட்ட) காலம், இறப்பு – இறந்த காலமும், எதிர்வு – எதிர்காலமும், நிகழ்வு – நிகழ்காலமும், என –என்று, மூன்று – மூன்றாம்.

குறிப்பு :–

தொழிலினது நிகழ்ச்சிக்கு இடமாயிருப்பதுகாலம். இறந்தகாலம் – தொழிலின் கழிவைப்பற்றியது. நிகழ்காலம் – தொழில் தொடங்கப்பட்டு முடிவுபெறாத நிலைமையைப் பற்றியது. எதிர்காலம் – தொழில் பிறவாமையைப் பற்றியது.

கீழ், "திணையேபாலிடம்பொழுது" என்றோதிய முறைப்படிக் காலவழுவமைதி கூறவந்தவர் 'காலம் இவ்வளவினது' என்று கூறிக்கொண்டார். நிகழ்காலம்போல வெளிப்படைப் பொருளன்றி, இறந்தகால மெதிர் கால மிரண்டும் மறைபொருளாய்நிற்றலின் 'இறப்பு நிகழ்வு எதிர்வு' என்னாது முறைபிறழ நிகழ்வை இறுதியில்வைத்தார். வேறொன்றி னிலக்கணங் கூறவந்தவிடத்து, விளங்கிக்கிடந்த காலவிகற்பங்களைத் தொகுத்துச் சொல்லியது முடிந்தது முடித்தல் என்னு முத்தி.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: காலம் – முன்சொல்லப்பட்ட காலம், இறப்பு எதிர்வு நிகழ்வு என மூன்று – இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ் காலமுமென மூன்றாம், எ–று.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள். காலம் – முன் சொல்லப்பட்ட காலம், – இறப்பு எதிர்வு நிகழ்வு என மூன்று – இறந்த காலமும் எதிர்காலமும் நிகழ்காலமுமென மூன்றாம். எ—று.

காலங்களின் பரத்துவாபரத்துவங்களை நோக்கி முறைப்படி அடுக்க வேண்டுமாயின் 'இறப்பு நிகழ்வெதிர்வெனக் காலமூன்றே' என்னப்படும். (ஈண்டுப் பரத்துவம் – முன்மை, அபரத்துவம் – பின்மை). வினையியலில் வருஞ் சூத்திரத்தில் 'ஐந்தொன்றாறு முக்காலமு முறைதரும்', என்றதற்கு முதலைந்து வகைவினை யெச்சங்களும் இறந்த காலத்தையும், அவற்றின் பின்னதாகிய செயவென்னும் வினையெச்சம் நிகழ்காலத்தையும், பின்னுள்ள ஆறுவகை வினையெச்சங்கள் எதிர்காலத்தையும் உணர்த்தும் என்பது பொருளாதலின் முறைதரும் என்பதற்கியைய 'இறப்பு நிகழ்வெதிர்வென' அடுக்குதலே பெரிதும் உபயோகமாம். காலமுறையை விவேகிகள் ஆராய்ந்து, கொள்ளத் தகுவதெதுவோ அதனைக் கொள்ளுக. இறப்பு நிகழ்வு எதிர்வு மூன்றும் ஒன்றுக்கொன்று எதிராயினும் இறப்பிற்கு மிக்க எதிர்வு பற்றியும் பூதபவிஷ்ய வர்த்தமானமென்று கூறும் வடநூல் வழக்குப் பற்றியும், நிகழ்காலம்போல வெளிப்படைப் பொருளன்றி இறந்தகால மெதிர்கால மிரண்டும் மறைபொருளாய் நிற்றலால் அவ்வொப்புமைபற்றி (முன்னர்க்கூறக்கடவதாகிய) இறந்தகாலத்தொடு சேர்த்தலும் எதிர்கால மிடைப்படுத்திக் கூறப்பட்டதன்றி 'முக்காலமுமுறைதரும்' என்னுமுறை எதிர்காலமிடைப்படுத்திய முறையென்று கருதினால் அவ்வினையெச்சங்களுக்குக் காலநியதி மிக்க விபரீதமா மென்று வித்தியார்த்திகளுய்த்துணர்ந்து விபரீதக்கருத்தை விலக்குக. (பூதம் – இறப்பு; பவிஷ்யம் – எதிர்வு; வர்த்தமானம் – நிகழ்வு) வடமொழியிற் பூதகாலமும், பவிஷ்யகாலமும் பலவகைப்படும். அவற்றை ஈண்டுவிரிப்பிற் பெருகும். அப்பலவகையுடைமை பற்றியும் வடநூலிற் பூதப விஷ்யங்களென்று முறை கூறப்பட்டனபோலும்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: காலம் – (முன்சொல்லப்பட்ட) காலம், இறப்பு – இறந்த காலமும், எதிர்வு – எதிர்காலமும், நிகழ்வு – நிகழ்காலமும், என – என்று, மூன்று – மூன்றாம், எ—று.

இறப்பு – நடந்தது. எதிர்வு – நடக்கப் போகிறது. நிகழ்வு – நடக்கிறது. நிகழ்காலச்சொல் மற்றைய காலங்களுக்கும் உரியதாகுந் தன்மையைக் கருதி, அதனை இறுதியில் வைத்தன ரென்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: காலம் – முன் சொல்லப்பட்ட காலம், இறப்பு எதிர்வு நிகழ்வு என மூன்று – இறந்தகாலம் எதிர்காலம் நிகழ்காலமென மூன்றாம். எ–று.

இறப்பாவது தொழிலது கழிவு.

நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாமை.

எதிர்வாவது தொழில் பிறவாமை.

மற்றோர் இலக்கணம் கூறப்புக்கவிடத்து விளங்கிக்கிடந்த கால விகற்பங்களை இங்கே தொகுத்துச் சொன்னதினாலே இது 'முடிந்ததுமுடித்தல்' என்னும் உத்தி.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) இறப்பு – இறந்தகாலமும், எதிர்வு – எதிர்காலமும், நிகழ்வு – நிதழ்காலமும், என காலம் மூன்று – என்று காலமானது மூன்றாம். (எ–று)

(பொ–ரை.) முன்னர்க் கூறிய காலம் இறந்தகாலமும், எதிர் காலமும், நிகழ்காலமும் என மூன்றாம்.

இறப்பு – நடந்தது, எதிர்வு – நடக்கப்போகிறது, நிகழ்வு – நடக்கிறது.

நிகழ்காலச் சொல் மற்றைக் காலங்களுக்கும் உரியதாகுந் தன்மையைக் கருதி, அதனை இறுதியிற் கூறினரென்க.

கா. நமச்சிவாய முதலியார்

இறப்பு – இறந்தகாலமும், எதிர்வு – எதிர்காலமும், நிகழ்வு – நிகழ்காலமும், என – என்று, காலம் –காலமானது, மூன்று – மூன்றாகும்.

மோசசு பொன்னையா

முன்னர்ச் சொல்லப்பட்ட5 காலமானது இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகையதாம் எ–று.

முன்னர் இடைநிலை யுணர்த்துங்கால்6 விளங்கக் கூறியுள்ள காலத்தை முடிந்தது முடித்தலாக ஈண்டுங் கூறுவாராயினர் என்க. காலம் பற்றிய விளக்கம் முன்னர் உரைக்கப்பட்டது'7 ஆண்டுக் காண்க

382. முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

முக் காலத்தினும் ஒத்து இயல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத்தான் ஏ.

mu kālaṭṭin um oṭṭu iyal poruḷ ai
seppuvar nikaḷum kālaṭṭu ān ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Interchanges of tenses

The learned employ the present tense to indicate what is applicable to all three Tenses.

ஒப்புமைப் பகுதி

முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்

(தொல்.சொல்.:240)

முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே

(இ.வி.:303)

முக்கா லத்தினும் ஒத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே

(மு.வீ.:634)

தழுவுமுக் காலப்பொருளு நிகழ்ச்சியினுந் தோன்றும்

(சுவாமி.:59:2)

மயிலைநாதர்

எ—ன், காலவழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— முக்காலத்தினும் ஒரு தன்மையவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலச் சொல்லானே சொல்லுவர், தொல்லாசிரியர் எ—று.

வ–று.:–

யாறொழுகும், மலைநிற்கும், நிலம் கிடக்கும், [1]நீர்குளிரும், [2]தீச்சுடும், வளியுளரும் என வரும். பண்டும், இன்றும், மேலுமென முக்காலப் பொதுவாக்குக. பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், காலவழுவமைப்பு உணர்–ற்று.

இ–ள்.:– தம்தொழில் இடையறாது முக்காலத்தினும் ஒரு தன்மையவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தால் கூறுவர் புலவர், எ–று.

வ–று.:–

அவனியைத் தாங்கி அரசர் இருக்கிறார், நினக்குத் துணை யான் இருக்கிறேன், எனக்குத் துணை நீ இருக்கிறாய், தெய்வம் இருக்கிறது, நிலம் கிடக்கிறது, மலை நிற்கிறது, யாறு ஒழுகுகிறது என வரும்.

இதற்குச் செய்யும் என்னும் முற்றை உதாரணம் காட்டுவாரும் உளர். அது பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையாக வரும் முக்காலத்தினும் ஒத்தியல்பொருட்கு இயையாமையானும் அவ் வழக்கின்மையானும் அது பொருந்தாது என்க. யாறு ஒழுகும், தீச்சுடும் என வழங்குமாலோ எனின் அது ஒழுகுந் தன்மையை உடையது, சுடுந்தன்மையை உடையது என்னும் பொருட்டாய் நிற்றலின் 'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' (404) என்னும் சூத்திரத்தின் பாற்படும் என்க. யாறு ஒழுகுவது. தீச்சுடுவது என்பதும் அது.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், கால வழுவமைப்புக் கூறுகின்றது.

இ–ள்.:– முக்காலத்தினும் – செல் காலம் நிகழ்காலம் வருங்காலம் மூன்றினும், ஒத்தியல் பொருளை – ஒரு தன்மையாய் நிகழும் பொருளை, செப்புவர் நிகழுங் காலத்தானே – நிகழ்காலச் சொல்லானே சொல்லுவர், எ–று.

உ–ம்.:–

யாறு ஒழுகும், மலை நிற்கும், வளி பெயரும், நிலம் கிடக்கும்,

பாட வேறுபாடு:–

1. நீர்தண்ணிது

2. தீய்வெய்து

நீர் குளிரும், தீச் சுடும், பால் இனிக்கும், வேம்பு கசக்கும்
பண்டும் இன்றும் மேலும்.

விசாகப் பெருமாளையர்

இது, காலவழுவமைதி யுணர்த்துகின்றது.

இ—ள்.:— முக்காலத்தினும் — மூன்று காலங்களிலும், ஒத்து — தமது தொழிலிடையறாதொத்து, இயல் — நிகழுகின்ற, பொருளை — பொருள்களை, நிகழுங் காலத்தான் — நிகழ்காலத்தினால், செப்புவர் — சொல்லுவர் புலவர், எ—று.

வ—று.:—

எனக்குத் துணை நீயிருக்கிறாய், தெய்வமிருக்கிறது.
ஆறொழுகுகிறது, அரசர் பூமியை ஆளுகிறார் என வரும்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

நிகழ்காலத்தாற் சொல்லப்படும் பொருள் ஏனைக்காலங்களையு முணர்த்துமென்பது கூறுஞ் சூத்திரம் யாது?

முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச்
செப்புவர் நிகழுங் காலத் தானே.

(முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளைச் செப்புவர் நிகழும் காலத்தானே.)

இ—ள்.:— தந்தொழிலிடையறாமல் மூன்றுகாலங்களிலும் ஒருதன்மையை யுடையனவாய் நிகழும் பொருள்களை நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர். எ—று.

நிகழ்காலச்சொல்லென்றாரேனும் இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும் அகப்படுத்தி மூன்றுகாலத்திற்கும் பொதுவாய் நிற்குஞ் செய்யுமென்னும் முற்றும் எச்சமுமே கொள்க.

வ—று.:—

மலைநிற்கும், தீச்சுடும், ஞாயிறியங்கும், "வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல் வரைப்பின்" என வரும். தீச்சுடுமென்றாற் பண்டும் இன்றும் மேலுஞ் சுடுமென்பதனை ஒப்பவிளக்கியவாறு காண்க. இதனால் ஏனை நிகழ் காலச்சொற்கள் பொருந்தாமையுணர்க.

முகவை இராமனுச கவிராயர்

இது, கால வழுவமைதி யுணர்த்திற்று.

இ–ள்.:– முக்காலத்தினு மொத்தியல் பொருளை–(தந்தொழிலிடையறாமல்) மூன்று காலத்திலும் ஒரு தன்மையை யுடையனவாய் இயலுகின்ற பொருள்களை, (இயலுதல் – நடத்தல்,) செப்புவர் நிகழுங்காலத்தானே – நிகழ்காலத்திற்குரித்தாய் நின்றும் ஒழிந்த காலங்களையுமுள்ளடக்கி நிற்குஞ் செய்யுமென்னும் வாய்பாட்டுச் சொல்லாற் கூறுவர் புலவர், எ–று.

நிகழுங்காலச்சொல்லை நிகழுங்காலமென்றது, ஆகுபெயர்.

வ–று.:–

மலைநிற்கும், தீச்சுடும், ஞாயிறியங்கும், திங்களியங்கும் 'வெங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல் வரைப்பின்' என வரும். தீச்சுடுமென்றால், பண்டும் இன்றும் மேலுஞ் சுடுமென்பதை ஒப்ப விளக்கி நிற்றல் காண்க. (வெங்கதிர்க்கனலி – சூரியன்.)

இனி, 'நிகழுங்காலச் சொல்லால்' என்னாது, நிகழுங் காலத்தானென்றதினாலே ஒழிந்த நிகழ்காலச் சொல்லால் வருவனவுமுளவெனக் கொள்க. அவை வருமாறு: தெய்வமிருக்கின்றது, மலைநிற்கிறது, நிலங்கிடக்கிறது அவனியைத் தாங்கியரசரிருக்கின்றார் என வரும்; பிறவுங் காண்க.

முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
யெம்முறைச் சொல்லுநிகழுங்காலத்து
மெய்ந்நிலைப் பொதுச் சொற் கிளத்தல் வேண்டும்

என ஆசிரியர் தொல்காப்பியனாருங் கூறுதல் காண்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– முக்காலத்தினும் – மூன்றுகாலங்களிலும், ஒத்து இயல்பொருளை – (தந்தொழில் இடைவிடாமல்) ஒருதன்மையாய் நடக்கிறபொருள்களை, நிகழுங்காலத்தான் – நிகழ்காலத்திற்கும், செப்புவர் – சொல்லுவர்.

உ–ம் :–

கடவுளிருக்கின்றார்; காற்று வீசுகின்றது; தீசுடுகின்றது.

(கடவுள் இருப்பதும், காற்றுவீசுவதும், தீசுடுவதும் மூன்றுகாலத்திலும் உள்ளனவாதல் அறிக) இதற்குச் 'செய்யும்' என்னு முற்றை உதாரணங் காட்டுவர் இலக்கணவிளக்க நூலுடையாரும், இராமாநுசகவியாரும், அதன்திறம் உய்த்துணர்க.

ஆறுமுக நாவலர்

இ—ள்.:— முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை — தந்தொழிலிடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையையுடையனவாய் நிகழும் பொருள்களை, நிகழும் காலத்தான் செப்புவர் — நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர், எ—று.

வ—று.:—

மலைநிற்கின்றது; தெய்வமிருக்கின்றது; கடவுளளிக்கின்றார் என வரும். மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்திலும் உள்ளனவாதல் காண்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ—ள்.:— முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை — தந்தொழிலிடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை யுடையனவாய் நிகழும் பொருள்களை, — நிகழுங் காலத்தான் செப்புவர் — நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர். எ—று.

வ—று.:—

மலை நிற்கின்றது; தெய்வமிருக்கின்றது; கடவுளிருக்கின்றார் எனவரும். மலைக்கு நிற்றலும். தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு இருத்தலும் முக்காலத்தினும் உள்ளனவாதல் காண்க.

மலை நிற்கும்; தீச்சுடும், திங்களியங்கும் எனச் செய்யுமென்னுஞ் சொல்லாற் சொல்லுக என்பது தொல்காப்பியத்தில் "முந்நிலைக் காலமுந் தோன்றுமியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங்காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்", என்னுஞ் சூத்திரவுரைக்கருத்தென்றறிக.

இந் நன்னூற் சூத்திரத்தினும் நிகழ்காலத்தானே யென்னாது நிகழுங்காலத்தானே என்று உம்மீறாகக் கூறியதினால் அக்கருத்தை ஈண்டுமமைக்கினுமாம்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.: முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை — மூன்று காலங்களிலும் (தம்தொழில் இடைவிடாமல்) ஒரு தன்மையாக நடக்கின்ற பொருள்களை, நிகழும் காலத்தான் — நிகழ்காலத்தினால், செப்புவர் — சொல்லுவர்; எ—று.

உ–ம்.:–

மலை நிற்கின்றது, தெய்வம் இருக்கின்றது, கடவுள் அளிக்கின்றார். (மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுளுக்கு அளித்தலும் முக்காலத்திலும் உள்ளனவாதல் காண்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– முக்காலத்தினும் ஒத்து இயல் பொருளை – தந்தொழிலிடையறாமல் மூன்று காலங்களிலும் ஒரு தன்மையை யுடையனவாய் நிகழும் பொருள்களை, நிகழும் காலத்தான் செப்புவர் – நிகழ்காலத்தினாற் சொல்லுவர் புலவர். எ–று.

(உ–ம்.)

மலைநிற்கின்றது; தெய்வமிருக்கின்றது; கடவுளளிக்கின்றார்.

மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்டிதனும் உள்ளனவாதல் காண்க.

செய்யுமென்னும் வாய்பாடுபற்றி இதற்குப் பொருள்கூறி மலைநிற்கும் தீச்சுடும் என இவ்வாறு வருவனவற்றை உதாரணங் காட்டுவது முண்டு. இதுபற்றிய உரை விகற்பங்களை அனுபந்தத்திற் காண்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) முக்காலத்தினும் – மூன்று காலங்களிலும், ஒத்து – தமது தொழில் இடையறாது ஒத்து, இயல் – நிகழுகின்ற, பொருள்–பொருள்களை, நிகழும் காலத்தான் – நிகழ்காலத்தினால், செப்புவர் – சொல்லுவர் (புலவர்). (எ–று)

(பொ–ரை.) தம் தொழில் இடையறாது முக்காலத்திலும் ஒரு தன்மையவாய் இயலும் பொருள்களை நிகழ்காலத்தாற் கூறுவர் (புலவர்).

(உ–ம்.)

மலை நிற்கின்றது; தெய்வமிருக்கின்றது; கடவுள் அளிக்கின்றது.மலைக்கு நிற்றலும், தெய்வத்துக்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்திலும் உள்ளனவாதல் காண்க.

கா. நமச்சிவாய முதலியார்

முக் காலத்தினும் – மூன்று காலங்களிலும், ஒத்து – தமது தொழில் இடையறாது ஒத்து, இயல் – நிகழ்கின்ற, பொருளை – பொருள்களை, நிகழும் காலத்தான் – நிகழ்காலத்தினால், செப்புவர் – சொல்லுவர் புலவர்.

உதாரணம்

தெய்வம் இருக்கிறது.
ஆறு ஒழுகுகிறது

மோசசு பொன்னையா

மூன்று காலங்களிலும் தம் தொழில் இடையறாமல் ஒரு தன்மை யுடையனவாய் நிகழும் பொருள்களைப் புலவர் நிகழ்காலத்தினால் சொல்லுவர் எ—று.

எ—டு.:–

தெய்வம் இருக்கிறது,

மலை நிற்கிறது,

ஞாயிறு கிழக்கில் உதிக்கிறது முக்காலத்திலும் நிகழ்வன நிகழ் காலத்தாற் சொல்லப்பட்டன

இக்காலத்தில் இவ்வாறு வழங்குவது பெருவழக்காதலின் இவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டது. தொல்காப்பியர்,

முன்னிலைக் காலமுந் தோன்று மயற்கை
எம்முறைச் சொல்லும் நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்,

என்ற நூற்பாவால் தந்துள்ள ஆணையையும், அதன் உரையில் உரைகாரர்கள் தரும் விளக்கத்தையும் கூர்ந்து நோக்கின், மலை நிற்கும், ஞாயிறு இயங்கும், திங்கள் இயங்கும் என இவ்வாறு எடுத்துக்காட்டுவதே பண்டையோர்க்கு ஏற்ப உரைப்பதாகும்.

(32)

383. விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும் பிறழவும் பெறூஉ முக்காலமு மேற்புழி.

விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும்
பிறழவும் பெறூஉ முக்காலமும் ஏற்புழி.

viraivin um mikavin um telivin um iyalpin um
piūala um peūūum mu kālam um ēūpuli

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

In appropriate places, the three Tenses may be interchanged in order to express speed, probability certainity, or (merely) a natural state (of circumstances)

ஒப்புமைப் பகுதி

வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்

(தொல்.சொல்.:241)

மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே

(தொல்.சொல்.:242)

வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை

(தொல்.சொல்.:245)

விரைவினு மிகவினு மியல்பினுந் தெளிவினு
மன்னவை யல்வழி யானுமுக் காலமு
மேற்புழி மயங்கு மென்மனார் புலவர்

(இ.வி.:304)

நிகழ்வினு மெதிர்வினும் வரும்வினைக் கிளவி
இறப்பினு முரைப்பர் விரைவிற் பொருள

(மு.வீ.:635)

குறித்துப் போதரும் வினைமுத லில்லாக்
காலை வினைமுத னிகழ்வினிற் செல்லும்

(மு.வீ.:636)

எதிர்விற் குரிய வினைசொற் கிளவி
தெளிவு மியற்கையுஞ் செப்புங் காலை
இறப்பினு நிகழ்வினு மியம்பப் படுமே

(மு.வீ.:639)

விரைவு இயல்பு மிகவுதெளி வாற்பிறவார்கால
விதிமூன்றும் ஏற்புழி நின்றுடன் மயங்கும் அறியே

(சுவாமி.: 59:4)

மயிலை நாதர்

இதுவுமது,

இ–ள்.: இந்நான்கு பொருண்மைக்கண்ணும் முக்காலமும் தம்முள் மயங்கி வரவும்பெறும், ஏற்குமிடத்து, எ–று.

உம்மையான், மயக்கம் ஒருதலையன்றென்க.

வ–று.:–

விரைவு: சோறுவேவாநிற்க அதை உண்டு போதற் பொருட்டாக இருந்தானொருவனைப் புறத்து நின்றா னொருவன் தாம் இருவரும் போக வேண்டுங்குறை யுடைமையால், இன்னும் உண்டிலையோ? போதுகவென்றால், உண்டேனுண்டேன், போந்தேன் போந்தேனென்னும்; உண்ணாநின்றானைச் சொல்லினும், உண்டேனுண்டேன், போந்தேன் போந்தேனென்னும், இவை விரைவு.

மிகுதி: அறஞ்செய்தான் சுவர்க்கம் புக்கான், சுவர்க்கம்புகும்; தாயைக்கொன்றான் நிரயம் புக்கான், நிரயம் புகுமென்னுமிவை உலகின் மிக்கவாதலின், (இப்பயன்கள் தப்பாமையின்) மிகுதிக்கண் வந்தன.

தெளிவு: எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின், மழை பெய்தது, மழைபெய்யுமென்பது; எறும்பு அவ்வாறு செய்ய அதுவாதல், கேள்வியானும் காட்சியானும் பிறழ்வின்றித் தெளிந்தமையின், இவ்வாறு கூறுதல் தெளிவென்க.

இயல்பு: இக்காட்டிற்போகிற் கூறைகோட்பட்டான்; இக்காட்டிற் புக்கால், தன் கூறைகோட்படுமென வரும். அக்காட்டினியல்பு அதுவாதலறிந்து சொன்னமையின், இவை இயல்பின் வந்தன.

இனி, யாம் பண்டு விளையாடுவது இக்கா, யாம் பண்டு விளையாடுங்கா இது எனவும், சாத்தன் உழுதுவருவான் போனான் எனவும் வருமிவையும் இயல்பாம். பிறவுமன்ன. 'மிகவு' என்றது, உலகத்திலுள்ள பெரும்பான்மைச் சொல் லென்றறிக.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: விரைவு மிகுதி தெளிவு என்னும் மூன்று காரணத்தினானும் இக்காரணம் இன்றியும் முக்காலங்களையும் ஒன்றை ஒன்றாகக் கூறப்படும் ஏற்குமிடத்து, எ–று.

காரணமின்றி என்பார், 'இயல்பினும்' என்றும், பிறழ்தல் ஒருதலையன்று என்பார், 'பிறழவும்' என்றும், விரைவு முதலிய நான்கினும் தனித்தனி முக்காலங்களும் முறையே பிறழா என்பார், 'ஏற்புழி' என்றும் கூறினார்.

வ–று.:–

சோறு வேவாநிற்ப அஃது உண்டு போதற் பொருட்டாக இருந்தோன் ஒருவனைப் புறத்து நின்றான் ஒருவன் இருவரும் போகவேண்டும் குறையுடைமையின் இன்னும் உண்டிலையோ என்றால் 'உண்டேன் உண்டேன்' என்னும்; உண்ணா நின்றானும் உண்டேன் உண்டேன் என்னும்; இவை விரைவின் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. அக்காட்டில் புகின் கூறைகோட்பட்டான், கள்வான் நினையின் கையறுப் புண்டான்: இது மிகுதியின் எதிர்காலம் இறந்தகால மாயிற்று. கூறை கோட்படுதலும் கையறுப்புண்ணுதலும் தவறினும் தவறுமாதலின் இது மிகுதியாயிற்று. அறஞ்செயின் சுவர்க்கம் புக்கான், எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது: இது தெளிவின் எதிர்காலம் இறந்த காலமாயிற்று. உரையளவையானும் காட்சியளவை யானும் இவற்றிற்கு இவை காரணமாகத் தெளிந்தமையின் இது தெளிவாயிற்று. யாம் பண்டு விளையாடுவது இக்கா, யாம் பண்டு விளையாடுகிறது இக்கா: இது காரணம் இன்றி இயல்பினான் இறந்த காலம் எதிர்காலமும் நிகழ்காலமு மாயிற்று. பிறவும் அன்ன.

இவ்வுதாரணங்களுள் சிலவற்றை மாறிக் காட்டுவாரும் உளர். அவை பொருந்தாமை அப்பொருள்களான் உணர்க. உழுதுவருக உண்டுவருக என்புழி, உழுது உண்டு என்பன வற்றையும் இயல்பின் எதிர்காலம் இறந்தகாலமாய் மயங்கின என்பாரும் உளர்; வருதலை நோக்குங்கால் அவை இறந்த காலமேயாதலின் வழாநிலையாம் என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இதுவும் கால வழுவமைப்புக் கூறுகின்றது.

இ–ள்.: **விரைவினு மிகவினும்** – விரைவின்கண்ணும் மிகுதியின் கண்ணும், **தெளிவினு மியல்பினும்** – தெளிவின்கண்ணும் இயல்பின் கண்ணும், **பிறழவும் பெறூஉம்** – இந்நான்கு பொருண்மைக் கண்ணும் மயங்கி வரப்பெறும், **முக்காலமு மேற்புழி** – முக்காலங்களும் ஏற்குமிடத்து, எ–று.

உம்மையான் மயங்காமல் நிற்றல் வலியுடைத்து என்க.

உ–ம்.:–

உண்கின்றானை அழைக்க, உண்டேன் உண்டேன் வந்தேன் வந்தேன் இவை விரைவு.

அறஞ்செய்தான் சுவர்க்கம் புக்கான், தாயைக் கொன்றான் நிரயம் போனான். இவை உலகின் மிக்கவாதலின் இப்பலன்கள் தப்பாமையின் ஈண்டு மிகுதிக்கண் வந்தன.

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்யும் இது தெளிவு.

ஒரு காட்டிற் போய்க் கூறை கோட்பட்டான், காட்டிற் செல்வான் கூறை கோட்படுவான் என்கை இயல்பு.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ—ள்.: விரைவினும் – விரைவினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **தெளிவினும்** – தெளிவினாலும், **இயல்பினும்** – இம்மூன்று காரணங்களுமின்றி இயல்பினாலும், **முக்காலமும்** – மூன்று காலங்களும், **பிறழவும் பெறூஉம்** – ஒன்றுமற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும், **ஏற்புழி** – ஏற்குமிடத்து, எ—று.

வ—று.:—

உண்ணும்படியாக விருக்கின்றவனை உடன்கொண்டு, போகவேண்டிய மற்றொருவன் பார்த்து 'இன்னும் உண்டிலையோ' வென்றால், உண்டேனுண்டேனென்பான்; உண்கின்றவனை அப்படி வினாவினால், உண்டேனுண்டே னென்பான். இவை விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின.

நீ யவனுடனே பகைத்தாற் செத்தாய், இக்காட்டுட்போனாற் கூறையிழந்தாய், இவ்விடத்தே மிகுதியால் எதிர்கால மிறந்தகால மாயிற்று. சாதலுங் கூறையிழைத்தலுந் தப்பினாலுந் தப்புமாதலான் மிகுதியாயின. 'அறஞ்செய்தாற் சுவர்க்கம் புக்கான்', 'எறும்பு முட்டை கொண்டு திட்டை யேறின் மழைபெய்தது' இவ்விடத்தே தெளிவினால் எதிர்கால மிறந்த காலமாயிற்று.

உரை யளவையினாற் சுவர்க்கம் புகுதற்கு 'அறஞ்செய்தலும், காட்சி யளவையினாலே மழைபெய்தற்கு எறும்பு முட்டை கொண்டு திட்டை யேறுதலுங் காரணமாகத் தெளிந்தமை யினாலே தெளிவாயின. யாம் பண்டு விளையாடுவே திச்சோலை: யாம்பண்டு விளையாடுகிற திச்சோலை இவ்விடத்தே காரணமில்லாமல் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று, மற்றவையு மிப்படியே.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

முக்காலமும் இன்னவேதுக்களாற் பிறழவும் பெறுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும்
பிறழவும் பெறூஉமுக் காலமு மேற்புழி.

(விரைவினும் மிகவினும் தெளிவினும் இயல்பினும் பிறழவும் பெறூஉம் முக்காலமும் ஏற்புழி.)

இ–ள்.: விரைவினாலும் மிகுதியினாலும் தெளிவினாலும் இயல்பினாலும் மூன்றுகாலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்குமிடத்து. எ–று.

விரைவாவது யாது?

தொழில் முடியுமுன்னே அதனை உடன்முடிக்கக் கருதி மேற்கொள்ளு மூக்கம்.

வ–று.:–

(1) சோறு வேவாநிற்க அதனையுண்டுபோதற்கிருப்பானை விரைவில் உடன்கொண்டுபோகவேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோ என்றால், உண்டேனுண்டேன் என்பான். உண்ணாநிற்பானை அவ்வாறு வினாவினாலும், உண்டேனுண்டேன் என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

மிகவாவது யாது?

மிகவு என்பது புண்ணியபாவங்கண்மேற் செல்லு மூக்கம்.

(புண்ணியபாவங்கள் எல்லாச் செயல்களுள்ளும் மிக்க னவாதலின் மிகவெனப்பட்டன.)

(2) யாவன் தவஞ்செய்தமான் அவன் சுவர்க்கம்புகும், யாவன் தாயைக்கொன்றான் அவன் நிரயம்புகும் எனவும், ஒருவன் தவஞ்செயிற் சுவர்க்கம்புகும், தாயைக்கொல்லின் நிரயம்புகும், எனவுஞ் சுட்டி யொருவர்பெயர் கொள்ளாது பொதுவகையாற் கூறியவழி மிகுதிபற்றி இறப்பமெதிர்வும் நிகழ்வொடு மயங்கும்.

தெளிவாவது யாது?

நூலுணர்ச்சியாற் பெறுந் துணிவு.

(3) எறும்பு முட்டைகொண்டு திட்டையேறியது கண்டுழி மழை

பெய்யுமென்னாது மழைபெய்தது மழைபெய்கின்றது எனத் தெளிவுபற்றி எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும்மயங்கும்.

இயல்பாவது யாது?

பல்கானும் அநுபவத்தாற் கண்ட துணிவு.

(4) இக்காட்டிற்புகிற் கூறைபறிகொடுத்தான், பறிகொடுக்கிறான் என இயல்புபற்றிய பறிகொடுப்பான் என்னும் எதிர்வு இறப்போடும் நிகழ்வோடும் மயங்கும்.

இரட்டுறமொழிதலால் இயல்பு என்பதற்கு வேறு பொருளும் கொள்ளப்படுமோ?

ஆம். காரணமின்றிய வழக்கு எனவும் பொருள் கொள்ளப்படும்.

(5) இவர் பண்டிப்பொழிலகத்து விளையாடுவர்; நாளை அவன் வாளோடு வெகுண்டுவந்தான் பின் நீ யென்செய்குவை என இறந்தகாலமு மெதிர்காலமும் காரணமின்றி மயங்கின. பிறவுமன்ன.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது,

இ—ள்.: விரைவினு மிகவினுந் தெளிவினு மியல்பினும் – விரைவு மிகுதி தெளிவென்னும் இம்மூன்றுகாரணத்தாலும், காரணமின்றிச் சுபாவத்தினாலும், **பிறழ்வும் பெறூஉம் முக்காலமு மேற்புழி** – மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாக மாறி வரவும் பெறும் ஏற்குமிடத்தென்றவாறு.

காரணமின்றி என்று சொல்ல வந்தவர் 'இயல்பினும்' என்றார்.

வ—று.: –

சோறுவேவாநிற்க அதனை யுண்டு போதற்கு இருந்த ஒருவனை ஒருவன் இன்னும் உண்டிலையோ எனின், இருவரும் போகவேண்டுங் குறையுடைமையால் உண்டேனுண்டேன் என்பான், உண்ணாநின்றானையு மவ்வாறு வினாவின போது உண்டேனுண்டே னென்பானாதலால் இவை விரைவினாலே எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாயின. அவன் அக்காட்டிற் புகிற் கூறைபறி கொடுத்தான், களவு செய்யிற் கையறுப்புண்டான் என்பன மிகுதி பற்றி எதிர்காலமிறந்த காலமாயிற்று. (கூறை – சீலை,) கூறை பறிகொடுத்தலும் கையறுப்புணலும் ஒருவேளை தவறினுந் தவறுமாதலால் இது மிகுதி பற்றிய குறியாயிற்று. அறஞ் செய்யிற் சுவர்க்கம் புக்கான், 'எறும்பு

முட்டை கொண்டு திட்டை யேறின் மழை பெய்தது' என்பன, தெளிவுபற்றி எதிர்கால மிறந்தகாலமாயிற்று, உரையளவையாலுங் காட்சியளவையாலும் இவற்றிற்கு இவை காரணமாகத் தெளிந்ததினாலே தெளிவாயிற்று. (உரையளவை – ஆகமப்பிரமாணம்; காட்சியளவை – பிரத்தியட்சப் பிரமாணம்.) யாம் பண்டு விளையாடுவது இச்சோலை, பண்டு விளையாடுகின்றது இச்சோலை என்பன காரணமின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று, பிறவுமன்ன.

இனி மிகுதி யென்பதற்கு ஆசிரியர் தொல்காப்பியனார், இருவினை பலவற்றுள்ளும் மிக்க வினைகளெனவும், அவை:– தவஞ்செய்தல், தாயைக் கொல்லுதலெனவும், அவற்றின்கண், வினைவைத்து ஒருவனைச் சுட்டாது பொதுப்படக் கூறுங்கால், இறந்தகாலமும் எதிர்காலமும் நிகழ்காலத்தொடு மயங்குமெனவும், அவற்றிற்கு உதாரணம்:– தவஞ்செய்தான்; செய்வான், சுவர்க்கம் புகாநிற்பன், தாயைக்கொன்றான்; கொல்வான், நிரையம் புகாநிற்பன், எனவும் – (நிரையம் நரகம்,) இயல்பென்பதற்குச் சுபாவ வழக்கு நெறி யெனவும், அதனுள் வினையை வைத்துக் கூறுங்கால் எதிர்வு இறப்பொடும் நிகழ்வொடும் மயங்கு மெனவும், அதற்குதாரணம், இக்காட்டிற் புகிற் கூறை கோட்பட்டான்; படுகின்றான், எனவும் பொருள் விளங்கக் கூறினார். அவற்றையெல்லாம்,

"வாராக் காலத்து நிகழுங் காலத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்"

எனவும்,

"மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
யப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே"

எனவும்,

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை"

எனவும்,

"இறப்பே யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி"

எனவும்,

"ஏனைக் காலமு மயங்குதல் வரையார்"

எனவும் வரும், இச் சூத்திரங்களாற் காண்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :- **முக்காலத்தினும்** – மூன்றுகாலங்களிலும், **ஒத்து இயல்பொருளை** – (தந்தொழில் இடைவிடாமல்) ஒருதன்மையாய் நடக்கிறபொருள்களை, **நிகழுங்காலத்தான்** – நிகழ்காலத்திற்கும், **செப்புவர்** – சொல்லுவர்.

உ–ம் :-

கடவுளிருக்கின்றார்; காற்று வீசுகின்றது; தீசுடுகின்றது.

(கடவுள் இருப்பதும், காற்றுவீசுவதும், தீசுடுவதும் மூன்றுகாலத்திலும் உள்ளனவாதல் அறிக) இதற்குச் 'செய்யும்' என்னு முற்றை உதாரணங் காட்டுவர் இலக்கணவிளக்க நூலுடையாரும், இராமாநுசகவியாரும், அதன்திறம் உய்த்துணர்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :- **விரைவினும்** – விரைவினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **தெளிவினும்** – தெளிவினாலும், **இயல்பினும்** – (இம்மூன்று காரணங்களுமில்லாமல்) இயல்பினாலும், **முக்காலமும்** – மூன்று காலங்களும், **எற்புழி** – ஏற்குமிடத்து, **பிறழவும் பெறூஉம்** – ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும்.

உதாரணம்

1. உண்டுபோவதற்கு இருப்பவனை விரைவில் கூட அழைத்துக் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் 'இன்னும் உண்டிலையோ?' என்றால், அவன் 'உண்டேன் உண்டேன்' என்பான். உண்கிறவனை அவ்வாறு வினவினால் அவனும் 'உண்டேன் உண்டேன்' என்பான். (இங்கே விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும்– இறந்தகாலமாகச் சொல்லப் பட்டன.)

2. 'அக்காட்டிற் போனால் கூறைபறிகொடுத்தான், பறிகொடுக்கிறான்', என்பதில் மிகுதியினால் எதிர்காலம் – இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது (கூறைபறிகொடுத்தல் சிறுபான்மை தப்பினாலுந் தப்புமாதலால், மிகுதியெனப்பட்டன.)

3. 'அறஞ்செய்தால் சுவர்க்கம்புகுந்தான், புகுகின்றான்', 'எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழைபெய்தது', பெய்கின்றது. என்பவற்றில், தெளிவினால் எதிர்காலம் – இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. (திட்டை– மேடு). (சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பத சாஸ்திரப் பிரமாணத்தினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டைகொண்டு மேட்டிலேறுதல் காரணமென்பது பிரயத்தியக்ஷப் பிரமாணத்தினாலுந் தெளியப்பட்டமையினால் தெளிவாயின.)

4. 'யாம்முன்னே விளையாடுவது இச்சோலை', 'விளையாடுகிறது இச்சோலை' என்பவற்றில் வேறொரு காரணமில்லாமல் இயல்பினால் இறந்த காலம் – எதிர்காலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

'உண்டுவருவாய்' என் இறந்தகாலவினையெச்சம் நின்று முடிக்கும் வினையின் எதிர்காலத்தோடு மயங்கிவருவதையும் இச்சூத்திரத்துள் அடக்கிக்கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **விரைவினும்** – விரைவினாலும், **மிகவினும்** – மிகுதியினாலும், **தெளிவினும்** – தெளிவினாலும், **இயல்பினும்** – இம்மூன்று காரணங்களு மின்றி இயல்பினாலும், **முக்காலமும் பிறழவும் பெறூஉம் ஏற்புழி** – மூன்றுகாலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்குமிடத்து, எ–று.

வ–று.:–

(1) சோறு வேவா நிற்க அதனை யுண்டுபோதற் கிருப்பானை விரைவில் உடன் கொண்டு போக வேண்டிய மற்றொருவன் பார்த்து, 'இன்னும் உண்டிலையோ' என்றால், 'உண்டேனுண்டேன்' என்பான். உண்ணாநிற்பானை அவ்வாறு வினாவினாலும், உண்டேனுண்டேன் என்பான். இங்கே விரைவு பற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டன.

(2) அக்காட்டிற் புகிற் கூறை பறிகொடுத்தான்; களவுசெய்ய நினையிற் கையறுப்புண்டான் என்றவழி, மிகுதி பற்றி எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலுங் கையறுப்புண்ணுதலுந் தவறினுந் தவறுமாதலால், மிகுதி யெனப்பட்டன.

(3) அறஞ்செயிற் சுவர்க்கம் புக்கான்; எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது என்றவழித், தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம்

புகுதற்கு அறஞ்செய்தல் காரண மென்பது உரையளவையினாலும், மழை பெய்தற்கு எறும்பு முட்டை யெடுத்து மேட்டிலேறுதல் காரணமென்பது காட்சியளவை யினாலுந் தெளியப்பட்டமையினாலே, தெளிவாயின. (உரையளவை – ஆகமப் பிரமாணம். காட்சியளவை – பிரத்தியக்ஷப் பிரமாணம்.)

(4) யாம் பண்டு விளையாடுவதிச்சோலை; யாம் பண்டு விளையாடுகிறதிச்சோலை என்றவழிக், காரணமின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **விரைவினும்** – விரைவினாலும், – **மிகவினும்** – மிகுதியினாலும், – **தெளிவினும்** – தெளிவினாலும், – **இயல்பினும்** – இம்மூன்ற காரணங்களுமின்றி இயல்பினாலும், – **முக்காலமும் பிறழவும் பெறூஉம் ஏற்புழி** – மூன்று காலங்களும் ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும் ஏற்குமிடத்து. எ–று.

வ–று :–

(1) சோறு வேவாநிற்க அதனை யுண்டுபோதற் கிருப்பானை விரைவில் உடன் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் பார்த்து இன்னும் உண்டிலையோவென்றால் உண்டேன் உண்டேன் என்பான். உண்ணுகின்றவனை அவ்வாறு வினாவினாலும் உண்டேனுண்டேன் என்பான். இங்கே விரைவுபற்றி எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்தகாலத்தாற் சொல்லப்பட்டன.

(2) அக்காட்டிற் புகிற் கூறை பறிகொடுத்தான்; களவு செய்யநினைப்பிற கையறுப்புண்டான். என்றவழி, மிகுதிபற்றி எதிர்காலம் இறந்த காலத்தாற் சொல்லப்பட்டது. கூறை பறி கொடுத்தலுங் கையறுப்புண்ணுதலுந் தவறினுந் தவறுமாதலால் மிகுதியெனப்பட்டன.

(3) அறஞ்செயிற் சுவர்க்கம் புக்கான்; எறும்பு முட்டை கொண்டு திட்டையேறின் மழை பெய்தது. என்றவழித் தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பது உரை யளவையினாலும், மழை பெய்தற்கு எறும்பு முட்டையெடுத்து மேட்டிலேறுதல் அறிகுறியென்பது காட்சியளவையினாலும் தெளியப்பட்டமையால் தெளிவாயின. (உரையளவை – ஆகமப்பிரமாணம். காட்சியளவை – பிரத்தியக்ஷப்பிரமாணம்).

(ச) யாம் பண்டு விளையாடுவதிச்சோலை; யாம் பண்டு விளையாடு கிறதிச்சோலை என்றவழிக் காரண மின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமாகவும் நிகழ்காலமாகவுஞ் சொல்லப்பட்டது.

வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— **விரைவினும்** — விரைவினாலும், **மிகவினும்** — மிகுதியினாலும், **தெளிவினும்** — தெளிவினாலும், **இயல்பினும்** — (இம்மூன்று காரணங்களு மில்லாமல்) இயல்பினாலும், **முக்காலமும்** — மூன்று காலங்களும், **பிறழவும் பெறூஉம்** — ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும்; **ஏற்பு உழி** — ஏற்குமிடத்து; எ—று. மிகுதி — பெரும்பான்மை.

உ—ம்.:—

(1) உண்டுபோவதற்கு இருப்பவனை விரைவில் உடன் அழைத்துக் கொண்டு போக வேண்டிய மற்றொருவன் 'இன்னும் உண்டிலையோ?' என்றால், அவன் 'உண்டே னுண்டேன்' என்பான். உண்கிறவனை அவ்வாறு வினாவினால் அவனும் 'உண்டே னுண்டேன்' என்பான். இங்கே விரைவினால், எதிர்காலமும், நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

(2) அக்காட்டில் போனால் கூறை பறிகொடுத்தான், பறிகொடுக்கிறான்; களவுசெய்தால் கையறுக்கப்பட்டான், கையறுக்கப்படுகிறான் என்பவற்றில், மிகுதியினால், எதிர்காலம் — இறந்தகாலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலும், கையறுக்கப் படுதலும் சிறுபான்மை தப்பினாலும் தப்புமாதலால், மிகுதி யெனப்பட்டன.

(3) அறம்செய்தால் சுவர்க்கம் புகுந்தான், புகுகின்றான்; எறும்பு முட்டையெடுத்துக் கொண்டு மேடேறினால் மழைபெய்தது, பெய்கின்றது என்பவற்றில், தெளிவினால், எதிர்காலம் — இறந்தகாலமும், நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பது சாஸ்திரப் பிரமாணத்தினாலும், மழை பெய்தற்கு எறும்பு முட்டை யெடுத்துக்கொண்டு மேட்டில் ஏறுதல் அறிகுறி யென்பது பிரதியக்ஷப் பிரமாணத்தினாலும் தெளியப்பட்டதனால், தெளிவாயின.

(4) யாம் முன்னே விளையாடுவது இச்சோலை,

விளையாடுகிறது இச்சோலை என்பவற்றில், வேறொரு காரணமு மில்லாமல், இயல்பினால், இறந்த காலம் – எதிர்காலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– விரைவினும் – விரைவினாலும், மிகவினும் – மிகுதியினாலும், தெளிவினும் – தெளிவினாலும், இயல்பினும் – (இம் மூன்று காரணங்களுமின்றி) இயல்பினாலும், முக்காலமும் – மூன்றுகாலங்களும், பிறழவும் பெறூஉம் – ஒன்று மற்றொன்றாகச் சொல்படவும் பெறும், ஏற்புழி – ஏற்குமிடத்து. எ–று.

உ–ம்.:–

(1)சோறு வெந்துகொண்டிருக்க அதனையுண்டு போதற்கிருப்பானை விரைவில் உடன் கொண்டுபோக வேண்டிய மற்றொருவன் பார்த்து 'இன்னும் உண்டிலையோ' என்றால், 'உண்டேனுண்டேன்' என்பான். உயீகன்றவனை அவ்வாறு வினாவினாலும், 'உண்டேனுண்டேன்' என்பான். இங்கே விரைபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்த காலமாகச் சொல்லப்பட்டன.

(2)'அக் காட்டிற் புகுந்தால் கூறை பறிகொடுத்தான்'; 'களவுசெய்ய நினையிற் கையறுப்புண்டான்' என்றவழி, மிகுதிபற்றி எதிர்காலம் இறந்த காலமாகச் சொல்லப்பட்டது. கூறை பறிகொடுத்தலுங் கையறுப்புண்ணுதலுந் தவறினுந் தவறுமாதலால் மிகுதியெனப்பட்டன.

(3)'அறஞ் செயிற் சுவர்க்கம் புக்கான்'; 'எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது' என்றவழித், தெளிவினால் எதிர்காலம் இறந்தாலமாகச் சொல்லப்பட்டது. சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தல் காரணமென்பது உரையளவையினாலும், மழைபெய்தற்கு எறும்பு முட்டையெடுத்து மேட்டிலேறுதல் காரணமென்பது காட்சியளவையினாலுந் தெளியப்பட்டமையினாலே, தெளிவாயின. (உயைளவை 0 ஆகமப்பிரமாணம். காட்சியளவை – பிரத்தியக்ஷப் பிரமாணம்.)

(4) யாம் 'பண்டு விளையாடுவ திச்சோலை' 'யாம் பண்டு விளையாடுகிறதிச் சோலை" என்றவழிக், கார மின்றி இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமு நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டது.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) விலைவினும் – விலைவினாலும், மிகவினும் – மிகுதியினாலும்.

தெளிவினும் – தெளிவினாலும், இயல்பினும் – (இம்மூன்று காரணங்களுமின்றி) இயல்பினாலும், முக்காலமும் – மூன்று காலங்களும், பிறழவும் பெறும்–ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும், ஏற்புழி – ஏற்குமிடத்து. (எ–று)

(பொ–ரை.) விரைவு, மிகுதி, தெளிவு என்னும் மூன்று காரணங்களினாலும் காரணமின்றியும் முக்காலங்களையும் ஏற்குமிடத்து ஒன்றை ஒன்றாகக் கூறப்படும்.

(உ–ம்.)

(1) உண்ணும்படியாக இருக்கின்றவனை உடன்கொண்டு போக வேண்டிய மற்றொருவன் அவனைப் பார்த்து, இன்னும் உண்டிலையோ? என்றால், 'உண்டேன் உண்டேன்' என்பான்.

உண்கின்றவனை அப்படி வினாவினால், அவனும் 'உண்டேன் உண்டேன்' என்பான். இவை விரவினால் எதிர்காலமும் நிகழ்காலமும், இறந்தகாலமாயின.

(2) நீ யவனுடனே பகைத்தால் செத்தாய்.

இக் காட்டுள் போனால் கூளை இழந்தாய். இவ்விடத்தே மிகுதியால் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று.

(சாதலும் கூறையிழத்தலும் தப்பினாலும் தப்புமாதலால் மிகுதியாயின.)

(3) அறஞ் செய்தால் சுவர்க்கம் புக்கான்.

எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறின் மழை பெய்தது.

இவ்விடத்தே தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. (உரையளவையினால் சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தலும், காட்சி யளவையினாலே மழை பெய்தற்கு, எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறுதலும் காணமாகத் தெளிந்தமையினாலே தெளிவாயின.) (உரையளவை – ஆகமப் பிரமாணம். காட்சியளவை – பிரத்தியட்சப் பிரமாணம்.)

(4) யாம் பண்டு விளையாடுவது இச் சோலை.

யாம் பண்டு விளையாடுவது இச் சோலை.

இவ்விடத்தே காரணமில்லாமல் இறந்தகாலம், எதிர்காலமும் நிகழ்காலமுமாயிற்று.

கா. நமச்சிவாய முதலியார்

விரைவினும் – விரைவினாலும், மிகவினும் – மிகுதியினாலும், தெளிவினும் – தெளிவினாலும், இயல்பினும் – (இம்மூன்று காரணங்களுமின்றி) இயல்பினாலும், முக்காலமும் –மூன்று காலங்களும், பிறழவும் பெறூஉம் – ஒன்று மற்றொன்றாகச் சொல்லப்படவும் பெறும், ஏற்புழி – ஏற்குமிடத்து.

உதாரணம்

1. உண்ண இருக்கின்றவனைக் கூட்டிக் கொண்டு போகவேண்டிய மற்றொருவன் பார்த்து, ‘இன்னும் உண்டிலையோ?’ என்றால், ‘**உண்டேன், உண்டேன்**’ என்பான்.

உண்கின்றவனைப் பார்த்து அப்படி வினாவினாலும், ‘**உண்டேன், உண்டேன்**’ என்பான்.

இவை, விரைவினால் எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலம் ஆயின.

2.நீ அவனுடனே பகைத்தாற் செத்தாய்
நீ இக்காட்டுள் போனாற் கூறை யிழந்தாய்

என்னுமிடத்தே மிகுதியால் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. சாதலும், கூறையிழத்தலும் தப்பினாலும் தப்புமாதலான் மிகுதியாயின.

3.அறஞ் செய்தாற் சுவர்க்கம் புக்கான்
எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது.

என்னுமிடத்தே தெளிவினால் எதிர்காலம் இறந்தகாலமாயிற்று. உரையளவையினாற் சுவர்க்கம் புகுதற்கு அறஞ்செய்தலும், காட்சியளவையினாலே மழை பெய்தற்கு எறும்பு முட்டை கொண்டு திட்டையேறுதலும் காரணமாகத் தெளிந்தமையினாலே தெளிவாயின.

4.யாம் பண்டு விளையாடுவது இச்சோலை.
யாம் பண்டு விளையாடுகிறது இச்சோலை.

இவ்விடத்தே காரணமில்லாமல் இயல்பினால் இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமும் ஆயிற்று.

மோசகு பொன்னையா

விரைவினாலும், மிகுதியினாலும், தெளிவினாலும், இயல்பினாலும் ஏற்குமிடத்து முக்காலங்களும் ஒன்று மற்றொன்றாக மாற்றிச் சொல்லப்படவும் பெறும் எ–று.

எ–டு.:–

1.(விரைந்து உண்டு வருவேன் என்னும் குறிப்பில்)

உண்டேன், உண்டேன் எனல்,

(உண்டுகொண்டு இரும்பவன் விரைந்து உண்டுவிடுவேன் என்னும் குறிப்பில்) உண்டேன் உண்டேன் எனல்–விரைவு

2. அக்காட்டுட் போகிற் புலிக் கோட்பட்டான்–மிகுதி

3. எறும்பு முட்டை கொண்டு ஏறின் மழை பெய்தது–தெளிவு
4. யாம் பண்டு விளையாடுவது இச்சோலை–இயல்பு

தொல்காப்பியர்,

வாராக் காலத்து நிகழுங் காலத்து
மோராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி
யிறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள வென்மனார் புலவர்,

எனவும்,

வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
யிறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்று
மியற்கையுந் தெளிவுங் கிளக்குங்காலை,

எனவும்,

இறப்போ யெதிர்வே யாயிரு காலமுஞ்
சிறப்பத் தோன்று மயங்குமொழிக் கிளவி

எனவும்,

ஏனைக் காலமு மயங்குதல் வரையார்

எனவும் கூறியுள்ளவற்றை இவ்வாசிரியர் இந்நூற்பாவில் தொகுத்துரைத்தார்.

(33)

**384. அறிவறி யாமை யையுறல் கொளல்கொடை
ஏவ றரும்வினா வாறு மிழுக்கார்.**

அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை
ஏவல் தரும் வினா ஆறும் இழுக்கார்.

aūivu aūiyāmai aiyuūal ko̱ḻal kotai
ēval ṭarum vinā āūu um iḷukkār

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Six kinds of questions

The learned admit six kinds of questions, viz, those of testing, learning, doubting, purchasing giving and commanding.

ஒப்புமைப் பகுதி

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்

(தொல்.சொல்.:13)

அறிய லுறவுவெளிப் படுப்பது வினாவஃ
தறியாமை யைய மறிவு கொடைகொள
லேவலின் வரூஉ மிவ்விரு மூன்றனுட்
கடைநிலை நான்கு முதனிலை யனைய

(இ.வி.:305)

அறியாத பொருளை அறி வுறுத்தல்வினா வதுதான்
அறியாமை ஐயம்இரண் டாமறிவு கொடைகோள்
இறும்ஏவல் நான்கும்வாய் பாட்டின்வினா அமை வாமே.

(சுவாமி.: 60:1–2)

மயிலை நாதர்

எ–ன், வினாவழுவற்கவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.:– அறிவும் அறியாமையும் ஐயப்பாடும் கொளலும் கொடுத்தலும் ஏவலும் காரணமாக வரும் ஆறு வினாவிடத்தும் தப்பவழங்கார் கற்றோர், எ–று.

வ–று.:–

அறிவினால் வரும் வினா எதிர்வாதியாலும் ஆசிரியனாலும் வரும்; எதிர்வாதி எதிரியை அளத்தற்கும் அறியாமை காட்டுதற்கும், இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது? இப்பதம் முடிந்தவாறென்னை?' என வினாவும்.

ஆசிரியன் ஒருவனை அளத்தற்கும் கொடுத்தற்கும் அவனை விளக்குதற்கும் அவ்வாறு வினாவும்.

அறியாமையான் வரும் வினா தான் அறிதற்கு 'இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது? நெறியாது? வஞ்சியூர்க்கு வழியாது?' என வினாவும்.

ஐயத்தால் வரும்வினா உண்மை யுணர்தற்கும் கோடற்கும் வரும்; மஞ்சோ புகையோ மலைமேற் பரக்கின்றது? என்பது உண்மை யுணர்தற்கண் வந்தது. 'நீரோ பேய்த்தேரோ தோன்றுகின்றது?' என்பது கோடற்கண் வந்தது; மணியுளவோ? வயிரமுளவோ? என்பதும் கோடற்கண் வரும் வினா.

சாத்தனுக்கு ஆடையில்லையோ? என்பது கொடுத்தற்கண் வரும் வினா.

சாத்தா உண்டாயோ? என்பது, ஏவற்பொருட்டாய் வரும் வினா. இவ்வாறு வருவன பிறவும்,

"அறியான் வினாத லறிவொப்புத் தான் 1காண்டல், ஐய மறுத்த லவனறிவு தான்காண்டல், மெய்யவதற்குக் காட்டலோ டைந்தும் வினாவே"

என்பனவும் இவ்வாறனுள்ளே அடங்குமென்க.

இவற்றின்வழு மேலே சொல்லிப்போந்தாம்.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், வினாவின் பெயரும் முறையும் தொகையும் உணர்–ற்று.

இ–ள்.: அறிவு முதலியன தருதலான் வரும் வினா ஆறனையும் களையாது கொள்வர் புலவர், எ–று.

வ–று.:–

ஆசிரியன், 'இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது' என்பது, அறிவினா. மாணாக்கன் அவ்வாறு கூறுவது அறியாவினா. 'குற்றியோ மகனோ' என்பது ஐயவினா. 'பொன்னுளவோ மணியுளவோ' என்பது, கொளல் வினா. 'சாத்தற்கு ஆடை இல்லையோ' என்பது கொடைவினா. 'சாத்தா உண்டாயோ' என்பது ஏவல்வினா.

இவற்றுள் அறிவும் அறியாமையும் இவ்விரண்டும் விரவிய ஐயமுமன்றி வினாவைத் தருவதொன்றின்மையின் அவற்றை முற்கூறி, ஏனையவும் அவற்றின்கண் அடங்குமேனும் கொளல் கொடை ஏவல் என்னும் பொருள் விசேடத்தான் வேறு விதந்து பிற்கூறி, மூன்றாகற்பாலனவற்றை ஆறாகக் கூறுதல் தொன்றுதொடுநெறி என்பார் 'ஆறும் இழுக்கார்' என்றும் கூறினார்.

"அறியான் வினாவல் அறிவொப்புக் காண்டல்
ஐயம் அறுத்தல் அவனறிவு தான்கோடல்
மெய்யவற்குக் காட்டலோ டைவகை வினாவே"

என்னும் ஒருசாராசிரியர் கூற்றினுள்ளும் பின்னைய இரண்டும் முன்னைய மூன்றனுள் அடங்கும் என்பதுதோன்ற அவற்றை முற்கூறுதல் காண்க.

பாட வேறுபாடு:–

1. கோட

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், வினா வழுவற்க என்பது கூறுகின்றது.

இ—ள்.:— அறிவு — எதிர்வாதியாலும் ஆசிரியனாலும் வரும் அறிவினால் வரும் வினாவும், அறியாமை — தான் அறிதற்கு வரும் அறியாமையால் வரும் வினாவும், ஐயுறல் — உண்மை உணர்தற்கும் கோடற்கும் வரும் ஐயத்தால் வரும் வினாவும், கொளல் — என்பது காரணமாக வரும் கொள்ளுதல் வினாவும், கொடை — தம் பொருண்மைக் காட்ட வரும் கொடை வினாவும், ஏவறும் வினா — ஏவற் பொருள் தரவரும் ஏவலைத் தரும் வினாவும், ஆறு மிழுக்கார் — இவ்வாறு வகை வினாவையும் தப்ப வழங்கார் கற்றோர், எ—று.

உ—ம்.:—

எதிர்வாதியால் வரும் வினா எதிரியை அளத்தற்கும் அறியாமை காட்டுதற்கும் அச்சூத்திரப் பொருள் யாது? இப்பதம் முடிந்தவாறு என்னை? என வினாவப்படும். ஆசிரியனும் அவ்வாறு ஒருவனை அளத்தற்கும் அறிவு கொடுத்தற்கும் அறிவினை விளக்குதற்கும் அவ்வாறு வினாவப்படும். அறியாமையால் வரும் வினா, தான் அறிதற்கு இச்சூத்திரப் பொருள் யாது?.... கோயிலுக்கு வழி யாது? என வினாவப்படும். ஐயத்தால் வரும் வினா, புகையோ பனியோ முகிலோ பரக்கின்றது என்பது உண்மை உணர்தற்கண் வினாவப்படும். நீரோ பேய்த்தேரோ தோன்றுகின்றது என்பது கோடற்கு வினாவப்படும் கொள்ளுதல் வினா. மணியுளவோ? வயிரமுளவோ? எனவும் கோடற்கு வினவப்படும். கொடுத்தற்கு வரும் வினா: சாத்தனுக்கு ஆடை இல்லையோ? என்பது கொடுத்தற்கு வினாவப்படும். ஏவற்கண் வரும் வினா: சாத்தா உண்டாயோ? என்பது ஏவற்கு வினாவப்படும். இவற்றின் வழு மேலே வந்ததென்க.

விசாகப் பெருமாளையர்

இது, வினாவின் பெயரு முறையுந் தொகையு முணர்த்துகின்றது.

இ—ள்.: அறிவு — அறிதலும், அறியாமை — அறியாமையும், ஐயுறல் — சந்தேகித்தலும், கொளல் — கொள்ளுதலும், கொடை — கொடுத்தலும், ஏவல் — ஏவுதலும், தரும் — தருதலால் வருகிற, வினா—வினாக்கள், ஆறும் — ஆறனையும், இழுக்கார் — களையாது கொள்வர் புலவர், எ—று.

வ—று.:—

ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள்யாது என்பது, அறிவினா. மாணாக்கன் அப்படிச் சொல்வது, அறியாவினா.

குற்றியோ மகனோ என்பது, ஐயவினா. பயறுளதோவணிகீர் என்பது கொளல்வினா. சாத்தனுக் ஆடையில்லையா என்பது, கொடைவினா. சாத்தாவுண்டாயா என்பது, ஏவல்வினா.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

வினா இத்தனை என்பதும் வழுவமைதியுங் கூறுஞ் சூத்திரம் யாது?

அறிவறி யாமை யையுறல் கொளல் கொடை
எவறரும் வினா வாறு மிழுக்கார்.

(அறிவு அறியாமை ஐயுறல் கொளல் கொடை எவல் தரும் வினா ஆறும் இழுக்கார்.)

இ–ள்.:– அறிதலும் அறியாமையும் சந்தேகித்தலும் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும் தருதலால் வரும் வினாக்கள் ஆறனையுங்களையாது கொள்வர் புலவர். எ–று.

அறிவினாவாவது யாது?

தானறிந்ததைப் பிறர்க்குணர்த்துதல் முதலிய காரணங்களால் வினாவுதல் அறிவினாவாம்.

அறியாவினாவாவது யாது?

தான் அறியாத ஒன்றை அறிந்தான்பால் வினாவுதல் அறியாவினா.

ஐயவினாவாவது யாது?

துணிவுபிறவாத பொருளின்மேல் வினாவுதல் ஐயவினா.

கொளல்வினாவாவது யாது?

உடையார்பால் ஒன்று பெறுமாறு வினாவுதல் கொளல்வினா.

கொடைவினாவாவது யாது?

குறைதீர்த்தற்கு வினாவும் வினா.

ஏவல்வினாவாவது யாது?

கருமம் முடிக்கத் தூண்டும்வினா ஏவல்வினாவாம்.

வ–று.:–

(1) ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்பது அறிவினா.

(2) மாணாக்கன் அப்படிச் சொல்வது அறியாவினா.

(3) குற்றியோ மகனோ என்பது ஐயவினா.

(4) பொன்னுண்டோ வணிகீரே என்பது கொளல்வினா.

(5) சாத்தனுக்காடையில்லையா என்பது கொடைவினா.

(6) சாத்தாவுண்டாயா என்பது ஏவல்வினா.

முகவை இராமானுச கவியராயர்

இது, நிறுத்தமுறையே வினாவின் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்திய முகத்தால்அதன் வழாநிலை கூறுகின்றது.

இ—ள்.: —அறிவறியாமையை யுறல் கொளல் கொடை யேவல் — அறிவும் அறியாமையும் சந்தேகப்படுதலும் கொள்ளுதலும் கொடுத்தலும் ஏவுதலும், தரும் வினாவாறும் – ஆகிய அறுவகைப் பொருளையுந் தரும் அறுவகை வினாக்களையும், இழுக்கார் – வழுவாது கூறுவர் புலவர், எ—று.

வ—று.:—

ஆசிரியன் மாணாக்கனை நோக்கி, இச் சூத்திரத்திற்குப் பொருள்யாது என்பது அறிவினா. மாணாக்கன் ஆசிரியனை நோக்கி, அவ்வாறு கூறுவது அறியாவினா. குற்றியோ மகனோ என்பது ஐயவினா. பொன்னுளதோ மணியுளதோ என்பது கொளல் வினா. சாத்தனுக்கு ஆடை இல்லையோ என்பது கொடுத்தற் பொருட்டு வினாவுதலால், கொடை வினா. சாத்தா உண்டாயோ என்பது அவனை யேவுதற் பொருட்டாதலால், ஏவல்வினா. இவற்றுள், அறிவு அறியாமை ஐயம் என்னும் மூன்றேயொழிய வினாவைத் தருவது வேறொன்றில்லை யாதலால் அம் மூன்றையு முற்கூறிப் பின்னைய மூன்றும் அவற்றுள் அடங்குமாயினும் பொருள் விசேடம் பற்றி விளங்குதற் பொருட்டுப் பிற்கூறி, அதுவுந்தொன்று தொட்ட நெறிதானென்று சொல்ல வந்தவர், இழுக்கார் என்று புலவர்மேல் வைத்துங் கூறினார்.

"அறியான் வினாவ லறிவொப்புக் காண்டா யலை
மறுத்த லவனறிவு தான்கோடன்
மெய்யவற்குக் காட்டலோடை வகை வினாவே"

எனப் பிறர் கூறிய ஐவகையுள், அறிவொப்புக்காண்டலும் அவனறிவு தான் கோடலும் மெய்யவதற்குக் காட்டலும் அறிவினாவில் அடங்கின; ஆதலால் அவரும், அறிவு அறியாமை ஐயுறலென்னும் மூவகை வினாவையுமே யுடன்பட்டுக் கூறினாரெனக் காண்க. இதன் முடிவு விளங்கிற்று.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– அறிவு – அறிதலும், அறியாமை – அறியாமையும், ஐயுறல் – சந்தேகப்படுதலும், கொளல் – வாங்கிக்கொள்ளுதலும, கொடை – கொடுத்தலும், ஏவல் – ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும், தரும் – தருதலால் வருகின்ற, வினா ஆறும் – அறுவகைவினாக்களையும், இழுக்கார் – தவறாமற் கொள்ளுவர் (புலவர்)

உதாரணம்

1. ஆசிரியன் 'இக்கவிக்குப்பொருள்யாது?	என்பது	– அறிவினா.
2. மாணாக்கன் 'இக்கவிக்குப்பொருள்யாது?	”	– அறியாவினா.
3. குற்றியோ? மகனோ?	”	– ஐயவினா.
4. வணிகீரே! பயறு உள்ளதோ?	”	– கொளல்வினா.
5. இராமனுக்கு ஆடை இல்லையோ?	”	– கொடைவினா
6. இராமா உண்டாயா?	”	– ஏவல்வினா.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– அறிவு – அறிதலும், அறியாமை – அறியாமையும், ஐயுறல் – சந்தேகித்தலும், கொளல் – கொள்ளுதலும், கொடை – கொடுத்தலும், ஏவல் – ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும், தரும் வினா ஆறும் இழுக்கார் – தருதலால் வரும் வினாக்கள் ஆறானையுங் களையாது கொள்வர் புலவர், எ–று.

வ–று. :–

(1) ஆசிரியன், 'இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது' என்பது, அறிவினா.

(2) மாணாக்கன் அப்படிச் சொல்வது அறியாவினா.

(3) 'குற்றியோ மகனோ' என்பது, ஐயவினா

(4) 'பயறுளதோ வணிகீர்' என்பது, கொளல் வினா.

(5) 'சாத்தனுக்காடையில்லையா' என்பது, கொடை வினா.

(6) 'சாத்தா வுண்டாயா' என்பது, ஏவல் வினா.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– அறிவு – அறிதலும், – அறியாமை – அறியாமையும், – ஐயுறல் – சந்தேகித்தலும், – கொளல் – கொள்ளுதலும், – கொடை – கொடுத்தலும், – ஏவல் – ஏவுதலுமாகிய அறுவகைப் பொருளையும், – தரும் வினா ஆறும் இழுக்கார் – தருதலால் வரும் வினாக்கள் ஆறனையுந் தள்ளாது கொள்ளுவர் புலவர். எ–று.

வ—று.:—

(1)ஆசிரியன் இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது என்பது அறிவினா.

(2)மாணாக்கன் அப்படிச் சொல்வது அறியாவினா.

(3)குற்றியோ மகனோ என்பது ஐயவினா.

(4)பயறுளதோ வணிகீர் என்பது கொளல்வினா.

(5)சாத்தனுக்காடையில்லையா என்பது கொடைவினா. (கொடுக்கக் கருதி வினாவியது).

(6)சாத்தா வுண்டாயா என்பது ஏவல்வினா. (உண் என்னும் ஏவலைப் பயப்பது.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— அறிவு — அறிதலும், அறியாமை — அறியாமையும், ஐயுறல் — சந்தேகப்படுதலும், கொளல் — வாங்கிக்கொள்ளுதலும், கொடை — கொடுத்தலும், ஏவல் — ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையும், தரும் — தருதலால் வருகின்ற, வினா ஆறும் — ஆறுவகை வினாக்களையும், இழுக்கார் — தவறாமல் கொள்வர், புலவர், எ—று.

உ—ம்.:—

(1) ஆசிரியன் 'இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது?' என்பது — அறிவினா.

(2) மாணாக்கன் 'இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது?' என்பது — அறியாவினா.

(3) 'குற்றியோ? மகனோ?' என்பது — ஐயவினா.

(4) 'பயறு உள்ளதோ வணிகரே?' என்பது — கொளல்வினா.

(5) 'சாத்தனுக்கு ஆடையில்லையோ?' என்பது — கொடைவினா.

(6) 'சாத்தா! உண்டாயா?' என்பது — ஏவல்வினா.

(அறிவினா — தான் ஒருபொருளை அறிந்திருந்து அப்பொருள் பிறர்க்குத் தெரியுமா வென்பதை அறிதற்பொருட்டு அதனைக் குறித்துப் பிறரைக் கேட்பது. அறியாவினா — தான் அறியாத ஒரு பொருளை அறிந்து கொள்ளுதற் பொருட்டுப் பிறரைக் கேட்பது. ஐயவினா — தனக்குச் சந்தேகமாயிருப்பதொரு பொருளை அச்சந்தேகம் தீர்த்துக் கொள்ளுதற் பொருட்டுப் பிறரைக் கேட்பது. கொளல்வினா — தான் ஒருபொருளை வாங்கிக் கொள்ளுதற்பொருட்டு அப்பொருள் இருத்தலைப்

பற்றிப் பிறரைக் கேட்பது. கொடை வினா – தான் ஒருபொருளைக் கொடுத்தற் பொருட்டு அப்பொருள் இருத்தலைப் பற்றிப் பிறரைக் கேட்பது. ஏவல்வினா – தான் ஒருதொழிலைச் செய்யும்படி ஏவுதற் பொருட்டு அத்தொழிலின் நிகழ்ச்சியைப் பற்றிப் பிறரைக் கேட்பது.)

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– அறிவு அறிதலும், அறியமை – அறியாமையும், ஐயுறல் – சந்தேகித்தலும், கொளல் – கொள்ளுதலும், கொடை – கொடுத்தலும், ஏவல் – ஏவுதலுமாகிய அறுவகைப்பொருளையும், தரும்வினா ஆறும் –தருதலால் வரும் வினாக்கள் ஆறனையும், இழுக்கார் – களையாது கொள்வர் புலவர் எ–று.

இதனை இயல்புக்கும்.

இதனை மிகுதிக்கும் உதாரணாகக் காட்டினார் மயிலைநாதர். இச்சூத்திர சம்பந்தமான பிற குறிப்புக்களை உரைவிகற்ப அனுபந்தத்திற் காண்க.

வ–று.:–

(1) ஆசிரியன இச் சூத்திரத்தைப் பொருள்யாது என்பது அறிவினா.

(2) மாணாக்கன் அப்படி ச்சொல்வது அறியாவினா.

(3) குற்றியோ மகனோ என்பது ஐயவினா.

(4) பயறுளதோ வணிகீர் என்பது கொளல்வினா.

(5) சாத்தனுக்காடையில்லையா என்பது கொடைவினா.

(6) சாத்தா வுண்டாயா என்பது ஏவல்வினா.

இவற்றுள், அறிவு, அறியாமை, ஐயம் என்னும் மூன்றேயொழிய வினாவைத்தருவது வேறொன்றில்லையாதலல் அம் மூன்றையும் முற்கூறிப், பின்னைய மூன்றும் அவற்றுள் அடங்குமாயினும் பொருள் விசேடம்பற்றி விளங்குதற் பொருட்டுப் பிற்கூறி, அதுவும் தொன்று தொட்ட நெறிதான் என்று சொல்லவந்தவர் 'இழுக்கார்' என்று புலவர் மேல் ஏற்றிக் கூறுனார்.

அறிவினா – தனக்குத் தெரிந்ததொன்றைக் கேட்பது. அறியாவினா தனக்குத் தெரியாததொன்றைக் கேட்பது. ஐயவினா – தனக்குச் சந்தேகமாயிருப்பதொன்றைக் கேட்பது. கொளல்வினா – வாங்கும் பொருட்டுக் கேட்பது. கொடைவினா – கொடுக்கும் பொருட்டுக் கேட்பது. ஏவல் வினா – ஏவும் பொருட்டுக் கேட்பது.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) அறிவு – அறிதலும், அறியாமை – அறியாமையும், ஐ உறல் – சந்கேித்தலும், கொளல் – கொள்ளுதலும், கொடை – கொடுத்தலும், ஏவல் – ஏவுதலும் ஆகிய பொருள்களை, தரும் வினா ஆறும் – தருதலால் வருகிற வினாக்கள் ஆறனையும், இழுக்கார் – களையாது கொள்வர் (புலவர்). (எ–று)

(பொ–ரை.) அறிதல் அறியாமை முதலாகிய பொருள்களைத் தருதலால் வருகிற வினாக்களாறனையும் களையாது கொள்வர் (புலவர்).

(உ–ம்.)

(1) இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது?

(ஆசிரியன் கேள்வியாயின்) அறிவினா

(2) இச் சூத்திரத்திற்குப் பொருள் யாது?

மாணக்கன் கேள் வியாயின்) அறியாவினா

(3) குற்றியோ மகனே? ஐயவினா.

(4) பயறுளதோ வணிகரே? கொளல்வினா.

(5) சாத்தனுக் காடையில்லையோ? கொடைவினா.

(6) சாத்தா உண்டாயா? ஏவல்வினா.

கா. நமச்சிவாய முதலியார்

அறிவு – அறிதலும், அறியாமை – அறியாமையும், ஐயுறல் – சந்தேகித்தலும், கொளல் – கொள்ளுதலும், கொடை – கொடுத்தலும், ஏவல் – ஏவுதலும், தரும் வினா – தருதலால் வருகின்ற வினாக்கள், ஆறும் – ஆறனையும், இழுக்கார்– களையாது கொள்வர் புலவர்.

உதாரணம்

1. இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? என ஆசிரியன் கேட்டல். – அறிவினா.
2. இச்சூத்திரத்திற்குப் பொருள் யாது? என மாணாக்கன் கேட்டல் – அறியாவினா
3. குற்றியோ மகனோ? – ஐயவினா.
4. பயறுளதோ வணிகீர்? – கொளல் வினா
5. சாத்தனுக்கு ஆடை யில்லையா? – கொடை வினா
6. சாத்தா, உண்டாயா? – ஏவல் வினா

மோசசு பொன்னையா

அறிதலும், அறியாமையும், சந்தேகங் கொள்ளுதலும், வாங்கிக் கொள்ளுதலும், கொடுத்தலும், ஏவுதலும் ஆகிய அறுவகைப் பொருளையுந் தருமாறு வரும் அறுவகை வினாக்களையும் நீக்காது கொள்வர் புலவர் எ–று.

எ–டு.:–

1. (மாணவனிடம்) இந்நூற்பாவின் பொருள் யாது?
–அறிவினா

2. (ஆசிரியரிடம்) இந்நூற்பாவின் பொருள் யாது?
–அறியா வினா

3. குற்றியோ மகனோ? –ஐயவினா

4. பயறுளதோ வணிகீர்? –கொளல் வினா

5. மகனே கைச்செலவுக்குப் பணம் இருக்கிறதா?
–கொடை வினா

6. மகனே உண்ணாயோ? –ஏவல் வினா

தொல்காப்பியர், 'செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்' என்றே கூறிச் சொன்றார். அதன் உரையில் இளம்பூரணர் வினா ஐந்து வகைப்படும்; அறியான் வினாதல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவு தான்கோடல், மெய்யவதற்குக் காட்டல் என' என்றார். சேனாவரையர் அறியான் வினா, ஐயா வினா, அறிபொருள் வினா என வினா மூவகைய என்றார். இவற்றை,

அறியான் வினாவ லறிவொப்பக் காண்ட
லைய மறுத்த லவனறிவு தான்கோடன்
மெய்யவதற்குக் காட்டலோ டைவகை வினாவே,

என ஐவகைய வேன இவ்வாறும், பிறவாறும் கூறுவாறும் உளர்.

(34)

385. சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

சுட்டு மறை நேர் ஏவல் வினாதல்
உற்றது உரைத்தல் உறுவது கூறல்
இனமொழி எனும் எண் நிறையுள் இறுதி
நிலவிய ஐந்தும் அப் பொருண்மையின் நேர்ப.

suttu maūai nēr ēval vinātal
uūūatu uraittal uūuvatu kūūal
inamoli enum en iūai ul iūuti
nilaviya aintu um a porunmaiyin nērpa

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Eight kinds of answers

Among the eight kinds of answers, viz., indication, negation, affirmation; and command, question, stating what has happened, what is to happen and what is connected with the subject questioned, the learned have included the last five as they have the nature of indirect replies.

ஒப்புமைப் பகுதி

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்

(தொல்.சொல். 13)

ஓதும் எதிர்வினா உற்ற துரைத்தலும்
ஏவல் உறுவதுகூற் றிந்நான்கும்–பேதாய்
மறுத்தல் உடன்படுதல் அன்றெனினு மன்ற
இறுத்தலே போலும் இவை

(நேமி.:31)

வினாய பொருளறி வுறுப்பது செப்பது
செவ்வ னிறையு மிறைபயப் பதுவு
மெனவிரு வகைத்தா மவற்றுளிறை பயப்பது
வினாவெதிர் வினாதலு மேவலு மறுத்தலு
முற்றது உரைத்தலு முறுவது கூறலு
நேர்தலுஞ் சொற்றொகுத் திறுத்தலு மென்னத்
தேரி னோரேழ் திறனுடைத் தென்ப

(இ.வி.:308)

செறிவினாப்பொருளை அறிவுறுப்பது செப்பு அதுவே
செவ்வன்இறை இறைபயப்பாம் அவற்றின் இறை பயப்பே
உறுவது உற்றீர வினா ஏவல் மறுத்திடலே
உடன்படல் சொற்றொகுத்து இறுத்தல் ஏழெனச்
சான்றனவே.

(சுவாமி.:60:3–4)

மயிலை நாதர்

எ–ன், செப்பு வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: இவ்வெட்டினுள்ளும் முதன்மூன்றும் செவ்வன் இறையாம்; ஏவல் முதலைந்தும் செப்பின் பொருண்மையாய் வருதலின் அவற்றையும் செப்பெனக் கொள்வர் புலவர், எ–று.

வ–று.:–

அறிவானொருவனை ஒருவன் 'இச்சொற்குப் பொருள் யாது? மதுரைக்கு வழி யாது?' என்றவழி, இஃதென்பது சுட்டு. சாத்தா உண்ணாயோ? என்றால், உண்ணேனென்பது மறை; உண்பேனென்பது நேர்தல்; நீ உண் என்பது ஏவல்; உண்ணேனோ? என்பது வினாவெதிர் வினாதல்; வயிறுகுத்திற்றென்பது உற்றது உரைத்தல்; வயிறுகுத்து மென்பது உறுவதுகூறல். 'மணியுளவோ? பயறுளவோ?' என்றால், வயிரமுள உழுந்துளவென்பது இனஞ்செப்பல்.

இனி, 'நிலவிய' என்ற மிகையானே, வினாவின்றியும் செப்பு வருவனவுமுள வென்க; அறிவானொருவன், இன்னநாட் காற்றடிக்கும்; இன்னநாள் மழைபெய்யும்; இன்னநாள் வாழ்வுவருமென்பனவும், ஆறுசெல்வானொருவன், 'கங்கையாடிப்போந்தேன், ஒருபிடி சோறு தம்மின்; ஓராடை தம்மின்' என்பனவுமாம். பிறவுமன்ன. இவற்றின்வழு மேலே காட்டினாம்.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இறையின் பெயரும் முறையும் தொகையும் வழுவமைதியும் உணர் –ற்று.

இ–ள்.:– இவ்விறை எட்டனுள், முன்னைய மூன்றும் செவ்வன் இறையாம்; பின்னைய ஐந்தும் இறைப்பொருள் பயத்தலின் இறையாகத் தழீஇக்கொள்வர் புலவர், எ–று.

எனவே இறையாவது செவ்வன் இறையும்; இறை பயப்பதும் என இருகூற்றதாம் என்க.

வ–று.:–

வஞ்சிக்கு வழி யாது என்றவழி, 'இது' என்றும், மாவீழ் நொச்சி என்பதற்குப் பொருள் யாது என்றவழி, 'வண்டு வீழ்ந்து தேன் உண்ணும் நொச்சிப்பூ' என்றும் கருதிக் கூறும் தொடக்கத்தன எல்லாம் சுட்டு. சாத்தா இது செய்வாயோ என்றவழிச் 'செய்யேன்' என்பது மறை; செய்வேன் என்பது நேர்; நீ செய் என்பது ஏவல்; செய்வேனோ என்பது வினாதல். இவ் ஒகார இடைச்சொற்கு எதிர்மறை முதலிய பொருள் விலக்கி ஆற்றலான் வினாப்பொருளே கொள்க. உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பது நிகழ்காலமாயினும் நோவு எழுந்த காலங்கருதி உற்றதுரைத்தலாயிற்று. உடம்பு நோம் என்பது உறுவது கூறல். மற்றையது செய்வேன் என்பது இனமொழி.

இறை பயப்பனவற்றுள் வினாவெதிர் வினாதல் ஒன்றும் நேர்தற்பொருளையும் ஏனைய நான்கும் மறைப்பொருளையும் பயத்தல் காண்க.

இறை பயப்பனவற்றை நிலவிய என விசேடித்தமையின் நிலவா தனவும் சில உள எனப் பொருளுரைத்துச் செய்வேனோ என எதிர்மறை ஒகாரமாயும் யானோ செய்வேன் எனச் சிறப்பு ஒகாரமாயும்நின்று செய்யேன் என்னும் இறைப்பொருள் பயந்து வருதலும், பிறவும் கங்கையாடிப் போந்தேன் ஒருகூறையீக என வினாஇல்வழி இறைநிகழ்தலும் கொள்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், செப்பு வழுவமைப்புக் கூறுகின்றது.

இ–ள்.:– சுட்டு – இச்சூத்திரப்பொருள் யாதென இது என்னும் சுட்டு விடையும், மறை – உண்ணாயோ என்றால் உண்ணேன் என மறை விடையும், நேர் – உண்ணாயோ என்றால் உண்பேன் என நேர் விடையும், ஏவல் – உண்ணாயோ என்றால் உண் என ஏவல் விடையும், வினாதல் – உண்ணாயோ என்றால் உண்ணேனோ என எதிர் வினா விடையும், உற்ற துரைத்தல் – உண்ணப்போ என்றால் வயிறு குத்திற்று என உற்றது உரைக்கும் விடையும், உறுவது கூறல் – உண்ணாயோ என்றால் வயிறு குத்தும் என உறுவது கூறும் விடையும், இனமொழி – உண்ணாயோ என்றால் பலகாரம் தின்பேன் என இன விடையும், எனுமெண்ணிறையுள் – என்று சொல்லப்படும் இவ்வெட்டு வகைச் சொல்லினுள்ளே முதல் மூன்றும் செவ்விதான விடையாம்; இறுதி நிலவிய வைந்தும் – ஈற்றினின்ற ஏவல் முதல் அவ்வைந்து விடையும் விடைப் பொருண்மையாய் வருதலின், அப்பொருண்மையினேர்ப – அவற்றையும் செவ்விதாகிய விடையென்று கொள்ளுவர் புலவர், எ–று. இவற்றின் வழு மேலே வந்ததென்க.

"நிலவிய" என்ற மிகையானே வினா அன்றியும் உத்தரமும் வருவனவும் உள. வழிச் செல்வான் ஒருவன் கங்கை ஆடிப் போந்தேன் ஒருபிடி சோறு தருமின் என வரும்.

விசாகப் பெருமாளையர்

இது, விடையின் பெயரு முறையுந் தொகையும் வழுவமைதியும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– **சுட்டு** – சுட்டும், **மறை** – எதிர்மறுத்தலும், **நேர்** – உடன்படலும், **ஏவல்** – ஏவுதலும், **வினாதல்** – எதிர்வினாவுதலும், **உற்றதுரைத்தல்** – உற்றதைச் சொல்லுதலும், **உறுவதுகூறல்** – உறுவதைச் சொல்லுதலும், **இனமொழி** – இனத்தைச் சொல்லுதலும், **எனும்** – என்கிற, **எண்ணிறையுள்** – இவ்வெட்டு விடைகளுள், **இறுதி** – ஈற்றில், **நிலவிய** – விளங்கிய, **ஐந்தும்** – ஐந்தும், **அப் பொருண்மையின்** – அவ் விடைப்பொருளைத் தருதலினாலே, **நேர்ப** – விடைகளாகவே தழுவிக்கொள்வார் புலவர், எ–று.

(எனவே முதன்மூன்றுஞ் செவ்வனிறையும் பின்னைய வைந்து மிறைபயப்பனவுமா மென்பதாயிற்று.)

வ–று.:–

கருவூர்க்கு வழியாதெனின், இது, என்பது, **சுட்டுவிடை.** சாத்தாயிது செய்வாயா என்றபோது, செய்யேன் என்பது **மறைவிடை.** செய்வேன் என்பது **நேர்விடை.** நீசெய் என்பது **ஏவல்விடை.** செய்வேனோ என்பது **வினாவிடை.** உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன **உற்றதுரைத்தல் விடை.** உடம்புநோம் என்பது **உறுவதுகூறல் விடை.** மற்றையது செய்வேன் என்பது **இனமொழி விடை.**

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

விடைவகையும் வழுவமைதியுங் கூறுஞ்சூத்திரம் யாது?

சுட்டு மறைநே ரேவல் வினாதல்
உற்ற துரைத்த லுறுவது கூறல்
இனமொழி யெனுமெண் ணிறையு ளிறுதி
நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.

(சுட்டு மறை நேர் ஏவல் வினாதல் உற்றது உரைத்தல் உறுவது கூறல் இனமொழி எனும் எண்ணிரையுள் இறுதி நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப.)

இ–ள்.:– சுட்டும் எதிர்மறுத்தலும் உடன்படலும் ஏவுதலும் எதிர் வினாவுதலும் உற்றதைச் சொல்லுதலும் உறுவதைச் சொல்லுதலும்

இனத்தைச்சொல்லுதலும் என்னும் இவ்வெட்டுவிடைகளுள் ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப்பொருளைத்தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்வார்புலவர்.

எனவே, முதன்மூன்றுஞ் செவ்வனிறையும், பின்னையவைந்தும் இறைபயப்பனவுமாமென்பதாயிற்று.

வ—று.:—

(1) தில்லைக்கு வழியாது எனின், இது என்பது சுட்டுவிடை.

(2) சாத்தாவிதுசெய்வாயா என்றபோது, செய்யேனென்பது மறைவிடை.

(3) செய்வேனென்பது நேர்விடை.

(4) நீ செய் என்பது ஏவல்விடை.

(5) செய்வேனோ என்பது வினாவிடை.

(6) உடம்புநொந்தது, நோவா நின்றது என்பன உற்றதுரைத்தல்விடை.

(7) உடம்புநேரம் என்பது உறுவதுகூறல்விடை.

(8) மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை.

முகவை இராமானுச கவிராயர்

இது, நிறுத்த முறையே விடையின் பெயரும் முறையுந் தொகையு முணர்த்திய முகத்தால் அதன் வழாநிலையும் வழுவமைதியுங் கூறுகின்றது. (முகம் — இடம்.)

இ—ள்.:— **சுட்டு மறை நேரேவல் வினாத லுற்றதுரைத்தல் உறுவது கூறல் இனமொழி யெனு மெண்ணிறையுள்** — சுட்டிக் கூறுதலும் மறுத்துக் கூறுதலும் உடன்பட்டுக் கூறுதலும் ஏவுதலும் வினாவிக் கூறுதலும் தனக்கு அப்போதிருந்ததைச் சொல்லுதலும் மேல்வருவதைச் சொல்லுதலும் வினாவினதற்கு இனமானதைக் கூறுதலுமாகிய எட்டுவகை விடையுள், **இறுதி நிலவிய வைந்தும் பொருண்மையினேர்ப** — கடையிலே நின்ற ஏவல் முதலிய வைந்தும் விடைப்பொருளைக் குறிப்பினாலே தந்து நிற்றலால் விடை யெனத் தழுவிக் கொள்வர் புலவர், எ—று.

எனவே, விடையாவது வெளிப்படை விடையும், குறிப்புவிடையு மென இருவகைப்படு மென்பதாயிற்று. அவற்றுள், சுட்டு மறை நேர் என்னு மூன்றும் வெளிப்படை விடை; மற்றவைந்துங் குறிப்புவிடை. வெளிப்படை விடையைச் செவ்வனிறை யென்றும், குறிப்பு விடையை இறைபயப்ப தென்றுங் கூறுவர். (இறை—விடை, செவ்வன் — நேர்,).

வ—று.:—

கருவூர்க்கு வழியாதென வினாவின் இதுவென்றும், 'கவர்படு பொருண்மொழி' யென்பதற்குப் பொருள் யாதெனின், இரு பொருளுக்கியைந்து நிற்கும் மொழியென்றுங் குறித்துக் கூறுந் தொடக்கத்தன வெல்லாஞ் சுட்டுவிடை. சாத்தா இது செய்வாயொ வெனின், செய்யேனென்பது மறைவிடையும், செய்வேனோ என்பது வினாதல் விடையும், உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றதுரைத்தல் விடையும், உடம்புநோம் என்பது உறுதுவது கூறல் விடையும், மற்றையது செய்வேன் என்பது இனமொழி விடையும் என முறையே வந்தவாறு காண்க. குறிப்புவிடையுள் வினாவெதிர் வினாவலொன்றும் உடன்படற் பொருளையும் ஒழிந்த நான்கும் மறுத்தற் பொருளையுங் குறிப்பினாலே தந்தவாறு காண்க.

இனிக் குறிப்பு விடையை 'நிலவிய'வெனச் சிறப்பித்ததினாலே நிலவாதனவும் அவற்றுட் சிலவுளவெனப் பொருளுரைத்துக் கொள்க. அவை: நேர்தலும், சொற்றொகுத்திறுத்தலும், சொல்லாதிறுத்தலுமாம். அவை வருமாறு:- சாத்தா உண்பாயோ எனின், பசித்தேன் பொழுதாயிற்று எனவும் பயறுளவோ எனின் உழுந்தல்லதில்லை, உழுந்துந் துவரையுமல்லதில்லை எனவும், சாத்தா உண்பாயோ ஏனின் பேசாதிருத்தல் எனவும் முறையே காண்க. பேசாதிருத்தலதற்குடன் பட்டு உண்பேனென விடை கொடுத்ததாயிற்று, ஆதலால் சொல்லாதிறுத்தலும், ஓர் விடையாயிற்று. (சொல்லாமல் விடை கொடுத்தல் – சொல்லாதிறுத்தல், இறுத்தல் – விடை கொடுத்தல்,) வெளிப்படையுள் வந்த நேர்விடை நேராக ஒரு சொல்லாற் கூறியவிடை (நேர் – செவ்வை,) எனவும்; குறிப்பினுட்கூறிய நேர்விடை அவ்வாறன்றி வேறுசில மொழிகளாலே விடைப்பொருள் தோன்ற வுடன்பட்டுக் கூறுதல். (இங்கே நேர்தல் – உடன்படுதல்,) எனவுங் காண்க. இன்னும் இக்குறிப்பு விடையுள் நீயிது செய்வாயோ எனின், செய்வேனோ என எதிர்மறை யோகாரமாகியும், யானோசெய்வேன் எனச் சிறப்போ ரகாரமாகியும் நின்று செய்யேனென்று விடைப்பொருள் தருதலும்; கங்கையாடி வந்தேன் ஒருகூறைகொடுமின் என வினாவில்வழி விடை வருதலுங் கொள்க. இவற்றுள் வெளிப்படை விடைவழா நிலையும் குறிப்பு விடை வழுவமைதியுமாம்.

"செப்பும் வினாவும் வழாஅ லோம்பல்" எனவும்,

"வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே" எனவும்

"செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே யப்பொருள் புணர்ந்த கிளயி யான"

எனவும், ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க. செப்பு, இறை, விடை, உத்தரம், மறுமொழி, எதிர்மொழி என்பன ஒருபொருள். வினா, கடா எனவும் வினவுதல், வினாவல், வினாதல், கடாவுதல், கடாவல் எனவும் வருவன ஒருபொருள், வினாவிய பொருளை அறிவுறுத்துஞ் சொல் விடை, அறியலுறவு வெளிப்படுத்துஞ் சொல்வினா, இச்சூத்திர முடிபுவிளங்கி நின்றது.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– **சுட்டு** – சுடடிக்கூறுதலும், **மறை** – எதிர்மறுத்துக் கூறுதலும், **நேர்** – உடன்பட்டுக்கூறுதலும், **ஏவல்** – ஏவுதலும், **வினாதல்** – எதிராக வினாவுதலும், **உற்றது உரைத்தல்** – நேர்ந்ததைச் சொல்லுதலும், **உறுவதுகூறல்** – இனிநேருவதைச் சொல்லுதலும், **இனம் மொழி** – (வினாவினதற்கு) இனமானதைச் சொல்லுதலும், **எனும்** – என்ற, **எண் இறையும்** – இவ்வெட்டு வகை விடைகளுள், **இறுதி நிலவிய ஐந்தும்** – கடையில் நின்ற ஏவல் முதலியன ஐந்தும், **அப்பொருண்மையின்** – அவ் விடைப் பொருளைக் குறிப்பால் தருவதனால், **நேர்ப** – விடைகளென்று தழுவிக் கொள்வர் (புலவர்).

குறிப்பு :–

எனவே, முதல் மூன்றும் வெளிப்படை விடையும், மற்றை ஐந்தும் குறிப்பு விடையுமா மென்றதாயிற்று.

உதாரணம்

1. உறையூர்க்கு வழியாது?	என்றால்	'இது'	என்பது	– சுட்டுவிடை
2. இது செய்வாயா?	”	'செய்யேன்'	”	– மறைவிடை.
3. ” ”	”	'செய்வேன்'	”	– நேர்விடை.
4. ” ”	”	'நீ செய்'	”	– ஏவல்விடை.
5. ” ”	”	'செய்வேனோ'	”	– வினாவிடை.
6. ” ”	”	'உடம்புநொந்தது'	”	– உற்றதுரைத்தல்விடை
7. ” ”	”	'உடம்புநோம்'	”	– உறுவது கூறல்
8. படிப்பாயா?	”	'எழுதுவேன்'	”	– இனமொழி விடை

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– சுட்டு – சுட்டும், மறை – எதிர்மறுத்தலும், நேர் – உடன்படலும், ஏவல் – ஏவுதலும், வினாதல் – எதிர் வினாவுதலும், உற்றது உரைத்தல் – உற்றதைச் சொல்லுதலும், உறுவது கூறல் – உறுவதைச் சொல்லுதலும், இனமொழி – இனத்தைச் சொல்லுதலும், எனும் எண்ணிறையுள் – என்னும் இவ்வெட்டு விடைகளுள், இறுதி நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப – ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப்பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்ளுவார் புலவர், எ–று.

எனவே, முதன் மூன்றுஞ் செவ்வனிறையும், பின்னைய வைந்தும் இறை பயப்பனவுமா மென்பதாயிற்று.

வ–று.:–

(1) 'தில்லைக்கு வழியாது' எனின், 'இது' என்பது, சுட்டு விடை.

(2) 'சாத்தாவிது செய்வாயா' என்றபோது, செய்யேனென்பது மறைவிடை.

(3) செய்வேனென்பது நேர்விடை

(4) நீ செய் என்பது ஏவல்விடை.

(5) செய்வேனோ என்பது வினாவிடை.

(6) உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றதுரைத்தல் விடை.

(7) உடம்பு நோம் என்பது உறுவது கூறல் விடை.

(8) மற்றையது செய்வேன் என்பது இனமொழி விடை.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– சுட்டு – சுட்டும், – மறை – எதிர்மறுத்தலும், – நேர் – உடன்படலும், – ஏவல் – ஏவுதலும், – வினாதல் – எதிர் வினாவுதலும், – உற்றது உரைத்தல் – முன் எய்தியதைச் சொல்லுதலும், – உறுவது கூறல் – பின் எய்துவதைச் சொல்லுதலும், – இனம் மொழி – இனத்தைச் சொல்லுதலும், – எனும் எண் இறையுள் – என்னுமிவ்வெட்டு விடைகளுள், – இறுதி நிலவிய ஐந்தும் அப்பொருண்மையின் நேர்ப – ஈற்றில் விளங்கிய ஐந்தும் அவ்விடைப் பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக் கொள்வார் புலவர். எ–று.

எனவே விடையாவது வெளிப்படைவிடையும் குறிப்பு விடையுமென இருவகைப்படுமென்பதாயிற்று. அவற்றுள் சுட்டு, மறை, நேர் என்னு மூன்றும் வெளிப்படைவிடை; ஏனைய ஐந்துங் குறிப்புவிடை, வெளிப்படை விடையைச் செவ்வனிறையென்றம், குறிப்பு விடையை இறைபயப்ப

தென்றுங் கூறுவர். (இறை – விடை).

எனவே முதன் மூன்றும் செவ்வன் இறையும், பின்னைய ஐந்தும் இறைபயப்பனவுமா மென்பதாயிற்று. (தாற்பரியார்த்தத்தால் 'விடையாகுதலை இறைபயப்பதென்றறிக.)

வ–று:–

(1) சிதம்பரத்திற்கு வழி யாது எனின், இது என்பது சுட்டுவிடை.

(2) சாத்தாவிது செய்வாயா என்றவழி, செய்யேன் என்பது மறைவிடை;

(3) செய்வேன் என்பது நேர்விடை;

(4) நீசெய் என்பது ஏவல்விடை;

(5) செய்வேனோ என்பது வினாவிடை;

(6) உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றதுரைத்தல் விடை;(7) உடம்புநோம் என்பது உறுவது கூறல் விடை; மற்றையது செய்வேன் என்பது இனமொழி விடை.

(சூ) 'செப்பும் வினாவும் வழாஅலோம்பல் எனவும். வினாவுஞ் செப்பேவினாவெதிர்வரின், எனவும். செப்பேவழீஇயினும் வரை நிலையின்றே, யப்பொருள் புணர்ந்தகிளவியான". எனவும். ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **சுட்டு** – குறித்துக்காட்டிக் கூறுதலும், **மறை** –எதிர்மறுத்துக் கூறுதலும், **நேர்** – உடன்பட்டுக் கூறுதலும், **ஏவல்** – எதிராக ஏவுதலும், **வினாதல்** – எதிராக வினாவுதலும், **உற்றது உரைத்தல்** – நேர்ந்ததைச் சொல்லுதலும், **உறுவது கூறல்** – இனி நேர்வதைச் சொல்லுதலும், **இனம் மொழி** – (வினாவியதற்கு) இனமானதைச் சொல்லுதலும், **எனும்** – என்ற, **எண் இறையுள்** – இவ்வெட்டு வகை விடைகளுள், **இறுதி நிலவிய ஐந்தும்** – கடையில் நின்ற (ஏவல் முதலிய) ஐந்தும், **அப்பொருண்மையின்** – அவ்விடைப்பொருளைக் குறிப்பால் தருதலினால், **நேர்ப** – (விடைகளென்று) தழுவிக் கொள்வர், புலவர்; எ–று.

எனவே, முதல் மூன்றும் வெளிப்படை விடையும், மற்றை ஐந்தும் எதிர்மறைப்பொருள் தரும் குறிப்புவிடையுமா மென்றதாயிற்று.

உதாரணம்.:

(1) 'உறையூர்க்கு வழி யாது?' என்று வினாவினால், 'இது' என்பது – **சுட்டு விடை.**

(2) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'செய்யேன்' என்பது – **மறை விடை.**

(3) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'செய்வேன்' என்பது – **நேர்விடை.**

(4) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'நீ செய்' என்பது –ஏவல் விடை.

(5) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'செய்வேனா?' என்பது – **வினாவெதிர் வினாதல் விடை.**

(6) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'உடம்புநொந்தது' 'நோவா நின்றது' என்பன, **உற்றதுரைத்தல் விடை.**

(7) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'உடம்பு நோம்' என்பது, **உறுவது கூறல் விடை.**

(8) 'இது செய்வாயா?' என்று வினாவியபோது, 'மற்றையது செய்வேன்' என்பது – **இனமொழி விடை.**

வினாவெதிர் வினாதல் விடையாவது – தான் ஒரு வினாவிற்குச் சொல்லும் உத்தரம் வேறொரு வினாவடிவமாய் இருப்பது.

உறுகின்றதுரைத்தலும், உற்றதுரைத்தலில் அடக்கப்பட்டது.

"இனி, 'நிலவிய' என்ற மிகையானே, வினா இன்றியும் செப்புவருவனவும் உள வென்க. அறிவானொருவன் 'இன்னநாள் காற்று அடிக்கும், இன்ன நாள் மழை பெய்யும், இன்னநாள் வாழ்வுவரும்' என்றலும், இரப்பவனொருவன் 'கங்கையாடிப் போந்தேன், ஒருபிடிசோறு தம்மின், ஓராடை தம்மின்' என்றலும் காண்க; பிறவும் அன்ன" என்பது, பழைய உரை.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– சுட்டு – சுட்டும், மறை – எதிர்மறுத்தலும், நேர் – உடன்படலும், ஏவல் – ஏவுதலும், வினாதல் – எதிர் வினாவுதலும், உற்றது உரைத்தல் – உற்றதைச் சொல்லுதலும், உறுவது கூறல் – உறுவதைச் சொல்லுதலும், இனமொழி – இனத்தைச் சொல்லுதலும், எனும் – என்னும், எண் இறையுள் – இவ்வெட்டு விடைகளுள், இறுதி நிலவிய ஐந்தும் – ஈற்றி;ல விளங்கிய ஐந்தும, அப்பொருண்மையின் நேர்ப –அவ்விடைப் பொருளைத் தருதலினாலே விடைகளாகவே தழுவிக்கொள்ளுவார் புலவர். எ–று.

எனவே, முதன்மூன்றுஞ் செவ்வளிறையும், பின்னையவைந்தும் இறை

பயப்பனவுமா மென்ப தாயிற்று. செல்வன் இறை – வெளிப்படை விடை. இறை பயப்பன – குறிப்பாக விடைப்பொருளைத் தருபவை. இறை – விடை.

வ–று.;–

(1) தில்லைக்கு வழி யாது எனின், இது என்பது சுட்டு விடை. சாத்தாவிது செய்வாயா என்றபோது,

(2) செய்யேனென்பது மறைவிடை.

(3) செய்வேனென்பது நேர்விடை.

(4) நீ செய் என்பது ஏவல் விடை.

(5) செய்வேனோ என்பதுமு வினாவிடை.

(6) உடம்பு நொந்தது, நோவாநின்றது என்பன உற்றதுரைத்தல் விடை.

(7) உடம்பு நோம் என்பது உறுவது கூறல் விடை.

(8) மற்றையது செய்வேன் என்பது இனமொழிவிடை.

கா. நமச்சிவாய முதலியார்

சுட்டு – சுட்டும், மறை – எதிர் மறுத்தலும், நேர் – உடன்படலும், ஏவல் – ஏவுதலும், வினாதல் – எதிர் வினாதலும், உற்றது உரைத்தல் – உற்றதைச் சொல்லுதலும், உறுவது கூறல் – உறுவதைச் சொல்லுதலும், இனம் மொழி – இனத்தைச் சொல்லுதலும், எனும் என இறையுள் – என்னும் இந்த எட்டு விடைகளுள், இறுதி – ஈற்றில், நிலவிய – விளங்கிய, ஐந்தும் – ஐந்தும், அப் பொருண்மையின் – அவ் விடைப் பொருளைத் தருதலினாலே, நேர் – விடைகளாகவே தழுவிக் கொள்வர் புலவர்.

எனவே முதன் மூன்றும் செவ்வன் இறை எனவும், பின்னைய ஐந்தும் இறை பயப்பன எனவுங் கொள்க.

(செவ்வன் இறை – வெளிப்படை விடை; இறைபயப்பது – குறிப்பு விடை. செவ்வன் – நேர்).

உதாரணம்

1. கருவூர்க்கு வழியாது எனின், 'இது' என்பது சுட்டு விடை.
2. சாத்தா இது செய்வாயா? என்றபோது, 'செய்யேன்' என்பது மறை விடை.
3. 'செய்வேன்' என்பது நேர் விடை.
4. 'நீ செய்' என்பது ஏவல் விடை.
5. 'செய்வேனோ' என்பது வினா விடை.

6. 'உடம்பு நொந்தது, நோவாநின்றது' என்பன உற்றது உரைத்தல் விடை.

7. 'உடம்புநோம்' என்பது உறுவது கூறல் விடை.

8. 'மற்றையது செய்வேன்' என்பது இனமொழி விடை.

மோசசு பொன்னையா

சுட்டிக்காட்டிக் கூறுதலும், எதிர்மறுத்துக் கூறுதலும், உடன்பட்டுக் கூறுதலும், ஏவுதலும், எதிர்மறுத்துக் கூறுதலும், நேர்ந்ததைச் சொல்லுதலும், இனி நேர்வதைச் சொல்லுதலும், இனத்தைச் சொல்லுதலும் என்னும் இவ்வெட்டு விடைகளுள் இறுதிக்கண் உள்ள ஏவல் முதலிய ஐந்தும் அவ்விடைப் பொருளையே தருதலின் விடைகளெனவே கொள்வர், எ–று.

எனவே முதற்கண் மூன்றும் செல்வன் இறை எனவும், பின்னைய ஐந்தும் குறிப்பால் இறை பயப்பன எனவும் கொள்க.

எ–டு.:–

1. மதுரைக்கு வழி யாது? எனின், இது எனல் –சுட்டுவிடை

2. சாத்தா இது செய்வாயோ? எனின், செய்யேன் எனல் – மறைவிடை

3. சாத்தா இது செய்வாயோ? எனின், செய்வேன் எனல் – நேர்விடை

4. சாாத்தா இது செய்வாயோ? எனின், நீ செய் எனல் – ஏவல் விடை

5. சாத்தா இது செய்வாயோ? எனின், செய்வேனோ? எனல் –வினா விடை

6. சாத்தா இது செய்வாயோ? எனின், உடம்பு நோகின்றது எனல் உற்ற துரைத்தல் விடை

சாத்தா இது செய்வாயோ? எனின், உடம்பு நொந்தது எனல்

7. சாத்தா இது செய்வாயோ? எனின், உடம்பு நோம் எனல் –உறுவது கூறல் விடை

8. சாத்தா இது செய்வாயோ? எனின், மற்றையது செய்வேன் எனல் இனமொழி விடை

தொல்காப்பியர்,

செப்பும் வினாவும் வழாஅல் லோம்பல்,
வினாவுஞ் செப்பே வினாவெதிர் வரினே,
செப்பே வழீஇயினும் வரைநிலை யின்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான,

என வினாவும் விடையும் பற்றி உரைத்துள்ளமை காண்க.

386. வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

வினாவினும் செப்பினும் விரவா சினை முதல்.

vin̲āvin̲ um seppin̲ um viravā sin̲ai mutal

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

The whols and its member

The whole and its member are not to be confounded in Questions and Answer

ஒப்புமைப் பகுதி

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே

(தொல்.சொல்.:16)

பிறழ்வுஞ் சினைமுதல் ஒவ்வாப் பிறசொல்
உறழ்வுஞ் சிதைந்த உரை

(நேமி.:30: 3-4)

செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே

(இ.வி.:309)

மயிலைநாதர்

என்-ன், இவ்விரண்டும் வழுவற்கவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ-ள்.: வினாவிடத்தும் எதிர்மொழி செப்புமிடத்தும் சினையும் முதலும் தம்முள் மயங்கப்பெறா, எ-று.

வ-று.:-

சாத்தனல்லனோ? கொற்றனல்லனோ? என வினாயவிடத்துச் சாத்தனிற் கொற்றனல்லன்; கொற்றனிற் சாத்தனல்லனென்க. சாத்தன் மயிர் நல்லவோ? கொற்றன் மயிர் நல்லவோ? என வினாயவழி, சாத்தன் மயிரிற் கொற்றன்மயிர் நல்ல; கொற்றன் மயிரிற் சாத்தன்மயிர் நல்லவென்க, பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ-னின், வினாவும் செப்பும் முதல் சினை ஒற்றுமை கருதி மெறுவக்கூறின் அமையா எனக் காத்தல், உணர் -ற்று.

இ–ள்.:– வினாவுதற்கண்ணும் செப்புதற்கண்ணும் சினை முதல்கள் ஒற்றுமைகருதி மயங்கக் கூறப்படா, எ–று.

வ–று.:–

'கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ' எனவும், 'சாத்தன் நல்லனோ கொற்றன் நல்லனோ' எனவும் இவ்வாறு வினாவினார்க்குக் கண் பிறழ்ந்தது கயல் பிறந்தது, சாத்தன் நல்லன் கொற்றன் நல்லவன் எனவும் வரும். பிறவும் அன்ன. எனவே கண் பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனை ஒழித்து அதனை உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும் இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும் இவ்வாறு முதலை வினவுவானும் செப்புவானும் அதனை ஒழித்துச் சினையை வினவுதலும் செப்புதலும் வழுவாம் என்பதாயிற்று.

இங்ஙனமாயின் குயிலோ கிளவி என வினவுவான் குயில் இசையைக் குயிலோ என்று வினவுதல் வழுவாம். பிற எனின்; – அவ்வாறு கூறுவான் குயிலைக் கருதாது அதன் இசையையே கருதிக் கூறுதலானும், குயிலிசையோ கிளவி என இசை என்னும் சொல் எஞ்சி நிற்றலானும் இத்தொடக்கத்தன வழு ஆகா என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், வினாவிடை இவ்விரண்டும் வழுவற்கு என்பது கூறகின்றது.

இ–ள்.:– வினாவினுஞ் செப்பினும் – வினாவினிடத்தும் விடையினிடத்தும், **விரவா சினைமுதல்** – சினை முதல் என்னும் இரண்டும் தம்முள் மயங்கப் பெறா, எ–று.

உ–ம்.:–

சாத்தான் நல்லனோ? கொற்றன் நல்லனோ? என வினவில் சாத்தனிற் கொற்றன் நல்லன்; கொற்றனிற் சாத்தன் நல்லன் என்க. சாத்தன் மயிர் நல்லவோ? கொற்றன் மயிர் நல்லவோ? எனில் சாத்தன் மயிரிற் கொற்றன் மயிர் நல்ல; கொற்றன் மயிரிற் சாத்தன் மயிர் நல்ல என்க. இவ்வாறன்றிச் சாத்தன் மயிரிற் கொற்றன் தாடி நல்ல எனில் ஆகாதென்க.

விசாகப் பெருமாளையர்

இது, வினாவும் விடையும் முதல் சினை வழுவாமை உணர்த்துகின்றது.

இ–ள்.: வினாவினும் – வினாவுதற்கண்ணும், **செப்பினும்** – விடைகொடுத்தற்கண்ணும், **சினை** – சினையும், **முதல்** – முதலும், **விரவா** – ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம், எ–று.

வ—று.:

கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ, என வினாவினார்க்குக் கண்பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது, எனல் வேண்டும், சாத்தனல்லனோ கொற்றனல்லனோ என வினாவினார்க்குச் சாத்தனல்லன், கொற்றனல்லன், எனல் வேண்டும். கண்பிறழ்ந்ததோ, என்பதற்கு அதனையுடையாளைக் குறித்து இவள் பிறழ்ந்தாளோ என வினாவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும் வழுவாம்.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சினையு முதலுந் தம்முண் மயங்கிவருதல் வழுவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினாவிலுஞ் செப்பினும் விரவா சினைமுதல்.

(வினாவினும் செப்பினும் விரவா சினை முதல்.)

இ—ள்.:—வினாவுதற்கண்ணும் விடைகொடுத்தற்கண்ணும் சினையும்முதலும் ஒற்றுமைகருதி மயங்கச் சொல்லப்படாவாம்.

வ—று.:—

கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ. எனவும், இவ்வாறு வினாவினார்க்குக், கண் பிறழ்ந்தது கயல்பிறழ்ந்தது; சாத்தனல்லன் கொற்ற னல்லன். எனவும் வரும். பிறவுமன்ன. எனவே, கண்பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனை யொழித்து அதனையுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், அவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும், இவ்வாறு முதலை வினாவுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

இச்சூத்திரக்கருத்தென்னையெனின், சினைக்குஞ் சினைக்கும், முதலுக்கும் முதலுக்கும், ஒப்புமையும் மாறுபாடும் கருதி வினாவுமிடத்தும் விடையளிக்குமிடத்தும், சினையோடு முதலையும் முதலோடு சினையையு மயங்கவையாது அவ்வப்பொருளுக்கு அவ்வப்பொருளையே வைத்தல் வேண்டும் எனபதாம்.

இவள்கண்ணி னிவள்கண் பெரியவோ என வினாவின் இவள்கண் பெரியவென்றும், எம்மரசனையொக்குமோ நும்மரசன் என வினவின் ஒவ்வான் என்றாயினும் ஒக்குமென்றாயினும் கூறல்வேண்டும். இவ்வாறன்றிக்

கண்ணுக்குத் தோளையும் தோளுக்குக் கண்ணையும் எடுத்தல் வழுவாம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, சினை முதல்களைப் பற்றி வினாவிடை நிகழும் வழாநிலை யுணர்த்திற்று.

இ–ள்.:–வினாவினும் செப்பினும் – வினாவுதற்கண்ணும் விடைகொடுத்தற்கண்ணும், **விரவா சினை முதல்** –சினையு முதலுமொன்றெனக் கருதிச், சினையொடு முதலும் முதலொடு சினையுமாக மயங்கக் கூறலாகா, எ–று.

வ–று.:–

சாத்திகண்பெரியவோ கொற்றிகண்பெரியவோ, சாத்தன் நல்லனோ கொற்றன்நல்லனோ என வினாவுதலும், அவ்வாறு வினாவினார்க்கு சாத்தி கண் பெரிய, கொற்றி கண் பெரிய, சாத்தன் நல்லன், கொற்றன் நல்லன் என விடை கொடுத்தலும் வழாநிலையாம். இவ்வாறன்றிக் கண்ணல்லவோ அவள் நல்லளோ என வினாவுதலும், கண்நல்ல அவள்நல்லள் எனச் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று. இனிக் 'குயிலோ கிளவி மயிலோ சாயல்' என வினாவுதல் வழுவாமெனின் அன்றெனக. என்னை குயிலினிசையையும். மயிலின் சாயலையுங் குறித்துக் கூறுதலாலும், இசை சாயல் என்பன இசையெச்சமாகக் குறைந்து நிற்றலாலும் இத்தொடக்கத்தன வெல்லாம் வழுவாகா வென்க.

இனி ஒன்றின்முடித்தலென்பதனால் ஒப்புமை கருதாது மாறுபடக் கூறும் பொருளிலும் ஒப்புமைப்பொருளிலும் வினாவிடைகள் நிகழுங்கால் முதல் சினைகள் விரவாமல் அவ்வப்பொருள்களுக்கு அவ்வப்பொருள் வரவேண்டு மெனவுங் கொள்க. அவை வருமாறு: இவன் கண்ணின் இவள்கண் பெரியவோ, எம்மரசனில் நும்மரசன் நீதி செய்வானோ – வினா. இவள் கண்ணின் இவள்கண் பெரிய, எம்மரசனில் நும்மரசன்நீதி செய்வான் – விடை. இவள் கண்களைக்காட்டிலும் என வருதலால் மாறுபடக்கூறும் பொருளாயிற்று. இவள்கண்ணோக்குமோ இவள்கண் எம்மரசனையொப்பானோ நும்மரசன் – வினா. இவள் கண்ணொக்கும் இவள்கண் எம்மரசனை யொப்பான் நும்மரசன். விடை. இவை ஒப்புமைப்பொருள், என வரும் பிறவு மன்ன. தன்னின முடித்தலென்பதினால் எண்ணுங் காலும் பவளமும்முத்தும் பொன்னும் என இனமொத்தனவே எண்ணுக

எனவும், முத்தும் குருக்கத்தியும் கானங் கோழியும் பொன்னு மென எண்ணலாகாதெனவுங் கொள்க.

"செப்பினும் வினாவினுஞ் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க. உறழ்பொருள் – உவமை கருதாது மாறுபடக் கூறும் பொருள், துணைப்பொருள் – ஒப்புமைப்பொருள், இதன் முடிவும் விளங்கிற்று.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– **வினாவினும்** – வினாவுதலிலும், **செப்பினும்** – விடை கொடுத்தலிலும், **சினைமுதல்** – சினையும் முதலும், **விரவா** – (ஒற்றுமை பற்றிச் சினையும் முதலும் 'ஒன்று' என்று எண்ணி முதலொடு சினையும் சினைபொடு முதலுமாக) மயங்கிச் சொல்லப்படாவாம்.

உதாரணம்

1. வினா : (a) கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ? வழாநிலை.
(b) அண்ணன் நல்லனோ? தம்பி நல்லனோ?
விடை : 'கண்பிறழ்ந்து' 'கயல் பிறழ்ந்தது'
'அண்ணன்நல்லன்' 'தம்பி நல்லன்'

2. வினா : (a) இவள் பிறழ்ந்தாளோ? கண் பிறழ்ந்ததோ?
விடை : (b) 'இவள் பிறழ்ந்தாள்' 'கண்பிறழ்ந்தது? வழு

குறிப்பு :– இதனால், சினையையும் முதலையுந்தழுவி வினாதலும், விடை கொடுத்தலும வழுவென்றதாயிற்று.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **வினாவினும் செப்பினும்** – வினாவுதற்கண்ணும் விடை கொடுத்தற்கண்ணும், **சினை முதல் விரவா** – சினையும் முதலும் ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம், எ–று.

வ–று.:–

கண்பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ எனவும் இவ்வாறு வினாவினார்க்குக் கண் பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது; சாத்தனல்லன் கொற்றனல்லன் எனவும் வரும். பிறவுமன்ன. எனவே, கண்பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனையொழித்து அதனை யுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ

என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும், இவ்வாறு முதலை வினவுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.:– **வினாவினும் செப்பினும்** – வினாவுதற் கண்ணும் விடைகொடுத்தற்கண்ணும், – **சினைமுதல் விரவா** – சினையும் முதலும் (ஒற்றுமைகருதி) மயங்கச்சொல்லப்படாவாம். எ–று.

வ–று.:–

கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ. எ–ம். இவ்வாறு வினாவினார்க்கு, கண் பிறழ்ந்தது, கயல் பிறழ்ந்தது; சாத்தனல்லன், கொற்றனல்லன் எனல் வேண்டும். அன்றிக் கண் பிறழ்ந்ததோ எனக் சினையை வினவுவான் அதனையுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும்; இவ்வாறு முதலை வினாவுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினைவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

(சூ) "செப்பினும் வினாவினுஞ் சினைமுதற்கிளவிக், கப்பொருளாகுமுறழ் துணைப்பொருளே", என்பது தொல்காப்பியம். (உறழ்பொருள் – உவமை கருதாது மாறுபடக் கூறும்பொருள். துணைப்பொருள் – ஒப்புமைப் பொருள்).

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **வினாவினும்** – வினாவுதலிலும், **செப்பினும்** – விடைகொடுத்தலிலும், **சினை முதல்** – சினையும் முதலும், **விரவா** – (ஒற்றுமைப் பற்றிச் சினையும் முதலும் ஒன்று என்று எண்ணி முதலொடு சினையும் சினையொடு முதலுமாக) மயங்கச் சொல்லப்படாவாம்; எ–று.

உ–ம்.:–

கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ எனவும், சாத்தன் நல்லனோ கொற்றன் நல்லனோ எனவும் இவ்வாறு சினையும் முதலும் பற்றி வினாவியவர்க்கு – கண் பிறழ்ந்தது, கயல் பிறழ்ந்தது எனவும், சாத்தன் நல்லன், கொற்றன் நல்லன் எனவும் விடை கொடுக்கப்படும்; எனவே, அதனை

உடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினாவுதலும், இவள் பிறழ்ந்தாள் என விடை கொடுத்தலும் வழுவாமென்ற தாயிற்று.

பவானந்தம் பிள்ளை

(இ—ள்.:– வினாவினும் செப்பினும் – வினாவுதற்கண்ணும் விடை கொடுத்தற்கண்ணும், சினை முதல் – சினையும் முதலும் விரவா – (ஒற்றுமை கருதி) மயங்கச் சொல்லப்படாவாம். எ—று.

(வ—று.)

கண் பிறழ்ந்ததோ கயல் பிறழ்ந்ததோ; சாத்தனல்லனோ கொற்றனல்லனோ என இவ்வாறு வினாவினார்க்குக், கண்பிறழ்ந்தது கயல் பிறழ்ந்தது; சாத்தனல்லன் கொற்றனல்லன் என விடைகொடுக்கப்படும். பிறவுமன்ன. எனவே, கண்பிறழ்ந்ததோ எனச் சினையை வினவுவான் அதனையொழித்து அதனையுடையாளைக் கருதி இவள் பிறழ்ந்தாளோ கயல் பிறழ்ந்ததோ என வினவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும், இவ்வாறு முதலை வினவுவானுஞ் செப்புவானும் அதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று.

கா. நமச்சிவாய முதலியார்

வினாவினும் – வினாவுதற்கண்ணும், செப்பினும் – விடை கொடுத்தற்கண்ணும், சினை முதல் – சினையும் முதலும், விரவா – ஒற்றுமை கருதி மயங்கச் சொல்லப்படாவாம்.

உதாரணம்

'கண் பிறழ்ந்ததோ? கயல் பிறழ்ந்ததோ?' என வினாவினார்க்கு, 'கண் பிறழ்ந்தது,' 'கயல் பிறழ்ந்தது' எனல் வேண்டும்.

'சாத்தன் நல்லனோ? கொற்றன் நல்லனோ?' என வினாவினார்க்கு, 'சாத்தன் நல்லன்', 'கொற்றன் நல்லன்' எனல் வேண்டும்.

இவ்வாறன்றிக் கண் பிறழ்ந்ததோ என்பதற்கு அதனை யுடையாளைக் குறித்து, இவள் பிறழ்ந்தாளோ? என வினாவுதலும், இவள் பிறழ்ந்தாள் எனச் செப்புதலும் வழுவாம்.

மோசசு பொன்னையா

வினாவும் பொழுதும், விடை பகரும் பொழுதும், சினையும் முதலும் தம்முள் மயங்கப்பெறா எ-று.

எ-டு.

1. சாத்தன் நல்லானோ, கொற்றன் நல்லானோ?

சாத்தன் கைகள் நெடியவோ, கொற்றவன் கைகள் நெடியவோ?

–இவை முதலுஞ் சினையும் விரவா வினாக்கள்

2. சாத்தனின் கொற்றன் நல்லன்; சாத்தனும் கொற்றனும் நல்லவர், கொற்றனின் சாத்தன் நல்லன்.

சாத்தன் கைகள் கொற்றன் கைகளிலும் நெடிய.

சாத்தன் கைகளும் கொற்றன் கைகளும் நீளத்தில் சமம்.

கொற்றன் கைகள் சாத்தன் கைகளிலும் நெடிய.

–இவை முதலுஞ் சினையும் விரவா விடைகள்

தொல்காப்பியர்,

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்
கப்பொரு ளாகு முறழ்துணைப் பொருளே,

என்றார்.

(36)

387. எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

எப்பொருள் எச் சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.

e poruḻ e solin̲ e āṟu uyarntōr
seppin̲ar a pati sepputal marapu ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Usage

Whatsoever object, by whatsoever word, and whatsoever manner, the learned have named, so to do is (classical) usage.

ஒப்புமைப் பகுதி

எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே

(இ.வி.:311)

எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உணர்ந்தோர்
செப்பினர் அப்படி செப்புதல் மரபே

(சுவாமி.:82)

சான்றவர்எப் பொருளை எவ்வாறு உரைப்பர் அந்தபடியே
தாம்உரைத்தல் மரபாகும்......

(சுவாமி.:61:1)

மயிலை நாதர்

எ—ன், மரபாவது இன்னதென்று அதனிலக்கணம் உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.:— யாதொரு பொருளை யாதொரு சொல்லான் யாதொருபடியானே முன்னாட் கற்றுவல்லோர்கள் சொன்னார்கள்? அதனை அப்படியே சொல்லுதல் மரபாவது, எ—று.

அஃதாவது, பொருளாதி யாறனுள்ளும் ஒன்றைப் பல சொல்லானும், பலவற்றை ஒரு சொல்லானும் வழங்குதலாம்; அவற்றுட் சில வருமாறு:

வ—று.:—

மக, குழவி, பிள்ளை, பார்ப்பு, பறழ், குருளை, மறி, கன்று, குட்டி, பொரி, [1]குழ, களபமென்றற் றொடக்கத்தன இளமைப் பண்பறிசொல். இவற்றுள், மக வென்பது மக்கள், முசு, குரங்குகட்குரித்து. குழவி யென்பது மக்கள், யானை, பசு, எருமை, மான், மரை, கரடி, சீயம், வருடை, பருவம், மீன், நீர், கதிர், மதிகட்குரித்து. பிள்ளை யென்பது மக்கள், பூசை, தத்துவன, ஒருசார் தவழ்வன, பறப்பன, கோடுவாழ் விலங்கு, ஓரறிவுயிர்கட்குரித்து. பார்ப்பு என்பது பறவைக்கும் தவழ்வனவற்றிற்கும், கோடுவாழ் விலங்கிற்கு முரித்து. பறழென்பது பன்றிக்கும், புலிக்கும், முயற்கும், நீர்நாய்க்கும், கோடுவாழ் விலங்கிற்கு முரித்து. குருளை யென்பது ஆளி,

பாட வேறுபாடு:—

1. குழம்

புலி, பன்றி, நாய், மான், முசு, பாம்புகட்குரித்து. மறி யென்பது ஆடு, மான், குதிரை, கழுதைகட்குரித்து. கன்றென்பது பசு, எருமை, ஆமா, மரைமா, கவரிமா, மான், ஒட்டகம், யானை, ஒருசார் ஓரறிவுயிர்கட் குரித்து. குட்டி யென்பது சிங்கம், புலி, கரடி, யானை, குதிரை, ஒட்டகம், மான், ஆடு, நாய், பன்றி, முயல், நரி, குரங்கு, முசு, கீரி, நாவி, வெருகு, பாம்பு, அணில், எலி என்பனவற்றிற்குரித்து. பொரியென்பது எருமைக்குரித்து. [1]குழ வென்பது ஆவிளங்கன்றுக்கும் எருமைக்கன்றிற்கு ரித்து. களபமென்பது யானைக்குரித்து.

இனி, இவற்றை இவ்வாறன்றி, மடப்பிடிமக, மான்பிணைமக; யாமைக்குழவி, நாரைக்குழவி; ஆவின்பிள்ளை, மேதிப்பிள்ளை; யானைப்பார்ப்பு, குதிரைப்பார்ப்பு; அன்னப்பறழ், ஆமான்பறழ்; கொக்கின்குருளை, குரங்கின்குருளை; யானைமறி, எருமைமறி; முசுவின்கன்று, மூங்காக்கன்று; பசுவின்குட்டி, எருமைக்குட்டி என இவ்வாறு வழங்கின் மரபு வழுவாமென்க.

இனி, கை, விரல், முலை, கண், நுதல், கூந்தல், ஏடு, தோடு, இதழ், ஓலை, ஈர்க்கு, மடல், பாளை, குரும்பை, குலை, தாறு, சுளை, வீழ், நுகும்பு, இலை, அடை, [2]பொகுட்டு, குரல், நெல் என்றற் றொடக்கத்தன சினையறி சொற்களாம்; இவற்றுள், கை யென்பது மக்கள், யானை, புலி, கரடி, கோடுவாழ் விலங்குகட்குரித்து. விரலென்பது மக்கள், கரடி, கோடுவாழ் விலங்கு, நாய்கட்குரித்து. முலை என்பது மக்கள், ஆ, எருமை, ஆடு, நாய், பன்றிகட்குரித்து. [3]கண் என்பது (கட்பொறி) ஓரறிவுயிர்களுள், கமுகு, கரும்பு, மூங்கில்; பீலி, தோற்கருவி, தேங்காய்கட்குரித்து. நுதல் என்பது மக்கள், யானை, ஒருசார் புட்கட்குரித்து. கூந்தல் என்பது பெண்டிர், பிடி, குதிரை, பனை, கமுகுட்குரித்து. ஏடு என்பது பனை, பூவிதழ்கட்குரித்து. தோடு என்பதுபனை, தெங்கு, தாழை, பூவிதழ்கட்குரித்து. இதழ் என்பது கண்ணிமை, உதடு, பூவிதழ், பனைகட்குரித்து. ஓலை யென்பது பனை, தெங்கு, தாழைகட்குரித்து. ஈர்க்கு என்பது தெங்கு, பனை, மா, வேம்பு, பறப்பனவற்றிற்குரித்து. மடல் என்பது பனை, தெங்கு, கமுகு, வாழை, தாழை, காந்தள், ஈந்திற்குரித்து. பாளை யென்பது தெங்கு, கமுகு, மூங்கில்,

பாட வேறுபாடு:–

1.குழமென்பது

2.பொகுடு

3.கண்ணெனன்பது, கட்பொறியில்லா ஓரறிவுயிர்

ஈந்துகட்குரித்து. குரும்பை யென்பது தெங்கு, பனைகட்குரித்து. குலை யென்பது தெங்கு, கமுகு, வாழை, ஈந்து, பனை, காந்தட்குரித்து, தாறு என்பது கமுகு, வாழை, ஈந்துகட்குரித்து. சுளை யென்பது பலா, பருத்தி, பாகற்பழங்கட்குரித்து. வீழ் என்பது ஆல், இறலி, தாழை, சீந்தில்கட்குரித்து. நுகும்பு என்பது பனை, வாழை, மரல், புல் என்பவற்றிற்குரித்து. இலை என்பது பனை, ஈந்து, தெங்குகட்குரித்து. அடை யென்பது தாமரை, ஆம்பல், நெய்தற் றொடக்கத்து நீர்நிலை ஓரறிவுயிர்கட்கும் தாம்பூலத்திற்கு முரித்து. [1]பொகுட்டு என்பது தாமரைக்கும் கோங்கிற்குமுரித்து. குரல் என்பது பெண்டிர்மயிர்க்கும் [2]ஐயறிவுயிரின் மிடற் றிற்கும், தினை, வரகு, பூளை, நொச்சி, பதவம், மற்றப் புற்கட்கு முரித்து. நெல்லென்பது சாலி முதற் பைங்கூழிற்கும் மூங்கிற்கும் [3]ஐவனத்திற்கு முரித்து. பிறவுமன்ன.

இனி, இவை இவ்வாறன்றி, எருமைக்கை, அரிமாவிரல், கோழிமுலை, தெங்கின்கண், குதிரைநுதல், மஞ்ஞைக்கூந்தல், தாழையேடு, வேப்பந்தோடு, ஈந்திதழ், கமுகோலை, தாழை யீர்க்கு, பலாமடல், தாழைப்பாளை, மாங்குரும்பை, பலாக்குலை, மாந்தாறு, வாழைச்சுளை, அத்திவீழ், புளிய நுகும்பு, புல்லிலை, [4]தாழையடை, [5]குவளைப்பொகுட்டு, நெற்குரல், இறுக்க நெல்லென வரின், மரபுவழுவாமென்க.

இனி, இவ்வாறே ஆண்பாற் பொருட்பெயரும் பெண்பாற் பொருட்பெயரும் ஏனைப் பாற்பொருட்பெயரும், இடப்பெபரும், காலப்பெயரும், சினைப்பெயரும், பண்புப்பெபரும், தொழிற் பெயரும், மரபுப்பெயரும் வழுவாமல், ஐம்பெருங் காப்பியம், எண்பெருந்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக் கென்னும் இவ்விலக்கியங்களுள்ளும், விரிந்த உரிச்சொற் பனுவல்களுள்ளுமுரைத்தவாறு அறிந்து வழங்குக.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், மரபாமாறு உணர்—ற்று.

இ—ள்.: யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு நெறியான்

பாட வேறுபாடு:—

1.பொகுடென்பது

2.ஐயறிவுயிர் யானைமிடற்றிற்கும்

3.புதவத்திற்கும்

4.தாழையடகு

5.வாழைப்பொகுடு

அறிவுடையோர் சொன்னார்களோ, அப்பொருளை அச்சொல்லான் அந்நெறியான் சொல்லுதல் மரபாம், எ–று.

எவ்வாறு என்பது ஒரு பொருளைப் பலசொல்லானும் பல பொருளை ஒரு சொல்லானும் கூறுதல் முதலியவற்றை என்க.

அவற்றுள் சில வருமாறு:– குதிரைக்குட்டி, யானைக்குட்டி எனவும்; யானைக்கன்று, பசுவின்கன்று, மான்கன்று எனவும் வரும். பிறவும் அன்ன.

இவ்வாறன்றிப் பசுவின்குட்டி குதிரைக்கன்று எனக்கூறின் வழுவாம் ஆதலின், சான்றோர் வழக்கினுள்ளும் செய்யுளுள்ளும் பயின்று வரும் மரபு அறிந்துகொள்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், மரபாவது இன்னதென்று அதன் இலக்கணம் கூறுகின்றது.

இ–ள்.: எப்பொரு ளெச்சொலின் – யாதொரு பொருளை யாதொரு சொல்லினாலே, எவ்வா றுயர்ந்தோர் – யாதொரு நெறியான் முன்னாட் கற்றுவல்லோர்கள், செப்பின ரப்படிச் செப்புதல் – சொன்னார்கள் அதனை அப்படிச் சொல்லுதல், மரபே–மரபாம், எ–று.

விசாகப் பெருமாளையர்

இது, மரபாமாறு உணர்த்துகின்றது.

இ–ள்.: எப்பொருள் – யாதொருபொருளை, எச்சொலின் – யாதொரு சொல்லால், எவ்வாறு – யாதொரு வழியால், உயர்ந்தோர் – அறிவுடையோர்கள், செப்பினர் – சொன்னார்களோ, அப்படி – அப்பொருளை, அச்சொல்லால் – அவ்வழியால், செப்புதல் – சொல்லுதல், மரபு – மரபாம், எ–று.

வ–று.:–

குதிரைக்குட்டி எனவும், பசுவின் கன்று எனவும், மான்கன்று எனவும், வரும். இப்படியல்லாமல், குதிரைக்கன்று, பசுவின்குட்டி யென்றால் மரபுவழுவாம், மற்றவைகளுமிப்படியே.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

மரபிலக்கணங்கூறுஞ் சூத்திரம் யாது?

எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்
செப்பின ரப்படிச் செப்புதன் மரபே.

(எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே.)

இ—ள்.: யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொருவழியால் அறிவுடையோர்கள் சொன்னார்களோ அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொல்லுதன் மரபாம்.

வ—று.;—

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி, எனவும், யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று. எனவும், யானையிலண்டம், ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம். எனவும் வரும். இப்படியன்றிப், பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம், எருமையிலண்டம் எனக் கூறின் மரபுவழுவாம்.

முகவை இராமானுச கவிராயர்

இது, நிறுத்த முறையே மரபாமாறுணர்த்திற்று.

இ—ள்.: எப்பொருளெச் சொலினெவ்வாறுயர்ந்தோர் செப்பினர் — எந்தப் பொருளை யெந்தச் சொல்லால் எந்த நெறியினாலே யறிவுடையோர் சொன்னார்களோ, அப்படிச் செப்புதன் மரபே — அந்தப்பொருளை அந்தச் சொல்லால் அந்த நெறியாற் சொல்லுதல் மரபாம், எ—று.

மரபு—பழைய முறைமை,

வ—று.:—

யானைக்கன்று, யானைக்குட்டி, குதிரைக்குட்டி, பசுவின்கன்று, மான்கன்று, யானை மேய்ப்பான் பாகன், ஆடுமேய்ப்பான் இடையன், யானையிலத்தி, எருமைச்சாணி என்றாற் போல்வன எனக் காண்க. இனி யிவ்வாறன்றி பசுவின்குட்டி, குதிரைக் கன்று, யானைச் சாணி, எருமையிலத்தி எனக் கூறுதல் வழுவாமாதலால் வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் வழங்கி வரும் மரபு தேர்ந்து கொள்க. இதன் முடிபும் விளங்கிற்று.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :— எப்பொருள் — எந்தப் பொருளை, எச்சொலின் — எந்தச் சொல்லால், எவ்வாறு — எவ்வழியால், உயர்ந்தோர் — அறிவுடையோர்கள், செப்பினர் — சொன்னார்களோ, அப்படி செப்புதல் — அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொல்லுதலே, மரபு — மரபாம்.

உ—ம் :—	குதிரைக்குட்டி — யானைக்கன்று	
	யானைக்குட்டி — பசுவின்கன்று	மரபு வழாநிலை
	பசுவின்குட்டி — குதிரைக்கன்று	மரபு வழு

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர் – யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு வழியால் அறிவுடையோர்கள் சொன்னார்களோ, **அப்படிச் செப்புதல் மரபு** – அப் பொருளை அச் சொல்லால் அவ் வழியாற் சொல்லுதல் மரபாம், எ–று.

வ–று.:–

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி எனவும், யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று எனவும், யானை யிலண்டம், ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம் எனவும் வரும். இப்படியன்றிப், பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம், எருமையிலண்டம் எனக் கூறின், மரபுவழுவாம்.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள்.;– எப்பொருள் – எந்தப் பொருளை, – **எச்சொல்லின்** – எந்தச் சொல்லினால், – **எவ்வாறு உயர்ந்தோர் செப்பினர்** – எவ்வண்ணம் ஆன்றோர் சொல்லினாரோ, – **அப்படிச் செப்புதல்** – அப்பொருளை அச்சொல்லால் அவ்வண்ணஞ் சொல்லுதல், – **மரபு** –மரபாம். எ–று.

மரபு – பழையமுறைமை, யானைக்கன்று; யானைக்குட்டி; குதிரைக் குட்டி, பசுக்கன்று, மான்கன்று; எனவும் யானைமேய்ப்பான்பாகன், ஆடுமேய்ப்பான் இடையன்; ஆட்டுப்பிழுக்கை, எருமைச் சாணம் எனவும் வரும்.

இப்படியன்றி, பசுவின் குட்டி, குதிரைக்கன்று, யானைச்சாணம், எனவும் யானைமேய்ப்பான் இடையன், ஆடுமேய்ப்பான் பாகன் எனவும், கூறின் மரபுவழுவாம். நூலறுந்தது, தண்ணீர் குடித்தது என்பன பொருட்கியைந்த வினைமரபு எனவும்; நூல் முரிந்தது, தண்ணீர் தின்றது என்பன பொருட்கியையாத மரபுவழுவெனவும் அறிக. எப்பொருள் எச்சொலின் உயர்ந்தோர் செப்பினர் என்றவளவிலே பொருண்மரபுகள் அடங்கவும் எவ்வாறு என்றுங் கூறியது வினைமரபுகளும் அடங்குதற் பொருட்டென்றறிக. எப்பொருள் எவ்வாறு செப்பினர் என்று கூட்டிப் பெயர்ச்சொல்லுக்குப் புணர்க்கும் வினைச்சொன்மரபு கூறியவாறுமறிக. பின்வரும் 'வேறுவினைப் பல்பொருடழுவிய' என்னுஞ் சூத்திரப் பொருணோக்கியும் வினைச்சொற்கு மரபுண்டென்பதறிக.

வை.மு. சடகோபராமாநுசாசாரியார் சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– எப்பொருள் – எந்தப் பொருளை, எச்சொலின் – எந்தச் சொல்லால், எ ஆறு – எவ்வழியால், உயர்ந்தோர் – அறிவுடையோர், செப்பினர் – சொன்னார்களோ, அப்படி செப்புதல் – (அப்பொருளை அச்சொல்லால்) அவ்வழியால் சொல்லுதலே, மரபு – மரபாம்; எ–று.

உ–ம்.:–

குதிரைக்குட்டி, யானைக்குட்டி எனவும்; யானைக்கன்று, பசுவின் கன்று எனவும்; யானையிலத்தி, எருமைச்சாணம் எனவும்; யானைப்பாகன், ஆட்டிடையன் எனவும் வரும். பசுவின்குட்டி, குதிரைக்குஞ்சு, யானைச்சாணம், ஆட்டுப்பாகன் எனக் கூறினால், மரபுவழுவாம்.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.:– எப்பொருள் – யாதொருபொருளை, எச்சொலின் – யாதொரு சொல்லால், எவ்வாறு – யாதொரு வழியால், உயர்ந்தோர் – அறிவுடையோர்கள், செப்பினர் – சொன்னார்களோ, அப்படிச் செப்புதல் – அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியாற் சொல்லுதல், மரபு – மரபாம். எ–று.

எவ்வா றென்றது ஒரு பொருளைப் பல சொல்லானும் பல பொருளை ஒரு சொல்லானுங் கூறுதல் முதலியவற்றை.

(வ–று.)

குதிரைக்குட்டி, யானைக்குட்டி, புலிக்குட்டி எனவும்; யானைக்கன்று, பசுக்கன்று, மான்கன்று எனவும்; யானையிலண்டம், ஆட்டுப்புழுக்கை, எருமைச்சாணம் எனவும் வரும். இப்படியன்றிப், பசுவின்குட்டி, குதிரைக்கன்று, யானைச்சானம், எருமையிலண்டம் எனக் கூறின், மரபுவழுவாம்.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) எப்பொருள் – யாதொரு பொருளை, எச் சொலின் – யாதொரு சொல்லால், எவ்வாறு – யாதொரு வழியால், உயர்ந்தோர் – அறிவுடையோர், செப்பினர் – சொன்னார்களோ, அப்படி – (அப்பொருளை) அச் சொல்லால் அவ் வழியால், செப்புதல்–சொல்லுதல், மரபு – மரபாம். (எ–று)

(பொ–ரை.)

(தொன்று தொட்டு உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும்)

யாதொரு பொருளை யாதொரு செல்லால் யாதொரு நெறியால் அறிவுடையோர் சொன்னர்களோ (அப்பொருளை) அச் சொல்லால் அவ் வழியால் சொல்லுதல் மரபாம்.

(உ–ம்.) குதிரைக்குட்டி, பசுக்கன்று, ஆட்டிடையன், யானைப் பாகன், யானையிலத்தி. இப்படியல்லாமல் குதிரைக்கன்று, பசுக் குட்டி, ஆட்டுப்பாகன், யானையிடையன், யானைச்சாணம் என்பன மரபு வழுவாம்.

(தொடர் மொழிகள் இசைவெறு பாட்டால் பொருள் துணியப்படுதல்.)

கா. நமச்சிவாய முதலியார்

எப்பொருள் – யாதொரு பொருளை, எச்சொலின் – யாதொரு சொல்லால், எவ்வாறு – யாதொரு முறையால், உயர்ந்தோர் – அறிவுடையோர்கள், செப்பினர் – சொன்னார்களோ, அப்படி – (அப்பொருளை) அச்சொல்லால் அம்முறையால், செப்புதல் – சொல்லுதல், மரபு – மரபாம்.

உதாரணம்

குதிரைக் குட்டி,	பசுவின் கன்று
மான் கன்று,	யானைப் பாகன்.
ஆட்டிடையன்,	கீரிப் பிள்ளை.

என்பது மரபு. இப்படி யல்லாமல், குதிரைக் கன்று, ஆட்டுப் பாகன், பசுவின் குட்டி என்பன மரபு வழுவாம்.

மோசசு பொன்னையா

எப்பொருளை, எச்சொல்லால் எம்முறையில் மேலோர் வழங்கினரோ, அப்படிச் சொல்லி வழங்குதல் மரபாம் எ–று.

எ–டு.

புல்வாய் புலியுழை மரையே கவரி
சொல்லிய கராமோ டொருத்த லொன்றும்
பன்றி புல்வா யுழையே கவரி
யென்றிவை நான்கு மேறெனற் குரிய
பெற்ற மெருமை புலிமரை புல்வாய்
மற்றிவை யெல்லாம் போத்தெனப் படுமே,

என இவ்வாறு மேலோர் செல்லியமைக்க, அவ்வாறே வழக்கில் ஒன்றி வருவனவும்; ஆட்டுப்புழுக்கை, மாட்டுச்சாணி, யானைப்பாகன் என இவ்வாறு வழக்கில் நடப்பனவும் மரபாம் எனக் கொள்க.

**388. வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.**

**வேறு வினைப் பல் பொருள் தழுவிய பொதுச் சொலும்
வேறு அவற்று எண்ணும் ஓர் பொது வினை வேண்டும்.**

vēru vinai pal poruḻ taḻuviya poṭu sol um
vēru avaṟṟu eṇ um ōr poṭu vinai vēṇṭum

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Nouns to have a common predicate

A Noun that is the common name of several objects requiring appropriate predicates and a series of nouns indicating different objects to which also suitable verbs are necessary. should take a common predicate.

ஒப்புமைப் பகுதி

வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்
(தொல்.சொல்.:46)

எண்ணுங் காலும் அதுஅதன் மரபே
(தொல்.சொல்.:47)

ஒருபொருண்மேற் பல்பெயருண் டானால் அவற்றிற்கு
ஒருவினையே சொல்லுக ஓர்ந்து
(நேமி.:37:3–4)

வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்
வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்
(இ.வி.:319)

வேறு வினைப்பல் பொருட்குப் பொதுப்பெயர்
பொதுவினை கொடுத்துப் புகல்வது நெறியே
(மு.வீ.:721)

எண்ணுழி யும்பொதுவினையா னியலும்
(மு.வீ.:722)

பொருள் தோன்றிற் பலபெயர்க்கோர் வினைமுடித்தல்
கடனாம்

பொதுவினைச் சொல்லால் வேறெண் பலவினைச்
சொன்முடிப்பர்

(சுவாமி.:63:1)

மயிலை நாதர்

எ–ன், மரபுவழுவற்கவென்பது உணர்த்துதல் நுதலிற்று.

இ–ள்.: வேறுபட்ட வினைக்குரிய பொருள் பலவற்றையும் ஒருங்கு தழுவிநிற்கும் பொதுச்சொற்களும், வேறுவினையையுடையவாய் எண்ணி வினைகொடுக்கும் பலசொற்களும் ஒன்றற்குரியவினையன்றி அவற்றிற் கெல்லாம் பொதுவான வினைகொடுத்துச் சொல்ல வேண்டுவனவாம், எ–று.

வ–று.:–

அடிசில் என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுவாகலான், அதனை அயின்றார், மிசைந்தார், கைதொட்டாரென்க. அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவன பூண்பனவற்றிற் கெல்லாம் பொதுவாதலால், அதனை அணிந்தார், மெய்ப்படுத்தார், தாங்கினாரென்க. [1]இயம் என்பது கொட்டுவன ஊதுவன முதலானவற்றிற்கெல்லாம் பொது வாகலான், அதனை இயம்பினார், படுத்தாரென்க. படை யென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுவாதலான், அதனை, தொட்டார், வழங்கினார், பயிற்றினாரென்க.

இனி, எண்ணியவழியும், குழையும் தோடும் நாணுமணிந்தார், யாழும் குழலும் பறையுமியம்பினார் எனவரும். பிறவுமன்ன.

சோறும் கறியும் தின்றார்; யாழும் குழலும் ஊதினாரெனின், வழுவாம்: "எண்ணுங் காலு மதுவதன் மரபே" (கிளவி.47) என்பது தொல்காப்பியம்.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், மரபு வழுவற்க என்பது உணர்–ற்று.

இ–ள்.:– வெவ்வேறு வினைகட்கு உரிய பல பொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஓர் பொதுச்சொல்லும் அவற்றின் சிறப்புச்சொற்களாய் எண்ணி

பாட வேறுபாடு:–

1. வாச்சியமென்பது

நிற்கும் பலசொல்லும் ஒன்றற்கு உரிய சிறப்புவினை வேண்டாது எல்லாவற்றிற்கும் உரியதோர் பொதுவினை வேண்டுவனவாம், எ—று.

வ—று.:—

'அடிசில்' என்பது, உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல் ஆகலான், அதனை அயின்றார் மிசைந்தார் என்க. 'அணி' என்பது, கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல் ஆதலின், அதனை அணிந்தார் தாங்கினார் என்க. 'இயம்' என்பது, கொட்டுவன ஊதுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல். ஆதலின், அதனை இயம்பினார் படுத்தார் என்க. 'படை' என்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல் ஆதலின், அதனை வழங்கினார் தொட்டார் என்க. இனி எண்ணியவழியும் சிலநாள் சோறும் சிலநாள் இடியும் சிலநாள் பாலும் சிலநாள் நீரும் சிலநாள் சருகும் அயின்றார் மிசைந்தார் என்க.

கறியும் சோறும் உண்டான் என எண்ணிக் கறியோடு விராய சோற்றை உண்டான் என்னும் பொருட்டாய்ச் சிறப்பின் ஒருமுடிபு ஏற்றனவற்றிற்கும் இவற்றிற்கும் வேற்றுமை உணர்க. குழையும் நெடுநாணும் அணிந்தார். பறையும் குழலும் இயம்பினார், வாளும் வேலும் வழங்கினார் என்க. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், இது மரபு வழுவற்க என்பது கூறுகின்றது.

இ—ள்.:— **வேறுவினை** – வேறு வினைக்குரியர், **பல்பொருள்** – பல பொருளையும், **தழுவிய** – ஒருங்கு தழுவிய, **பொதுச்சொலும்** – பொதுச் சொற்களும், **வேறவற் றெண்ணும்** – வேறு வினையுடையவாய் எண்ணி வினை கொடுக்கும் பல சொற்களும், **ஓர் பொதுவினை வேண்டும்** – ஒன்றற்குரிய வினையன்றி அவற்றிற்கு எல்லாம் ஒரு பொதுவான வினை கொடுத்துச் சொல்ல வேண்டும், எ—று.

உ—ம்.:—

அடிசில் என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கு எல்லாம் பொது. அதனை அயின்றார், மிசைந்தார், கைதொட்டார் என்க. அணி என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவன, பூண்பனவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல். அதனை அணிந்தார், மெய்ப்படுத்தார், தாங்கினார் என்க. இயம் என்பது கொட்டுவன, ஊதுவன,

உரஞ்சுவன இது முதலானவற்றிற்கு எல்லாம் பொதுச்சொல். அதனை இயம்பினார், படுத்தார் என்க. படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்குப் பொது. அதனைத் தொட்டார், வழங்கினார், பயிற்றினார் என்க.

இனி, எண்ணின் வழிவந்த பெயர்க்குப் பொது வினை கொண்டு முடிவன. குழையும், நாணும், கச்சும், குடையும் வளையும் அணிந்தார்; யாழும், குழலும், பறையும், தாளமும் இயம்பினார்; வாளும், வேலும், அம்பும் வழங்கினார் என வரும்.

சோறும் பாலும் தின்றார்; யாழும் குழலும் ஊதினார்.

விசாகப் பெருமாளையர்

இது, மரபுவழாநிலை யுணர்த்துகின்றது.

இ-ள்.:- வேறுவினை - வெவ்வேறு வினைகளுக்குரிய, **பல்பொருள்** - பலபொருள்களையும், **தழுவிய** - ஒருசேரத் தழுவிய, **பொதுச்சொலும்** - ஒரு பொதுச்சொல்லும், **வேறவற்று**-அவற்றின் சிறப்புச்சொற்களாக, **எண்ணும்** - எண்ணி நிற்கிற பல சொற்களும், **ஓர்பொதுவினை** - எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை, **வேண்டும்** - கொண்டு முடியும், எ-று.

வ-று.:- அணி என்பது கவிக்கப்படுவது, கட்டப்படுவது, இடப்படுவது பூணப்படுவது, முதலியவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலின் அதனை அணிந்தார் எனப் பொதுவினை கொடுத்து சொல்லுக. கிரீடமும், குண்டலமும், வீரக்கழலும், என எண்ணி நிற்கிற கவித்தல், இடுதல், கட்டுதல் என்கிற வேறு தொழில்களுக்கு உரிய பலவற்றிற்கும் அணிந்தார் எனப் பொதுவினை கொடுத்துச் சொல்லுக.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

பொதுவினைவேண்டும் சொற்கள் இவையெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வேறுவினைப் பல்பொரு டழுவிய பொதுச்சொலும்

வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும்.

(வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும் வேறு அவற்று எண்ணும் ஓர் பொதுவினை வேண்டும்.)

இ-ள்.:- வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையும் ஒருங்குதழுவி நிற்கும் பொதுச்சொல்லும், வேறுவினைப்பொதுச் சொல்லினது எண்ணும்மைத்தொடர்க்கண் வரும் சிறப்புச் சொற்களும் எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை வேண்டுவனவாம். எ-று.

வேறுவினைப் பலபொருடழுவிய பொதுச்சொல்லாவது யாது?

வேறுபட்ட வினையையுடைய பலபொருட்குப் பொதுவாகிய சொல். அவை அடிசில் அணி படை இய மென்னுந் தொடக்கதத்தன.

வேறவற்றெண்ணாவது யாது?

வேறுவினைப் பொதுச்சொல்லினது சிறப்புச்சொற்களாய் இரண்டும் பலவுமா உம்மைத்தொடர்க்கண் வருவன. அவை சோறுங் கறியும், யாழுங்குழலும் என்னுந்தொடக்கத்தன.

இச்சூத்திரம் பொதுவினை வேண்டுமென விதித்தது யாது பற்றி?

ஒருச்சார்க்குரிய வினையாற் கூறின் வழுவாமாதலின் அவ்வழுநிகழாமற் காத்தற்கே பொதுவினை விதிக்கப்பட்ட தென்க.

வ—று.:—

(1) அடிசிலென்பது உண்பன நக்குவன பருகுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால, அடிசிலயின்றார், அடிசின் மிசைந்தாரென்க. அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற் கெல்லாம் பொதுச் சொல்லா தலால், அணியணிந்தார், அணிதாங்கினாரென்க. இயமென்பது கொட்டுவன ஊதுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதல், இயமியம்பினார், இயம்படுத்தாரென்க. படையென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், படை வழங்கினார் படை தொட்டாரென்க.

(2) சிலநாட் சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலர்ணீருஞ் சலநாட் சருகும் அயின்றார், அல்லது மிசைந்தாரென்க. முடியுங் குழையு மோதிரமு நெடுநாணு மணிந்தார்; பறையுங் குழலுமியம்பினார்; வாழும் வேலும் வழங்கினா ரென்க.

முகவை இராமானுச கவிராயர்

இது, மரபு வழாநிலை யுணர்த்திற்று.

இ—ள்.: வேறுவினைப் பல்பொருடழுவிய பொதுச் சொலும் — வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையுஞ் சேரத் தழுவி நிற்குமோர் பொதுச்சொல்லும், **வேறவற்றெண்ணுமோர் பொதுவினை வேண்டும் —** வேறுவினைக்குரிய பொருள்களை யெண்ணி நிற்கும் பல சொல்லும் ஒன்றிற்குரிய சிறப்பு வினையை வேண்டாமல் எல்லாவற்றிற்குமுரிய பொதுவினையை வேண்டி நிற்கும், எ—று.

வ—று.:—

அடிசில் என்பது–உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பனவற்றிற்கெல்லாம் பொதுவாதலால் அடிசில் அயின்றார்; மிசைந்தார் என்க. அணி என்பது – கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற் கெல்லாம் பொதுவாதலால், அதனை அணிந்தார்; தாங்கினார் என்க. இயம் என்பது கொட்டுவன, ஊதுவன வற்றிற்கெல்லாம் பொதுவாதலால் அதனை இயம்பினார்; படுத்தார்; முழக்கினார் என்க. (இயம் – வாத்தியம்,) படை என்பது எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவனவற்றிற்கெல்லாம் பொதுவாதலால் அதனை வழங்கினார்; தொட்டார் என்க. (படை–ஆயுதம்,) இனி, எண்ணுங்காலும், சில நாட்சோறும் சிலநாள் மாவும் சிலநாட் பாலும் சிலநாள் நீரும் சிலநாட் சருகும் அயின்றார் மிசைந்தார் எனவும், குழையும் அரைநாணும் அணிந்தார்; பறையுங் குழலுமியம்பினார், வாளும் வேலும் வழங்கினார் எனவும் பொதுவினை கொடுத்து முடித்துக் கொள்க, பிறவுமன்ன.

அடிசில் தின்றார்; பருகினார் எனவும் அணி கவித்தார்; பூண்டார் எனவும் இயம் கொட்டினார்; ஊதினார் எனவும் படை எறிந்தார்; எய்தார் எனவும் யாழுங்குழலும் ஊதினார் எனவும் ஒருசார்க்குரிய சிறப்பு வினையாற் கூறின் மரபுவழுவாமாதலாற் பொதுவினையாற் கூறுதல் வழாநிலையாயிற்றெனக் காண்க. அங்ஙனமாயின், 'ஊன்றுவை கறிசோ றுண்டு வருந்தி' என்றவிடத்து, 'உண்டென்பது' சிறப்புவினையாகலின் வழுவன்றோ வெனின், உண்டல் என்பது உண்பன தின்பனவற்றைப் பிரித்துக் கூறும்வழிச் சிறப்பு வினையாம், பசிதீர உண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப் படுமாதலால் பொதுவினையுமாமாதலின் அது வழுவாகாதென்க (ஊன்றுவை – ஊனைப் புளியிட்டாக்கிய கறி,) இன்னும்,

"உண்டற் குரிய வல்லாப் பொருளையு முண்டன போலக் கூறலு மரபே"

என்னும் பொருளியற் சூத்திரத்தாலும் அவ்வாறு கூறுதல் மரபென்பதுணர்க.

"அறுசுவை யடிசி லணியிழை தருதலி
னுறுவயி றாரவோம்பாது தின்று"

என்பது, இழிவு பற்றிக் கூறுதலால் இவ்வாறு வருனவெல்லாம் மரபுவழுவமைதி யென்க.

"வேறுவினைப் பொதுச்சொல் லொருவினை கிளவார்"

"எண்ணுங் காலு மதுவதன் மரபே"

என ஆசிரியர் தொல்காப்பியனாருங் கூறுதல் காண்க. சொல்லும் எண்ணும் என வெண்ணி வேண்டுமெனப் பயனிலை கொடுத்து முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– வேறு வினை – வெவ்வேறு வினைகளுக்கு (உரிய), **பல்பொருள்** – பல பொருள்களையும், **தழுவிய** – ஒரு சேரத் தழுவிநிற்கின்ற, **பொது சொலும்** – ஒரு பொதுச்சொல்லும், **வேறு அவற்று எண்ணும்** – வெவ்வேறு வினைக்கு உரிய பொருள்களை எண்ணி நிற்கும் பல சிறப்புச் சொற்களும், **ஓர் பொதுவினை** – (ஒன்றற்கு உரிய சிறப்பு வினையை வேண்டாமல் எல்லாவற்றிற்கும் உரியதாகிய) ஒரு பொதுவினையை, **வேண்டும்** – கொண்டுமுடிந்து நிற்கும்.

உதாரணம்

1. உண்பன, தின்பன நக்குவன, குடிப்பன	இவற்றிற்குப் பொதுவாகிய அடிசில் என்பதை, அடிசில் 'அயின்றான்' 'மிசைந்தான்' எனவும்,
கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவன	இவற்றிற்குப் பொதுவாகிய அணி என்பதை 'அணி அணிந்தான்' 'தாங்கினான்' எனவும்,
கொட்டுவன, ஊதுவன	இவற்றிற்குப் பொதுவாகிய இயம் என்பதை இயம் 'இயம்பினார்' 'படுத்தார்' 'முழக்கினார்' எனவும்,
எய்வன, எறிவன குத்துவன, வெட்டுவன	இவற்றிற்குப் பொதுவாகிய படை என்பதை படை 'வழங்கினார்' 'தொட்டார்' எனவும் பொதுவினையால் முடிக்க. (இயம்–வாத்தியம்,

படை–ஆயுதம்)

2. இனி, சிறப்புச் சொற்களை எண்ணும்பொழுதும், சிலநாள் சோறும் சிலநாள் மாவும் சிலநாள்பாலும் சிலநாள் நீரும் சிலநாள் சருகும் 'அயின்றார்' 'மிசைந்தார்' எனவும், 'முடியுங் குடையும் மோதிரமும் அரைநாணும் அணிந்தார் எனவும் பொதுவினையால் முடிக்க. 'அடிசில் தின்றார்' 'பருகினார்' எனவும், 'அணிகவித்தார்' 'பூண்டார்' எனவும். 'இயம்கொட்டினார்' 'ஊதினார்' எனவும் 'படைஎறிந்தார்' 'எய்தார்' எனவும், 'யாழுங் குழலும் ஊதினார்' எனவும்

ஒருசார்க்குரிய சிறப்புவினையாற்கூறின் மரபுவழுவாமாதலால் பொதுவினையாற் கூறுதல் மரபுவழாநிலையாயிற்

றெனக்காண்க. அங்ஙனமாயின், "ஊன்றுவைகறிசோறுண்டு வருந்தி" என்றவிடத்து, 'உண்டு' என்பது சிறப்புவினை யாகலின் வழுவன்றோ? எனின், 'உண்டல்' என்பது உண்பன தின்பனவற்றைப் பிரித்துக் கூறும் வழிச் சிறப்புவினையாம். பசிதீர உண்ணப்படும் பொருளெல்லாம் உணவெனப்படு மாதலால் பொதுவினையுமாமாதலின் அது வழுவாகா தென்க. (ஊன்றுவைகறி –ஊனைப் புளியிட்டாக்கியகறி) இன்னும், "உண்டற்குரிய வல்லாப்பொருளையும் – உண்டன போலக் கூறுதல் மரபே" என்னும் பொருளியற் சூத்திரத்தாலும் அவ்வாறு கூறுதல் மரபென்பதுணர்க. "அறுசுவை யடிசி லணியிழை தருதலின் – உறுவயி ரார வோம்பாது தின்று" என்பது இழிவுப்பற்றிக்கூறுதலால் இவ்வாறு வருவன வெல்லாம் மரபு வழுவமைதியென்க என்பர் இராமாநுசகவிராயர்.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– **வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச்சொலும்** – வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஒருபொதுச்சொல்லும், **வேறு அவற்று எண்ணும்** – அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பல சொற்களும், **ஓர் பொதுவினை வேண்டும்** – ஒன்றற்குரிய சிறப்புவினையை வேண்டாது எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை வேண்டுவனவாம், எ–று.

வ–று.:–

(1) 'அடிசில்' என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசிலயின்றார் அடிசின் மிசைந்தாரென்க. 'அணி'யென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அணியணிந்தார் அணி தாங்கினாரென்க. இயம் என்பது கொட்டுவன ஊதுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், இயமியம்பினார் இயம்படுத்தாரென்க. படை யென்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால், படைவழங்கினார் படை தொட்டாரென்க.

(2) சிலநாட் சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலநா ணீருஞ் சிலநாட் சருகும் அயின்றார், அல்லது மிசைந்தாரென்க. முடியுங் குழையு மோதிரமு நெடு நாணா மணிந்தார்; பறையுங் குழலு மியம்பினார்; வாளும் வேலும் வழங்கினாரென்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். வேறுவினைப் பல்பொருள் தழுவிய பொதுச் சொல்லும் – வெவ்வேறு வினைகளுக்குரிய பலபொருள்களையும் ஒருங்கு தழுவி நிற்கும் ஒரு பொதுச்சொல்லும், – **வேறு அவற்று எண்ணும்** – அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பலசொற்களும், **ஓர் பொதுவினை வேண்டும்** – ஒன்றற்குரிய சிறப்பு வினையை வேண்டாது எல்லாவற்றிற்குமுரியதோர் பொதுவினையை வேண்டுவனவாம். எ–று.

வ–று.:–

(1) அடிசில் என்பது உண்பன தின்பன நக்குவன பருகுவனவற் றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசிலயின்றார் அடிசின் மிசைந் தாரென்க. அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலால், அணியணிந்தார் அணிதாங்கினா ரென்க. இயம் என்பது கொட்டுவன ஊதுவனவற் றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலால், இயமியம்பினார் இயம்படுத்தார் என்க. படை என்பது எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச் சொல்லாதலால், படைவழங்கினார் படைதொட்டாரென்க.

(2) சிலநாட்சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலநாள் நீருஞ் சிலநாட் சருகும் அயின்றார் அல்லது மிசைந்தாரென்க. முடியுங் குழையு மோதிரமு நெடுநாணும் அணிந்தார்; பறையுங் குழலு மியம்பினார்; வாளும் வேலும் வழங்கினாரென்க.

(சூ) “வேறுவினைப் பொதுச் சொல்லொரு வினைகிளவார். எண்ணுங்கா லுமதுவதன்மரபே”. என்றார் தொல்காப் பியனாரும்.

வை.மு. சடகோபராமானு சாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: வேறு வினை – வெவ்வேறு வினைகட்கு உரிய, **பல் பொருள்** – பல பொருள்களையும், **தழுவிய** – ஒருசேரத் தழுவி நிற்கின்ற, **பொது சொலும்** – ஒரு பொதுச்சொல்லும், **வேறு அவற்று எண்ணும்** – வெவ்வேறு வினைக்கு உரிய பொருள்களை எண்ணி நிற்கும் பல சிறப்புச் சொற்களும், **ஓர் பொதுவினை** – (தமக்குள் ஒன்றற்கு உரிய சிறப்பு வினையை வேண்டாமல்) எல்லாவற்றிற்கும் உரிய தொரு பொதுவினையை, **வேண்டும்** – கொண்டு முடிந்து நிற்கும்; எ–று.

உ–ம்.:

(1) அடிசில் என்பது – உண்பன தின்பன நக்குவன குடிப்பன வற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசில் அயின்றார், மிசைந்தார், என்றும்; அணி என்பது – கவிப்பன கட்டுவன இடுவன பூண்பனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அணி யணிந்தார், அணி தரித்தார் என்றும்; இயம் என்பது–கொட்டுவன ஊதுவன வற்றிற்கெல்லாம் பொதுச்சொல் ஆதலால்,. இயம் இயம்பினார், இயம்படுத்தார் என்றும்; படை என்பது – எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல் லாதலால், படை வழங்கினார், படை தொட்டார் என்றும் பொதுவினையால் முடிக்க. (அடிசில்–உணவு. அணி – ஆபரணம். இயம் – வாத்தியம். படை – ஆயுதம். அயின்றார், மிசைந்தார் – உண்டார். அணிந்தார் – தரித்தார். இயம்பினார், படுத்தார்– முழங்கினார். வழங்கினார், தொட்டார் – பிரயோகித்தார்.)

(3) இனி, சிறப்புச் சொற்களை எண்ணும்பொழுது, சில நாள் சோறும் சில நாள் மாவும் சிலநாள் நீரும் சிலநாள் சருகும் அயின்றார், அல்லது மிசைந்தார், முடியும் குழையும் மோதிரமும் அரைநாணும் அணிந்தார், பறையும் குழலும் இயம்பினார், வாளும் வேலும் வழங்கினார் என்று பொதுவினையால் முடிக்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: வேறுவினை – வெவ்வேறு வினைகளுக்குரிய, பல்பொருள் – பல பொருள்களையும், தழுவிய பொதுச்சொலும் – ஒருங்குதழுவி நிற்கும் ஒரு பொதுச்சொல்லும், வேறு அவற்று எண்ணும் – அவற்றின் சிறப்புச் சொற்களாக எண்ணி நிற்கும் பலசொற்களும், ஓர் பொதுவினை வேண்டும் – (ஒன்றற்குரிய சிறப்புவினையை வேண்டாது) எல்லாவற்றிற்கு முரியதோர் பொதுவினையை வேண்டுவனவாம். எ–று.

வ–று.:–

(1) அடிசிலென்பது – உண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல்லாதலால், அடிசி லயின்றார் அடிசின் மிசைந்தாரென்றும்; அணியென்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுசசொல்லாதலால், அணியணிந்தார் அணிதாங்கினா ரென்றும்; இயமென்பது கொட்டுவன ஊதுவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலல், இயமியம்பினார் இயம் படுத்தாரென்றும்; படையென்ப எய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொதுச்சொல்லாதலால்,

படைவழங்கினார் படைதொட்டாரென்றும் பொதுவினையால் முடிக்க.

(2) சிலநாட் சோறுஞ் சிலநாண் மாவுஞ் சிலநாட் பாலுஞ் சிலநா ணீருஞ் சிலநாட் சருகும் அயின்றார், அல்லது மிசைந்தார்; முடியுங் குழையு மோதிரமு நெடுநாணும் அணிந்தார்; பறையுங் குழலும் இயம்பினார்; வாளும் வேலும் வழிங்கினார் எனப் பொதுவினையால் முடிக்க.

கா. நமச்சிவாய முதலியார்

வேறு வினை – வெவ்வேறு வினைகளுக்கு உரிய, **பல்பொருள்** – பல பொருள்களையும், **தழுவிய** – ஒரு சேரத் தழுவிய, **பொதுச் சொல்லும்** – ஒரு பொதுச் சொல்லும், **வேறு அவற்று** – அவற்றின் சிறப்புச் சொற்களாக, **எண்ணும்** – எண்ணி நிற்கின்ற (பல சொற்களும்), **ஓர் பொதுவினை** – (எல்லாவற்றிற்கும் உரியதோர்) பொதுவினையை, **வேண்டும்** – கொண்டு முடியும்.

உதாரணம்

1. அணி அணிந்தார்,
அடிசில் அயின்றார்,
படை வழங்கினார்.

இங்கு, அணி என்பது கவிக்கப்படுவது, கட்டப்படுவது இடப்படுவது, பூணப்படுவது முதலிய பல ஆபரணங்களுக்கும் பொதுப் பெயர்; ஆதலால், அணிந்தார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

அடிசில் என்பது, உண்பது, தின்பது, நக்குவது, பருகுவது முதலிய பலவித உண்டிகளுக்கும் பொதுப்பெய ராதலால், அயின்றார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

படை என்பது, எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன ஆகிய பலவித ஆயுதங்களுக்கும் பொதுப்பெய ராதலால், வழங்கினார் எனப் பொதுவினை கொடுத்துக் கூறப்பட்டது.

2. முடியும் குண்டலமும் வீரக்கழலும் அணிந்தார்
சிலநாள்சோறும், சிலநாள்மாவும், சிலநாள் பாலும்,
சிலநாள் நீரும், சிலநாள்சருகும், அயின்றார்.
வாளும், வேலும் விரைவின்றி வழங்கினார்.

இங்குக் கவித்தல், இடுதல், கட்டுதல் ஆகிய வெவ்வேறு தொழிலுக்குரிய முடி, குண்டலம், கழல் ஆகியவற்றிற்கும் அணிதலாகிய பொதுவினையும்; உண்ணல், தின்னல், பருகல் ஆகிய வெவ்வேறு தொழிலுக்குரிய சோறு, கறி, நீர்ஆகியவற்றிற்கும் அயிலுதலாகிய பொதுவினையும்;

வெட்டல் எய்தல் ஆகிய வெவ்வேறு தொழிலுக்குரிய வாள், அம்பு என்னும் ஆயுதங்கட்கும் வழங்கலாகிய பொதுவினையும் கொடுத்துக் கூறப்பட்டன.

மோசகு பொன்னையா

வெவ்வேறு வினைகட்கு உரிய பல பொருள்களையும் ஒருங்கே தழுவி நிற்கின்ற ஒரு பொதுச் சொல்லும், வெவ்வேறு வினைகளுக்கு உரிய பொருள்களை எண்ணி நிற்கும் பல சிறப்புச் சொற்களும் தமக்குள் ஒன்றற்கு உரிய சிறப்பு வினையை வேண்டாமல், அவை அனைத்துக்கும் உரிய ஒரு பொது வினையையே கொண்டு முடிந்து நிற்கும் எ–று.

எ–டு.;–

1.அடிசில் அயின்றார்

அடிசில் மிசைந்தார் உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல் அடிசில் ஆதலின் அஃது அயின்றார், மிசைந்தார் என்னும் பொதுவினைகளைத் தழுவி நின்றது.

அணி அணிந்தார்

அணி தரித்தார் கவிப்பன, கட்டுவன, இடுவன, பூணுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல் அணி ஆதலின், அஃது அணிந்தார், தரித்தார் என்னும் பொதுவினைகளைத் தழுவி நின்றது.

இயம் இயம்பினார்

இயம்படுத்தார் கொட்டுவன, ஊதுவனவற்றிற்கெல்லாம் பொதுச்சொல் இயம் ஆதலின், அஃது இயம்பினார், படுத்தார் என்னும் பொதுவினைகளைத் தழுவி நின்றது

படை வழங்கினார்

படை தொட்டார் எய்வன, எறிவன, வெட்டுவன, குத்துவன வற்றிற்கெல்லாம் பொதுச்சொல் படை ஆதலின், அஃது வழங்கினார் தொட்டார் என்னும் பொதுவினைகளைத் தழுவி நின்றது.

2 சில நாட்கள் சோறும், சில நாட்கள் மாவும், சில நாட்கள் பாலும், சில நாட்கள் நீரும், சில நாட்கள் சருகும் அயின்றார் அல்லது மிசைந்தார் முடியும் குழையும் மோதிரமும் நெடு நாணும் அணிந்தார். பறையும் குழலும் இயம்பினார். வாளும் வேலும் வழங்கினார்சிறப்புப் பொருட்கள் செவ்வெண்ணாக நின்று வினை கொள்ளுங்காலும் பொதுவினை கொண்டன. தொல்காப்பியர்,

வேறுவினைப் பொதுச்சொல் லொருவினை கிளவார்
எண்ணுங் காலு மதுவதன் மரபே,

எனக் கூறி வைத்தார்.

(38)

**389. வினைசார் பினமிட மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே.**

வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்
பல பொருள் ஒருசொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே.

vinai sārpu inam itam mēvi viḷaṅkā
pala poruḷ oru sol paṇippar siūappu etuṭṭu ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

When the precise meaning of a word that is applicable to several objects is not clearly brought out by other words indicating some circumstance of action, dependence, kindred or locality, respecting that word, the learned will effect this by employing special Adjuncts.

ஒப்புமைப் பகுதி

வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொலென்று
ஆயிரு வகைய பலபொரு ளொருசொல்.

(தொல்.சொல்.:52)

அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினும் இனத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே

(தொல்.சொல்.:53)

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளந்தாங்கு இயலும்

(தொல்.சொல்.:54)

ஒப்பிகந்த பல்பொருண்மேற் சொல்லும் ஒருசொல்லைத்
தப்பா வினையினஞ் சார்பினாற்– செப்புக

(நேமி.:38:1–2)

வினைபெய ரினஞ்சார்பு மேவி விளங்காப்
பலபொரு ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே

(இ.வி.:320)

வினைவேறு படூஉம்பல பொருளொரு மொழியும்
வினைவேறு படாப்பல பொருளொரு மொழியும்
எனவிரு திறத்தவாம் பலபொரு ளொருமொழி

(மு.வீ.:727)

அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருமொழி
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேரத் தோன்றும் பொருட் டெரிநிலையே

(மு.வீ.:728)

வினைவேறு படாஅப் பலபொரு ளொருமொழி
ஆயுங் காலை கிளந்தாங் கியலும்

(மு.வீ.:729)

மருவிடம் பேரினஞ் சார்புவினையாற் பலபொருட்கே
வரும்ஒருசொல் இனையதென்பார் தலைமை
பன்மைசிறப்பால்
இருதிணையிற் பலபொருளை ஒருபெயரால் உரைப்பார்

(சுவாமி.:63: 2–3

மயிலைநாதர்

இதுவுமது.

இ–ள்.:– வினையானும் சார்பானும் இனத்தானும் இடத்தானும் பொதுமைநீங்காப் பலபொருளொருசொற்களை அவற்றிற்கேற்ற சிறப்பொடுங்கூட்டிச் சொல்லுவர் புலவர், எ–று.

வ–று.:–

மா என்பது மாமரத்திற்கும், வண்டிற்கும், விலங்கிற்கும், திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். அவற்றுள், 'மா பூத்தது', 'காய்த்தது' என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. "மாவீழ்நொச்சி மணிக்குர லூழ்த்தது"

என்றவழி, வண்டென்பது சார்பினால் விளங்கிற்று. 'மாவும் நாயும் வளர்ந்தன'வென்றவழி, விலங்குமாவென்பது இனத்தால் விளங்கிற்று. "மாமறுத்த மலர்மார்பின்" (புறநா.7) என்ற வழி, திருவென்பது இடத்தான் விளங்கிற்று.

இனி, பலகன்றும் ஒருங்குளவழி, 'கன்றுவளர்ந்தது, கன்றுக்கு நீரூட்டுக'வென்றால், இன்னகன்றென்று அறியலாகாது; அவை 'மாங்கன்று வளர்ந்தது', 'மருதங் கன்று வளர்ந்தது'; 'ஆன்கன்றுக்கு நீரூட்டுக', 'மான் கன்றுக்கு நீரூட்டுக' என்றற் றொடக்கத்தன சிறப்பான் விளங்கின. பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், இதுவுமது.

இ—ள்.: குறித்த பொருளை விளக்கும் வினையினையும் சார்பும் இனமும் இடமும் முதலிய பெயரினையும் பலபொருள் ஒரு சொல் பொருந்தி விளங்கிக் கிடந்ததேல் அதனை வாளா கூறி, அவ்வினைப் பெயர்களைப் பொருந்தாமையால் விளங்காது கிடந்ததனைச் சிறப்போடு கூட்டிக் கூறுவர் புலவர், எ—று.

'பாக்கு வெற்றிலை தின்றான்' என்றால், சுண்ணாம்பும் கர்ப்பூரமும் உடன்தின்றான் என்பது தழீஇக்கோடல் போல் சார்பு இனம் இடம் எனச் சிறந்தன எடுத்தோதி ஏனைய பெயர்களையும் தழீஇக்கோடலின் முதலிய என்றாம். அன்றி இனைத்தென்றறிபொருள் எனக் கூறுதலும் ஒன்று.

'மேவி' என்னும் வினையெச்சம், **'விளங்கா'** என்பதன்கண் முதனிலையோடு முடிந்தது.

வ—று.:—

'மா' என்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்கும் திருவிற்கும் பொதுவான பலபொருளொரு சொல். இப்பொருள்களுள், **'மாப்பூத்தது காய்த்தது'** என்ற துணையானே மரம் என்பது வினையான் விளங்கிற்று. **"மாவீழ் நொச்சி மணிக்குரல் ஊழ்த்தது"** என்றதுணை யானே வண்டு என்பது சார்பான் விளங்கிற்று. **'சேனை யானை தேர் மா சதுரங்கம்'** என்ற துணையானே குதிரை என்பது இனத்தான் விளங்கிற்று. **'சொற்றொறு மிற்றிதன் பெற்றி' (461)** என்பதனானே இதனுள், சேனை என்பது யானை முதலிய மூன்று உறுப்பினையும் ஒழித்துக் காலாள்மேல் சேறலும் இவ்விதியின் பாற்படுத்துக. **"மாமறுத்த மலர்மார்பு"** என்ற துணையானே திரு என்பது இடத்தான் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன. இனி **'மா**

ஏறினான்', 'மா யாது' என்றவழிக் குறித்தபொருள் விளங்காமையின் விளங்குதற் பொருட்டுப் 'பாய்மா ஏறினான்', 'மாமரத்தின்கண் ஏறினான்', 'பாய்மா யாது', 'மாமரம் யாது' எனச் சிறப்பொடு கூட்டிக் கூறுக. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பலபொருள் குறித்த ஒரு பொதுச்சொல் வரும் இயல்பு கூறுகின்றது.

இ–ள்.:– வினைசார்பு – பொதுவான வினையானும் பொதுவான சார்பானும், **இனமிடம்** – பொதுவான இனத்தானும் பொதுவான இடத்தானும், **மேவிளங்கா** – பொருந்திப் பொதுமை நீங்காத, **பல பொருளொருசொற்** – பல பொருளை உணர்த்தும் ஒரு சொற்களை, **பணிப்பர் சிறப்பெடுத்தே** – அவற்றிற்கேற்ற சிறப்பொடுங் கூட்டிச் சொல்லுவர் புலவர், எ–று.

உ–ம்:–

மா என்பது மரத்திற்கும் விலங்கிற்கும் வண்டிற்கும் பொதுவான பல பொருள் ஒரு சொல். 'மா பழுத்தது' என வினையால் மரமென விளங்கிற்று. '**மா வீழ் கூந்தல்**' எனச் சார்பான் வண்டு என விளங்கிற்று. 'மாவும் நாயும் வளர்ந்தன' என இனத்தால் விலங்கென விளங்கிற்று. 'மா உறை மார்ப' என இடத்தால் திருவென விளங்கிற்று.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: வினை–வினையும், **சார்பு** – சார்பும், **இனம்** – இனமும், **இடம்** – இடமும், **மேவி** – பொருந்தி, **விளங்கா** – விளங்காத, **பலபொருளொருசொல்** – பலபொருளொரு சொல்லை, **சிறப்பெடுத்து** – சிறப்புச் சொல்லோடு கூட்டி, **பணிப்பர்** – சொல்லுவர் புலவர், எ–று.

(எனவே வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொருளொரு சொல்லை வாளா கூறுவரென்பதாயிற்று.)

வ–று.:–

மா என்பது, மாமரத்திற்கும், வண்டிற்கும், ஒருசார் விலங்கிற்கும், திருவிற்கும், பொதுவான பலபொருளொருசொல் இப்பொருள்களுள், 'மாபூத்தது' என்றவிடத்தே மரமென்பது வினையால் விளங்கிற்று. 'மாவீழ் மலர்' என்றவிடத்தே, வண்டென்பது சார்பால் விளங்கிற்று. 'தேர்கரிமாக்காலாள்' என்றவிடத்தே குதிரை யென்பது

இனத்தால் விளங்கிற்று. 'மாமறுத்த மார்பன்' என்றவிடத்தே, திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன. இனி மாவேறினான், மாவியாது, என்றவழிக் குறித்த பொருள் விளங்காமையால் விளங்குதற்பொருட்டுப், பாய்மாவேறினான், மாமரமேறினான், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக மற்றவையு மிப்படியே.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

குறித்த பொருள் விளங்காமற்கூறல் மரபன்மையின் விளங்கக்கூறுகவெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

வினைசார் பினமிட மேவி விளங்காப்

பலபொருள் ளொருசொற் பணிப்பர்சிறப் பெடுத்தே.

(வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பலபொருளொருசொல் பணிப்பர் சிறப்பு எடுத்தே.)

இ—ள்.: குறித்தபொருளை விளக்கும் வினையுஞ் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பலபொரு ளொருசொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர்.

பலபொருளொருசொல்லை எத்தனை ஏதுக்களால் விளங்கக் கூறல்வேண்டும்?

வினை சார்பு இனம் இடம் எனு நான்கு ஏதுக்களால் விளங்கக் கூறல்வேண்டும்.

அந்நான்கேதுக்களாலும் விளங்காத பலபொருளொருசொல்லை எவ்வாறு கூறல்வேண்டும்?

"விளங்காப் பலபொரு ளொருசொற் பணிப்பர் சிறப்பெடுத்தே"

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப்பொருந்தி விளங்கிக்கிடந்த பலபொரு ளொருசொல்லை வாளாகூறுவ ரென்பதாயிற்று.

வ—று.:—

(1) மாவென்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார்விலங்கிற்குந் திருவிற்குந் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. மாவீழ்மலர் என்றவழி, வண்டென்பது சார்பால் விளங்கிற்று. தேர்கரிமாக்காலாள் என்றவழிக்,

குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று. மாமறுத்த மார்பன் என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

(2) இனி, மாவேறினான், மாவியாது என்வரி பொதுமை நீங்கித் தெளியத்தோன்றாமையால், விளங்குதற்பொருட்டுப், பாய்மாவேறினான், மாமரமேறினான்; பாய்மாயாது மாமரம் யாது எனச் சிரிப்புச்சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவு மன்ன.

முகவை இராமனுச கவிராயர்

இதுவுமது,

இ–ள்.: வினை சார்பினமிடமேவி – குறித்தபொருளை விளக்கும் வினையும் சார்பும் இனமும் இடமும் முதலிய சொற்களைப் பல பொருளொரு சொல்லானது பொருந்தி, **விளங்காப் பல பொருளொரு சொல்** – (பொருள் விளங்கி நிற்குமாயின் அதனை அடைகொடாமற் சொல்லி) அவ்வினை முதலியவற்றைப் பொருந்தியும் பொருள் விளங்காதாயின் அதனை, **சிறப்பெடுத்துப் பணிப்பர்** – சிறப்படை கொடுத்துக் கூறுவர் புலவர், எ–று.

(பணித்தல் – சொல்லல்,) (அடை – விசேடணம்,) இடமுதலிய வென்றது, ஒழிந்த பெயர்களையுந் தழுவிக் கொளற்கெனக் காண்க.

வ–று.:–

மா– என்பது மாமரத்துக்கும், வண்டினுக்கும், சில மிருகங்களுக்கும், திருமகளுக்கும் பொதுவாகிய பலபொருளொரு சொல்லாதலால் இவற்றுள், 'மாம்பூத்தது'; 'காய்த்தது' என்ற மாத்திரமே மரமென்பது வினையால் விளங்கிற்று, 'மாவீழ்மலர்' என்ற மாத்திரமே வண்டென்பது – மலரென்ற சார்பால் விளங்கிற்று. 'காலாள் கரி மா இரதம் நாலங்கம்' என்ற மாத்திரமே, குதிரை என்பது இனத்தால் விளங்கிற்று, 'மா மறுத்த மலர் மார்பன்' என்ற மாத்திரமே, திருமகள் என்பது (திருமால்) மார்பென்னும் இடத்தால் விளங்கிற்று. என்னெனின், மார்பிடத்தவளை யணிந்தவ னென்பது மரபாதலாலென்க, முதலிய வென்றதினால், இம்மாவயிரம்; வெளிறு, இம்மா சண்டி என்ற மாத்திரமே மரமென்பதுங் குதிரையென்பதும் பெயரால் விளங்கிற்று. பிறவுமன்ன. இவை அடைகொடாமற் கூறப்பட்டன. இனி கன்றுக்குநீரூட்டு மாவேறினான் எனின், குறித்த பொருள் விளங்காமையால் ஆன்கன்று, பூங்கன்று எனவும் 'பாய்மா வேறினான்', 'மரமா வேறினான்', பாய்மா யாது, மரமாயாது எனவுஞ் சிறப்படைகொடுத்துக் கூறப் பொருள் விளங்கியவாறு காண்க.

இவற்றை வினை வேறுபடாப் பல பொருளொரு சொல்லென்றும், - வினைசார்பின மிடமேவிப்பொருள் விளங்கியதை வினைவேறுபடூஉம் பலபொருளொரு சொல்லென்றும், வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல் வினைவேறுபடாது பொதுமையினிற்பினும் ஒரோரிடத்துக் காலமிடம்பற்றிக் குறிப்பாற் பொருளுணர்த்தி நிற்குமென்றும் பொருள்விளங்க ஆசிரியர் தொல்காப்பியனார்,

"அவற்றுள்
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே"

எனவும்

"வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொன்
னினையுங் காலைக் கிளந்தாங் கியலும்"

எனவும், ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும் எனவுஞ் சூத்திரஞ் செய்தவாறுங் காண்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :- **வினை** - (குறித்தபொருளை விளக்கும்) வினையும், **சார்பு** - சார்பும், **இனம்** - இனமும், **இடம்** - இடமும் முதலிய சொற்களை, **மேவி** - பொருந்தி, **விளங்கா** - (பொருள்) விளங்காத, **பலபொருள் ஒருசொல்** - பலபொருள்குறிக்கும் ஒருசொல்லை, **சிறப்பு எடுத்து** - சிறப்புச் சொல்லோடு அடைமொழியாக்கி, **பணிப்பர்** - சொல்லுவர் (புலவர்).

குறிப்பு :-

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப் பொருந்திப் பொருள் விளங்கிக்கிடந்த பலபொரு ளொருசொல்லை வாளா கூறுவர்; வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தியாயினும் பொருந்தாமலாயினும் குறித்தபொருளை விளக்காமல் நிற்கிற பலபொருளொருசொல்லைச் சிறப்புச் சொற்கொடுத்துச் சொல்லுவர் என்றதாயிற்று.

உதாரணம்

1. மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் திருமகளுக்கும் பொதுவாகிய 'மா' என்னும் பலபொருளொருசொல்.

'மாப்பூத்தது'	என்றவிடத்து	வினையால்மரமென்பதும்
'மாவீழ்மலர்'	,,	சார்பால் வண்டென்பதும்,
'தேர்கரிமாக்காலாள்'	,,	இனத்தால் குதிரையென்பதும்,

மாவாழ் மார்பன் " இடத்தால் திருமகளென்பதும்.
விளங்கிற்று. இவை சிறப்புச் சொல்கொடாமல் கூறப்பட்டன.

2. இனி, 'மா ஏறினான்', 'மாயாது' என்றவிடத்துக் குறித்த பொருள் விளங்காமையால், விளங்குதற்பொருட்டு 'பாய்மா ஏறினான்', 'மாமரம் ஏறினான்', 'பாய்மாயாது', 'மாமரம்யாது' எனச்சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவும் இப்படியே.

ஆறுமுக நாவலர்

இ–ள்.:– வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பல பொருளொருசொல் – குறித்தபொருளை விளக்கும் வினையுஞ் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பலபொருளொரு சொல்லை, **சிறப்பு எடுத்துப் பணிப்பர்** – சிறப்புச்சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர், **எ–று.**

எனவே, வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொருளொரு சொல்லை வாளா கூறுவரென்பதாயிற்று.

வ–று.:–

(1) மா வென்பது, மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்கும் திருவிற்கும் பொதுவான பலபொருளொரு சொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. 'மாவீழ்மலர்' என்றவழி, வண்டென்பது சார் பால் விளங்கிற்று. 'தேர் கரி மாக் காலாள்' என்றவழிக், குதிரை யென்பது இனத்தால் விளங்கிற்று. 'மாமறுத்த மார்பன்' என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

(2) இனி 'மாவேறினான்', 'மாவியாது' என்றவழிக், குறித்த பொருள் விளங்காமையால், விளங்குதற் பொருட்டுப், பாய்மாவேறினான், மாமரமேறினான், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவுமன்ன.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள்.:– வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பலபொருளொரு சொல் – வினையும் சார்பும் இனமும் இடமும் பொருந்தியும் விளங்காத பல்பொருளொரு சொல்லை, – **சிறப்பு எடுத்துப் பணிப்பர்** – சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர். **எ–று.**

எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக்கிடந்த பலபொருளொரு சொல்லை வாளாகூறுவரென்பதாயிற்று.

வ–று.:–

(1) மா என்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் குதிரைக்கும் திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி மரமென்பது வினையால் விளங்கிற்று. மா வீழ் மலர் என்ற வழி வண்டென்பது சார்பால் விளங்கிற்று. தேர் கரி மாக் காலாள் என்றவழிக், குதிரை யென்பது இனத்தால் விளங்கிற்று. மாமறுத்த மார்பன் என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை சிறப்படையின்றி வாளாகூறப்பட்டன.

(2) இனி, மாவேறினான், மாவியாது என்றவழிக், குறித்தபொருள் விளங்காமையால், விளங்குதற்பொருட்டுப் பாய்மாவேறினான், மாமரமேறினான்; பாய்மாயாது, மாமரம்யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. மாவைக் கொண்டுவா என்பது பசித்தோனாற் சொல்லப்பட்டால் உணவுக்குரிய இடி மா வெனவும் கவசமிட்டுப் புறப்பட்டு நின்றோனாற் சொல்லப்படின் பரிமாவெனவும் குறித்துணரப்படுதலும் கொள்க. பிறவுமன்ன.

இவற்றை வினைவேறுபாடாப் பலபொருளொரு சொல்லென்றும், வினை சார்பு இனம் இடம் மேவிப் பொருள் விளங்கியதை வினைவேறுபடூஉம் பல பொருளொரு சொல் லென்றும், வினைவேறுபடூஉம் பலபொருளொரு சொல்வினை வேறுபடாது பொதுமையினிற்பினும் ஒரோரிடத்துக் காலமிடம்பற்றிக் குறிப்பாற் பொருளுணர்த்தி நிற்குமென்றும் பொருள் விளங்க ஆசிரியர் தொல்காப்பியனார் (சூ) 'அவற்றுள், வினைவேறுபடூஉம் பலபொருளொருசொல், வேறுபடுவினை யினுமினத்தினுஞ் சார்பினுந், தேறத்தோன்றும் பொருடெரி நிலையே 'எனவும். வினைவேறு படா அப் பலபொருளொரு சொன், னினையுங்காலைக் கிளந்தாங்கியலும், 'எனவும். 'ஒன்றுவினை மருங்கி னொன்றித் தோன்றும்''. எனவும், சூத்திரஞ்செய்தவாறுங் காண்க.

வை.மு.சடகோபராமடாநுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:- வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப் பல பொருளொருசொல் – குறித்தபொருளை விளக்கும் வினையுஞ் சார்பும் இனமும் இடமும் பொருந்தி விளங்காத பலபொருளொரு சொல்லை, சிறப்பு எடுத்துப் பணிப்பர் – சிறப்புச்சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் புலவர், எ—று.

எனவே, வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொருளொரு சொல்லை வாளா கூறுவரென்பதாயிற்று.

வ–று.:–

(1) மா வென்பது, மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்கும் திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள்களுள், மாப்பூத்தது, மாக்காய்த்தது என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. 'மாவீழ்மலர்' என்றவழி, வண்டென்பது சார் பால் விளங்கிற்று. 'தேர் கரி மாக் காலாள்' என்றவழிக், குதிரை யென்பது இனத்தால் விளங்கிற்று. 'மாமறுத்த மார்பன்' என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

(2) இனி 'மாவேறினான்', 'மாவியாது' என்றவழிக், குறித்த பொருள் விளங்காமையால், விளங்குதற் பொருட்டுப், பாய்மாவேறினான், மாமரமேறினான், பாய்மா யாது, மாமரம் யாது எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவுமன்ன.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: வினை – (குறித்தபொருளை விளக்கும்) வினையும், சார்பு – சார்பும், இனம் – இனமும், இடம் – இடமும், மேவி – பொருந்தி, விளங்கா – விளங்காத, பலபொருள் ஒரு சொல் – பல பொருளொருசொல்லை, சிறப்பு எடுத்து – சிறப்புச்சொல்லோடு கூட்டி, பணிப்பர் – சொல்லுவர் (புலவர்). எ–று.

பணித்தல் – சொல்லல். சிறப்புச்சொல் என்றது – அடைமொழியை. எனவே, வினைமுதலியவற்றுள் ஒன்றைப் பொருந்திவிளங்கிக் கிடந்த பலபொரு ளொரு சொல்லை அடைகொடாமல் வாளா கூறுவரென்பதாயிற்று.

சிறப்புச்சொல்லை அடைமொழி என்பதற் கொருப்படார் ஒருசா ராசிரியர். இதுபற்றிய உரைவிகற்பங்களை அனுபந்தத்திற் காண்க.

உ–ம்.

(1) மாவென்பது – மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்குந் திருவிற்கும் பொதுவான பலபொருளொரு சொல். இப்பொருள்களுள், 'மாப்பூத்தது' 'மாக்காய்த்தது' என்றவழி, மரமென்பது வினையால் விளங்கிற்று. 'மாவீழ்மலர்' என்றவழி, வண்டென்பது சார்பால் விளங்கிற்று. 'தேர் கரிமாக்காலாள்' என்றவழிக், குதிரையென்பது இனத்தால் விளங்கிற்று. "மாமறுத்த மார்பன்" என்றவழித், திருவென்பது இடத்தால் விளங்கிற்று. இவை வாளா கூறப்பட்டன.

(2) 'மாவேறினான்', 'மாவியாது' என்றவழிக், குறித்தபொருள் விளங்காமையால், விளங்குதற்பொருடடுப்,

'பாய்மா வேறினான்', 'பாய்மா யாது', எனச்சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக. பிறவுமென்ன.

கா. நமச்சிவாய முதலியார்

வினை – வினையும், **சார்பு** – சார்பும், **இனம்** – இனமும், **இடம்** – இடமும், **மேவி** – பொருந்தி, **விளங்கா** – விளங்காத, **பல பொருள் ஒரு சொல்** – பல பொருள்படும் ஒரு சொல்லை, **சிறப்பு எடுத்து** – சிறப்புச் சொல்லோடு கூட்டி, **பணிப்பர்** – சொல்லுவர் புலவர்.

எனவே, வினை முதலியவற்றுள் ஒன்றைப் பொருந்தி விளங்கிக் கிடந்த பலபொரு ளொருசொல்லை அடைமொழி இன்றிக் கூறுவர் என்பதாயிற்று.

உதாரணம்

மா என்பது மாமரத்திற்கும், வண்டிற்கும், விலங்கிற்கும், திருவிற்கும் பொதுவான பலபொருள் ஒரு சொல்.

இப் பொருள்களுள் :

1. மா பூத்தது – இங்கு மரம் என்பது வினையால் விளங்கிற்று.
2. மா வீழ் மலர் – இங்கு வண்டென்பது சார்பால் விளங்கிற்று.
3. தேர் கரி மாக் காலாள் – இங்குக் குதிரை யென்பது இனத்தால் விளங்கிற்று.
4. மா மறுத்த மார்பன் – இங்குத் திருவென்பது இடத்தால் விளங்கிற்று.

இவை அடைமொழியின்றிக் கூறப்பட்டன.

இனி, மா ஏறினான், மா யாது? என்றவழிக் குறித்தபொருள் விளங்காமையால் விளங்குதற் பொருட்டுப், பாய்மா ஏறினான், மாமரம் ஏறினான், பாய்மா யாது? மாமரம் யாது? எனச் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறுக.

மோசகு பொன்னையா

குறித்த பொருளை விளக்கும் வினையும், சார்பும், இனமும், இடமும், பொருந்திப் பொருள் விளங்காத பலபொருள் ஒரு சொல்லைச் சிறப்புச் சொல்லோடு கூட்டிச் சொல்லுவர் எ–று.

எனவே, வினை முதலியனவற்றுள் ஒன்றைப் பொருந்திப் பொருள் விளங்கிக்கிடந்த பலபொருள் ஒரு சொல்லை, வாளா கூறுவர் எனக் கொள்க.

எ–டு.

1. மா பூத்தது (மாமரம்

மா வீழ் மலர் (வண்டு)

தேர் கரி மா காலாள் (குதிரை)

மா மறுத்த மார்பன் (திரு) வினையால் பொருள் விளங்கிற்று

சார்பால் பொருள் விளங்கிற்று

இனத்தால் பொருள் விளங்கிற்று

இடத்தால் பொருள் விளங்கிற்று

2பாய் மா வேறினான்

மாமர மேறினான் சிறப்புச் சொல்லோடு கூட்டிக் கூறப்பட்டது.

தொல்காப்பியர்,

அவற்றுள்,
வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
வேறுபடு வினையினு மினத்தினுஞ் சார்பினுந்
தேறத் தோன்றும் பொருடெரி நிலையே,1

ஒன்றுவினை மருங்கின் ஒன்றித் தோன்றும்
வினைவேறு படாஅப் பலபொரு ளொருசொல்
நினையுங் காலைக் கிளத்தாங் கியலும்,2

என அதன் இலக்கணத்தை அமைத்துப்போந்தார்.

(39)

390. எழுத்திய றிரியாப் பொருடிரி புணர்மொழி இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

எழுத்தியல் திரியாப் பொருள் திரி புணர்மொழி
இசைத் திரிபால் தெளிவு எய்தும் என்ப.

eḷuṭṭu iyal ṭiriyā poruḻ ṭiri puṇarmoḻi
isai ṭiripu āl ṭeḻivu eyṭum enpa

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

The precise meaning of a compound which without any change in its letters is yet capable of a double interpretation, maybe ascertained (by dividing it) by means of (a two-fold) pronunciation.

மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.: எழுத்து ஒருதன்மையவாயும் பொருள்வேறுபட்டும் வரும் புணர்ச்சிமொழிகள் இசையை எடுத்தும் படுத்தும் வேறுபடுத்தி யுச்சரித்தாற் பொருள்வேறுபாடு விளங்குமென்று விளம்புவர் மேலோர், எ–று.

வ–று.:–

செம்பொன்பதின்றொடி, குறும்பரம்பு, ஆற்றுக்கரை, செம்பருத்தி, நாகன்றேவன்போத்து, [1]தாமரைக்கண்ணியார், குன்றேறாமா என்பவை. இவற்றை வேறுபட உச்சரித்துக் கண்டுகொள்க. பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: எழுத்தினது இயல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறநிற்கும் தொடர்மொழிகள் அங்ஙனம் குறித்துக்கூறும் சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துக் கூறும் வேறுபாட்டால் துணியப்படும் என்று சொல்லுவர் புலவர், எ–று.

எனவே அவ்வாறு இசையறுத்ததுக் கூறுதல் மரபு என்பதாயிற்று.

வ–று.:–

செம்பொன்பதின்தொடி, நாகன்றேவன்போத்து, தாமரைக் கணியார், குன்றேறாமா, குறும்பரம்பு, ஆற்றுக்கரை, செம்பருத்தி என்றற் றொடக்கத்தனவற்றை அவ்வாறு இசையறுத்து உச்சரித்துக் காண்க.

பாட வேறுபாடு:–

1. (1) தாமரைக்கணியார்,
(2) தாமரைக்கண்ணியார்.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், எடுத்தல் ஓசையாற் படுத்தல் ஓசையாற் புணர்மொழிப் பொருள்கள் வேறுபடும் எனக் கூறியது.

இ–ள்.:– எழுத்திய றிரியா – எழுத்து ஒரு தன்மைவாய்த் தன்னியல்பு திரியாமல் நின்றும், பொருடிரி புணர்மொழி – பொருண் வேறுபட்டு வரும் புணர்ச்சி மொழிகள், இசைத்திரிபால் – இசை எடுத்தும் படுத்தும் வேறுபடுத்தும் உச்சரித்தால், தெளிவெய்து மென்ப – பொருள் இரண்டாய் வேறுபட்டு விளங்கும், எ–று.

உ–ம்.:–

செம்பொன் பதினாயிரங் கழஞ்சு கண்டேன், குறும்பரம்பு என வேறுபட உச்சரித்துக் கொள்க.

விசாகப் பெருமாளையர்

இ–ள்.:– எழுத்து– எழுத்தினது, இயல்– தன்மை, திரியா – வேறுபடாமல், பொருடிரி – பொருள்வேறுபட்டு நிற்கிற, புணர்மொழி – தொடர் மொழிகள், இசைத்திரிபால் – குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந் தோன்ற இசையறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால், தெளிவெய்தும்– துணிவுண்டாகும், என்ப–என்று சொலலுவர் புலவர், எ–று.

வ–று.:–

செம்பொன்பதின்றொடி, நாகன் றேவன் போத்து, குறும்பரம்பு என வரும். செம், பொன்பதின்றொடி, செம்பொன் பதின்றொடி எனவும், நாகன், றேவன், போத்து எனவும், நாகன்றே, வன்போத்து எனவும், குன்றேறா, மா எனவும், குன், றேறாமா எனவும், இவற்றை அப்படி யிசையறுத்து உச்சரித்துக் குறித்த பொருளைக் காட்டுக.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

புணர்ச்சியாற் சொல்லும் பொருளும் ஐயுறநிற்குந் தொடர்மொழிகள் இதனாற் றெளியப்படுமெனக் கூறுஞ் சூத்திரம் யாது?

எழுத்தறிய றிரியாப் பொருடிரி புணர்மொழி
இசைத்திரி பாற்றெளி வெய்து மென்ப.

(எழுத்து இயல் திரியாப் பொருள் திரி புணர்மொழி இசைத்திரிபால் தெளிவு எய்தும் என்ப.)

இ–ள்.:– எழுத்து இயல் திரியப் பொருள் திரி புணர்மொழி எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறநிற்குந் தொடர்மொழிகள், இசைத்தி திரிபால்–குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந்

தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே, தெளிவு எய்தும் என்ப— துணியப்படும் என்று சொல்லுவர் புலவர். எ—று.

எனவே, அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபென்பதாயிற்று.

வ—று.:—

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறாமா, குறும்பரம்பு என வரும். இவை, செம்பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின். செம்பொன் பத்துப்பலம். எனவும், செம்—பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்றபது பலம். எனவும், நாகன்—தேவன்—போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேனும் – போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேவனும் போத்தும். எனவும், நாகன்றே—வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம்பெண்ணெருமையன்று முதிர்ந்த எருமைக்கடா. எனவும், குன்றேறா—மா என இசையறத்துக் கூறின், குன்றின் மேலேறாத விலங்கு. எனவும், குன்—றேறாமா என இசையறுத்துக்கூறின், குன்றின் மேலேறுங் காட்டுப்பசு. எனவும், குறும்ப—ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநிலமன்னருடைய அரண். எனவும், குறும்—பரம்பு என இசையறுத்துக்கூறின், குறுமையாகிய கழனி திருத்தும்பலகை. எனவும், பொருடுணியக் கிடந்தவாறு காண்க.

முகவை இராமனுச கவிராயர்

இதுவுமது,

இ—ள்.: எழுத்திய றிரியா – எழுத்தினது தன்மை வேறுபடாது, பொருடெரி புணர்மொழி—பொருள்வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்பட நிற்குந்தொடர் மொழிகள், இசைத்திரிபாற் றெளிவெய்து மென்ப— (அவ்வாறு சேர்த்துக் கூறுஞ் சொற்களின் இறுதியும் முதலுந் தோன்ற) இசையறுத்துக் கூறும் வேறுபாட்டினாலே தெளியப்படு மென்று சொல்லுவர் புலவர், எ—று.

எனவே அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபென்பதாயிற்று. இசை என்பது இங்கே ஒலியை யுணர்த்தி நின்றது.

வ—று.:—

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன்போத்து, குன்றேறாமா, குறும்பரம்பு, செம்பருத்தி, தாமரைக்கண்ணியார், இனியானினியார், ஐயமிட்டார் கெட்டார் என வரும். இவற்றுள், செம்பொன் பதின்றொடி என இசையறுத்துக் கூறின், செம்பொன் பத்துப்பலம் எனவும்; செம் பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்றுபது பலம் எனவும், நாகன்

றேவன் போத்து என இசை யறுத்துக் கூறின் நாகனுந் தேவனும் போத்தும் எனவும்; நாகன்றே வன்போத்து என இசையறுத்துக் கூறின் இளமையதன்று முதிர்ந்த எருமைக்கடா எனவும் பொருள்விளங்கிக் கிடந்தமை காண்க. ஒழிந்தனவற்றையும் இவ்வாறு இசையறுத்துக் கூறிப் பொருள் காண்க, பிறவுமன்ன.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– எழுத்து இயல் திரியா – எழுத்தினது தன்மை வேறுபடாமல், பொருள் திரி – பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப் படநிற்கின்ற, புணர்மொழி – தொடர்மொழிகள், இசைதிரிபால் – (குறிக்கப் பட்ட சொற்களின் இறுதியும் முதலுந்தோன்ற) இசையறுத்துச்சொல்லும் வகையினால், தெளிவு எய்தும் – பொருள் துணியப்படும், என்ப – என்று சொல்லுவர் (புலவர்).

குறிப்பு :– எனவே, அவ்வாறு இசையறுத்துக்கூறுதல் மரபு என்ற தாயிற்று.

உதாரணம்

செந்தி னகரன்	– செந்தில் நகரத்தை யுடையவன்	எனவும்,
செந் தினகரன்	– செம்மையாகிய சூரியன்	
அத் திகிரிக் கையன்	– அந்தச் சக்கரத்தைக் கையிலுடையவன்	
அத்தி கிரிக் கையன்	– அத்திகிரிக்குத் தலைவன்	எனவும்,
கண்டு வந்தான்	– பார்த்து வந்தான்	
கண் டுவந்தான்	– பார்த்து மகிழ்ந்தான்	எனவும்,

இசையறுத்துக் கூறியபொழுது பொருள் துணியப்பட்டமைகாண்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: எழுத்து இயல் திரியாப் பொருள் திரி புணர் மொழி – எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள், இசைத் திரிபால் தெளிவு எய்தும் என்ப – குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே துணியப்படும் என்று சொல்லுவர் புலவர், எ–று.

எனவே அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபென்பதாயிற்று.

வ–று.:–

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறாமா, குறும்பரம்பு என வரும். இவை செம்பொன் –

பதின்றொடி என இசைறுத்துக் கூறின், செம்பொன் பத்துப்பலம் எனவும், செம்–பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பது பலம் எனவும், நாகன் – றேவன் – போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேவனும் போத்தும் எனவும்; நாகன்றே – வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம்பெண்ணெருமை யன்று முதிர்ந்த எருமைக்கடா எனவும், குன்றேறா –மா என இசையறுத்துக் கூறின், குன்றின் மேலேறாத விலங்கு எனவும், குன்றே றாமா என இசையறுத்துக் கூறின், குன்றின் மேலேறுங் காட்டுப்பசு எனவும், குறும்ப – ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநிலமன்னருடைய அம்பு எனவும், குறும்பரம்பு என இசையறுத்துக் கூறின், குறுமையாகிய கழனி திருத்தும் பலகை. எனவும் பொருடுணியக் கிடந்தமை காண்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். எழுத்து இயல் திரியாப் பொருள் திரி புணர்மொழி – எழுத்தினது தன்மை வேறுபடாது பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள், **– இசைத்திரிபால் தெளிவு எய்தும் என்ப –** குறிக்கப்பட்ட சொற்களி னிறுதியு முதலுந் தோன்ற இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே துணியப்படுமென்று சொல்லுவர் புலவர். எ–று.

எனவே அவ்வாறு இசையறுத்துக் கூறல் மரபென்பதாயிற்று.

வ–று.:–

செம்பொன்பதின்றொடி, நாகன்றேவன் போத்து, குன்றேறாமா, குறும்பரம்பு என வரும். இவை, செம்பொன் – பதின்றொடி என இசையறுத்துக் கூறின், செம்பொன் பத்துப்பலம் எனவும். செம்பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பதின்றொடி – செம்பு ஒன்பது பலம். (தொடி–பலம்) எனவும் நாகன்–றேவன்–போத்து என இசையறுத்துக் கூறின், நாகனுந் தேவனும் போத்தும். எனவும் நாகன்றே – வன்போத்து என இசையறுத்துக் கூறின், இளம் பெண்ணெருமையன்று முதிர்ந்த எருமைக்கடா எனவும் குன்றேறா – மா என இசையறுத்துக்கூறின், குன்றின் மேலேறாத விலங்கு எனவும் குன்றே றாமா (குன்று ஏறு ஆமா) என இசையறுத்துக் கூறின், குன்றின் மேலேறுங் காட்டுப்பசு எனவும் குறும்ப–ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநில மன்னருடைய அம்பு. எனவும் குறும்பரம்பு என இசையறுத்துக்கூறின், குறுமையாகிய பரம்பு (பரம்பு–சேறாடிய வயலை மட்டஞ்செய்யும் பலகை) எனவும் பொருடுணியக் கிடந்தமை காண்க.

"தள்ளா விடத்தேர் தடந்தா மரை யுடைப்ப, எள்ளா வரிமானிடர் மிகுப்ப, உள்வாழ்தேம், சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிரு வுள்ளம், நந்துந்தொழில் புரிந்தார் நாடு'. இதில் (க) தள்ளா – இடத்து–ஏர்–தடம்–தாமரை. எ–ம். (உ.) தள்ளா–விடத்தேர் – தடம்–தாம்–மரை. எ–ம் (ங) எள்ளா–அரி–மானிடர்–மிகுப்ப. எ–ம் (ச) எள்ளா – அரிமான் – இடர் – மிகுப்ப. எ–ம். எழுத்து வேறுபடாத தொடர்மொழி வெவ்வேறு பொருளுக்கு வெவ்வேறா யிசைந்து வந்தமை காண்க. (க) ம் பொருள் : நீங்காத நிலத்து ஏர் தடாகங்களின் தாமரைகளை எ–ம். (உ) ம் பொருள் : விலகாத விடத்தேரென்னு மரத்தையும் மலைப்பக்கங்களைத் தாவும் மரைமிருகங்களையும் எ–ம் (ங) ம் பொருள் : இகழ்படாத சூடுகளை மானிடர் திரட்ட, எ–ம். (ச) ம் பொருள் : இகழப்படாத சிங்கம் துன்பமிகச் செய்யவும். எ–ம். அறிக.

பேரவாவொடு மாசுணம் பேரவே, பேரவாவொடு மாசுணம் பேரவே; ஆரவாரத்தினோடு மருவியே, ஆரவாரத்தினோடு மருவியே". பேர் – அவாவொடு – மா சுண்ணம் – பேரவே எனவும், பேர் அவாவொடு மாசுணம் பேரவே. எனவும்; ஆர வாரத்தினோடு மருவியே. எ–ம், ஆரவாரத்தின் ஒடும் அருவியே. எனவும் பொருளுக்கேற்ப இசை திரிந்தமை காண்க. (சுண்ணம் – பொற்பொடி; மாசுணம் – பெரும்பாம்பு; ஆர – நிறைய; வாரம் – தீரம்; ஆரவாரம் – பேரொலி. ஆர– ஆரத்தினோடும் – என்று பிரிப்பினுமாம். ஆரம் – முத்து.

வை.மு. சடகோபராமானுசா சாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **எழுத்து இயல் திரியா** – எழுத்தின் தன்மை வேறுபடாமல், **பொருள் திரி** – பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயப்ட நிற்கின்ற, **புணர்மொழி** – தொடர்மொழிகள், **இசை திரியால்** – (குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற) இசையறுத்துச் சொல்லும் வகையினால், **தெளிவு எய்தும்** – பொருள் துணியப்படும், என்ப–என்று சொல்வர், புலவர், எ–று. இது, வழாநிலை.

எனவே, அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபு என்றதாயிற்று.

உ–ம்.:–

செம்பொன் பதின்பலம். குறும்பரம்பு, புத்தியிலாதவன் என வருகின்ற இவை, செம்பொன் பதின்பலம் என இசையறுத்துக் கூறினால் செம்பொன் பத்துப்பலம் என்றும், செம் பொன்பதின் பலம் என இசையறுத்துக் கூறினால், செம்பு ஒன்பது பலம்

என்றும்; குறும் பரம்புஎன இசையறுத்துக் கூறினால் குறுநில மன்னருடைய அம்பு என்றும். குறும் பரம்பு என இசையறுத்துக் கூறினால் குறுமையாகிய கழனி திருத்தும் பலகை என்றும்; புத்தி யிலாதவன் என இசையறுத்துக் கூறினால் அறிவு கெட்டவனென்றும், புத்தியி லாதவன் என இசையறுத்துக் கூறினால் ஞானத்திற் சூரிய னென்றும் பொருள் துணியக் கிடத்தல் காண்க.

பவானந்தம் பிள்ளை

இ–ள்.: எழுத்து இயல் திரியா – எழுத்தினது தன்மை வேறுபடாது, பொருள் திரி புணர்மொழி – பொருள் வேறுட்டுச் சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள், இசைத் திரிபால் – (குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந் தோன்ற) இசையறுத்துச் சொல்லும் வேறுபாட்டினாலே, தெளிவு எய்தும் என்ப – பொருள் துணியப்படும் என்று சொல்லுவர் புலவர். எ–று.

எனவே, அவ்வாறு இசையறுத்துக் கூறுதல் மரபென்பதாயிற்று.

(உ–ம்.)

செம்பொன்பதின்றொடி, குன்றோமா, குறும்பரம்பு, புத்தியிலாதவன், ஐயமிட்டார் கெட்டார் என வரும. இவை செம்பொன் – பதின்றொடி என இசையறுத்துக்கூறின், செம்பொன் பத்துப்பலம் எனவும், செம்–பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின் செம்பு ஒன்பது பலம் எனவும்; குன்றேறா – மா என இசையறுத்துக்கூறின், குன்றின் மேலேறாத விலங்கு எனவும், குன்–றேறாமா என இசையறுத்துக் கூறின் குன்றின்மேல் ஏறமாட்டாமா எனவும், குன்றோ – றாமா என இசையறுத்துக் கூறின், குன்றின்மேலேறுங் காட்டுப்பசு எனவும்; குறும்ப – ரம்பு என இசையறுத்துக் கூறின், குறுநில மன்னருடைய அம்பு எனவும் குறும்பரம்பு என இசையத்துக்கூறின், குறுமையாகிய கழனிதிருத்தம் பலகை எனவும்; புத்தி–யிலாதவன் என இசையறுத்துக் கூறின் அறிவு இல்லாதவன் எனவும், புத்தியி–லாதவன் என இசையறுத்துக் கூறின் அறிவில் சூரியன எனவும்; ஐயமிட்டார் – கெட்டார் என இசையறுத்துக் கூறின் பிச்சையிட்டவர் கெடுவர் எனவும், ஐயமிட்–டார்–கெட்டார் என இசையறுத்துக் கூறின் பிச்சையிட்டுக் கெட்டவர்கள் யார் (ஒருவருமில்லை) எனவும், பொருள்துணியக் கிடந்தமை காண்க.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) எழுத்து இயல் திரியா எழுத்தினது தன்மை வேறுபடாமல், பொருள் திரி – பொருள் வேறுபட்டு நிற்கிற, புணர்மொழி – தொடர்மொழிகள், இசைத்ததிரிபால் – (குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற) இசையறுத்துச் சொல்லுகிற வேறுபாட்டால், தெளிவு எய்தும் – துணிவுண்டாகும், என்ப – என்று சொல்லுவர் (புலவர்.) (எ–று)

(பொ–ரை.)

எழுத்தினது இயல்பு வேறுபடாது, பொருள் வேறுபட்டுச் சொல்லும் பொருளும் ஐயுறநிற்கும் தொடர்மொழிகள், அங்ஙனங் குறித்துக்கூறும் சொற்களினிறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துக் கூறும் வேறுபாட்டால் துணியப்படு மென்று சொல்லுவர் (புலவர்).

(உ–ம்.)

செம்பொன்பதின்றொடி.

நாகன்றேவன்போத்து.

குறும்பரம்பு. இவற்றை,

செம்பொன் பதின்தொடி என இசையறுத்துக் கூறுனால், செம்பொன் பத்துப்பலம் என்றும்,

செம் பொன்பதின்தொடி என இசையறுத்துக் கூறினால், செம்பு ஒன்பது பலம் என்றும், (தொடி – பலம்.)

நாகன் றேவன் போத்து என இசையறுத்துக் கூறினால், நாகனும் தேவனும் போத்தும் என்றும்,

நாகன்றே வன்போத்து என இசையறுத்துக் கூறினால், இளம் பெண் ணெருமை யன்று முதிர்ந்த எருமைக்கடா என்றும், (நாகு – இளம் பெண்ணெருமை. போத்து – கடா.)

குறும் பரம்பு என இசையறுத்துக் கூறினால் குறிய பாம்பு என்றும், (பாம்பு – கழனிதிருத்தும் பலகை.)

குறும்ப ரம்பு இசையறுத்துக் கூறினால், குறுநில மன்னருடைய அம்பு என்றும் பொருள் துணியக்கிடத்தல் காண்க.

கா. நமச்சிவாய முதலியார்

எழுத்து இயல் – எழுத்தினது தன்மை, திரியா – வேறுபடாமல், பொருள் திரி – பொருள் வேறுபட்டு நிற்கின்ற, புணர்மொழி – தொடர்மொழிகள், இசை திரிபால் – (குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலுந் தோன்ற) இசையறுத்துச் சொல்லுகின்ற வேறுபாட்டால், தெளிவு எய்தும், துணிவுண்டாகும், என்ப – என்று சொல்வர் புலவர்.

உதாரணம்

செம்பொன்பதின்றொடி, குறும்பரம்பு. இவற்றை :

செம்பொன் பதின்றொடி	இங்குப் பிரித்துக் காட்டியபடி
செம் பொன்பதின்றொடி	இசை யறுத்து உச்சரித்துக்
குறும் பரம்பு	குறித்த பொருளைக் கொள்க.
குறும் பரம்பு	

செம்பொன் பதின் றொடி என இசையறுத்துக் கூறின், செம்பொன் பத்துப் பலம் எனவும்,

செம் பொன்பதின்றொடி என இசையறுத்துக் கூறின், செம்பு ஒன்பது பலம் எனவும் பொருள் துணியக்கிடந்ததை காண்க. பிறவும் அன்ன.

மோசகு பொன்னையா

எழுத்தின் தன்மை வேறுபடாமல், பொருள் வேறுபட்டு, சொல்லும் பொருளும் ஐயுற நிற்குந் தொடர்மொழிகள், குறிக்கப்பட்ட சொற்களின் இறுதியும் முதலும் தோன்ற இசையறுத்துச் சொல்லும் முறைமையினால் துணியப்படும் என்று சொல்லுவர் புலவர் எ—று.

இதனால், சொல்லும் பொருளும் தெளிவின்றி நிற்கும் தொடர் மொழிகளை, இசையறுத்துக் கூறுதல் மரபு என்றார் எனக் கொள்க.

எ—டு.

ஐயுற நிற்குந் தொடர் மொழிகள்		இசையறுத்து கூறுதல்
1. செம்பொன்பதின்றொடி	–	செம்பொன் பதின் தொடி சேம்பு ஒன்பதின் தொடி
2. நாகன்றேவன்போத்து	–	நாகன்றே வன்போத்து நாகன் தேவன் போத்து
3. குன்றேறமா	–	குன்று ஏறா மா குன்று ஏறு ஆமா
4. குறும்பரம்பு	–	குறும்பர் அம்பு குறும் பரம்பு1

(40)

**391. ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.**

ஒரு பொருள் மேல் பல பெயர் வரின் இறுதி
ஒரு வினை கொடுப்ப தனியும் ஒரோ வழி.

oru porul̲ mēl pala peyar varin̲ iūuṭi
oru vin̲ai kotuppa ṭan̲iyum orō vaḷi

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Several nouns and common predicate

Several nouns signifying the same thing (in the same sentence) should take but one predicate; (in some cases, however,) the common predicate may be added to each (of these Nouns).

ஒப்புமைப் பகுதி

ஒரு பொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே

(தொல்.சொல்.:42)

.... மதித்த
ஒருபொருண்மேற் பல்பெயருண் டானால் அவற்றிற்கு
ஒருவினையே சொல்லுக ஓர்ந்து

(நேமி.:37:2–4)

ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே

(இ.வி.:318)

ஒருபொருள் குறித்த பலபெயர்க் கிளவி
ஒருவினை முடிபறை யாதப் பெயர்தொறும்
வேறொரு வினைதந் துரைப்பது விதியே

(மு.வீ.:717)

மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– ஒரு பொருளின் மேற் பலபெயர்கள் அடுக்கி வரின், அவற்றிற்கெல்லாம் ஈற்றிலே ஒருவினையைக் கொடுப்பர்; அவையன்றிச்

சிறுபான்மை பெயர்தோறும் ஒருவினையைக் கொடுத்தும் வழங்குவர் பெரியோர், எ—று.

வ—று.:-

'ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன் சாத்தன் வந்தான்', 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி வந்தானென்றாற் பெயர்களனைத்தும் அவர்மேல் நிற்கும்; இனி, ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான்வந்தான், செயிற்றியன்வந்தான், இளங்கண்ணன்வந்தான், சாத்தன் வந்தானென்றால், அனைத்தும் அவன் மேற் செல்லாவாம்; இனி, ஒரோவழி:

"எந்தை வருகவெம் பெருமான் வருக,
மைந்தன் வருக மதலை வருக"

எனவும்,

"மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதக
இன்றேன் கமழ்தா ரியக்கன் புகுதக
வென்றோன் புகுதக வீரன் புகுதக
என்றே நகர மெதிர்கொண் டதுலே"

(சீவக.2122)

எனவும் பெயர்தோறும் ஒருவினை வந்தன.

இனி, எந்தைவருக; எம்பெருமான் போக; மைந்தன்நிற்க; மதலையிருக்க என்றால் ஒருவினையன்மையின் ஏலாவென்க. பிறவுமன்ன. ஒரோ வழி — சிறுபான்மை.

சங்கர நமச்சிவாயர்

எ—னின், மரபு வழுவற்க எனக் காத்தலும், அதன் வழுவமைப்பும் **உணர்—ற்று.**

இ—ள்.:- ஒருபொருள்மேல் பலபெயர் வருமாயின் பொருள் ஒன்றே என்பதுதோன்ற இறுதிக்கண் ஒருவினை கொடுத்துக் கூறுவர்; ஒருபொருளாதல் தவறாதவழிப் பெயர்தோறும் கொடுத்துக் கூறுவர் புலவர், எ—று.

ஒரு பொருட்கு ஒருமுடிபு என்பார் ஒருவினை கொடுப்ப என்றாரன்றி ஒருபெயர் கொடுத்தலை ஒழித்தாரல்லர் என்க.

வ—று.:-

'ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்' எனவும், 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இவன்' எனவும்.

1. "குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனம்
காக்கும் கருங்கட்செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய்
வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை
நண்ணும் பளிக்கறையே"

எனவும்,

2. "பொருப்பர்க்கி யாமொன்று மாட்டேம்
புகலப் புகலெமக்காம்
விருப்பர்க் கியாவர்க்கு மேலர்க்கு
மேல்வரும் ஊரெரித்த
நெருப்பர்க்கு நீடம் பலவருக்
கன்பர் குலநிலத்துக்
கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற
தின்றிக் கடிப்புனமே"

எனவும் இவை இறுதிக்கண் ஒருவினையும் பெயரும் கொடுக்கப்பட்டன. இனிப் பெயர்தோறும் கொடுக்குமாறு:–

3. "மின்தோய் வரைகொன்ற வேலோன் புகுதக
இன்தேன் கமழ்தார் இயக்கன் புகுதக
வென்றோன் புகுதக வேலோன் புகுதக
என்றே நகரம் எதிர்கொண் டதுவே"

என வரும். பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், பல பெயர் அடுக்கி வந்தால் அவை கொண்டு முடியும் தன்மை இவையென.....

இ–ள்.: ஒருபொருண்மேல்–ஒரு பொருளின்மேலே, பல பெயர்வரின் – அதன் பரியாய நாமமாகிய பல பெயர் அடுக்கி வரில், இறுதி ஒரு வினை கொடுப்ப–அவற்றிற்கெல்லாம் இறுதியிலே வினைகொடுப்பர், தனியு மொரோவழி – அவ்வாறன்றிச் சிறுபான்மை பெயர்தொறும் தனித்தனியே பெயர் கொடுப்பர் பெரியோர், எ–று.

உ–ம்.:–

ஆசிரியன் பேரூர்கிழான் செயிற்றியன் இளங்கண்ணன்
சாத்தன் வந்தான், பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்

பெருவழுதி வந்தான் எனப் பெயர்கள் அனைத்தும் வர இறுதி ஒருவினை கொண்டது. ஆசிரியன் வந்தான், பேரூர்கிழான் வந்தான், செயிற்றியன் வந்தான், இளங்கண்ணன் வந்தான் என அனைத்தினும் வினை வரப் பொருந்தாவாம். இனி, எந்தை வருக, எம்பெருமான் வருக, மதலை வருக எனவும்,

"மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதுக
இன்றேன் கமழ்தா ரியக்கன் புகுதக
வென்றோன் புகுதுக வீரன் புகுதக
என்று நகர மெதிர்கொண் டதுவே"

(சீவக.2122)

எனவும் பெயர்தொறும் ஒருவினை வந்தது. இனி, எந்தை வருக, எம்மான் போக, மைந்தன் நிற்க என ஒரு வினையன வாகா என்க.

ஒரு வினைச் சொல்லின் பரியாய நாமமுமாம். எந்தை சொல்லுக, எம்மான் விளம்புக என வரும்.

விசாகப் பெருமாளையர்

இது, மரபு வழாநிலையும் அதன் வழுவமைதியும் உணர்த்துகின்றது.

இ–ள்.:– ஒருபொருண்மேல் – ஒருபொருளின் மேலே, பலபெயர் – பல பெயர்கள், வரின்–வருமாயின், இறுதி–இறுதியில், ஒருவினை – ஒரு முடிக்குஞ் சொல்லை, கொடுப்ப–பொருளொன்றே யென்பது தோன்றக் கொடுத்துக் கூறுவர், ஒரோவழி – ஒருபொருளாகுகை தவறாதவிடத்தே, தனியும் – பெயர்தோறும், (கொடுப்ப) கொடுத்துக் கூறுவர், எ–று.

வ –று.:–

"ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்"

எனவும்,

"குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங்
கருங்கட் செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய்
வருவன்வண் பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை
நண்ணும் பளிக்கறைக்கே"

எனவும், வருகிற இசையிறுதியிலே முறையே வந்தான்

எனவும், கண்டு எனவும் ஒருசொல்லைக் கொண்டன "வேலோன் வருக விமலைசேய் வருக மாலோன் மருகன் வருக வென்றனவே" எனப் பெயர்தோறும் வினை கொண்டன.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒருபொருளைக் குறித்துவந்த பல பெயர்ச்சொற்கள் இறுதியில் ஒருவினையே பெறுமென்பதும், ஒரோவழிப் பெயர்தோறும் அவ்வொருவினையே வரவும் பெறுமென்பதுங் கூறும் சூத்திரம் யாது?

ஒருபொருண் மேற்பல பெயர்வரி னிறுதி
ஒருவினை கொடுப்ப தனியு மொரோவழி.

(ஒருபொருண்மேல் பல பெயர் வரின் இறுதி ஒருவினை கொடுப்ப தனியும் ஒரோவழி.)

இ–ள்.:– ஒருபொருள்மேல் பலபெயர் வரின்–ஒருபொருளின் மேலே பலபெயர்கள் வருமாயின், இறுதி ஒருவினை கொப்ப–பொருளொன்றேயென்பது தோன்ற இறுதியில் ஒரு முடிக்குஞ்சொல்லைக் கொடுத்துக் கூறுவர், ஒரோவழித் தனியும் (கொடுப்ப)–ஒருபொருளாகுகை தவறாதவிடத்தே பெயர்தோறுங் கொடுத்துங் கூறுவர் புலவர். எ–று.

வ–று.:–

(1) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான். எனவும்,

"குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங்
கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட்
செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் டியான்போய் வருவன் பண்பூங்கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப் பண்ணைகண்ணும்
பளிக்கறைக்கே."

எனவும், இவை, இறுதியிலே முறையே, வந்தான். எனவும், கண்டு. எனவும், ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

(2) "மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்–மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தா–னேவருந் தெரித றேற்றா திருந்திடு மொருவன் வந்தான்–றேவர்க டேவன் வந்தா னென்றன சின்ன மெல்லாம்" என்புழி, முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பன முருகனென்னும் ஓர்பொருளேயென்பது தெளிய நின்றமையினாலே. பெயர்தோறும் வந்தான் என ஒருவினை கொடுக்கப்பட்டமை காண்க.

முகவை இராமானுச கவிராயர்

இது, மரபு வழாநிலையும் வழுவமைதியு முணர்த்துகின்றது.

இ-ள்.: ஒரு பொருண்மேற் பல பெயர் வரின் -ஒரு பொருளின்மேற் பல பெயர்கள் வருமாயின், **இறுதி யொரு வினை கொடுப்ப** - (பொருளொன்றே யென்பது தோன்ற) அதன் இறுதியிலே ஒரு வினை கொடுத்து முடிப்பர், **தனியுமொரோவழி** - (ஒரு பொருளே யென்பது தெளிய நின்றஇடத்துத்) தனித்தனிப் பெயர் தோறுங் கொடுத்தும் முடிப்பர் புலவர், எ-று.

ஒரு பொருளுக்கு ஒருமுடிபென்று சொல்ல வந்தவர், 'ஒருவினை கொடுப்ப' வென்றார். அன்றிப் பெயர் கொடுத்து முடித்தலை விலக்கினாரல்லர் ஆதலாற் பெயர் கொடுத்தும் முடிப்பரெனக் கொள்க.

வ-று.:-

ஆசிரியன் பேரூர்கிழான் இளங்கண்ணன் சாத்தன் வந்தான் எனவும்; பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி இவன் எனவும்; இவையிறுதியில் ஒருவினையும் பெயருங் கொடுக்கப்பட்டன. இனிப் பெயர்தொறுங் கொடுக்குமாறு:- ஆசிரியன் வருக, பேரூர்கிழான் வருக, இளங்கண்ணன் வருக, சாத்தன் வருக எனவும்,

"மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதுக
வின்றேன் கமழ்தா ரியக்கன் புகுதுக
வென்றோன் புகுதுக விறலோன் புகுதுக"

என வருமிச் செய்யுளுள், வேலோன், இயக்கன், வென்றோன். விறலோன் என்பன முருகனென்னுமோர் பொருளே என்பது தெளிய நின்றதினாலே, பெயர்தோறும் புகுதுக என ஒருவினைகொடுத்தவாறு. இனி ஆசிரியன் வருக, பேரூர்கிழான் செல்க, இளங்கண்ணன் உண்க. சாத்தனுறங்குக என வேறுவினை கொடுப்பிற் பொருள் வேறுபடுமாதலால் முதல் வந்த வினையே பெயர்தொறும் வரவேண்டு மென்று சொல்ல வந்தவர், 'தனியு மொரோவழி' (அவ்வினை கொடுப்பரெனச் சுட்டி) முடியாது விட்டனர். இவ்வாறு பெயர்தொறும் ஒருவினைவருவனவெல்லாங் காதல் முதலிய பற்றி வருதலா லொருவினை வந்ததனை யேக்குமென்க.

"ஒருபொருள் குறித்த வேறுபெயர்க் கிளவி
தொழில்வேறு கிளப்பி னொன்றிட னிலவே"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதல் காண்க. இதன் முடிபு விளங்கிற்று.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– ஒருபொருள்மேல் – ஒருபொருளின்மேலே (ஒருபொருளைக் குறித்து), **பலபெயர்வரின்** – பலபெயர்கள் வருமாயின், **இறுதி ஒருவினை கொடுப்ப** – (பொருளொன்றே என்பதுதோன்ற) அவற்றின் இறுதியில் ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக்கூறுவர்; **ஓரோவழி**– சிலவிடத்தில் (பொருளொன்றே என்பது தெளியநின்ற விடத்தில்), **தனியும்** – பெயர்தோறுந் தனித்தனி ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொடுத்துங் கூறுவர் (புலவர்.)

குறிப்பு :–

'ஒருவினைகொடுப்ப' என்பது பின்னுங் கூட்டி யுரைக்கப்பட்டது. 'ஒருவினைகொடுப்ப' என்றாரேனும் ஒருபொருளுக்கு ஒரு முடிபு என்றாரன்றிப் பெயரை விலக்கினாரல்லர்; ஆதலின் பெயர் கொடுத்து முடிப்பர் என்க.

உதாரணம்

1. ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் கூறினார்.
   ஆலிநாடன் மங்கைவேந்தன் பரகாலன் கலியன் இவன்.

(என இவை இறுதியில் முறையே ஒருவினையும் ஒருபெயருமாகிய முடிபைக் கொண்டன.)

2. "மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதுக
   இன்றேன் கமழ்தா ரியக்கன் புகுதுக
   வென்றோன் புகுதுக விறலோன் புகுதுக
   என்றே நகர மெதிர்கொண் டதுவே"

என்ற இச்செய்யுளில் 'வேலோன்', 'இயக்கன்', 'வென்றோன்', 'விறலோன்' என்பன 'முருகன்' என்னும் ஒரு பொருளே என்பது தெளிய நிற்றலின் பெயர்தோறும் 'புகுதுக' என ஒருவினை கொடுத்து முடித்தார். இவ்வாறு பெயர்தோறும் ஒருவினை வருவனவெல்லாம் காதல் முதலிய பற்றி யாதலின் ஒருவினைவந்ததனை யொக்குமென்க. இங்ஙனமின்றி 'ஆசிரியர் வருக', 'பாரத்துவாசி வந்தார்', 'நச்சினார்க்கினியர் வருக' என வேறுவினை கொடுப்பின் பொருள் வேறுபடு மாறறிக.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: ஒருபொருண்மேல் பலபெயர் வரின்–ஒருபொருளின்மேலே பலபெயர்கள் வருமாயின், **இறுதி ஒருவினைகொடுப்ப** – பொருளொன்றே யென்பது தோன்ற இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக் கூறுவர்,

ஓரோவழி தனியும் (கொடுப்ப) – ஒருபொருளாகுகை தவறாதவிடத்தே பெயர்தோறுங் கொடுத்துங் கூறுவர் புலவர், எ–று.

வ–று.:–

(1) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான் எனவும்,

"குயிலைச் சிலம்படிக் கொம்பினைத்
தில்லையெங் கூத்தப்பிரான்
கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங்
காக்குங் கருங்கட் செவ்வாய்
மயிலைச் சிலம்பகண் படியான்போய்
வருவன் வண்பூங் கொடிகள்
பயிலச் சிலம்பெதிர் கூய்ப்பண்ணை
நண்ணும் பளிக்கறைக்கே"

எனவும் இவை இறுதியிலே முறையே வந்தான் எனவும், கண்டு எனவும், ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

(2) "மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான்
மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தா
னேவருந் தெரித றேற்றா திருந்திடுமொருவன் வந்தான்
றேவர்க டேவன் வந்தானென்றன சின்ன மெல்லாம்"

என்புழி முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பன முருகனென்னும் ஒருபொருளே யென்பது தெரிய நின்றமையினாலே, பெயர்தோறும் வந்தான் என ஒரு வினைகொடுக்கப்பட்டமை காண்க.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். ஒருபொருள் மேல் பல பெயர் வரின் – ஒருபொருளின் மேலே பல பெயர்கள் வருமாயின், – இறுதி ஒருவினை கொடுப்ப – பொருளொன்றேயென்பது தோன்ற இறுதியில் ஒருமுடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக் கூறுவர், – ஓரோவழி தனியும் (கொடுப்ப) – ஒரு பொருளாகுகை தவறாத) சிலவிடத்தில் (முடிக்குஞ்சொல்லை) பெயர்தொறுங் கொடுத்துங் கூறுவர் புலவர். எ–று.

வ–று.:–

(1) ஆசிரியன் பேரூர்க்கிழான் சாத்தன் வந்தான். எ–ம்
"குயிலைச் சிலம்படிக் கொம்பினைத் தில்லையெங்

கூத்தப்பிரான், கயிலைச் சிலம்பிற்பைம் பூம்புனங் காக்குங் கருங்கட் செவ்வாய், மயிலைச் சிலம்பகண் டியான் போய் வருவன்வண் பூங்கொடிகள், பயிலச் சிலம்பெதிர் கூய்ப் பண்ணை நண்ணும் பளிக்கறைக்கே". எ–ம். வரும். இவை, இறுதியில் முறையே வந்தான். எ–ம். கண்டு. எ–ம். ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

"சீதரன்றருமமிர்தினையெயினர்கள் செய்த, மாதவந்தனைப் பெண்ணினுக்கரசை மற்றெனக்குக், காதனல்கியே நல்லருள் புரிந்த காரிகையைப், பேதையென்பதே பேதைமையென்றனன் பெரியோன்". எ–ம். "ஆவியைச் சனசன் பெற்றவன்னத் தையமிர்தின் வந்த, தேவியைப் பிரிந்த பின்பு". எ–ம். முறையே பேதையென்பது எ–ம் பிரிந்த, எ–ம். ஒரு முடிக்குஞ் சொற்கொண்டமை காண்க.

(2) "மூவர்கண் முதல்வன் வந்தான் முக்கணான் குமரன் வந்தான், மேவலர் மடங்கல் வந்தான் வேற்படை வீரன் வந்தான், ஏவருந் தெரித றேற்றா திருந்திடு மொருவன் வந்தான், தேவர்க டேவன் வந்தா னென்றன சின்ன மெல்லாம்" என்புழி முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன் என்பவை முருகன் என்னும் ஓர் பொருளே யென்பது தெளிய நின்றமையினாலே வந்தான் என முடிக்குஞ் சொற்பெயர்தொறுங் கொடுக்கப்பட்டமை காண்க.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.:– **ஒரு பொருள்மேல்** – ஒரு பொருளின் மேலே (ஒரு பொருளைக் குறித்து), **பல பெயர் வரின்** – பல பெயர்கள் வருமாயின், **இறுதி ஒரு வினை கொடுப்ப** – (பொருளொன்றே என்பது தோன்ற) அவற்றின் இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்துக் கூறுவர்; **ஒரோவழி** – சில இடத்தில் (பொருளொன்றே என்பது தெளிய நின்ற விடத்தில்), **தனியும்** – பெயர் தோறும் தனித்தனி ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொடுத்தும் கூறுவர், புலவர், எ–று.

'ஒருவினைகொடுப்ப' என்பதைப் பின்னும் கூட்டுக.

வினை என்றது, கொண்டு முடியுஞ்சொல் என்ற மாத்திரமாய் நின்றது; ஆதலால், ஒரு பெயர் கொடுத்து முடித்தலும் கொள்க.

உ–ம்.:–

(1) 'ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் கூறினார்' எனவும், 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

இவன்' எனவும் வரும். இவை, இறுதியில் ஒரு வினையும் பெயரும் கொடுக்கப்பட்டன.

(2)

'கொண்டல் வண்ணா விங்கே போதராயே

கோயிற்பிள்ளா யிங்கே போதராயே

தெண்டிரைசூழ் திருப்பேர்க்கிடந்த திருநாரணா

விங்கே போதராயே'

என்பதில், கொண்டல் வண்ணன், கோயிற்பிள்ளை, திருநாரணன் என்பன கண்ணனென்னும் ஒருபொருளே யென்பது தெளிய நின்றதனால், பெயர்தோறும் போதராய் என ஒருவினை கொடுக்கப்பட்டது. பெயர்தோறும் தனித்தனி கொடுக்கப்படுகிற வினை வந்த வினையாகவே இருக்க வேண்டுமென அறிக.

பவானந்தம் பிள்ளை

இ-ள்.:- ஒருபொருண்மேல் - ஒருபொருளின்மேலே, பலபெயர்வரின் - பலபெயர்கள் வருமாயின், இறுதி ஒருவினை கொடுப்ப - (பொருளொன்றே யென்பது தோன்ற) இறுதியில் ஒரு முடிக்கு' சொல்லைக் கொடுத்துக் கூறுவர். ஒரோவழித் தனியும் (கொடுப்ப) - (பொருள் ஒன்றே எனப்து தெளியநின்ற) சிலவிடங்களில் வெ பயர்தோறுங் கொடுத்துங் கூறுவர் புலவர். எ-று.

ஒரு பொருளுக்கு ஒரு ழடிபு என்று சொல்லவந்தவர் 'ஒருவினை கொடுப்ப' என்றார்; அன்றிப் பெயர் கொடுத்து முடித்தலை விலக்கினாரல்லர். ஆதலாற் பெயர் கொடுத்தும் முடிப்பர் எனக் கொள்க.

உ-ம்.:-

(1) ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான், எனவும், 'பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இவன்' எனவும் இவை, இறுதியிலே முறையே, 'வந்தான்' 'இவன்' என வினையும் பெயருமாகிய ஒரு முடிக்குஞ் சொல்லைக் கொண்டன.

(2) ''மூவர்கண் முதுல்வன் வந்தான், முக்கணான் குமரன் வந்தான், மேவலர் மடங்கல் வந்தான், வேற்படை வீரன் வந்தான், ஏவருந் தெரித றேற்றா திருந்திடு மொருவன் வந்தான், தேவர்க டேவன் வந்தா னென்றன 'சின்ன மெல்லாம்'

என்புழி முதல்வன், குமரன், மடங்கல், வீரன், ஒருவன், தேவன்

என்பன முருகனென்னும் ஒருபொருளேயென்பது தெளியநின்ற மையினாலே, பெயர்தோறும் 'வந்தான்' என ஒரு வினை கொடுக்கப்பட்டமை காண்க. வந்தான், இருந்தான், சொன்னான் எனப் பெயர்தோறு வேறு வினை கொடுப்பிற் பொருள் வேறுபடு மாதலால் முதல் வந்த வினையே பெயர் தோறும் வரவேண்டு மென்ப தறிக.

கா. நமச்சிவாய முதலியார்

ஒரு பொருள் மேல் – ஒரு பொருளின் மேலே, **பல பெயர்** – பல பெயர்கள், **வரின்** – வருமாயின், **இறுதி** – இறுதியில், **ஒரு வினை** – ஒரு முடிக்குஞ் சொல்லை, **கொடுப்ப** – (பொருளொன்றே என்பது தோன்றக்) கொடுத்துக் கூறுவர்; **ஒரோ வழி** – ஒரு பொருளாதல் தவறாத விடத்தே, **தனியும்** – பெயர்தோறும், **கொடுப்ப** – கொடுத்தும் கூறுவர்.

உதாரணம்

ஆசிரியன் பேரூர்கிழான் சாத்தன் வந்தான்

இங்கே, ஒரு பொருளைக் குறித்துவந்த பல பெயர்கள், ஈற்றில் ஒரு வினை கொண்டன.

'வேலோன் வருக விமலைசேய் வருக
மாலோன் மருகன் வருக'

இங்கு ஒரு பொருளைக் குறித்த பல பெயர்கள் தனித்தனி வினை கொண்டன.

மோசசு பொன்னையா

ஒரு பொருளின்மேல் அதனையே குறிக்கும் பல பெயர்கள் வருமாயின், பொருள் ஒன்றே என்பது தோன்ற அவற்றின் இறுதியில் ஒரு முடிக்குஞ் சொல் கொடுத்து முடிப்பர்; சில இடங்களில் பெயர்தோறும் தனித்தனி முடிக்குஞ் சொல் கொடுத்தும் முடிப்பர் எ–று.

ஒரு வினைகொடுப்ப என்பது பின்னருங் கூட்டியுரைக்கப்பட்டது. ஒருவினை என்றது முடிக்குஞ் சொல்லை ஆதலின் வினையும், பெயரும் முடிக்குஞ் சொல்லாக வருதலைக் கொள்க.

எ–டு.;–

1. ஆசிரியன் கூலவாணிகள் சீத்தலைச் சாத்தன் வந்தான்.

–ஒருவினை கொண்டு முடிந்தது.

2. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி இவன்.

–ஒரு பெயர் கொண்டு முடிந்தது

3. மின்றோய் வரைகொன்ற வேலோன் புகுதக
இன்றேன் கமழ்தா ரியக்கன் புகுதக
வென்றோன் புகுதக வீரன் புகுதக
என்றே நகர மெதிர்கொண் டதுவே.

–பெயர் தோறும் முடிக்குஞ் சொல் பெற்றது.

தொல்காப்பியர்,
ஒருபொருள் குறித்த வேறுபெயர் கிளவி
தொழில்வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே,2
என்றார்.

(41)

**392. திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே.**

திணை நிலம் சாதி குடியே உடைமை
குணம் தொழில் கல்வி சிறப்பாம் பெயரோடு
இயற்பெயர் ஏற்றிடில் பின் வரல் சிறப்பே.

ṭiṇai nilam sāṭi kuti ē utaiyai
kuṇam ṭoḷil kalvi siūappu ām peyar ōūa
iyaūpeyar ēūūitin pin varal siūappu ē

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Epithets should precede the name

It is considered elegant for natural names to precede epithets derived from names of district, village, tribe, family, property, quality, action, learning&c.

ஒப்புமைப் பகுதி

சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்

இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்

(தொல்.சொல்.:41)

சாதி முதலாம் சிறப்புப்பேர் தன்முன்னர்
ஓதார் இயற்பெயரை உய்த்து.

(நேமி.:38:3–4)

திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
தவந்தொழில் கல்வி சினைகுணஞ் சிறப்போ
டியற்பெய ரேற்றிடிற் பின்வர லியல்பே.

(இ.வி.:317)

வினைக்கொருங் கியலும் விழுமிய பொருட்கும்
இயற்பெயர் முற்பட வியம்பினாம் வழுவே

(மு.வீ.:716)

மயிலை நாதர்

இதுவுமது.

இ–ள்.:– திணைப்பெயர் முதலான இப் பெயர்களுடனே 1இயற்பெயர் அடுத்துச் சொல்லுங்கால், அவ்வியற்பெயரை ஏனைப்பெயர்களுக்குப் பின்னே சொல்லுதல் சிறப்புடைத்து எ–று.

"இயன்று வரும் பெயரியற்பெய ராகும்."

வ–று.:–

குன்றவன்குறவன், அருவாளனழகன், பார்ப்பான் பாராயணன், சேரமான் சேரலாதன், ஊர்கிழானோணன், மெய்யன் மேற்றிசை நின்றான், நாடகிநம்பி, ஆசிரியன் அமிழ்தன், ஏனாதி ஏறனெனக் காண்க.

'பின்வருக' என்று விதியாது, 'பின்வரல்சிறப்பு' என்றதனால், சிறுபான்மை, வெண்கொற்றப் படைத்தலைவன், வெள்ளேறக்கா விதியென வரப்பெறுமாயினும் அவை சிறப்பிலவெனக் கொள்க.

பாட வேறுபாடு:–

1. இயற்பெயரெடுத்துச் சொல்லுங்கால்,

பசுநங்கை வந்தது, எருதேறன்வந்ததென அஃறிணைக்குங் கொள்க.

சங்கர நமச்சிவாயர்
சிவஞான முனிவர்

எ—னின், இதுவும் அது.

இ—ள்.: திணை முதலாகக் கல்வியீறாக விதந்தன *ம்முதலியம்* பற்றிவரும் சிறப்புப் பெயருடனே இயற்பெயரை ஒரு பொருள் ஒருங்கே ஏற்குமாயின் அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம், எ—று.

ஏற்றற்கு வினைமுதல் ஒருபொருள் என்பது, மேலைச் சூத்திரத்தால் பெற்றாம்.

'சிறப்பே' என்றமையான் முன்வரும் என்பதூஉம், அது வழுவமைதி என்பதுதூஉம் பெற்றாம்.

வ—று.:—

குன்றவன் கொற்றன், அருவாளன் அழகன், பார்ப்பான் பாராயணன், ஊர்கிழான் ஒணன், பொன்னன் பொறையன், கரியன் கம்பன், நாடகி நம்பி, ஆசிரியன் அமிழ்தன் எனவரும். இவை இயற்பெயர் பின்வந்தன. இனிக்கொற்றன் குன்றவன், அழகன் அருவாளன் என முறையே இயற்பெயர் முன்னும் வருதல் காண்க. இன்னும் இயற்பெயர் முன் வருங்கால் வெண்கொற்றப் படைத்தலைவன், வெள்ளேறக் காவிதி என இறுதி விகாரமாய் வருதலும் காண்க. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ—ம், திணைப்பெயர்கள் முதலான பல சிறப்புப் பெயர்களுள் இயற்பெயர் வருமாறு.

இ—ள்.:— திணை—குறிஞ்சித்திணை முதலான ஐந்திணைப் பெயரும், **நிலம்** – தேசநாடு முதலான நிலப்பெயரும், **சாதி** – தத்தம் சாதிபடுத்து வரும் சாதிப்பெயரும், **குடியே** – தத்தமக்கு உரிமையாகிய குடிப் பெயரும், **உடைமை** – பற்பல பெயரடுத்த உடைமைப் பெயரும், **குணம்** – அளவறிபொறிபு முதலான குணப்பெயரும், **தொழில்** – ஓதலீதல் முதலான தொழிலடுத்து வரும் தொழிற் பெயரும், **கல்வி** – கல்விச் சிறப்பான் வந்த கல்விப்பெயரும், **சிறப்பாம் பெயரொடு** – இவை முதலாகிய சிறப்பாம் பெயருடனே, **இயற்பெய ரேற்றிடில்** – குரவராலுற்ற இயற்பெயர் எடுத்துச் சொல்லுங்கால், **பின்வரல் சிறப்பே** – அவ்வியற்பெயரை ஏனைப் பெயர்களுக்குப் பின்னே சொல்லுதல் சிறப்புடைத்து, **எ—று.**

உ–ம்.:–

குன்றவன் சாத்தன், அருவாளன் கொற்றன், பார்ப்பான் பாராயணன், சேரலன் பூதன், பொன்னுடையன் ஓணன், கரியன் தானன், ஓதுவான் பத்தன், நாடகி நம்பி, ஆசிரியன் அமுதன் எனக் காண்க.

வருக என்று விதியாது சிறப்புடைத்து என்றமையாற் சிறுபான்மை வெண்கொற்றப் படைத்தலைவன், வெள்ளேறக் காவிதி என வரப்பெறுமாயினும் அவை சிறப்பல்ல என்க. அஃறிணைக் கண்ணும் எருமைப் பூதி, கிடாப்பூதன் என வரும்.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: திணை – ஐந்திணையும், நிலம் – தேசமும், சாதி – குலமும், குடி – குடியும், உடைமை – உடைமையும், குணம் – குணமும், தொழில் – தொழிலும், கல்வி – வித்தையும், (ஆகிய விவற்றைப்பற்றி வருகிற) சிறப்பாம் பெயரோடு – சிறப்புப் பெயரோடு, இயற்பெயர் – இயற்பெயரை, ஏற்றிடின் – (ஒருபொருள் ஒருசேர) வேற்குமாயின்; பின்வரல் – அவ்வியற்பெயர் பின்வருதல், சிறப்பு – சிறந்த மரபாம், எ–று.

(சிறப்பென்றதனால் முன்வருவது வழுவமைதியாம்)

வ–று.:–

குன்றவன் கொற்றன், கொற்றன் குன்றவன்: திணை. அரிவாளனழகன், அழகனரிவாளன்: நிலம். பார்ப்பான் பாராயணன், பாராயணன், பார்ப்பான்; சாதி. ஊர்கிழானோணன், ஓணனூர்கிழான்; குடி பொன்னன் பொறையன், பொறையன் பொன்னன்; உடைமை. கரியன், கம்பன், கம்பன் கரியன்: குணம். நாடகி நம்பி நம்பி நாடகி: தொழில். ஆசிரியனமிழ்தன், அமிழ்தனாசிரியன்: கல்வி என வரும். மற்றவையு மிப்படியே.

ஆ. முத்துத்தம்பி ப்பிள்ளை

ஒருபொருளுணர்த்து மிருபெயர்க்கு வழக்காறு கூறுஞ் சூத்திரம் யாது?

திணைநிலஞ் சாதி குடியே யுடைமை

குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ

டியற்பெய ரேற்றிடிற் பின்வால் சிறப்பே.

(திணை நிலம் சாதி குடியே உடைமை குணம் தொழில் கல்வி சிறப்பு ஆம் பெயரோடு இயற்பெயர் ஏற்றிடின் பின் வரல் சிறப்பே.)

இ–ள்.:– ஐந்திணையும் தேசமும் குலமும் குடியும் உடைமையும் குணமும் தொழிலும் வித்தையும் சிறப்பும் ஆகிய இவற்றைப்பற்றிவரும் பெயருடனே இயற்பெயரை அடுக்குமிடத்து அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம். எ–று.

ஈண்டுச் சிறப்பு என்றது மன்னர் முதலாயினாராற் பெறும் எனாதி காவிதி முதலிய வரிசைப் பெயர்களை.

பின்வரல் சிறப்பே என்றதனால், முன்வரல் சிறப்பன்று என்பது, பெற்றாம்.

(வரலாறு)

குன்றவன்கொற்றன்	திணை.
அருவாளனழகன்	நிலம்.
பார்ப்பான் பாராயணன்	சாதி.
சேரமான் சேரலாதன்	குடி.
ஊர்கிழானோணன்	உடைமை.
கரியன் கம்பன்	குணம்.
நாடகி நம்பி	தொழில்.
ஆசிரிய னமிழ்தன்	கல்வி.
எனாதிநல்லுதடன்	சிறப்பு.

இன்னும், இயற்பெயர் முன்வருமிடத்து, வைத்தியநாதநாவலன், கச்சியப்பப்புலவன் என இறுதிவிகாரமாகவருதலுங்காண்க.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ–ள்.:– திணை நிலஞ் சாதி குடியே யுடைமை குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரொடு – திணை முதற் கல்வியீறாகச் சொல்லியவை முதலிய சிறப்புப் பெயருடனே, இயற்பெய ரேற்றிடின் –இயற் பெயரை பொரு பொருளேற்குமாயின், பின்வரல் சிறப்பு – அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்த மரபாம், எ–று.

'பின்வரல் சிறப்பே' என்றதினால், முன் வருமென்பதும் அது

சிறப்பின்றி வழுவமைதியாமென்பதும் பெறப்பட்டன, (திணை – ஐ வகை நிலம், நிலமென்பது – நாடு முதலியன.)

வ–று.:–

குன்றவன் கொற்றன் (திணை); அருவாளன் அழகன் (நிலம்); பார்ப்பான் பராயணன் (சாதி); ஊர்கிழான் ஒணன் (குடி). பொன்னன்பொறையன் (உடைமை); கரியன்கம்பன் (குணம்) நடையன் நாகன் (தொழில்), தெய்வப்புலவன் திருவள்ளுவன், (கல்வி) என முறையே திணை முதலிய சிறப்புப் பெயரோடு இயற்பெயர் பின் வந்தமை காண்க. 'முதலிய'வென்றது தவம், ஆள்வினை, உறுப்பு முதலியவும் பிறவுந் தழுவுதற்கு. அவை வருமாறு:– முனிவன் அகத்தியன், படைத் தலைவன் சாத்தன், முடவன் முருகன், குருடன் கொற்றன், எனக் காண்க. பண்டிதன், தச்சன், கொல்லன் என்றாற்போல்வன தொழிலுளடங்கும். இனிக் கொற்றன் குன்றவன், அழகன் அருவாளன் என்றாற்போல இயற்பெயர் முன் வருதல் சிறப்பின்றாயினு மிக்காலத்தார் மயங்கக் கூறி வழங்கலால்,

"கடிசொல் லில்லைக் காலத்துப் படினே"

என்பதனாற் கொள்க.

(இயற்பெயர் – சுபாவப்பெயர்,. சிறப்புப்பெயர் – யாதாயினுமோர் காரணம் பற்றிக் கூறும் பெயர்)

"சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கு இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதலுங் காண்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– திணை – (குறிஞ்சி முதலிய ஐந்து) திணையும், **நிலம்** – தேசமும், **சாதி**– குலமும், **குடியே** – குடியும், **உடைமை** – பொருளும், **குணமும்** – தொழில் செயலும், **கல்வி** – படிப்பும் (ஆகிய இவை முதலிய), **சிறப்பு ஆம்பெயரோடு** – சிறப்பாகிய பெயருடனே, **இயற்பெயர்** – இயற்கையாகிய பெயரை, **ஏற்றிடின்** – (ஒருபொருள் ஒருசேர) நிற்குமாயின், **பின்வரலே** – அவ்வியற்பெயர் பின்னே வருதலே, **சிறப்பு** – சிறந்த மரபாம்.

குறிப்பு :–

'பின்வரல் சிறப்பே' என்றதனால் முன்வருமென்பதும், அது சிறப்பின்றி வழுவமைதியாமென்பதும் பெறப்பட்டன.

இயற்பெயர் – ஒன்றற்குச் சுபாவமாயமைந்த பெயர்.
சிறப்புப்பெயர் – யாதாயினும் ஒருகாரணம் பற்றிவரும்பெயர்.

உதாரணம்

		பின் இயற்பெயர்	முன் இயற்பெயர்
திணை	–	குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன்
நிலம்	–	குடகன் கொற்றன்	கொற்றன் குடகன்.
சாதி	–	பார்ப்பான் பாராயணன்	பாராயணன் பார்ப்பான்.
குடி	–	முடும்பையான் சாத்தன்	சாத்தன் முடும்பையான்.
உடைமை	–	பொன்னன் நம்பி.	நம்பி பொன்னன்.
குணம்	–	கரியன் கொற்றன்	கொற்றன் கரியன்.
தொழில்	–	ஊணன் பூதன்	பூதன் ஊணன்.
கல்வி	–	புலவன் கம்பன்.	கம்பன் புலவன்.

'முதலிய' என்றது தவம், ஆள்வினை, உறுப்பு முதலியவும் பிறவுந் தழுவுதற்கு; அவை வருமாறு : முனிவன் அகத்தியன், படைத்தலைவன் இராமன், முடவன் முருகன் எனக்காண்க. இன்னும் இயற்பெயர் முன் வருங்கால் காளமேகப்புலவன், வண் கொற்றப்படைத் தலைவன் என இறுதி விகாரமாய் வருதலுங் கொள்க.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: திணை – ஐந்திணையும், **நிலம்** – தேசமும், **சாதி** – குலமும், **குடி** – குடியும், **உடைமை** – உடைமையும், **குணம்** – குணமும், **தொழில்** – தொழிலும், **கல்வி** – வித்தையும் ஆகிய இவற்றைப் பற்றி வரும், **சிறப்பு ஆம் பெயரோடு இயற்பெயர் ஏற்றிடின்** – சிறப்புப்பெயருடனே இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின், **பின் வரல் சிறப்பு** – அவ்வியற்பெயர் பின் வருதல் சிறந்த மரபாம், **எ–று.**

'பின்வரல் சிறப்பே' என்றதனால், முன் வருமென்பதும், அது வழுவமைதி யென்பதும் பெற்றாம்.

வ–று.:

குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன் திணை.
அருவாளனழகன்	அழகனருவாளன் நிலம்.
பார்ப்பான் பாராயணன்	பாராயணன் பார்ப்பான் சாதி.
ஊர்கிழானோணன்	ஓண னூர்கிழான் குடி.

பொன்னன் பொறையன்	பொறையன் பொன்னன் உடைமை.
கரியன் கம்பன்	கம்பன் கரியன் குணம்.
நாடகி நம்பி	நம்பி நாடகி தொழில்.
ஆசிரிய னமிழ்தன்	அமிழ்தனாசிரியன் கல்வி.

இன்னும், இயற்பெயர் முன்வருமிடத்து, வைத்தியநாத நாவலன், கச்சியப்பப் புலவன் என இறுதி விகாரமாக வருதலுங் காண்க.

வ. குமாரசாமிப்புலவர்

இ–ள். திணை – ஐந்திணையும், – **நிலம்** – தேயமும், – **சாதி** – குலமும், – **குடி** – குடியும், – **உடைமை** – உடைமையும், – **குணம்** – குணமும் – **தொழில்** – தொழிலும், – **கல்வி** – வித்தையும் ஆகிய இவற்றைப் பற்றி வரும், – **சிறப்பு ஆம் பெயரோடு** –சிறப்புப் பெயருடனே, – **இயற்பெயர் ஏற்றிடின்** – இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின், – **பின் வரல் சிறப்பு** அவ்வியற்பெயர் பின்வருதல் சிறந்தமரபாம். எ–று.

பின்வரல் சிறபென்றதனால், முன் வருதலுமுண்டெனபதும், முன்வருதல் வழுமைதியென்பதும் பெற்றாம்.

இயற்பெயர் குரவரால் ஒருவர்க்கு ஆதியிலிட்டபெயர், சிறப்புப் பெயர் – கல்வி முதலான வேதுப்பற்றிப் பின்னுண்டானபெயர். பின்னுண்டான வரிசை – ஆக்கப் பெயரென்று தோன்று ஆம்பெயரோடென்றது முணர்க.

(வரலாறு)

(வழாநிலை)	(வழுவமைதி)	
குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன்	திணை
அருவாளனழகன்	அழக னருவாளன்	நிலம்
பார்ப்பான் பாராயணன்	பாராயணன் பார்ப்பான்	சாதி
ஊர்கிழா னோணன்	ஓணனூர்கிழான்	குடி
பொன்னன் பொறையன்	பொறையன் பொன்னன்	உடைமை
கரியன் கம்பன்	கம்பன் கரியன்	குணம்
நாடகி நம்பி	நம்பி நாடகி	தொழில்
ஆசிரிய னமிழ்தன்	அமிழ்த னாசிரியன்	கல்வி

இன்னும் இயற்பெயர், முன்வருமிடத்து, வைத்தியநாத நாவலன், கச்சியப்பப்புலவன் என அவ்வியற்பெயரிறுதி விகாரமாகவருதலும், இயற்பெயரிறுதியும் வருமொழிமுதலும் விகாரமாகிவருதலுங் காண்க.

(சூ) "சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க்கிளவி முற்படக் கிளவார்". என்றார் தொல்காப்பியனார். அவர் இயற்பெயர் பிற்படக் கிளத்தலை "கடிசொலில்லை காலத்துப் படினே" என்பதனாற் கொள்ளவைத்தார்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:— திணை — (குறிஞ்சி முதலிய ஐவகைத்) திணையும், நிலம் — தேசமும், சாதி — குலமும், குடி — குடியும், உடைமை — உடைத்தாயிருக்கும் பொருளும், குணம் — குணமும், தொழில்—செயலும், கல்வி—வித்தையும், (ஆகிய இவற்றைப்பற்றி வருகிற), சிறப்பு ஆம் பெயரோடு — சிறப்பாகிய பெயருடனே, இயற்பெயர் — இயற்கையாகிய பெயரை, ஏற்றிடின் — (ஒரு பொருள் ஒருசேர) ஏற்குமாயின், பின் வரலே — (அவ்வியற்கைப்பெயர்) பின்னே வருதலே, சிறப்பு — சிறந்த மரபாம்; எ—று.

'பின்வரல் சிறப்பே' என்றதனால், இயற்பெயர் பின் வருதல் வழாநிலை யென்றும், முன் வருமாயின் அது வழூவமைதி யென்றும் பெறப்பட்டது.

(இயற்பெயர் — இயற்கைப்பெயர், சிறப்புப்பெயர் — யாதாயினும் ஒரு காரணம் பற்றிக் கூறும் பெயர்.)

பின் இயற்பெயர்	முன் இயற்பெயர்
உ—ம்.:—	
குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன்— திணை.
சோழியன் சாத்தன்	சாத்தன் சோழியன்— நிலம்.
பார்ப்பான் துரோணன்	துரோணன் பார்ப்பான் — சாதி.
பாண்டியன் குலசேகரன்	குலசேகரன் பாண்டியன் — குடி.
பொன்னன் நம்பி	நம்பி பொன்னன்— உடைமை.
கரியன் கம்பன்	கம்பன் கரியன் — குணம்.
நடையன் நாகன்	நாகன் நடையன் — தொழில்.
புலவன் திருவள்ளுவன்	திருவள்ளுவன் புலவன்— கல்வி.

இன்னும் இயற்பெயர் முன்வருமிடத்து, ஒட்டக்கூத்தப் புலவன், அகத்திய முனிவன் என இறுதி விகாரப்பட்டு வருதலும் காண்க.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— திணை — ஐந்திணையும், நிலம் — தேசமும், சாதி — குலமும், குடி — குடியும், உடைமை — உடைமையும், குணம் — குணமும், தொழில் —

தொழிலும், கல்வி – வித்தையும் (ஆகிய இவற்றைப்பற்றி வரும்), சிறப்பு ஆம் பெயரொடு – சிறப்புப் பெயருடனே, இயற்பெயர் ஏற்றிடின் – இயற்பெயரை ஒருபொருள் ஒருங்கேற்குமாயின், பின்வரல் – (அவ்வியற்பெயர்) பின் வருதல், சிறப்பு – சிறந்த மரபாம். எ–று.

'பின்வரல் சிறப்பே' என்றதனால், முன் வருமென்பதும், அது வழுவமைதி யென்பதும் பெற்றாம்.

உ–ம்.:–

(இயற்பெயர் பின்வரல்.)	(இயற்பெயர் முன்வரல்.)	
குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன்	திணை.
அருவாள னழகன்	அழக னருவாளன்	நிலம்.
பார்ப்பான் பாராயணன்	பாராயணன் பார்ப்பான்	சாதி.
பாண்டியன் குலசேகரன்	குலசேகரன் பாண்டியன்	குடி.
பொன்னன் பொறையன்	பொறையன் பொன்னன்	உடைமை.
கரியன் கம்பன்	கம்பன் கரியன்	குணம்.
நாடகி நம்பி	நம்பி நாடகி	தொழில்.
புலவர் திருவள்ளுவர்	திருவள்ளுவர் புலவர்	கல்வி.

இன்னும், இயற்பெயர் முன்வருமிடத்து; குலசேகரபாண்டியன், கச்சியப்புலவன் என இறுதி விராமாக வருதலுங் காண்க.

கா. நமச்சிவாய முதலியார்

திணை – ஐந்திணையும், நிலம் – தேசமும், சாதி – குலமும், குடி – குடியும், உடைமை – உடைமையும், குணம் – குணமும், தொழில் – தொழிலும், கல்வி – கல்வியும், (ஆகிய இவற்றைப் பற்றி வருகின்ற) சிறப்பாம் பெயரொடு – சிறப்புப் பெயரொடு, இயற்பெயர் – இயற்பெயரை, ஏற்றிடின் – (ஒரு பொருள் ஒரு சேர) ஏற்குமாயின், பின்வரல் – (அவ்வியற்பெயர்) பின்வருதல், சிறப்பு – சிறந்த மரபாம்.

சிறப்பு என்றதனால், முன் வருவது வழுவமைதியாம்.

உதாரணம்

வழாநிலை :

குன்றவன் கொற்றன்	–	திணை
அருவாளன் அழகன்	–	நிலம்

பார்ப்பான் நாராயணன்	–	சாதி
சேக்கிழான் அருண்மொழித் தேவன்	–	குடி
பொன்னன் நம்பி	–	உடைமை.
கரியன் கம்பன்	–	குணம்
நாடகி நங்கை	–	தொழில்
ஆசிரியன் அமுதன்	–	கல்வி

வழுவமைதி :

கொற்றன் குன்றவன்	–	திணை
அழகன் அருவாளன்	–	நிலம்
நாராயுணன் பார்ப்பான்	–	சாதி
அருண்மொழித் தேவன் சேக்கிழான்	–	குடி
நம்பி பொன்னன்	–	உடைமை
கம்பன் கரியன்	–	குணம்
நங்கை நாடகி	–	தொழில்
அமுதன் ஆசிரியன்	–	கல்வி

மோசகு பொன்னையா

ஐந்திணையும், இடமும், குலமும், குடியும், உடைமையும், குணமும், தொழிலும், கல்வியும் ஆகிய இவற்றைப் பற்றி வரும் சிறப்புப் பெயருடனே இயற்பெயரையும் ஒரு பொருள் ஒருங்கேற்கும் ஆயின், அவ்வியற்பெயர் சிறப்புப் பெயரின் பின்னர் வருதல் சிறப்பாம் எ–று.

இயற்பெயர் பின்னர் வருதல் சிறப்பு என்றதனால்,, இயற்பெயர் முன்னர் வருதலும் வழுவமைதியாகக் கொள்ளப்படும் என உணர்த்தினார் என்க,

எ–டு.

	முன்னர் இயற்பெயர்	பின்னர் இயற்பெயர்
திணை	குன்றவன் கொற்றன்	கொற்றன் குன்றவன்
நிலம்	அருவாளன் அழகன்	அழகன் அருவாளன்
சாதி	பார்ப்பான் துரோணன்	துரோணன் பார்ப்பான்
குடி	சேரன் செங்குட்டுவன்	செங்குட்டுவன் சேரன்
உடைமை	பொன்னன் நம்பி	நம்பி பொன்னன்
குணம்	கரியன் நம்பி	நம்பி கரியன்
தொழில்	ஆட்டன் அத்தி	அத்தி ஆட்டன்

கல்விபுலவர் திருவள்ளுவர் திருவள்ளுவர் புலவர்

இவ்வியற் பெயர்கள், வைத்தியநாத நாவலர், அகத்திய முனிவன், என இவ்வாறு இறுதிவிகாரமாய் வருவனவற்றைச் 'சில விகாரமாம் உயர்திணை'1 என்பதனால் அமைக்க.

சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்,2

என்பது தொல்காப்பியம்.

(42)

**393. படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.**

படர்க்கை முப் பெயரோடு அணையில் சுட்டுப்
பெயர் பின் வரும் வினை எனில் பெயர்க்கு எங்கும்
மருவும் வழக்கு இடைச் செய்யுட்கு ஏற்புழி.

patarkkai mu peyarōtu aṇaiyiṉ sutūa
peyar piṉ varum viṉai eṉiṉ peyarku eṅku
um
maruvum vaḷakku itai seyyuḻ ku ēūpuḷi

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

The position of the Demonstrative

Demonstrative nouns must follow the three (kinds of) 3rd personal nouns to which they refer, if the latter have verbs for their predicates; if not, they may precede or follow, this is prose usage: but the poet is not bound by these rules.

ஒப்புமைப் பகுதி

இயற்பெயர்க் கிளவியும் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலும் காலந் தோன்றின்

சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய என்மனார் புலவர்

(தொல்.சொல்.: 38)

முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே

(தொல்.சொல்.:39)

சுட்டுமுத லாகிய காரணக் கிளவியும்
சுட்டுப்பெய ரியற்கையின் செறியத் தோன்றும்

(தொல்.சொல்.:40)

படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கு
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி

(இ.வி.:316)

இயற்பெயர்ச் சுட்டுப் பெயரு மிரண்டும்
வினைகொளற் கொருங்கியல் காலந் தானே
சுட்டுப் பெயரை முற்படக் கிளவார்

(மு.வீ.:713)

முற்படக் கூறல் யாப்பினு ளுரித்தே

(மு.வீ.:714)

சுட்டுமுத லாகிய காரணப் பெயரும்
முற்படக் கிளத்தன் முறையன் றாகும்

(மு.வீ.:715)

மயிலை நாதர்

இதுவுமது.

இ—ள்.: படர்க்கையிடத்தவான உயர்திணை அஃறிணை விரவுத் திணைப் பெயர்களுடனே சுட்டுப்பெயர் வினைக்கண் வருமாயின், அஃது அவற்றின் பின்னேவரும்; பெயர்க்கண்ணாயிற் பின்னும் முன்னும் வரும் வழக்கினுள்; செய்யுட்கண்ணோ வெனின், இன்னவிடத்தென்னும் நியதியின்றி அப்பெயர் களுடனே வேண்டியவிடத்து வரப்பெறும், எ—று.

வ—று.:—

வழக்கு: 'நம்பிவந்தான், அவற்குச் சோறுகொடுக்க'; 'எருது வந்தது, அதற்குப் புல்லிடுக'; 'சாத்தன் வந்தான், அவற்குச் சோறுகொடுக்க'; 'சாத்தன்வந்தது, அதற்குப் புல்லிடுக'வென வினைக்கட் சுடுப்பெயர் பின்னே வந்தது; சாத்தனவன், அவன்

சாத்தனெனப் பெயர்க்கண் அஃது ஈரிடத்தும் வந்தது. அவன் வந்தான், நம்பிக்குச் சோறுகொடுக்க என்றற் றொடக்கத்தன ஆகாவென்க.

இனி, செய்யுள்:

“அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி – முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி லென்னைகொல்
பின்னை யதன்கண் விழைவு.”

சேந்தன் இயற்பெயர். பிறவுமன்ன.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.:– படர்க்கையிடத்தவாகிய உயர்திணைப் பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என்னும் மூவகைப் பெயரோடு சுட்டுப்பெயர் சாரின் அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்க்கும் பின் வரும், அவ்வழி வினைநிகழ்வழி எனின்; வினை நிகழ்ச்சி இன்றேல் அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் வரும். இம்மரபு வழக்கின்கண்ணவாம்; செய்யுட்கண்ணே எனின் நியதி இன்றி வேண்டியவாறே வரப்பெறும், எ–று.

வ–று.:–

நம்பி வந்தான் அவற்குச் சோறிடுக, எருது வந்தது அதற்கப் புல்லிடுக, சாத்தன் தெய்வம் அவற்குப் பலியிடுக, சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக என வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன. வந்தான் நம்பி அவற்குச் சோறிடுக எனவும் முறையே ஒட்டுக.

இவற்றுள் சாத்தன் தெய்வம் என்புழி, வினையின்றிப் பெயர் வந்ததாலோ எனின்:– படர்க்கை முப்பெயரும் தனித்து நில்லாது, பெயர் வினைகளைக் கொண்டு முடிந்தும் பெயர் வினைகட்குப் பயனிலையாயும் புடைபெயரும் புடைபெயர்ச்சியை வினை என்றும், அப்புடைபெயர்ச்சியுள் வழிச் சுட்டுப்பெயர் வரின் பின்வரும் என்றும் கூறினாரன்றி இவ்வினையை வினையென்றார் அல்லர் என்க.

‘மைந்தன் பிறந்தான் அதனால் தந்தை உவக்கும்’ என்புழி, அது என்னும் சுட்டு மைந்தனை அணைந்ததில்லையாலோ எனின்:– அவன் தற்கிழமையாகிய பிறத்தலை அணைதலின் அவனை அணைந்ததேயாம் என்க. அன்றிச் ‘சொற்றொறு மிற்றி தன்பெற்றி’ (461) என்னும் சூத்திரத்தான் அமைத்தலும்

ஒன்று. நம்பி அவன் அவன்நம்பி எனப்பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன. ஏனைப் பெயர்களோடும் ஒட்டுக.

பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வருதல் மரபாமன்றே, இதனை வழுவற்க எனக் காத்தல் எவ்வழு வாராமை கருதி எனின்:–

'சுட்டுப்பெயர் பின்வரும் வினை யெனில்' எனக் கூறினமையின் வினையில்வழிச் சுட்டுப்பெயர் படர்க்கை முப்பெயர்க்கும் முன்வருமோ பின்வருமோ இருமருங்கும் வருமோ வாராதோழியுமோ யாங்ஙனமாங்கொல் என்னும் ஐயமறுத்தற்குக் கூறினாரன்றி இது வழுவற்க எனக் காத்தாரல்லர். அக்கருத்துச் சுட்டுப்பெயர் பின்வரும் வினையெனில் என்றதற்கே கொள்க. அதனை அவ்வாறு காத்தல் எவ்வழு வாராமை கருதி எனின்:–

நம்பிவந்தான் அவற்குச்சோறிடுக என்பான், அவற்குச் சோறிடுக நம்பிவந்தான் என்றேனும், அவன் வந்தான் நம்பிக்குச் சோறிடுக என்றேனும் சுட்டுப்பெயரை முன்வைத்துக் கூறின், அஃது ஒருபொருள்மேல் இருபெயர் வந்ததாகாது, நம்பி வேறு அவன் வேறாய் முடியும், அவ்வழு வாராமை கருதி என்க.

இனிச் செய்யுட்கேற்புழி வருமாறு:–

"அவன் அணங்கு நோய்செய்தான் ஆயிழாய்வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி – முகனமர்ந்த
தன்னை யலர்கடப்பந் தாரணியின் என்னைகொல்
பின்னை அதன்கண் விழைவு"

எனவரும்.

செய்யுட்கண் பின்வருதல் வழுவற்க எனக் காத்தலும் இப்பாட்டின்கண் முன்வருதல் வழுவமைதியுமாம் என்க. பிறவும் அன்ன.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், இயற்பெயரும் சுட்டுப்பெயரும் நிற்கும் முறைமை கூறியது.

இ–ள்.: படர்க்கைமுப் பெயரோடு – படர்க்கை யிடத்தவான உயர்திணை, அஃறிணை, விரவுத்திணைப் பெயர்களுடனே, அணையிற் சுட்டுப் பெயர் – சுட்டுப்பெயர் சேரவரின், பின்வரும் வினையெனில் – அச்சுட்டுப் பெயர் வினைக்கண் வருமாயின் அம்முப் பெயர்க்கும் பின்னே வரும்; பெயர்க்கெங்கும் மருவும் வழக்கிடை – பெயர்க் கண்ணாயிற் பின்னாலும் முன்னாலும்

வழக்கிடத்து வரும்; செய்யுட்கேற்புழி – செய்யுட்கண் அச்சுட்டு வருமேயெனில் நீதியின்றி வேண்டியவிடத்து வரப் பெறும், எ–று.

உ–ம்.:–

'நம்பி வந்தான் அவற்குச் சோறு கொடுக்க', 'எருது வந்தது அதற்குப் புல்லிடுக' எனப் படர்க்கை முப்பெயரையும் அடுத்த வினைக்கண் பின்னே வந்தது.

'நம்பி அவன்', 'அவன் நம்பி', 'எருது அது', 'அது எருது', 'சாத்தன் அது', 'அது சாத்தன்' எனப் பெயர்க்கண் ஈரிடத்தும் வந்தது.

'அவன் வந்தான் நம்பிக்குச் சோறு கொடுக்க' எனில் வேறு பொருள்பட்டு வழுவாம் என்க.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது.

இ–ள்.: படர்க்கை – படர்க்கை யிடத்தை யுடைய, **முப்பெயரோடு** – உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என்கிற மூவகைப் பெயர்களோடு, சுட்டுப்பெயர் – சுட்டுப்பெயர், **அணையின்** – சேரின், பின்வரும் – அச்சுட்டுப் பெயர் பின் வரும், **வினையெனின்** – (அவ்விடத்தே) வினையாகிய முடிக்குஞ் சொல் வருமாயின், **பெயர்க்கு** – (அம் முடிக்குஞ் சொல்லில்லை யாயின்) அப்பெயர்க்கு, **எங்கும்** – பின்னு முன்னும், **மருவும்** – வரும், **வழக்கிடை** – இம்மரபு வழக்கத்திடத்திலாம், **செய்யுட்கு** – செய்யுளிடத்தே, ஏற்புழி – நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும், எ–று.

வ–று.:–

நம்பிவந்தான் அவனுக்குச்சோறிடுக எனவும், எருது வந்தது, அதற்குப் புல்லிடுக எனவும், சாத்தன் தெய்வம் அவனுக்குப் பலியிடுக எனவும், சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக எனவும், வினைநிகழ் வழிச் சுட்டுப் பெயர் பின் வந்தன.

நம்பி அவன், அவன் நம்பி, எனப் பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

"அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்
விறன்மிகுதார்ச்சேந்தன் பேர்வாழ்த்தி முகனமர்ந்
தன்னை யலர்கடப் பந் தாரணியி னென்னைகொல்
பின்னை யதன்கண் விழைவு"

எனச் செய்யுனில் வினைவருவழியு முன்வந்தது.

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

சுட்டுப்பெயர்க்கு வழாநிலையிடமும் வழுவமைதியிடமும் வகுக்குஞ் சூத்திரம் யாது?

படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்
பெயர்பின் வரும்வினை யெனிற்பெயர்க் கெங்கும்
மருவும் வழக்கிடைச் செய்யுட் கேற்புழி.

(படர்க்கை முப்பெயரோடு சுட்டுப்பெயர் அணையின் பின் வரும்; வினை எனின் பெயர்க்கு எங்கும் மருவும் வழக்கிடை செய்யுட்கு ஏற்புழி.)

இ—ள்.:—படர்க்கையிடத்தையுடையஉயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்னு மூவகைப்பெயர்களோடு சுட்டுப்பெயர் சேரின், அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப்பெயர்க்கும் பின்வரும். அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின். அம்முடிக்குஞ் சொல்லில்லையாயின் அப்பொருர்க்குப் பின்னுமுன்னும் வரும். இம்மரபு வழக்கத்தினிடத்தவாம்; செய்யு ளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும். **எ—று.**

படர்க்கை முப்பெயராவன யாவை?

உயர்திணைப்பெயர், அஃறிணைப்பெயர், விரவுப்பெயர்.

படர்க்கைமுப்பெயரைச்சார்ந்துவருஞ்சுட்டுப்பெயர் எங்கேவரும்?

"படர்க்கைமுப் பெயரோ டணையிற் சுட்டுப்பெயர் பின்வரும் வினையெனில் வழக்கிடை"

வ—று.:—

(1) நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடுக. எனவும், எருதுவந்தது அதற்குப் புல்லிடுக. எனவும், சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக. எனவும், சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக. எனவும், வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின்வந்தன.

வினை நிகழாதவழிச் சுட்டுப்பெயர் பெயர்க்கு எவ்விடத்தே வரும்?

"பெயர்க் கெங்கும் மருவும் வழக்கிடை."

(2) நம்பியவன்; அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

செய்யுளிடத்து அஃது எங்கே வரும்?

"செய்யுட்கு ஏற்பழி"

(3) "அவனணங்கு நோய்செய்தா னூயிழாய் வேலன்–விறன்மிகுதார்ச் சேந்தனபேர் வாழ்த்தி முகனமர்ந்–தன்னையலர்க்டப்பந் தாரணியி னென்னைகொல்–பின்னை யதன்கண் விழைவ" எனச் செய்யுளில் வினைவருவழியும் முன்வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின்வருதல் வழாநிலை; முன்வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினைநிகழ்வழிப் பின்வருதல்வழாநிலை.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது.

இ–ள்.:– படர்க்கை முப்பெயரோடணையிற் சுட்டுப் பெயர் – படர்க்கை யிடத்தனவாகிய உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்னு மூவகைப் பெயரோடு சுட்டுப் பெயர் வரின், **பின்வரும் வினை யெனின்** – அச் சுட்டுப்பெயர் அம் மூவகைப் பெயர்க்கும் பின் வரும் அது வினை முடிபாயின், **பெயர்க்கெங்கு மருவும்** – அது பெயர் முடிபாயின் முன்னும் பின்னும் வரும், **வழக்கிடை** – இம்மரபு உலக வழக்கின்கண், **செய்யுட்கேற்புழி** – செய்யுளிடத்து இந்த நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும், எ–று.

(செய்யுள் – கவி, நியதி – நிச்சயம்,) ஏற்புழிக்கோடலால் இவற்றின் பின்னிற்கத் தக்க அகரச் சுட்டே கொள்க.

வ–று.:–

நம்பிவந்தான் அவனுக்குச் சோறிடுக, நங்கைவந்தாள் அவளுக்குப் பூக்கொடுக்க எனவும்; எருதுவந்தது அதற்குப்புல்லிடுக, குதிரைவந்தது அதற்கு முதிரையிடுக எனவும் (முதிரை – கடலை, கொள்ளு முதலியன,); சாத்தன்வந்தான் அவனுக்குப் பலியிடுக, சாத்தன்வந்தது அதற்குப் புல்லிடுக எனவும் முறையே ஒட்டுக. இவை முற்றுப் பயனிலை யாயினுஞ் சுட்டுப்பெயர் பின் வந்தமை காண்க.

நம்பியவன் அவன்நம்பி எனவும்; குதிரையது அதுகுதிரை எனவும்; சாத்தன் அவன், அவன் சாத்தன், சாத்தனது, அதுசாத்தன் எனவும் பெயர்க்குப் பின்னும் முன்னும் வந்தது, ஒழிந்த பெயர்களோடு மிவ்வாறே ஒட்டுக. இவை வழக்கு. இனிச் செய்யுட்கு ஏற்றபடி வருமாறு:–

"அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்
விறன்மிகு தார்ச்சேந் தன்பேர் வாழ்த்தி"

எனவருமிதனுள் சேந்தன் இயற்பெயர் எனவுஞ் சுட்டுப் பெயர் முன் வந்ததெனவுங் காண்க.

செய்யுளிடத்துப் பின் வருதல் வந்தவிடத்துக் காண்க. செய்யுளிடத்து முன் வருதல் வழுவமைதி; பின் வருதல் வழாநிலை.

வழக்கிடத்து வினை நிகழ்வழிப் பின் வருதல் வழாநிலை.

ஆயின், வழக்கிடத்து முன் வருதல் வழுவமைதியாமோ வெனின், ஆகாவென்க. என்னெனின், அவன் வந்தான் நம்பிக்குச் சோறிடுக என்றாயினும், அவனுக்குச் சோறிடுக நம்பி வந்தானென்றாயினும் சுட்டுப்பெயரை முன் வைத்துக் கூறின், அது ஒரு பொருண்மேலிருபெயர் வந்ததாகாது, நம்பிவேறு அவன் வேறாய் முடிதலின் வழுவே யாமென்க. இனிச் சாத்தன் கல்வியில் வல்லன், அதனால் தந்தை யுவக்கும், சாத்தி மனைத்தக்க மாண்புடையள் அதனால் கொண்டானுவக்கும் எனவும்; சாத்தன் வந்தான் அது நம்மரசனுக்கு உவப்பாயிற்று, கிழவன் பிரிந்தான் அதனைக் கிழத்தி யுணர்ந்திலள் எனவும் இவை முறையே சுட்டு முதலாகிய காரணச்சொல்லும், காரணமின்றித் தொடர் மொழிப்பொருளைச் சுட்டி வருஞ் சுட்டுப்பெயரும், தன்னின் முடித்த லென்னு முத்தியால் இச் சுட்டுப்பெயரிலக்கணத்தின் பாற்படு மெனக் கொள்க.

இவற்றுள், அதனால் என்றது ஆதலால் என்றாற் போல்வதோரிடைச்சொல். சுட்டுப்பெயர் உருபேற்றதன்று. இனிச் சாத்தன் வந்தானிவனுக்குச் சோறிடுக என இகரச் சுட்டுஞ் சிறுபான்மை வருமெனக் கொள்க, பிறவுமன்ன.

"இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவா
ரியற்பெயர் வழிய வென்மனார் புலவர்"

எனவும்,

"முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே"

எனவும்,

"சுட்டுமுதலாகிய காரணக் கிளயியுஞ்
சுட்டுப் பெயரியற்கை யிற்செறியத் தோன்றும்"

எனவும் ஆசிரியர் தொல்காப்பியனார் கூறுதல் காண்க. சுட்டுப்பெயர் – பின்வரும்; எங்குமருவும்; எற்புழிவரும் என முடித்துக் கொள்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– படர்க்கை முப்பெயரோடு –படர்க்கையிடத்தையுடைய (உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் பொதுப்பெயர் என்னும்) மூவகைப் பெயர்களோடு, சுட்டுப்பெயர் – **அணையின்** – சேர்ந்தால், **வினை எனின்** – அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின், **பின்வரும்** – (அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்க்கும்) பின்வரும்; **பெயர்க்கு எங்கும் மருவும்** – (அம்முடிக்குஞ்சொல் இல்லையாயின்) அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் வரும் : **வழக்கிடை** – (இம்மரபு) உலகவழக்கத்தில் ஆம்; **செய்யுட்கு** – செய்யுளில், **ஏற்புழி** – நியதியில்லாமல் வேண்டியவாறே வரப்பெறும்.

உதாரணம்

1. நம்பிவந்தான், அவனுக்குச் சோறிடுக – உயர்திணை வினைவரும்
   பசுவந்தது, அதற்குப் புல்லிடுக – அஃறிணை வழிச்சுட்டுப்
   சாத்தான் தெய்வம், அவனுக்குப் பலியிடுக பொது பெயர்பின்
   சாத்தான் வந்தது, அதற்குப் புல்லிடுக வந்தன.

2. நம்பி அவன், அவன் நம்பி பெயர்க்குப் பின்னும்
   குதிரை அது, அது குதிரை முன்னும் சுட்டுப்பெயர்வந்
   தன (இவை உலகவழக்கு)

3. "அவனணங்கு நோய்செய்தா னாழியாய் வேலன்
   விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி – முகனமர்ந்
   தன்னை யலர்க்கடப்பந் தாரணியி லென்னைகொல்
   பின்னை யதன்கண் விழைவு"

(இச்செய்யுளில் வினைவரும் வழியும் சுட்டுமுன் வந்தது. பின்வருதல் – வழாநிலை; முன்வருதல் – வழுவமைதி.)

ஆறுமுக நாவலர்

இ–ள்.: படர்க்கை முப்பெயரோடு சுட்டுப்பெயர் அணையின் – படர்க்கை யிடத்தை யுடைய உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்னு மூவகைப் பெயர்களோடு சுட்டுப்பெயர் சேரின், **பின் வரும்வினை யெனின்** – அச் சுட்டுப்பெயர் அம் மூவகைப்பெயர்க்கும் பின் வரும் அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின், **பெயர்க்கு எங்கும் மருவும்** – அம் முடிக்குஞ் சொல்லில்லை யாயின் அப் பெயர்க்குப் பின்னு முன்னும் வரும், **வழக்கிடை** – இம் மரபு வழக்கத்தினிடத்தவாம், **செய்யுட்கு ஏற்புழி** – செய்யுளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும், எ–று.

வ–று.:–

(1) நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக எனவும், எருது வந்தது அதற்குப் புல்லிடுக எனவும், சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக எனவும், சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக எனவும், வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

(2) நம்பியவன், அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப்பெயர் வந்தன.

(3) **"அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன்**
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி – முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி னென்னைகொல்
பின்னை யதன்கண் விழைவு"

எனச் செய்யுளில் வினைவருவழியும் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன் வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினைநிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். **படர்க்கை முப்பெயரோடு சுட்டுப்பெயர் அணையின்** – படர்க்கை யிடத்தையுடைய உயர்திணைப் பெயர் அஃறிணைப் பெயர் விரவுப் பெயர் என்னு மூவகைப் பெயர்களோடு சுட்டுப் பெயர் சேரின், – **பின் வரும் வினை எனின்** – அச்சுட்டுப் பெயர் அம்மூவகைப் பெயர்க்கும் பின் வரும் அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின், – **பெயர்க்கு எங்கும் மருவும்** – அம்முடிக்குஞ் சொல்லில்லையாயின் அப்பெயர்க்குப் பின்னுமுன்னும் வரும், – **வழக்கிடை** – இம்மரபு வழக்கத்தினிடத்தவாம், – **செய்யுட்கு ஏற்புழி** – செய்யுளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும், எ–று.

வ–று.:–

(1) நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக. எ–ம். எருது வந்தது அதற்குப் புல்லிடுக. எ–ம்.

சாத்தன் றெய்வம் அதற்குப் பலியிடுக. எ–ம்.

சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக. எ–ம்.

வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

(2) நம்பியவன்; அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப் பெயர் வந்தன.

(3) "அவனணங்கு நோய்செய்தா னாயிழாய் வேலன் – விறன்மி குதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி முகனமர்ந் – தன்னை

யலர் கடப்பந் தாரணியி னென்னை கொல் – பின்னை யதன்கண் விழைவு" எனச் செய்யுளில் வினை வருவழியும் முன் வந்தது.சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன் வருதல் வழுவமைதி.

வழக்கிடத்து வினை நிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை.

(சூ) "இயற்பெயர்க்கிளவியுஞ் சுட்டுப் பெயர்க்கிளவியும், வினைக் கொருங்கியலுங் காலந்தோன்றிற், சுட்டுப் பெயர்க்கிளவி முற்படக் கிளவா, ரியற் பெயர் வழிய வென்மனார் புலவர், எ–ம். முற்படக்கிளத்தல் செய்யுளுளுரித்தே. எ–ம்.

சுட்டு முதலாகிய காரணக்கிளவியுஞ், சுட்டுப் பெயரியற்கையிற் செறியத் தோன்றும்", எ–ம். கூறினார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ–ள்.: **படர்க்கை முப் பெயரோடு** – படர்க்கை யிடத்தையுடைய (உயர்திணைப் பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயர் என்னும்) மூவகைப் பெயர்களோடு, **சுட்டுப்பெயர்** –, **அணையின்** – சேர்ந்தால் , **வினை எனின்** – (அவ்விடத்தே) வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின், **பின்வரும்** – (அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்க்கும்) பின்னே வரும்; **பெயர்க்கு எங்கும் மருவும்** – (அம் முடிக்குஞ்சொல் இல்லையாயின்) அப்பெயர்க்குப் பின்னும் முன்னும் (சுட்டுப்பெயர்) வரும்; **வழக்கிடை** – (இம்மரபு) உலக வழக்கத்தில் ஆம்; **செய்யுட்கு** – செய்யுளில், **ஏற்பு உழி** – (நியதியில்லாமல்) வேண்டியவாறே வரப்பெறும்; எ–று.

உ–ம்.:–

(1) நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக என்றும்; எருது வந்தது, அதற்குப் புல்லிடுக என்றும்;

சாத்தன் வந்தான், அவனுக்குச் சோறிடுக, சாத்தன் வந்தது, அதற்குப் புல்லிடுக என்றும் முறையே மூவகைப் பெயர்களோடும் வினை வரும்பொழுது சுட்டுப்பெயர் பின்னே வந்தன.

(2) நம்பி அவன், அவன் நம்பி என்றும்; குதிரை அது, அது குதிரை என்றும்;

சாத்தன் இவன், இது சாத்தன் என்றும் பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன. இவை – உலக வழக்கு.

(3) "வா யவனை யல்லது வாழ்த்தாது ங்கை யுலகந் தாயவனை யல்லது தாந்தொழா," "தந்த முறியி லவர்வைத்த தயிர் பால் வெண்ணெயெட்டாமற், குந்தி யுரலின் மிசையேறி யிளங்கோவியர் முன் கூத்தாடி" எனச் செய்யுளில் வினை வந்த பொழுதும், அவன் அவர் என்ற கூட்டுப் பெயர்கள், 'உலகந்தாயவன்', 'கோவியர்' என்ற பெயர்களின் முன் வந்தன.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.:— படர்க்கை முப்பெயரொடு — படர்க்கையிடத்தையுடைய உயர்திணைப் பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயர் என்னும் மூவகைப் பெயர்களோடு, சுட்டுப்பெயர் தணையின் — சுட்டுப்பெயர் சேரின், வினை யெனின் — அவ்விடத்தே வினையாகிய முடிக்குஞ்சொல் வருமாயின், பின் வரும் — (அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்க்கும்) பின்வரும்; பெயர்க்கு எங்கும் மருவும் — (முடிக்குஞ் சொல் வினையன்றாயின்) அப்பெயர்க்குப் பின்னு முன்னும் வரும்; வழக்கிடை — இம்மரபு வழககத்தினிடத்தவாம்; செய்புட்கு ஏற்புழி — செய்யுளிடத்தே நியதியின்றி வேண்டியவாறே வரப்பெறும். எ—று.

உ—ம்.:—

(1) நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக எனவும், எருது வந்தது அதற்குப் புல்லிடுக எனவும்,

சாத்தன் றெய்வம் அவனுக்குப் பலியிடுக எனவும்,

சாத்தன் வந்தது அதற்குப் புல்லிடுக எனவும்,

முறையே மூவகைப் பெயர்களோடும் வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர் பின் வந்தன.

(2) நம்பியவன் அவனம்பி எனப் பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப் பெயர் வந்தன.

இவை உலக வழக்கு.

(3) "வாயவனை யல்லது வாழ்ததாது கையுலகந் தாயவனை யல்லது தாந் தொழா............" எனச் செய்யுளில் வினை வருவழியும் சுட்டுப் பெயர் முன் வந்தது.

சுட்டுப்பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன்வருதல் வழுவமைதி. வழக்கிடத்து வினைநிகழ்வழிப் பின்வருதல் வழாநிலை.

கா. நமச்சிவாய முதலியார்

படர்க்கை — படர்க்கை யிடத்தையுடைய, முப்பெயரோடு — (உயர்திணைப்

பெயர் அஃறிணைப் பெயர் பொதுப்பெயர் என்னும்) மூவகைப் பெயர்களோடு, **சுட்டுப்பெயர்** – சுட்டுப்பெயர், **அணையின்** – சேரின், **வினையெனின்** – வினையாகிய முடிக்குஞ் சொல்வருமாயின், **பின்வரும்**– (அச்சுட்டுச்பெயர்) பின் வரும்; **பெயர்க்கு** – பெயராயின், **எங்கும்** – பின்னும் முன்னும், **மருவும்** – வரும், **வழக்கிடை** – (இம்மரபு) வழக்கின் கண்ணேயாம்; **செய்யுட்கு** – செய்யுளிடத்தே, **ஏற்புழி** – (நியதியின்றி) வேண்டியவாறே வரப்பெறும்.

உதாரணம்

1. நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக — உயர்திணை

   எருது வந்தது அதற்குப் புல்லிடுக — அஃறிணை — வினை நிகழ்வழிச் சுட்டுப்பெயர், பின் வந்தன.

   சாத்தன் வந்தான் அவனுக்குப் பலியிடுக. சாத்தான் வந்தது அதற்குப் புல்லிடுக — பொது.

2. நம்பி அவன்
   அவன் நம்பி
   குதிரை அது
   அது குதிரை — பெயர்க்குப் பின்னும் முன்னும் சுட்டுப்பெயர் வந்தன.

3. அவன் அணங்கு நோய்செய்தான் ஆயிழாய் வேலன்
   விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி – முகனமர்ந்
   தன்னை யலர்கடப்பந் தாரணியின் என்னைகொல்
   பின்னை யதன்கண் விழைவு.

செய்யுளில், வினை வருவழியும்

சுட்டு முன் வந்தது.சுட்டுப் பெயர் செய்யுளிடத்துப் பின் வருதல் வழாநிலை; முன்வருதல் வழுவமைதி.

வழக்கிடத்து வினை வருவழிப் பின்வருதல் வழாநிலை.

மோசசு பொன்னையா

படர்க்கை இடத்தின்கண் வரும் உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள், பொதுப்பெயர்கள் என்னும் மூவகைப் பெயர்களோடு சுட்டுப்பெயருஞ் சேர, வினை முடிக்குஞ் சொல்வரின், அச்சுட்டுப்பெயர் அம்மூவகைப் பெயர்களுக்கும் பின்னர் வரும்; வினை முடிக்கஞ்சொல் இல்லையாயின், அப்பெயர்களுக்குப் பின்னரோ, முன்னரோ வரும்; இம்மரபு, வழக்கின்கண்

அமைவதாகும்; செய்யுளிடத்தோ, வரையறை இன்றி வேண்டியவாறே வரப்பெறும் எ–று.

எ–டு.:–

1. நம்பி வந்தான் அவனுக்குச் சோறிடுக–உயர்திணைப் பெயர்

எருது வந்தது அதற்குப் புல்லிடுக–அஃறிணைப் பெயர்

சாத்தான் வந்தான் அவனுக்குச் சோறிடுக பொதுப்பெயர்

சாத்தான் வந்தது அதற்குப் புல்லிடுக

–வினைமுடிக்குஞ்சொல்வர, சுட்டுப்பெயர்கள் பின்னர் வந்தன.

2. நம்பி அவன்	:	அவன் நம்பி–உயர்திணைப்பெயர்
குதிரை அது	:	அது குதிரை–அஃறிணைப்பெயர்
சாத்தன் இவன்	:	இவன் சாத்தன்–பொதுப்பெயர்
சாத்தன் இது	:	இது சாத்தன்

வினைமுடிக்குஞ்சொல் இல்லையாக, பெயர்களின் முன்னரோ பின்னரோ சுட்டுப் பெயர்கள் வந்தன.

3. அவனணங்கு நோய்செய்தா னாயிழையாய் வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியி னென்னைகொல்
பின்னை யதன்கண் விழைவு.

–செய்யுளிடத்து அவன் என முன்னரும், அதன் எனப் பின்னரும் வரையறையின்றிச் சுட்டுப் பெயர்கள் வந்தன.

தொல்காப்பியர்,

இயற்பெயர்க் கிளவியுஞ் சுட்டுப்பெயர்க் கிளவியும்
வினைக்கொருங் கியலுங் காலந் தோன்றிற்
சுட்டுப்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்
இயற்பெயர் வழிய வென்மனார் புலவர்,1

எனவும்

முற்படக் கிளத்தல் செய்யுளு ளுரித்தே,2

எனவும்,

சுட்டுமுத லாகிய காரணக் கிளவியுஞ்
சுட்டுப்பெய ரியற்கையிற் செறியத் தோன்றும்,3

எனவும் இலக்கணங் கூறியுள்ளமை காண்க.

**394. அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.**

அசைநிலை பொருள்நிலை இசைநிறைக்கு ஒரு சொல்
இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்.

asainilai porulnilai isainiūai ku oru sol
irantu mūnūu nānku ellai muūai atukkum

இலாசரசு(ஆங்கில மொழிபெயர்ப்பு)

Repetition of words

A word may be repeated twice as an expletive, - twice or thrice as an interjection, and twice, thrice or even four-times for the sake of metre.

ஒப்புமைப் பகுதி

இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்
(தொல்.சொல்.:423)

விரைசொல் லடுக்கே மூன்றுவரம் பாகும்
(தொல்.சொல்.:424)

கண்டீர் என்றா கொண்டீர் என்றா
சென்றது என்றா போயிற் றென்றா
அன்றி அனைத்தும் வினாவொடு சிவணி
நின்றவழி அசைக்கும் கிளவி என்ப.
(தொல்.சொல்.:425)

கேட்டை என்றா நின்றை என்றா
காத்தை என்றா கண்டை என்றா
அன்றி அனைத்தும் முன்னிலை அல்வழி
முன்னுறக் கிளந்த இயல்பா கும்மே.
(தொல்.சொல்.: 426)

அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்
லிரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்
(இ.வி.:346)

அசைநிலை யிசைநிறை யடுக்கிரு திறத்தன

(மு.வீ.:736)

விரைவு மூன்றிசை நிறைநான் கடுக்கே

(மு.வீ.:749)

மயிலை நாதர்

எ—ன், மரபு வழுவமைப்பு உணர்த்துதல் நுதலிற்று.

இ—ள்.: அசைநிலைக்கண்ணும், விரைவு வெகுளி உவகை அச்சம் அவலமுதலிய பொருணிலைக்கண்ணும், இசைநிறைத்தற் பொருட்டும் ஒருசொல் இரண்டும் மூன்றும் நான்கும் எல்லையாக அடுக்கி வரப்பெறும், எ—று.

அசைநிலைக்கு இரண்டு அடுக்கும்; பொருள்நிலைக்கு இரண்டும் மூன்றும் அடுக்கும்; இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கும்.

வ—று.:—

ஒக்கும் ஒக்கும், மற்றோமற்றோ, அன்றே அன்றே என்பன **அசைநிலை.** கள்ளர் கள்ளர், பாம்புபாம்பு; தீத்தீத்தீ, போபோபோ என்பன **விரைவு.** எய்எய்; எறிஎறிஎறி என்பன **வெகுளி.** வருகவருக; பொலிக பொலிகபொலிக (திவ்ய) என்பன **உவகை.** படைபடை; எங்கே எங்கே எங்கே என்பன **அச்சம்.** உய்யேன்உய்யேன்; வாழேன் வாழேன் வாழேன், மயிலே மயிலே மயிலே, மடவாய் மடவாய் மடவாய்;

"புயலே ரொலிகூந்த லினியா யினியாய்
குயிலோர் கிளவிநீ யுரையா யுரையாய்
அயில்வே லடுகண் ணழகீஇ யழகீஇ"
"ஐயாவென் னையாவென் னையாவகன்றனையே"

(சீவக.1802)

என்பன **அவலம்:**

இவை பொருணிலை. [1]"ஏஏ அம்பன் மொழிந்தனள் யாயே"; [2]"நல்குமே நல்குமே நல்குமே நாமகள்"; "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ." இவை இசைநிறை, பிறவுமன்ன.

பாட வேறுபாடு:— 1. (1) ஏயேயம்பல் (2) ஏஏ ஏஏ யம்பல்
2. நல்குமோ .... நல்குமோ

"அசைநிலை யிரண்டினும் பொருண்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினு மொருமொழி தொடரும்"
என்றார், அகத்தியனார்.

சங்கர நமச்சிவாயர்

எ–னின், இதுவும் அது.

இ–ள்.: அசைநிலைக்கும், விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய பொருள்நிலைக்கும், இசைநிறைக்கும் ஒருசொல் இரண்டு மூன்று நான்களவு முறையே அடுக்கும், எ–று.

எனவே அசைநிலைக்கு இரண்டும், பொருள்நிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கும் என்பதாயிற்று.

வ–று.:– ஒக்கும் ஒக்கும், அன்றே அன்றே என்பன அசை நிலை.உண்டேன் உண்டேன், போ போ போ என்பன விரைவு. எய் எய், எறி எறி எறி என்பன வெகுளி. வருக வருக, பொலிக பொலிக பொலிக என்பன உவகை. பாம்பு பாம்பு, தீத்தீத்தீ என்பன அச்சம். உய்யேன் உய்யேன், வாழேன் வாழேன் வாழேன் என்பன அவலம். இவை முதலியன பொருள்நிலை. "ஏஏ அம்பல் மொழிந்தனள் யாயே" "நல்குமே நல்குமே நல்குமே நாமகள்" "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என்பன இசைநிறை. பிறவும் அன்ன.ஒரு சொல்லைப் பலகால் கூறுதல் வழுவாயினும் இவ்விடத்து ஆம் என்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை இறவாது என்றல் வழுவற்க எனக் காத்தலுமாம் என்க.

கூழங்கைத் தம்பிரான்

சூ–ம், கூறியது கூறினுங் குற்றமில்லை எனக் கூறியது.

இ–ள்.:– அசைநிலை பொருணிலை – அசைநிலைக்கண்ணும் விரைவு, வெகுளி, உவகை, அச்சம் முதலிய பொருண்மைக்கண்ணும், இசைநிறைக்கு – இசை நிறைத்தற் பொருண்மைக்கண்ணும், ஒருசொல் – இவ்விடத்திற் பொருட்டாக வரும் ஒரு சொல், இரண்டு மூன்று நான்கு எல்லை – அச்சொல் ஒன்றே இரண்டு மூன்று நான்கு அளவாக, முறையடுக்கும் – அடைவே அடுக்கி வரப்பெறும், எ–று.

அசைநிலை இரண்டுக்கும், பொருணிலை இரண்டு மூன்றடுக்கும், இசைநிறை இரண்டு மூன்று நான்கடுக்குமாம் "முறை" என்றதனான் என்க.

உ–ம்.:– ஒக்கும் ஒக்கும், மற்றோ மற்றோ, அன்றோ அன்றோ என்பன அசைநிலை. கள்ளர் கள்ளர், பாம்பு பாம்பு, தீத் தீத் தீ, போ போ போ என்பன விரைவு. எய் எய், எறி எறி எறி என்பன வெகுளி, வருக வருக, பொலிக பொலிக பொலிக என்பன உவகை. படை படை, எங்கே எங்கே எங்கே என்பன அச்சம்.

உய்யேன் உய்யேன், வாழேன், மயிலே மயிலே மயிலே, உரையாய் உரையாய் உரையாய்...இவை பொருணிலை. "ஏஏ அம்பலஞ் சேர்ந்தனன்", "நல்குமே நல்குமே நல்குமே நாமகள்", "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" என்பன இசை நிறைக்கண் வந்தன.

விசாகப் பெருமாளையர்

இதுவுமது,

இ—ள்.: அசைநிலை – அசைநிலைக்கும், பொருணிலை – (விரைவு வெகுளியுவகை யச்ச முதலாகிய) பொருணிலைக்கும், இசைநிறைக்கு – இசைநிறைக்கும், ஒரு சொல் – ஒருமொழி, இரண்டு – இரண்டும், மூன்று – மூன்றும், நான்கு – நான்குமாகிய, எல்லை – அளவும், முறை – முறையாக, அடுக்கும் – அடுக்கும், எ—று.

(எனவே அசைநிலைக்கு இரண்டும், பொருணிலைக்கு இரண்டு மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும், அடுக்கு மென்றதாயிற்று.)

வ—று.:– அன்றேயன்றே – அசைநிலை, போபோ–விரைவு, எறியெறி–வெகுளி, வருகவருக –உவகை, பாம்பு பாம்பு, தீத்தீத்தீ – அச்சம், வாழேன், வாழேன்–அவலம், இவை பொருணிலை. 'ஏஎயம் பன் மொழிந்தனளாயே', நல்குமே நல்குமே, நாமகள், பாடுகோ பாடுகோ பாடுகோ, இசைநிறை.

(ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும் இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும் இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம்.)

ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை

ஒருசொல் பலமுறை யடுக்கிவருதற்கு அளவும் இடமுங் கூறுஞ் சூத்திரம் யாது?

அசைநிலை பொருணிலை யிசைநிறைக் கொருசொல்
இரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும்.

(அசைநிலை பொருணிலை இசைநிறைக்கு ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்.)@

இ—ள்.:– அசைநிலைக்கும் விரைவு வெகுளி உவகை அச்சம் அவல முதலிய பொருணிலைக்கும் இசைநிறைக்கும்ஒரு மொழி இரண்டு மூன்று நான்களவு முறையே அடுக்கும். எ—று.

எனவே, அசைநிலைக்கிரண்டும், பொருணிலைக்கிரண்டு மூன்றும், இசைநிறைக்கிரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்பதாயிற்று.

(வரலாறு)(1) அன்றே யன்றே...............அசைநிலை.(2) உண்டேனுண்டேன், போ போ போ............விரைவு.(3) எய்யெய்; ஏற யெறி

யெறி..........................வெகுளி.(4) வருக வருக; பொலிக பொலிக பொலிக............உவகை.(5) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ..................................அச்சம்.(6) உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் அவலம்.(7) ஏயே யம் பன் மொழிந்தனன் யாயே இசைநிறை.நல்குமே நல்குமே நல்குமே நாமகள்,பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ,ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவா தென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

முகவை இராமானுச கவிராயர்

இதுவுமது,

இ–ள்.: அசைநிலை பொருணிலை யிசைநிறைக்கு –அசைநிலைக்கும் விரைவு வெகுளி உவகை அச்சம் துன்பம் முதலிய பொருள்நிலைக்கும் ஓசை நிரப்புதற்கும், **ஒருசொல் இரண்டு மூன்று நான்கெல்லை முறை யடுக்கும்** – ஒரு சொல்லானது இரண்டு மூன்று நான்கு எல்லை யளவும் முறையே அடுக்கி நிற்கும், எ–று.

'முறை' யென்றதனால், அசைநிலைக்கிரண்டும் பொருணிலைக்கு இரண்டொடு மூன்றும் இசைநிறைக்கு இரண்டு மூன்றொடு நான்கு மென்பதாயிற்று. பொருள்நிலைகொளாது அசையாகவே நிற்றலின் அசைநிலை.

வ–று.:–அன்றேயன்றே, மற்றோ மற்றோ என்பன **அசைநிலை,** உன்டேனுண்டேன், வந்தேன் வந்தேன் என்பன **விரைவு,** எய்எய் எறியெறி என்பன **வெகுளி,** வருக வருக பொலிக பொலிக என்பன **உவகை,** பாம்புபாம்பு தீத்தீ என்பன **அச்சம்,** உய்யேனுய்யேன் வாழேன்வாழேன் என்பன **துன்பம்,** அவனவன் என்பது **துணிவு,** வைதேன்வைதேன் என்பது **உடன்பாடு.** போம்போம் என்பது ஒரு தொழில் பலகானிகழ்ந்தது. இவை பொருணிலை யிருமுறையடுக்கி நின்றன. எறிஎறிஎறி, தீத்தீத்தீ, வாழேன் வாழேன் வாழேன் இவை பொருணிலை மும்முறை யடுக்கி நின்றன. ஒழிந்தன வந்தவழிக் காண்க. 'ஏஏயம்பன்மொழிந்தன ளாயே', 'நல்குமே நல்குமே நல்குமே நாமகள், பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ, இவை **இசை நிறை.** இரண்டெல்லை முதல் நான்கெல்லை வரை யடுக்கி நின்றன. பிறவுமன்ன.ஒரு சொல்லைப் பலகாற் கூறுதல் வழுவாயினும் இவ் விடங்களிலாகு மென்றல் வழுவமைதியும், இவற்றிற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாதொழிக வெனக் காத்தலுமாம்.

"இசைநிறை யசைநிலை பொருளொடு புணர்தலென்றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே","விரைசொ லடுக்கே மூன்றுவரம் பாகும்"

என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறதலுங் காண்க.

ஒரு சொல்லடுக்கும் என முடிக்க.

கா. கோபாலாசாரியர்
தி.கோ. ரங்காசாரியர்

உரை :– அசைநிலை – அசைநிலைக்கும், **பொருள் சில** – (விரைவு

கோபம் மகிழ்ச்சி அச்சம் துன்பம் முதலிய) பொருள்களின் நிலைக்கும், **இசை நிறைக்கு** – இசையை நிறைப்பதற்கும், **ஒருசொல்** –, இரண்டு மூன்று நான்கு **எல்லை** – இரண்டு மூன்று நான்களவும், **முறை அடுக்கும்** – முறையே அடுக்கிநிற்கும்.

குறிப்பு :– 'முறை' என்றதனால், அசைநிலைக்கு – இரண்டும், பொருள் நிலைக்கு – இரண்டொடு மூன்றும், இசைநிறைக்கு – இரண்டு மூன்றொடுநான்கும் அடுக்கும் என்றதாயிற்று.

உதாரணம்

1. அன்றே அன்றே – அசைநிலை.2.)உண்டேன் உண்டேன்

போ போ போஅடி அடிகொல் கொல் கொல் வெகுளி

(c) வருக வருகபொலிக பொலிக பொலிக மகிழ்ச்சி.

(d) பாம்பு பாம்புதீத்தீத்தீ அச்சம் – பொருள்நிலை

(e) உய்யேன் உய்யேன்வாழேன் வாழேன் வாழேன் துன்பம்

(f) அவனவன் – துணிவு.

(g) வைதேன் வைதேன் – உடன்பாடு

(h) போம் போம் – ஒரு தொழில்பலகால் நிகழ்தல்.

3. "ஏ ஏ அம்பன் மொழிந்தனளாயே"
"நல்குமே நல்குமே நல்குமே நாமகள்" இசைநிறை.
"பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ"

ஒருசொல்லைப் பலகாற்சொல்லுதல் வழுவாயினும், இன்னவிடங் களில் ஆம் எனல் வழுவமைதியும், இவ்வெல்லை கடவாதெனல் வழுவாமற் காத்தலுமாம்.

ஆறுமுக நாவலர்

இ–ள்.: **அசைநிலை** – அசைநிலைக்கும், **பொருணிலை** – விரைவு வெகுளி உவகை அச்சம் அவல முதலிய பொருணிலைக்கும், **இசை நிறைக்கு** – இசைநிறைக்கும், **ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லைமுறை அடுக்கும்** – ஒருமொழி இரண்டு மூன்று நான்களவு முறையே அடுக்கும், எ–று.

எனவே, அசைநிலைக்கிரண்டும், பொருணிலைக்கிரண்டும் மூன்றும், இசைநிறைக்கிரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கு மென்பதாயிற்று.

வ–று.:

(1) அன்றே யன்றே .... அசைநிலை.

(2) உண்டேனுண்டேன்; போ போ போ...................... விரைவு.

(3) எய்யெய்; எறி யெறி யெறி .... வெகுளி.

(4) வருக வருக; பொலிக பொலிக பொலிக .... உவகை.

(5) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ.............................. அச்சம்.

(6) உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் .... அவலம்.

(7) 'ஏயே யம்பன் மொழிந்தனள் யாயே', 'நல்குமே நல்குமே நல்குமே நாமகள்' 'பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ ....' **இசைநிறை.**

ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

வ. குமாரசாமிப் புலவர்

இ–ள். அசைநிலை – அசைநிலைக்கும், – **பொருணிலை** – விரைவு வெகுளி உவகை அச்சம் அவலமுதலிய பொருணிலைக்கும், – **இசைநிறைக்கு** – இசைநிறைக்கும், – **ஒருசொல் இரண்டு மூன்று நான்கு எல்லை முறை அடுக்கும்** – ஒருமொழி இரண்டு மூன்று நான்களவுமுறையே அடுக்கும்.

எனவே, அசைநிலைக்கிரண்டும், பொருணிலைக்கிரண்டு மூன்றும், இசை நிறைக்கிரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்பதாயிற்று.

(வரலாறு)

(க). அன்றே யன்றே.. அசைநிலை

(உ) உண்டேனுண்டேன், போ போ போ .... விரைவு

(ங) எய்யெய்; எறி யெறி யெறி .... வெகுளி

(ச) வருக வருக; பொலிக பொலிக பொலிக .... உவகை

(ரு) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ .... அச்சம்

(சு) உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் .. அவலம்

(எ) ஏயே யம் பன் மொழிந்தனள் யாயே
நல்குமே நல்குமே நல்குமே நாமகள்
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ .... இசைநிறை

ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

வை.மு. சடகோபராமானுசாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்

இ—ள்.:– அசைநிலை – அசைநிலைக்கும், பொருள்நிலை – (விரைவு கோபம் மகிழ்ச்சி அச்சம் துன்பம் முதலிய) பொருள்களின் நிலைக்கும், இசை நிறைக்கு – இசையை நிறைப்பதற்கும், ஒருசொல்–, இரண்டு மூன்று நான்கு எல்லை–இரண்டு மூன்று நான்கு அளவும், முறை அடுக்கும் – முறையே அடுக்கி நிற்கும்; எ—று.

'முறை' என்றதனால், அசைநிலைக்கு இரண்டும், பொருள் நிலைக்கு இரண்டும் மூன்றும், இசை நிறைக்கு இரண்டும், மூன்றும், நான்கும் அடுக்கு மென்றதாயிற்று.

உ—ம்.:–

பொருள்நிலை

(1) அன்றே அன்றே .... அசைநிலை.

(1) உண்டேன் உண்டேன்; போ போ போ .... விரைவு.

(2) எய் எய்; எறி எறி எறி .... கோபம்.

(2) (3) வாழ்க வாழ்க; வருக வருக வருக .... மகிழ்ச்சி

(4) பாம்பு பாம்பு; தீத் தீத் தீ........................ அச்சம்.

(5) உய்யேன் உய்யேன்; வாழேன்வாழேன்வாழேன் – துன்பம்.

இசைநிறை

(3)"ஏ ஏ இவளொருத்தி பேடியோ"
"நல்குமே நல்குமே நல்குமேநாமகள்" "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ"

(நல்கும் – அருள்செய்வள். பாடுகோ–பாடுவேனோ.)

அசைநிலை யடுக்கில் இரண்டுக்கும் பொருளில்லை யென்றும், இசைநிறை யடுக்கில் ஒன்றுக்குப் பொருள் உண்டென்றும் வேறுபாடு அறிக.ஒரு சொல்லைப் பலகால் சொல்லுதல் வழுவாயினும், இன்ன இடங்களில் ஆமென்றல் வழுவமைதியும், இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

பவானந்தம் பிள்ளை

இ—ள்.: அசைநிலை – அசைநிலைக்கும், பொருள் நிலை – (விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய) பொருள்களின் நிலைக்கும், இசை நிறைக்கு – இசைநிறைக்கும், ஒருசொல் – ஒரு மொழி, இரண்டு மூன்று நான்கு

எல்லை – இரண்டு மூன்று நான்களவு, முறை அடுக்கும் – முறையே அடுக்கும். எ–று.

எனவே, அசைநிலைக்கு இரண்டும், பொருள் நிலைக்கு இரண்டும் மூன்றும், இசை நிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கு மென்பதாயிற்று.

உ–ம். (1) அன்றே யன்றே .... அசைநிலை. (2)உண்டேனுண்டேன்; போ போ போ ....விரைவு. (3) எய்யெய்; எறி யெறி யெறி .... வெகுளி. (4) வருக வருக; பொலிக பொலிக பொலிக .... உவகை (5) பாம் பாம்பு; தீத்தீத்தீ .... அச்சம். (6)உய்யேனுய்யேன்; வாழேன் வாழேன் வாழேன் .... அவலம். பொருணிலை(7) " ஏ ே ய இவைளொருத்தி பேடியே" நல்குமே நல்குமே நல்குமே நாமகள்" "பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ" .... இசை நிறை.ஒருசொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இவ்விடத்தே ஆமென்றால் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவாதென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

கொ. இராமலிங்கத் தம்பிரான்

(இ–ள்.) அசைநிலை – அலைநிலைக்கும், பொருள் நிலை – (விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம் முதலாகிய) பொருணிலைக்கும், இசை நிறைக்கும் – இசை நிறைக்கும், ஒரு சொல் – ஒரு மொழி, இரண்டு மூன்று நான்கு எல்லை – இரண்டும், மூன்றும், நான்குமாகிய அளவும், முறை – முறையாக, அடுக்கும் – அடுக்கிவரும். (எ–று)

(பொ–ரை.)

அசைநிலைக்கும், (விரைவு வெகுளி உவகை அச்சம் அவலம் முதலிய) பொருள்நிலைக்கும், இசைநிறைக்கும் ஒரு சொல் இரண்டு மூன்று நான்களவும் முறையே அடுக்கும்.

முறை யென்றதனால் அசைநிலைக்கு இரண்டும், பொருள் நிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்குமென்றதாயிற்று.

(உ–ம்.)

1. அன்றேயன்றே மற்றோமற்றே– அசைநிலை.,2. உண்டேன் உண்டேன் வந்தேன் வந்தேன் வந்தேன் விரைவு.3. அடி அடி ,கொல் கொல் கொல் வெகுளி.4. வருக வருக, பொலிக பொலிக பொலிக உவகை (மகிழ்ச்சி.) விரைவு முதலிய ஐந்தும்பொருள் நிலை.5. பாம்பு பாம்புதீக் தீக் தீ அச்சம் .6. உய்யேன் உய்யேன், வாழேன் வாழேன் வாழேன்துன்பம்.7. "ஏஏ இவளொருத்தி பேடியோ""நல்குமே நல்குமே நல்குமே நாமகள்""பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ"

(நல்கும் – அருள் செய்வள், பாடுகோ – பாடுவேனோ.)இசை நிறை.ஒரு சொல்லைப் பலகால் சொல்லுதல் வழுவாயினும், இன்ன இடங்களில் ஆமென்றல் வழுவமைதியும் இதற்கு இவ்வெல்லை கடவா தென்றல் வழுவாமற் காத்தலுமாம்.

கா. நமச்சிவாய முதலியார்

அசைநிலை – அசைநிலைக்கும், **பொருள் நிலை** – விரைவு வெகுளி உவகை அச்சம் முதலாகிய பொருள் நிலைக்கும், **இசை நிறைக்கு** – இசை நிறைக்கும், **ஒரு சொல்** – ஒரு மொழி, **இரண்டு** – இரண்டும், **மூன்று** – மூன்றும், **நான்கு** – நான்குமாகிய, **எல்லை** – அளவும், **முறை** – முறையாக, **அடுக்கும்** – அடுக்கும்.

எனவே, அசைநிலைக்கு இரண்டும், பொருள்நிலைக்கு இரண்டும் மூன்றும், இசைநிறைக்கு இரண்டும் மூன்றும் நான்கும் அடுக்கும் என்பதாயிற்று.

உதாரணம்

அன்றே அன்றே — அசை நிலை
மற்றோ மற்றோ
உண்டேன் உண்டேன்
வந்தேன் வந்தேன் வந்தேன் — விரைவு

அடி அடி
கொல் கொல் கொல் — வெகுளி
வருக வருக — உவகை
பொலிக பொலிக பொலிக — பொருள் நிலை.
பாம்பு பாம்பு — அச்சம்
தீத் தீத் தீ
உய்யேன் உய்யேன் — அவலம்
வாழேன் வாழேன் வாழேன்
ஏ ஏ அம்பல் மொழிந்தனள் யாயே,
நல்குமே நல்குமே நல்குமே நாமகள், — இசை நிறை
பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ

ஒரு சொல்லைப் பலகாற் சொல்லுதல் வழுவாயினும், இன்ன விடத்தே ஆம் என்றல் வழுவமைதியும், இதற்கு இவ்வெல்லை கடவாது என்றல் வழுவாமற் காத்தலும் ஆம்.

மோசசு பொன்னையா

அசைநிலையாதற்கும்; விரைவு, வெகுளி, உவகை, அச்சம், அவலம் முதலிய பொருள்களின் நிலைபேற்றிற்கும்; இசை நிறைத்தற்கும் ஒருசொல் முறையே இரண்டு, மூன்று, நான்கு, அளவாக அடுக்கிவரும் எ–று.

எனவே, அசைநிலைக்கு இரண்டும்; பொருள்நிலைக்கு இரண்டும்,

மூன்றும்; இசைநிறைக்கு இரண்டும், மூன்றும், நான்கும் மேல் அளவாக அடுக்கி வருதல் அமையும் என்றார் எனக்கொள்க.

எ–டு.–1. ஒக்கும் ஒக்கும்; அன்றே யன்றே–அசைநிலை

2. உண்டேனுண்டேன்; போப்போப்போ–விரைவுஎய்யெய்; எறியெறியெறி–வெகுளிவருகவருக; பொலிகபொலிகபொலிக–உவகை

பொருள்நிலை பாம்புபாம்பு;தீத்தீத்தீ–அச்சம் உய்யேனுய்யேன்; வாழேன்வாழேன்வாழேன்–அவலம்ஏயே யம்பல் மொழிந்தனள் யாயே, நல்குமே நல்குமே நல்குமே நாமகள்,பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ,இசைநிறை

அசைநிலைகள் பொருளின்றி வரும்; இசை என்பது சொல் ஆதலின், இசைநிறைகள் தனித்தனியே பொருள் பெற்று வரும் என்னும் வேறுபாடு அறிக.தொல்காப்பியர்,

இசைநிறை யசைநிலை பொருளோடு புணர்தலென்
றவைமூன் றென்ப வொருசொல் லடுக்கே,
இசைப்படு பொருளே நான்குவரம் பாகும்,
விரைசொ லடுக்கே மூன்றுவரம் பாகும்,
கண்டீரென்றா.. கேட்டையென்றா..

எனவும், நேமிநாதமுடையார்,

இசைநிறை நான்கு வரம்பாம் விரைசொல்
வசையிலா மூன்று வரம்பா–மசைநிலை
ஆய்ந்த வொருசொல் லடுக்கிரண்டாந் தாம்பிரியா
ஏந்திரட்டைச் சொற்கள் இரட்டு,

எனவும்,

அசைநிலை யிரண்டினும் பொருள்மொழி மூன்றினும்
இசைநிறை நான்கினு மொருமொழி தொடரும்,

என ஒரு பிற்காலப் புலவரும் கூறியுள்ளமையையுங் காண்க.

(44)

நன்னூல் உரைவளம்

பொதுவியல்–2 முற்றிற்று

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை – 600 113

அண்மை வெளியீடுகள்

வல்லம் தலபுராணம்	200.00
இதழியல் உலகம்	120.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	60.00
படைப்பிலக்கியம்–விளிம்புநிலைமக்கள்ஆய்வுநோக்கு	100.00
அண்ணா ஒரு சமூகக் குறியீடு	40.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	65.00
சுவடிப்பதிப்பாசிரியர்கள்	45.00
உலக மொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும்	85.00
மதங்களும் மனிதநேயமும்	90.00
பெயரியல்	55.00
சங்க இலக்கியத்தில் பாணர் வாழ்வியல்	80.00
தமிழ் இசுலாம் உருவாக்கமும் திருக்குர்ஆன் தமிழ் வாசிப்பும்	45.00
தலித் அறம்	45.00
உலகச் செம்மொழிகள்	90.00
பொதுவுடைமை இயக்க இதழ்கள்	115.00
தமிழில் இதழியல்	270.00
சேக்கிழாரும் இசைத்தமிழும்	50.00
சித்தர்களின் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு	105.00
கவிஞர் புதுவைச் சிவத்தின் சீர்திருத்த நாடகங்கள்	120.00
பெ.நா.அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள்–தொகுதி–3	235.00
சிந்தனைச்சிற்பி ம.சிங்காரவேலரும் தந்தைபெரியாரும்	105.00
மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரின் பன்முக ஆளுமை	50.00
நரம்புக் கருவிகள்	70.00
திணை வரலாறு	70.00
பெரியாரிய நோக்கில் மு.வ.	55.00
திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும்	75.00
சுவடிப்பதிப்பு முன்னோடிகள்	60.00
விடுதலைச் சிந்தனையாளர் வ.உ.சிதம்பரனார் தமிழியல் பண்புகள்	80.00
அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–1)	175.00
அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் (தொகுதி–2)	200.00
உதயணகுமாரகாவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்	50.00
பாணர் இனவரைவியல்	110.00
திராவிட மொழிகளும் திராவிட மொழி ஆய்வுகளும்	135.00
சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–1)	135.00
சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள் (தொகுதி–2)	140.00

நன்னூல் உரை வளம் பொதுவியல்-2 **115.00**